Q 23:38·2116
M93
115800

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS.
2 - NOV. 93

சிவமயம்,

சேலம் எனவழங்கும்

[illegible]

[illegible]

[illegible]

சேலம்

[illegible]

ஸ்ரீலஸ்ரீ

ஆறுமுகசாமிபிள்ளையவர்கள் குமாரரும்

சேலம்

[illegible] கோர்ட்டு வக்கீலுமாகிய

[illegible]

[illegible]

[illegible]

காஞ்சிபுரம்

[illegible]

[illegible]

ஸ்ரீலஸ்ரீ

[illegible] பிள்ளையவர்கள் சபையாரால்

[illegible]


M93
91/44893 | 914

உ ௐ

இப்புத்தகம் வேண்டுவோர்கள்
சேலம்—செவ்வாய்ப்பேட்டையில்
காசக்கடை
சு. மாரிமுத்து செட்டியார் அவர்களிடத்திலும்,
சேலத்தில்-காசக்கடை
வேலாயுதசெட்டியார் அவர்களிடத்திலும்
விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

15800

உ



ஸ்ரீ

# சிறப்புப்பாயிரம்.

சேலம் கவர்ன்மெண்டு காலேஜிலும்,
திரிசிரபுரம் S. P. G. காலேஜிலும் தமிழ்த் தலைமைப் புலவராயுள்ள
ம-ள-ள-ஸ்ரீ
அ. க. அமிர்தம்பிள்ளையவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடில் விருத்தம்

திருத்தகுசெய் வத்தமிழா மொழிக்கரசின் செங்கோன்மைசிறந்த பாரி
ஒருத்தனொடு கடர்மாயினுஞைசால்சிப் பெருவேந்தர் மும்மையோரிற் [ட்டின்
பொருத்தகுபொன் மணிமுடிக்கோப் பெருஞ்சேரன் குடைக்கமைத்தருடக்கு நா
மருத்தருகண்பொழிலுடைச்சேரலத்திருப்பாவகாசதல மாண்ப தாமே. (க)

ஆமனைய திருத்தலமே கூடலரியேறனைத்தானணிநீ ரல்லிப்
பூமனையக்தலைதமித்தப் பொலிமலர்க்கை யாறுயரும் புராணன் வெற்றிக்
காமனையன் றழலாடக் கண்டுறுதற் கனற்கண்ணன் கடவுளார்த்தன்
சேமனையக் காகவெழுக் தருள்புரிந்த வரலாற் றுக் கொண்டு மன்றே., (உ)

ஓதிய பலவனக்கொண் டொப்பிகழ்செப் பான்மொழிக்கு முயிராய்த் தாயாம்
முதிய தமிழ்ப்பாவாற் புராணமென மொழிந்துவைத்தான் முதனூலாய்ந்து
கோதிய பெரியோர்தம் பழமையினை நூல்செய்த குன்றை யூரன்
நீதிய மரபில்வந்த சொக்கலிங்கப்புலவனியற் றெனிவிருதே, (ங)

தெளிவந்த வந்நூலை யிக்காலத் தெரிந்தெடுத்துத் தெளிவிலாரு
மெளிவந்த பயனெனக்கொண்டினிதுகற்றுப்பொருள்புலப்பாட்டின்பமெய்தி
களிவந்து புகழ்த்துரைப்ப நன்குபொருளுரைத்தெவர்க்குங் காட்டி யிங்கு
வெளிவந்தா னியாவனென்னு மதற்குவிடைசமரங்கான் விளம்பு கேனே. (௪)

விளம்பியசி ரித்தலத்திற் சித்திரச்சத்திரவறமும் விமலன் கோவில்
வளம்பயினீர் நிலைமூன்றும் பிறவறமு நிலைநிறுத்த வண்மை யாளன்
தளம்பலிலா வறமுதலா மிப்பவத்து முப்பொருளுநல் சால வாய்ந்தாங்
குளம்பயினல் லொழுக்கத்தா னுயர்ந்துலகுபரவுபுக ழொப்பி லானே.

ஒப்பாய தில்லாத வேதாந்த நூற்கடலினூடாய்ந் தாங்கட்
செப்பாத மெய்ப்பொருள்கண் டப்பொருட்டா னுணர்தவச் செல்வ மேலோன்
அப்பாசா மிப்பெயரிற் பெரியோன்ற னரும்புதல்வ னறிவான் மிக்கோன்
இப்பாரி னற்புகழ்சேர் துரைசாமி யென்னுநற்பே ரியைந்த வானே. (௫)

---

சேலம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ம-ா-ா-ஸ்ரீ

### சரவணபிள்ளை அவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடில் விருத்தம்

சான்றவர்கண் மலிதொண்டை நாட்டியர்வே ளாண்குலஞ்செய் தவப்பே றாய்
ஆன்றபுக ழுறுங்கூடற் கிழார்மரபி லுதித்திறம்பு நியாரு மெய்தத்
தோன்றருமை யட்டாவ தானவகை யுணர்புலமைச் சொக்க லிங்க
வான்றரணி புகழ்சேலத் தலைமையமைத் தமிழ்மாரி வழங்கிற் றம்மா. (௧)

அன்னநூற் புல்லேட்டிற் செல்லேறிப் பயன்படா தழியு மாற்றால்
யுன்னியே கற்றோர்க்கு மற்றோர்க்கும் பயன்படுமா றுரையுஞ் செய்து
மன்னயஞ்சேர் யந்திரத்தா லெழுதுவித்துத் தன்பெருமை நாளுமோங்க
விந்நிலத்தி லிட்டினா னன்னபெருந் தகையாரென் றியம்பக் கேண்மின். (௨)

கரைசாமி யந்தணக்கோன் றில்லாவப் பாசாமிக் கருணை யாளன்
வரைசாமி யடிபணிந்த மாதவத்தாற் பெற்றெடுத்த வாய்மை யாளன்
உரைசாமி யினுமரிய குணசாமி யதிநொலா மூவந் தெமர்க்கே
யரைசாமிக் கெனப்புகழுந் துரைசாமி யெனுமொருபே ரடைந்த வானே. (௩)

---



### சமரசவேதசன்மார்க்கசங்கத்துவித்வான்களிலொருவரும்,

திருவருட் பிரகாசவள்ளலென்னுஞ்
சிதம்பரம் இராமலிங்கபிள்ளை மருகருமான
பொன்னேரி புராணிகர்.

### ம-ா-ா-ஸ்ரீ சுந்தரம்பிள்ளை யவர்களியற்றிய

விருத்தம்.

தொ. கு. பெருந்தொகைப்பாட்டு மூன்றாலடியே
குறுந்தொகைப்பாட்டு எழுசீர்க்கழிநெடில்.

பொங்கேற்றசடையாளியென்றுஇமொழிகூறிப்புண்யநீற்றைக்கணவினிற்
பொன்போலரன்றாப்பெறுசொக்கலிங்கநற்புலவனட்டாவதானி
புனிதவடமொழிகொண்டெமிழார்ப்புனைந்தவிப்புவிசேலசுகவனேசர்.

பொன்போன்றறும்புரனைந்தவக்குரைதனைப்புகறியெனமங்களபுரிப்
பூ[illegible]வதாந்தநிந்நாத்தசமரசசிவாத்வைதம்பூண்டசபையார்
புடையுண்மகிழ்ந்துவேண்டுதவேண்டிதுரைசாமிபுகலுமவ்வுரைதானுமே.

பொன்னிகர்த்திடுவிசுவமூண்டதிரைசயதனிலெல்லாமாகிபூத்தசிவ
பொன்மனச்சாக்ஷாதிதன்னிலல்லதுமாய்ப்பொருந்துமுபசாந்தஞ்சொரூபம்
புகழிரண்டினிலிருந்ததனைவிட்டகலாதிருந்தபடிகாட்டும்பொருட்.

புன்மையறசிவமெனப்புகலுமந்நூற்பொருளைப்போற்றுமச்சபையர்சேலம்
பொற்குறுசதேசாபிமானியென்றுமக்கிருட்டிபுவியேத்துமழியாப்
புராதனபராபரவகண்டபரிபூரணப்பொருளைவெளியாக்கினாரோ.

வேறு.

நெடியமொழியனாதனினிலவுங்குலவான்கருணீகன்
நீண்டபுகழ்கொண்டுவதகிரிப்பிள்ளைப்பெயரானிறுத்துமகன்.

நெடியவெழுத்துமுதற்குறுகநேருங்கரவெழுத்தகல
நேருமிடத்தின்சாரியைமேற்கொண்டயினுப்பிள்ளைநிதி.

நெடியபுலிக்கான்முனிகோத்ரனிமலன்பாவனாசுதல
நெடுமுறைத்புராணத்தைநேசித்துரைசெய்துரைசாமி.

நெடியபுகழ்க்குத்துணையாகிசேர்ந்தவுரையச்சினிலேற்றி
நேர்த்தபுவியில்விளக்குபவனிலையுமென்றுசொலப்படுமோ.

## சிறப்புப்பாயிரம்.

காஞ்சிபுரம்

பிரீ சர்ச் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ம-ா-ா-ஸ்ரீ

### பு. கனகசபைநாயகரவர்களாலியற்றப்பட்ட
### நிலைமண்டில ஆசிரியப்பா.

திருக்கிளர்கிரேதா - யுகமதிற்சிறந்த
மருக்கிளர்மலர்தூஉய் - வானவரியாருங்
கார்மலிகனத்தென் - கண்ணுதற்கடவுள்
சீர்மலிபூசனை - செய்துளங்கசிந்து
கண்ணினுண்மணியே - கருணையங்கடலே
எண்குணனேயென் - றேத்துபுமேனுண்
மேவியபசணம் - விலகப்பெற்றதாற்
பாவநாசப் - பழம்பதியெனவுஞ்
சீரார்திரேதா - யுகமதிற்செப்பரும்
பாரார்கௌசிகப் - பார்த்திபனல்வரும்
பாதகமிரியப் - பரமனைப்பரவித்
தீதகனல்வரஞ் - சேர்காமதேனுவாற்
பட்டீச்சரமெனப் - படும்பதியெனவுங்
கட்டீக்காட்சியாற் - கவின்சிறுபொசித்து
நற்றுவாபரத்தி - னுநராஜேந்திரன்
பற்றியவினையெலாம் - பாற்றிடவேண்டலாற்
கற்பனைகடந்த - காரணன்பூரண
சொற்பதங்கடந்த - சோதியெம்பெருமான்
அற்புதமிஃதென் - றமரரும்வியக்கப்
பொற்புறமேனியிற் - புதுமையுண்டாக்கி
நல்வரந்தரசு - தீச்சரமெனவுஞ்
சொல்பெயரன்றித் - துதிசதுர்வேத
மங்கலமெனவும் - வழங்கிடமற்றும்
பொங்கரவிந்தப் - புத்தேள்புனன்றிஞ்
சாவமதேற்றுத் - தளர்ந்துளமைந்து
கோவன்னிவடிவங் - கொண்டொருபுற்றிற்
றுனைதோற்றுஞ் - சயம்புவைப்போற்றி
வானோர்க்கரிதெனும் - வாழ்வுவந்தணுகக்
கலியுகமுதலிற் - கரியுரியுடையான்
மலிவரஞ்சுகற்கு - வழங்கியதாற்சுக
வனமெனவும்பல - வளமிகுஞ்சேலம்
எனுந்திருநகரத் - தெவ்வெவ்வுகத்தும்
அழிவிலாதோங்கி - யவிர்தருமாற்றல்
விழுமியகைலையின் - விளங்குமத்தலத்தின்

## சிறப்புப்பாயிரம்.

சீரெலாம்வடநூல் - செப்பியவாபோல்
நீரெலாம்பருகிய - நீள்சடைப்பெருமான்
தவயோகிவேடந் - தாங்கிமுற்றோன்றிப்
பவரோகமாற்றும் - பஞ்சாக்கரத்துடன்
அருளுருக்கம்புரிந் - தடியெடுத்தளித்துத்
தருகோதமிழினுற் - சாற்றெனப்பணித்த
கட்டளைதலைமேற் - கனிப்புடனேற்று
விட்டதென்வினையெனும் - வெம்பிணியென்று
குலமலிகூடற - கிழார்திருமரபிற்
பலகலைத்தெளிவும் - பரசிவஞானமும்
திருவடிப்பூசைத் - திறந்தெழுமன்பும்
அருந்தமிழ்த்திருவு - மட்டாவதானமும்
மனியுறுஞ்சொக்க - லிங்கநாவலன்றன்
கனிவுடனியற்றிய - காசிநூலதனைப்
பேணிப்பன்னாட் - பெட்புடன்வளர்ந்தாய்
காஞ்சிப்பொன்னென - வாவலிற்காத்து
வந்தநாட்டார் - வைத்தியலிங்கச்
செந்தண்மையனைச் - சேர்ந்துதவாடி
நந்திருநகரி - னலமிகுபுராணந்
தந்திடுகென்றுந் - தங்கரத்தேந்தி
இங்கிதமிடைந்த - தெம்பிரான்செயலென
மங்கலபுரியின் - மாமறையாகம
சமரசாத்வைத - சத்தியாநுபூதியே
தந்தரும்பேறெனச் - சாதித்தடைவுறுந்
தீங்குணவப்பா - சாமிதாயித்த
பண்புறுசடையிற் - பாற்கடலனையார்
எண்ணியிந்நூலுக் - கெளிதாமோருரை
பண்ணுகவென்னப் - பகர்தலுமச்சபை
நாபனஞ்செய்யப் - பாசமிஞான
தீபன்புத்திர - சிகாமணியெனவுங்
கற்பகங்காம - தேனுக்கன்றெனவுஞ்
சொற்பெறுஞ்சகுண - துரைசாமியென்பான்
பத்தர்யாவரும் - பன்முறையோதிச்
சித்தமுவப்பச் - செய்திடுமுரையுடன்
மங்கலபுரியின் - மணியெனவயங்குஞ்
சங்கமதனிற் - சால்புறமழகிரி
சிரியன்மாரிமுத் - தென்னுமிவ்விருவர்
பாரியலன்பினர் - பாற்பெறும்பொருளால்
அச்சிற்பதிப்பித் - தளித்தரும்புகழும்
மெச்சுபுண்ணியமு - மிகமேவினரே.

## காஞ்சிபுரம்

ம-௱-௱-ஸ்ரீ

பச்சையப்ப முதலியார் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ம-௱-௱-ஸ்ரீ

## தி. சு. வேலுசாமிப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பூமேவுசேலமெனும்பாவநாசத்தலமாப்புராணந்தன்னைத்
தேமேவுசேக்கிழார்திருமரபார்சொக்கலிங்கச்செல்வத்தோன்றல்
மாமேவுசித்தாந்தவளத்தினொடுபத்திரசமலிவுற்றோங்கப்
பாமேவுசெந்தமிழாற்பாடினனன்னவன்சீர்பன்னற்பாற்றே. (௧)

அன்னதலமான்மியத்திற்கவிர்தருமோருரையியற்றியளிக்கவேண்டும்
என்னவத்தநகர்ச்சபையாரியம்பவவர்மொழிமேற்கொண்டினிதுசெய்தான்
தன்னரியவேதாந்தசித்தாந்தவுணர்வினைப்பாசாமியுதவுமைந்தன்
பன்னரியபலகலையும்பயின்றவன்சீர்த்தசாமிப்பாவல்லோனே. (௨)

---

தஞ்சை காலேஜ் தமிழ்த்தலைமைப்புலவர்மை

## ம-௱-௱-ஸ்ரீ அய்யாசாமிபிள்ளை அவர்கள்

மாணாக்கருளொருவரும்

சேலம் லண்டன் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய

## ம-௱-௱-ஸ்ரீ ப. மாரிமுத்து நாயகரவர்களாலியற்றப்பட்ட

நிலைமண்டில ஆசிரியப்பா.

மணிவடம்புரளு - மார்பிடங்கொண்டு
தணிதவிலாத - தனப்பாலுண்டு
சிறார்கள்வளருஞ் - செயல்போலுயிர்கள்
அறுவகையென்று - மருந்தமண்மகள்
முலைப்பாலென்ன - மொழிதருவண்ணம்
அலைப்பாலுடைபா - லாறுசூழ்தரும்
புலியூர்க்கோட்ட - மேவபொன்வள
மலிதருகுன்றத்தூர் - வாழ்க்கையுடையவன்
கூடற்கிழாரொடு - மரபுகுலாவிட



நீடியபுகழொலா - நிலத்திடைவுசித்தவன்
கலத்தினுயர்ந்த - நாளும்பொலியும்
பலத்தாலுயர்ந்த - பழையனூரவையுங்
கலிவுபுரிநீலி - யானபெக்கனுற்ற
குலவணிகனுக்கா - யுயிரைக்கொடுத்த
எழுபதின்மர் - குலத்தினின்றெழுந்தவன்
அக்களிப்புடைய - வட்டாவதானஞ்
சொக்கலிங்கப் - புலவனற்றாயோன்
பூதத்தாய - புற்கலநிலையா
சாதற்றின்மை - மெனத்தகநேர்ந்து
இம்மானுடப்பிற - விக்கிடையுறுக
வம்மாவருமுன - மழிவிலாவுடலைக்
கடல்சூழுலகோர் - காண்குறநிறுத்தல்
திடனுமென்னத் - தேர்ந்துசேலத்
தலமான்மியத்தைச் - சமைத்ததனுமை
மலயாசலத்தப் - பிறவிமாய்த்தனன்
இந்நூலாலா - மிப்பயனுணர்ந்து
அந்நூற்பொருளையு மியல்பாயுணர்ந்தே
அறிந்தமாணுக்கரி - னகங்களிப்போங்கக்
கொடுத்தக்கல்வியைக் - குறைகளைப்போக்கிச்
சமாதிநிலையிற் - சாரவிருத்தி
யுமாபதியீசனை - யுளக்கணுற்காண்குறக்
காட்டியாசிரிய - நிலையைக்கைக்கொடு
கோட்டமிலாததன் - கொள்கைக்கேற்பச்
சார்ந்துவாழப்பா - சாமிகன்றுவலன்
சேர்ந்தோர்நிலைமையாய் - நின்றவருரைற்றிய
தவத்தால்வருதுலா - சாமிப்பிள்ளை
நவமிந்நூற் - குரையினல்குரவைப்
போக்குதலானற் - புண்ணியப்பயனும்
நோக்கிவந்தடையு - நொருங்கிடும்பாவம்
உலகுளோர்க்கரிய - வூதியமன்றி
யலகிலாப்பெரும்பய - னுருந்தனக்கெனப்
பலகலையாய்ந்த பாவலர்கூட்டுண
நலமாயுரைதன் - னியற்றினனே.

---

# சிறப்புப்பாயிரம்.

சேலம் லண்டன் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ம-௱-௱-ஸ்ரீ மாரிமுத்து நாயகர் குமாரர்
அரங்கசாமி நாயகராலியற்றப்பட்ட
எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

எட்டவதானசொக்கலிங்கப்பேரோங்கிடுபுலவர்கோனூற்கு
மட்டிலாமணிசூழ்சேலமாநகரில்வாழ்துரைசாமிநாவலனு
லொட்டகற்சுவைசெய்யுரையமுதத்தையொக்குமென்னுஞ்சொல்சேடன்று
விட்டதென்றுவிருபினப்பிணையாக்கிவினம்புதலிற்றெனவெளிதோ.

---

செவ்வாபேட்டை ஸ்ரீலஸ்ரீ அப்பாசாமிபிள்ளையவர்கன்மாணாக்கருள் ஒருவராகிய
காசுக்கடை ம-௱-௱-ஸ்ரீ
சு. மாரிமுத்துசெட்டியார் இயற்றிய
பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்கொண்டமணிமுத்தநதிவளங்கிளரவொளிர் சேலமாஞ்சுகவனத்துட்
சின்மயத்தேனுமபொன்னம்மையோடுலவு சிவபிரான்சீர்த்தியாவும்
நார்கொண்டசொக்கலிங்கப்புலவர்திலகனுங் நாதனருண்மொழிநாடுறீஇ
நற்றமிழ்ப்பாவினாற்சொற்றநூனயமெலா நன்குணர்ந்திங்குய்யவே
பார்கொண்டிடும்பொழிப்புரையாவியற்றினன் பகரரியவைவகையும்
பனகருத்திடுநீறுகண்டியுங்காணுறிற் பணிதரும்பத்திமையுடன்
கார்கொண்டவேதாந்தசித்தாந்தவத்வைத கனஞானபூதிவடிவாங்
கருணையப்பாசாமிகுரவனுதவுந்துரை சுவாமியென்னுங்கவிஞனே.

---

இந்நூல் உரையாசிரியர் மாணாக்கரும்
சேலம் டவுன் ஸ்கூல் உதவி உபாத்தியாயருமான,
ம-௱-௱-ஸ்ரீ அ. சொக்கலிங்கம்பிள்ளையவர்களியற்றிய
நிலைமண்டில ஆசிரியப்பா.

மறுபற்றிலாதொளிர்-மாதவனொன்னும், அறபத்துமூவ-ரரும்பெருஞ்செயலை
விளக்குறவுதித்த-விண்மணிபோலுஞ், தனக்கில்சேக்கிழார்-சுவாமிகண்மரபிற்
றோன்றுறுஞ்சொக்க-லிங்கனுங்கவிஞன், சான்றவர்வதிதரு-தாத்துயர்சேலத்
தலமான்மியமெலாந்-தண்டமிழ்ப்பாவா, னலமுறவியற்றியு-மற்றதனன்
அன்பரியாவரு-மமுதெனவயின்றுங், கீன்புறுமாற்ற-னெளிதுரை ... னன்
இங்குளபதிக-ளெவற்றினுஞ்சிறக்கும், மங்களபுரிதனின்-மறுவிறன்பொருளால்
முருகனுலயமு-முனிவர்வாழ்மடமும், ஒருகந்தவனமு-மூலகெலாம்போற்றுஞ்
சமரசாத்வைதத்-தவலருஞ்சபையும், அமரரும்வியக்க-வமைத்திடுஞ்சுகுணன்
ஒப்பாரில்லா-துயர்வுறுசீலனும், அப்பாசாமி-யருந்தவமேனும்
புத்திரனுலைபெற்-புகழ்பெறும்புலவர், மித்திரனெனக்கு-மெய்யறிவுறுத்தி
வரைபகவெறிந்தோன்-மலரடிமறவாத், துரைசாமியென்னுந்-துகளிலாதவனே
மூற்றிற்று.

---

## பாயிரம்.

### விநாயகவணக்கம்.

கலிவிருத்தம்.

தேவதேசம்புரிதருஞ்சேலமாம்
பாவநாசத்தலபுராணம்பணிக்
காவலாலுரைசெய்திடவைங்கரக்
கோவைநாளுங்குறித்துவழுத்துவாம். (க)

சுப்பிரமணியசுவாமி துதி.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்பூத்தமணிமுத்தாநதிவளங்கொண்டிலங்குஞ்
சேலபுரிச்சுகவனத்தின்சீர்த்திபுராணற்கே
ஏர்பூத்தபொழிப்புரைக்கவெனதுளத்திலொருபால்
இருந்தருளாய்மறைமுடிவிங்கினிதுரைசெய்யெனவும்
பேர்பூத்தசடைவளவிப்பெருமானுக்குரைத்த
பெருமானேசிறுமானுஞ்சிறுபிடியுமுவக்குந்
தார்பூத்ததிருத்தோளிற்றனிவேய்வேலேந்தித்
தகரமயிலேறிவருஞ்சண்முகசற்குருவே. (உ)

சுகவனேசர்துதி ஷை வேறு.

பாமலர் தொடுத்துப் பதமலர்ப் பூசை
பரிவுடன்புரியும் பான்மையிற் சிறந்தோர்
தீமலமகற்றிச்சிர்சுகக்கடலிற்
றிளைப்புறவிடுக்குந்திருவருட்கரும்பை
மாமனுசரணன்மறக்குலச்சழக்கன்
வாழ்வுறவருளியமதிமுடிமலையைத்
தோமறுபஞ்சாக்கரநதிகலவுஞ்
சுகவனமருந்தைத்தொழுதுளத்தமைப்பாம். (௩)

சொர்ணாம்பிகைதுதி ஷை வேறு.

அண்டபகிரண்டமெலாமளித்தலாதி
யருள்விளையாட்டாடுவதற்கரனுக்காங்கே
மண்டுதிறலாயிலகுமணியேமாசில்
மரகதமேமணிவிளக்கேமறைகளுன்குங்
கண்டுகொளற்கரிதாகுங்கனியேயெங்கள்
கற்பகமேயென்வன்பாற்கரைவோரெல்லாந்
தொண்டுபுரிசுகவனத்திற்சுகமேஞான
சொர்ணமயிலேயுனையாஞ்செழுதுய்ந்தேனே. (௪)

திருத்தொண்டர்துதி கலிவிருத்தம் வேறு.

காமகாசனேகடவுளுயகன்
ஆமெனுவவனடியடைந்தவார்
தேமனுண்மலர்போலுஞ்சேவடி
நாமெந்நாளுமோாடிவாழ்த்துவாம். (௫)

அவையடக்கம் ஷை வேறு.

பாவகாசத்தலபுராணம்பணிந்
தாவலாவிங்கடிமையுாைத்ததில்
ஏவமானவையெண்ணிலவேனுமா
தேவனுரடியார்சிந்தியார்களே. (௬)

நேரிசை வெண்பா.


மிக்கவெளிதானநடைமேவுதமிழ்நூலிதெனத்
தக்கவிதப்பாக்கொகைலேற்றினன்—எக்கலையும்
கற்றுணருஞ்சொக்கலிங்கக்கல்விக்கோன்சேலமெனு
நற்றலமாமான்மியத்தைநன்கு. (௭)

பன்னுவின் கேள்விப் பயிற்சியிலாச் சிற்றறிவேன்
இந்நூற்குச்செய்தவுரை யேற்றமுற—நன்னூல்
பலவுணர்ந்தபாவலர் கோன் பார்வையிட்டுத்தந்தான்
குலவுசிவபுண்ணியமே கொண்டு. (௮)

சிவநெறியே வற்புறுத்தித் தேர்ந்தநெறி யென்னச்,
சிவநெறியே யார்க்குந்தெருட்டி.ச்—சிவநெறியே
பேணுங்கனகசபைப் பேர்கொண்டரன்பத்தி
பூணுங்குணத்தோன் பொலிந்து.

இவ்வொன்பது செய்யுளும் உரையாசிரியராலியற்றப்பட்டன

பாவநாசமென்பது பாவத்தைப்போக்குதலுடையது. என இரண்டாம் வேற்றுமைத்தொகைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகைக்காரணப்பெயர் ஒருசொல்லின் தன்மைப்பட்டு நின்ற பாவநாசம் என்பதுதலம் என்னும் பதத்துடன் சேர்ந்து இருபெயரொட்டாய் நின்று பழமையான சரித்திரம் என்னும் பொருள் தரும் பண்பாகு பெயராகிய புராணம் என்பதோடு ஆறும் வேற்றுமைத்தொகையாய் முடிந்து, பாவநாசத்தலபுராணம் எனப்பெயர் பெற்றது.



௳

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சேலம்

எனவழங்கும்

# மாவைநாசத் தலபுராணம்.

## பாயிரம்.

### காப்பு.

மனவெளி மருண்மத முக்கண் வாரணம்
புனைதரு துதியெனப் புகலியற் சொல்லாந்
துனிகெட வன்பெனுந் தொடரிற் பூட்டிய
வினையெனுங் கந்திணை கிறந்து வாமரோ.

(இ - ள்.) திருவருளாகிய மதத்தைப் பொழிகின்ற சோமசூரியாக்கினி என்னும் திரிநேத்திரங்களையுடைய யானை முகம் படைத்த விநாயகமூர்த்தியை அவர்களிருக்கும் தோத்திரம் என்று சொல்லப்படுகிற இயற்றமிழ்ச்சொல் கனிவித்து, இந்நூல் இடையூறின்றி நிறைவேறும் பொருட்டு, எமது மனவெளியில் மெய்யன்பு என்னும் சங்கிலியிற்பூட்டித் தியானம் என்னும் கட்டுத்தறியினிடத் திவ்யாம் நிலைபெறச்செய்வோம், என்றவாறு.

விநாயகவணக்கங் கூறப்புகுந்த ஆசிரியர் விநாயகமூர்த்தியை யானையா கவுருவகித்ததனின் "வாரணம்" என்றும், இக்கடவுள் யாவர்க்குங் கருணையே மத மென்பார் "அருண்மதம்" என்றும், அங்ஙனமாகிய இயற்றமிழ் இதை வசீகரித் தற்குப் பரிபாஷை என்பார், "புனைதரு துதியெனப் புகலியற்சொல்" என்றும் மெய்யன்பே இதைப்பிணித்தற்குச் சங்கிலி என்பார், "அன்பெனுந் தொடர்" என்றும், மனமே கூடம் என்பார் "மனவெளி" என்றும், தியானமே கட்டுத்தறி என்பார் "நினைவெனுங் கந்து" என்றும், இவ்வாறு செய்யின் எடுத்துக்கொண்ட நூல் இனிது முடியுமென்பார் "துனிகெட" என்றுங் கூறினர். சங்கிலியைக் காலிற் பூட்டுதல் இயல்பாதலின், அன்பு பூண்பது திருவடியின் கண்ணெனப் பொருள் பயின்றது. இந்நூல் இனிது முடிதற் பொருட்டு விநாயக மூர்த் தியை அன்போடு வாக்கினால் வாழ்த்தி, மனத்தினால் தியானிப்போம் என்பது கருத்து. துனி, காரியவாகு பெயர், அரோ - அசை.

### கடவுள் வணக்கம்.

## பாவநாசேசர்.

சீர்கொண்ட கமலமலர் முகமலர வுதயஞ்செய் தினக ரன்போல்
ஏர்கொண்ட பழவடியர் மனக்கமல மகிழ்வோங்க வெறிதரங்கக்
கார்கொண்ட கடற்புவியிற் றிருப்பாவ நாசநகர்க் காதல் பூண்டு
வேர்கொண்ட கயிலையென வீற்றிருக்கும் பரம்பொருளை விரும்பு வாமால்.

(இ-ள்) பெருமை பொருந்திய தாமரைமலர் முகங்கள் மலர உதயமாகிற பால சூரியனைப்போல் அழகமைந்த பழவடியார்களுடைய இருதயமலர்கள் மகிழ்ச்சியினால் ஓங்க, வீசும் அலைகளுடன் கருநிறங்கொண்டிருக்கின்ற கடல் சூழ்ந்த உலகத்திலே எல்லாத்தானங்களுக்கும் மூலத்தானமாக விளங்கும் கைலாசகிரியில் விருப்பங்கொண்டு வீற்றிருப்பதுபோல் திருப்பாவநாசப் புரத்தின் மேல் விருப்பங்கொண்டு வீற்றிருக்கின்ற பரம்பொருளாகிய சிவபெருமானை யாம் விரும்புவோம். எ-று. ஆல்-அசை.

அரும்பிய கொன்றை வேணி யானமு தூறும் பாடல்
விரும்பிய செவியன் விண்ணோர் மேவருங் கைலை யாளி
தரும்பெருங் கலியை மாற்றுந் தமனிய வீதி வாய்ந்த
பெரும்பதிப் பாவநாசப் பிஞ்ஞகன் மலர்த்தாள் போற்றி.

(இ-ள்) சிகையினிடத்தில் அரும்புங் கொன்றை மலரையணிந்த சடையை யுடையவரும், நால்வர் ஓதிய வசனாமிர்தமாகும் தேவாரதிருவாசகங்களை விரும்பிக்கேட்டருளிய திருச்செவிகளையுடையவரும், தேவர்களாலும் அடைதற்கரிய கைலாசத்தையாள்பவரும், துன்பந்தருகின்ற பெரிய வறுமையைப்போக்கும் பொன்வீதிகள் பொருந்திய பெரும்பதியாகிய பாவநாசம் என்னும் தலத்தில் வீற்றிருப்பவருமாகிய பாவநாசேசருடைய பாதாரவிந்தங்கள் எம்மைக்காத்தருளுக. எ-று. (௨)

## பட்டீசர்.

மட்டேறும் மலர்ப்பிணையற் சுருளளக மணிச்செவியின் வளப்பொற் றோடு
தொட்டேறுங் கருங்கயற்கட் பச்சைவல்லி யொருபாகன் சுருதி போற்று
மட்டோடை யணைத்துயிலுந் திருப்பாவ நாசமெனுஞ் செழுநகர்வாழ்
பட்டீச னிணைக்கமலத் திருத்தாள்கள் போற்றியெழு பவமும் வீழ்ப்பாம்.

(இ-ள்) வாசனைவீசுகின்ற புஷ்பமாலைகளையணிந்த சுருண்ட கூந்தலையும் அழகிய செவியினிடத்துள்ள மேன்மை பொருந்திய பொன்றோடாகிய காதணியை அளாவிப்பிரகாசிக்கின்ற கறுத்த சேற்கெண்டைபோன்ற கண்களையுமு



டைய மரகதவல்லியாரை ஒப்பற்ற இடப்பாகத்திலுடையவரும், நீண்ட வோடைகளில் அன்னப்பட்சிகள் நித்திரை செய்வதும் வேதங்கள் துதிப்பதுமான திருப்பாவநாசமென்னும் பெரியபழமையானநகரத்தில்வாழ்கின்ற பட்டீசனென்னும் திருநாமமுடையவருமாகிய பரமசிவத்தினது அழகிய உபயபாதாரவிந்தங்களைப்பணிந்து எழுவகைப்பிறவித்துன்பத்தையும் நீக்குவோம். எ-று. (௩)

## நாகீசர்.

மடம்புரியு மனநோய்க்கு மருந்தாகு மறைநான்கு மறைந்து போகப்
படம்புரியு மரவரசாற் பன்மூன்று முகமளித்துப் பரிவுற் றன்றேன்
அடம்புரியைம் புலனடக்கி யருச்சனைசெய் திடுமாற்று லருள்[illegible]க
கடம்புரியெம் பெருமானு நாகீசன் மலரடிக ணயந்து வாழ்வாம்.

(இ-ள்) துன்பத்தையே யுண்டாக்கும் மனதில் நிறைந்திருக்கின்ற அஞ்ஞானமாகிய நோய்க்கு மருந்தாயுள்ள வேதங்கள் நான்கும் மூன்றாம் யுகமாகிய துவாபரயுகத்திலே மறைந்துபோனமையால், படம் விரித்தாடச்செய்யும் சர்ப்பராஜனாகிய ஆதிசேஷனைக்கொண்டு உலகத்தில் தருவித்து, அந்த ஆதிசேஷன் அன்புகூர்ந்து, குரோதத்தை விளைக்கும் ஐம்புலன்களை அடக்கிப் பூசை செய்த முறைமையால் அநுக்கிரகஞ்செய்து, அவ்விடத்தில் ஆனந்தக்கூத்தாடியிருக்கும் எம்பெருமானாகிய நாகீசருடைய மலர்போலுந்திருவடிகளை விரும்பி யாம் வாழ்வோம். எ-று.

## சுகவனேசர்.

கார்கொண்ட மணிமிடறுங் கனன்மழுவு மறிமானுங் கரத்தி லேந்திச்
சீர்கொண்ட மதிநதியு மாடரவுங் கரந்தைவன்னி தேனார் கொன்றைத்
தார்கொண்ட செஞ்சடையு மடியர்மனந் தாரமுதாய்த் தழைக்குங் கோமான்
தேர்கொண்ட சேலபுரிச் சுகவனத்தெம் பிறையடியைச் சேர்ந்து வாழ்வாம்.

(இ-ள்) பிரகாசிக்கின்ற மழுவாயுதத்தையும், மானையும் திருக்கரத்தில் தரித்து, சிறப்பு பொருந்திய சந்திரனையும், கங்கையையும், சர்ப்பத்தையும், கரந்தையையும், வன்னியையும், தேன்நிறைந்தகொன்றைப்பூமாலையையும் அணிந்த சடாமகுடமும், கருமைவாய்ந்த அழகிய கண்டமும், தொண்டர்களுடைய உள்ளத்தில் ஞானாமிர்தமாய் விளங்கச்செய்யும் இறைவனும், தேரோடும்வீதிவாய்ந்த சேலமாநகரமென்னும் சுகவனத்தில் எழுந்தருளியிருக்கும் எமது பெருமானும் ஆகிய சிவபிரான் திருவடிகளை அடைக்கலமாக அடைந்து வாழ்வோம். எ-று.

## மரகதவல்லியார்.

விரும்பினர்க் காகமநூல் விளைவையுறு பச்சைவினை நீக்கு மின்னைப்
பெரும்பச்சை யயன்பச்சைக் கறிவரிய தனிப்பொருளைப் பெரிய வேழக்
கரும்பச்சை யுரித்தவிறற் பச்சைதங்கை முடிவைத்த கடவுள்வாமத்
தரும்பச்சை வல்லிதிக ழெண்பச்சை வல்லியையா மஞ்ச லிப்பாம்.

(இ - ள்) சிவாகமத்தை ஒருவர் விரும்புவாராயின் அவருள்ளத்தன் வினையும் சிவானந்த போகமும், உடல்கொண்டு உழலும் ஆன்மகோடிகளின் பாவங்களைத்தீர்க்கும் மின்னொளி போன்றவளும், பெருமை பொருந்திய திருமாலும், இளமை தங்கிய பிரமதேவனும், அறிவதற்கு அருமையான பரம்பொருளும், பெரிய தன்மையுடைய யானையின் கருமையான பசிய தோலை யுரித்துப் போர்த்து, திறமை வாய்ந்த புதனுக்குப் பிதாவாகிய சந்திரனைச்சடைமுடியில் தரித்தருளிய சிவபெருமானுக்கு இடது பாகத்தில் வீற்றிருக்கும் அருமையான பைங்கொடிக்கு நிகர் என்றெண்ணும்படியான மரகதவல்லியென்னுந்திருநாமமுடையவளுமாகிய மகாதேவியை யாம் கைகூப்பித்தொழுவோம். எ-று.
இச்செய்யுளில் பச்சை என்பதற்கு முறையே மிருதி, விஷ்ணு, இளமை, தோல், புதன், பசுமை, மரகதம், என்று பொருள். (௬)

## பரசிவம்.

தனிகொண்டு மதப்பிலிற்றுஞ் சலசமலர்த் தவிசின்மிசைச் சார்ந்த வானும்
மணிகொண்டு திரையெறியும் வாரிதியிற் றுயில்வானும் வழுத்தி னோரைக்
கணிகொண்டு புரந்தருளக் கருதுமுருத் திரன்றானுங் கனிந்து செய்யும்
பணிகொண்டு மகிழ்ந்தருளும் பரசிவத்தின் பதமலர்யாம் பரசு வாமால்.

(இ - ள்) குளிர்ச்சி பொருந்தித் தேன் துளிக்கும் தாமரைப்பூம் பீடத்தில் வீற்றிருக்கின்ற பிரமனும், அலைகள் இரத்தினங்களை வாரி இறைக்குந் திருப்பாற்கடலின் கண்வளரும் விஷ்ணுவும், தம்மைத்துதி செய்தவர்களைத் திருவுளத்தில் மதித்தல் கொண்டு,காத்தருள நினைக்கும் உருத்திரமூர்த்தியும், அன்பு முதிர்ந்து செய்யும் பணிவிடைகளைத்திருவுளத்திற்கொண்டு மகிழ்ந்தருளும் பரசிவத்தின் பாதாரவிந்தங்களை யாம் துதிசெய்வோம். எ-று.

## சிற்சத்தி.

சிற்சத்தி தனையெடுத்துக் காலிதனைக் காத்தவனுங் கருதும் வெட்குப்
பொற்சத்தி தனையளித்துப் புலவர்நெடும் பகைதொலைத்துப் புலையே னுள்ளத்
தற்சத்தி தனையகற்றி யருளமுத மகிழ்ந்தூட்டி யடிக்கீழ்ச் சேர்க்குஞ்
சிற்சத்தி தனைமறப்பிற் சிறியேனுக் குய்நெறிதான் சிறிதுண் டாமோ.



(இ - ள் கோவர்த்தன கிரியைக்குடையாக வெடுத்துப்பசுக்களைக் காத்தருளிய திருமாலும் மதிக்கும்படியான சுப்பிரமணியசுவாமிக்கு அழகிய வேலாயுதம் அளித்துத்தேவர்களுக்குப்பெரும்பகையான அசுரர்களை அழித்து, அகந்தையாகிய என் மனதில் இருளாயிருக்கிற அஞ்ஞானத்தின் வலியைப்போக்கி, ஞானாமிர்தத்தை மகிழ்ந்து ஊட்டித் தன்திருவடிக்கீழ் வைத்துக்காத்தருளும் சிற்சத்தியை மறந்துவிட்டாற் சிறியேனாகிய எனக்குப்பிழைக்கும்வழிகொஞ்சமாயினும் உண்டாகுமோ? உண்டாகமாட்டாது. எ-று.

## நடேசர்.

துணியாத தவத்தோங்குந் தருமகுணத் திருமுனிவர் சலிப்பின் றேத்தப்
பணியாரு முருத்திரனும் பங்கயனுந் திருமாலும் பணிக ளாற்ற
வணியாருஞ் சருளாக வருளம்மை யுமைவல்லி களித்து நோக்க
மணியாரு மூயர்மன்றுண் மகிழ்ந்துநடம் புரிவள்ளல் மலர்த்தாள் போற்றி.

(இ - ள்) மாறுதலில்லாத தவத்தாலுயர்ந்த தருமகுணமுடையவர்களாகிய பதஞ்சலிமுனிவர் வியாக்கிரபாத முனிவர் என்னும் இரண்டுமுனிவர்கள் மனஞ்சலிப்பில்லாமல் துதிசெய்யவும், ஆபரணங்களால் நிறைந்திருக்கின்ற பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மூன்று தேவர்களும் கட்டளையின்படி படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களைச்செய்து வரவும், தலைக்கோலம் பொருந்திய சருளாகிய கூந்தலையும் கருணையையுமுடைய சிவகாமித்தாயார் மகிழ்ந்து காணவும், அழகுநிறைந்த உயர்வாகிய பொன்னம்பலத்திலே திருவுள மகிழ்ந்து ஆனந்தக்கூத்தாடியருளும் நடராஜப்பெருமானுடைய மலர்போலுந்திருவடிகள் எம்மைக்காத்தருளுக. எ-று. (௭)

## தக்ஷிணாமூர்த்தி.

வேத மாகம மியாவும் விளம்புநின்
பாத மேயொரு பற்றெனப் பற்றுநம்
போத மேதெனும் புண்ணிய நால்வருக்
கோது மூர்த்தியை யுள்ளத் திருத்துவாம்.

(இ - ள்) வேதாகம புராணசாஸ்திரங்கள் எல்லாம் வியந்து பேசும் உமது பாதமே, ஒப்பில்லாத பற்றாகப்பற்றிக்கொள்ளத்தக்க ஞானம்யாது? என்று வினவிய புண்ணியமுடையவர்களாகிய சனகாதியர் நால்வருக்கு உபதேசித்தருளிய தக்ஷிணாமூர்த்தியை யாம் எமதுமனதில் வாழ்ந்தருளச்செய்வோம். எ-று.

## விநாயகர்.

வருகோடு சூழ்ந்தோங்கு தர்தமுத்தி னிலவெறிக்கும் வரம்பு தோறுங்
குருகோடு வயற்பாவ நாசம்போ லன்பர்மனக் கோயில் கொண்ட
விருகோடு கொண்டமதிச் சடையானன் பாரதப்போ ரிருங்குன் றேடா
யொருகோடு கொண்டெழுதும் வலம்புரிவி நாயகன்றா ளோது வாமே.

(இ - ள்) தவழ்ந்தவருஞ் சங்குகள் கெர்ப்பத்தால் வருந்திப்பெற்ற முத்துகள் சந்திரிகை வீசும் வரப்புகள் தோறும் பட்சிகள் ஓடுகின்ற வயல்கள் சூழ்ந்திருப்பாவநாசமென்னும் தலத்தைப்போல் அடியார்களுடைய மனக்கோயில் எழுந்தருளியிராநின்ற இரண்டு மூனைகளைக்கொண்ட சந்திரனைச்சடாபாரத்திலுடையவரும், ஐந்தாம் வேதமாகிய மகா பாரதத்தை மகமேருவானது டோக ஒற்றைக்கொம்பாகிய எழுத்தாணியைக்கொண்டு எழுதின வருமாகிய வலம்புரி விநாயக மூர்த்தியின் பாதாரவிந்தங்களைத்தோத்திரஞ் செய்வோம். எ-று.

## சுப்பிரமணியர்.

கொந்தாடு கற்பகவின் னாட்டரசு மகவாற்குக் கொடுக்க விண்ணோர்
சந்தாபந் தீரமலை முகங்கிழிய வகம்புழுங்கிச் சலதி வாரி
செந்நூனின் மேடாக வலகையினம் வுணேசர் சிரங்க டேக்கிப்
பந்தாட வேலெடுத்த குமரவே ளிருசரணம் பரசு வாமே.

(இ - ள்) பூங்கொத்துகள் அசைகின்ற கற்பகவனஞ்சூழ்ந்த தெய்வலோக அரசுரிமையைத் தேவேந்திரனுக்குக்கொடுக்கவும், தேவர்களுடைய வருத்தந்தீரவும், கிரவுஞ்ச கிரியின் முகம் பிளவுபடவும், சமுத்திரம் மனம் புழுங்கிச் செந்நீரால் மேடாகவும், பேய்க்கணங்கள் அசுரர் தலைவர்களுடைய தலைகளையெடுத்துப் பந்து விளையாடவும், வேலேந்திய சுப்பிரமணியசுவாமியின் உபயபதங்களை யாம் வணங்குவோம். எ-று

## வீரபத்திரர்.

சந்திரனைத் தாளினாற் றேய்த்[illegible] சூரியனைத் தந்த மெல்லாஞ்
சிந்தவே புடைத்துமகத் தலைவியத் தலைமுடி தீயிற் போட்டு
வந்தமுனி வோரையெல்லா மூபத்திற் சேர்த்தடித்து வாயம டித்து
முந்துநின்று பின்னருளு மொருவீர பத்திரன்றன் முடிமேல் வைப்பாம்.

(இ - ள்) சந்திரனைப் பாதத்தினால் தேய்ந்துபோகும்படி செய்து, சூரியனைப்பற்கள் சிதறும்படி மோதி, யாகாக்கினியானது அவியும்படி தக்கனுடைய


தலையை அக்கினியிலெறிந்து, அந்த யாகத்திற்குவந்திருந்த முனிவர்களெல்லாரையும் யூபஸ்தம்பத்தில் சேர்த்துக்கட்டி அடித்து, கோபாவேசத்தினால் உதட்டை மடித்துக்கொண்டு முதன்மையாக நின்று பின்பு திருவருள் செய்த ஒப்பற்ற வீரபத்திரக்கடவுளது திருவடிகளைச் சிரசின்மேல் வைத்துக்கொள்வோம். எ-று. (௧௬)

## நந்திதேவர்.

[illegible]னொடு மழுச்சுரிகை பிரம்புநான்கு மலர்க்கரங்க ளொன்றினுமே யங்கைக்
[illegible]பானிலவு கங்கைநதிச்சடிலந்தாங்கிப்பரவுவிடமுண்டிருண்ட[illegible] [கொண்டு
தேனிலகு நறுங்கொன்றைமாலைசூடித்தென்றிசைக்கோபுரவாயிற்சென்றுகண்டு
ஞானமரு வுற்றதுபோல் வீற்றிருக்கு நந்தி தேவன் பாதந்தொழுவோ நாமே.

(இ - ள்) மானும், மழுவும், உடைவாளும், பிரம்புமாகியநான்கையும்தாமரைமலர் போன்ற நான்குகைகளிலும் பிரகாசிக்கும்படி [illegible]ந்திக்கொண்டு, வெண்மை நிறம் பொருந்திய கங்கையைச் சடாபாரத்தில் தரித்துக்கொண்டு, [illegible]வரையும் தகிக்கும்படி பரவிவந்த ஆலகால விஷத்தை உண்டு, கறுத்த கண்டத்தைக்காண்பித்து, தேனொழுகுகின்ற வாசனை தங்கிய கொன்றை மாலையை அணிந்து, தெற்குத்திசையிலுள்ள கோபுரவாயிலிற் போய்ப் பரமசிவத்தைத்தரிசித்து, ஞானம் உருவம் பெற்றதுபோல் திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கும் நந்திதேவருடைய திருவடிகளையாம் வணங்குவோம். எ-று. (௧௭)

## வயிரவமூர்த்தி.

[illegible]னிலத்திற் சிறந்திருக்கு நரர்களிலே முதல்வனா பதியே போலும்
[illegible]னிலத்திற் பசுபதியே மேலோனென் றெடுத்துரைக்கும் வேத வாய்மை
[illegible]த்திற் றடுத்ததனாற் றலையரிந்து சதுமுகன்றன் றருக்குத் தீர்த்திம்
மாநிலத்திற் காட்டிவரும் வயிரவன்றாண் மலரடிகள் வணக்கஞ் செய்வாம்.

(இ - ள்) உலகத்திலே சிறந்துவாழும் மனிதர்களிலே தலைவன் நரபதியாகிய அரசனேயாம். அதுபோல் சுவர்க்கலோகத்தில் சிறந்துவாழும் தேவர் கூட்டத்தில் தலைவன் சிவபெருமானே என்று எடுத்துச்சொல்லிய வேதவசனத்தை உணராமல் தடுத்ததனாலே ஐந்து தலைகளில் ஒரு தலையை அறுத்துப்பிரமதேவனுடைய அகங்காரத்தைப்போக்கி, அதை இவ்வுலகத்தார் யாவரும் கண்டறியும் பொருட்டுப் பிரம கபாலத்தைத் திருக்கையில் ஏந்திக்காட்டுகின்ற வயிரவமூர்த்தியினுடைய மலரடிகளை யாம் வணங்குவோம். எ-று. (௧௮)

## நாமகள்.

தாதாடு வரிவண்டு விரித்தசிறைக் காற்றுவந்து தாக்க வீசும்
போதார முறுக்கவிழ்ந்து தேனூறும் வெண்கமலப் பொகுட்டின் மேவும்
மாதாவை யறமபய வரதமும்புத் தகமுஞ்செப வடமுங் கைகள்
மீதாகப் பாவித்தப் பாதார விந்தமுடி மேல்வைப் பாமே.

(இ - ள்) மகரந்தங்களில் முழுகிய வரிகளையுடைய வண்டுகள் விரித்த சிறைகளால் உண்டாகும் காற்று வந்து மோதி வீசும்போது மிகவும் கட்டவிழ்த்து தேன்சுரக்கும் வெண்டாமரைப்பூவில் வீற்றிருக்கின்ற உலக மாதாவாகிய சரஸ்வதியானவள் பொருந்திய அபயமும், வரதமும், புத்தகமும், செபமாலையும் நான்கு திருக்கரங்களினும் உள்ளனவாகப் பாவித்துச் சீர்பாத கமலங்களை யாம் எமது சிரசின்மேல் வைத்துக்கொள்வோம். எ-று. (௧௩)

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

மைம்மருவு மலர்ச்சோலை சூழிசர் வந்துதித்து வழிய வர்தம்
பொய்மைநெறிப் பரசமயக் குழிதூர்க்க வருட்கவிதை பொழிய வங்கம்
கொம்மைமுலை மாதாக வுலகமெல்லாம் பூத்தபச்சைக் கொம்பர் போன்ற
வம்மைதிரு முலைப்பாற்கன் றழுதபிரா னடியவர்க்கே யடிமை செய்வாம்.

(இ - ள்) மேகமண்டலத்தை அளாவிய பூஞ்சோலைகளாற் சூழப்பட்ட சீர்காழியென்னும் நகரத்தில் திருவவதாரஞ் செய்து சன்மார்க்கமல்லாத பொய்மார்க்கமாகிய பௌத்தம் முதலான புறச்சமயங்களாகிய படுகுழிகள் பாழாகத் தேவாரப்பதிகங்களாகிய அருண்மாரிசொரியவும், திருமயிலையில் அஸ்தியானது குவிந்தஸ்தனங்களையுடைய பூம்பாவையாகவும், சகல புவனங்களையும் பெருமைபெற்றருளிய பசும் பூங்கொடி போன்ற உமாதேவியாருடைய அழகிய முலைப்பாலுக்கு முற்காலத்தில் அழுதருளிய திருஞான சம்பந்தசுவாமிகளது அடியார்களுக்கே யாம் அடிமை செய்வோம். எ-று.

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

பெருநாவாய்க் கருங்கடலிற் கற்றூணி னுடனாழ்ந்தும் பீழை யின்றி
யொருநாம மேயுரைத்து மேன்மிதந்து திருப்பதிகத் தொடையல் சாத்தி
யிருநாகப் பணிபூண்ட வெம்மையப்ப னுளமகிழ்ச்சி யெய்தச் செய்யுந்
திருநாவுக் கரசர்பத மறவாமற் றுதித்திறைஞ்சிச் சிந்தை செய்வாம்.

(இ - ள்) பெரிய கப்பல்கள் செல்லுதற்குரிய கருமையான சமுத்திரத்தில் புத்தர்களால் விடப்பட்ட கருங்கற்றூணோடு அழுந்தியும், அதனாற் சற்றுந் துன்பமில்லாமல் ஒப்பற்ற ஸ்ரீபஞ்சாக்ஷரப் பதிகமோதி அக்கல்லே தெப்பமாக அக்கடலின்மேல் மிதந்து வந்து, பல க்ஷேத்திரங்களிலும் எழுந்தருளி யிராநின்ற நீண்ட சர்ப்பாபரணமணிந்த எமது தந்தையாராகிய சிவபெருமான் மேல் தேவாரமாகிய பாமாலைகளை அணிந்து, அவரது திருவுளமானது மகிழ்ச்சியடையும்படி செய்த திருநாவுக்கரசு சுவாமிகளது பாதாரவிந்தங்களை எப்போதும் மறவாமல் துதிசெய்து வணங்கித் தியானிப்போம். எ-று. (௧௫)



## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

வாவுதிரைப் புனன்முதலை கொடுபோன பிள்ளைவர மணியாற்றிட்ட
நாவில்பொருள் குளத்தில்வரத் திருவாரூர் வீதியின்கட் டணந்தோர் சிந்தைப்
பாவனைக்கு மரியவர்தா ளிடையிருளிற் றூதேகப் பாடுஞ் செய்ய
நாவலூர்ச் சைவசிகா மணிக்கமலச் சேவடிக்கே நாமாட் செய்வாம்.

(இ - ள்) அவிநாசியென்னும் தலத்திலே பாய்கின்ற அலைகள் வாய்ந்த குளத்தில் முதலையினாற் பிடித்துண்ணப்பட்ட பிராமணப்பிள்ளையானது அம்முதலைவாயினின்று மீண்டும், உயிர் பெற்றுவரவும், திருமுதுகுன்றமென்னுந்திருப்பதியில் திருமணிமுத்தாநதியில் போடப்பட்ட குற்றமில்லாத பொன்னானது திருவாரூரென்னுந் தலத்திலுள்ள கமலாலயமாகிய தடாகத்தில் வரவும், அகங்கார மமகாரங்களை விட்ட பெரியோருடைய மனோபாவனைக்கும் எட்டுதற்கு அருமையான சிவபெருமான் திருவாரூர் வீதியின்கண் திருவடி பொருந்தும்படி நடந்து, நடு இராத்திரியில் பரவை நாச்சியாரிடத்தில் தூது செல்லவும், தேவாரப்பதிகங்களோதினவரும், பரிசுத்தம் பொருந்திய திருநாவலூரில் திருவவதாரஞ்செய்தவரும், சைவசமயத்திற்குச் சிரோரத்தினம் போன்றவரும் ஆகிய சுந்தரமூர்த்திசுவாமிகளது தாமரைமலர்போல் சிவந்தபாதங்கட்கு யாம் தொண்டு செய்வோம். எ-று. (௧௬)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

பெருவாழ்வு தருஞான நெறியன்றி [illegible] யுலகுயிர்க்குப் பிறப்புட் டோயுங்
கருவாதை தீர்த்தருளக் கருணை [illegible] றந்தொழுகுங் கருத்தி னுய்ந்தன்
றொருவாத திருவாசகத்தமிழ்நால் வாய்மலர்ந்த வொருவர் வன்மைத்
திருவாத வூர்முனிவர் தாடொழுவார் திருசரணஞ் சென்னி சேர்ப்பாம்.

(இ - ள்) சிவானந்த வாழ்வைத் தரும் மெய்ஞ்ஞான மார்க்கம் இதுவெனக் காட்டி, உலகத்திலுள்ள ஆத்மாக்களெல்லாம் பிறவிக்கடலினாழ்ந்து வருந்துதற்கேதுவாகிய கருப்பாசயப்பை [illegible] க்குநூக் ஆனந்த [illegible], யருள்மடை திறந்ததுபோல் கிருபாவெள்ளம் [illegible] பெருகுந்திருவுள்ளத்தில் நினைந்து, அந்த வினை

விலிருந்து நீங்காமல் திருவாசகமென்னுந் தமிழ் வேதத்தைத் திருவாய் மலர்ந்தருளிய ஒப்பற்றவரும், வளப்பமுள்ள திருவாதவூரில் திருவவதாரஞ் செய்தவருமாகிய மாணிக்கவாசகசுவாமிகளது மலரடிகளை வணங்குவோருடைய உடயதிருவடிக்கமலங்களை எமது முடியிற் சூட்டிக்கொள்வோம். எ-று. (௨௦)

## சண்டேசர்.

சிந்தை கூர்ந்து சிவனைய ருச்சிக்க
நிந்தை கூறுமந் நேரம்பொ ருமலே
தந்தை யாரிரு தாளற வீசுறும்
எந்தை யார்திருத் தாள்பணிந் தேத்துவாம்.

(இ-ள்) மனதில் அன்பு மிகுந்து சிவபூசை செய்கையில் பழிகூறிய அவ்வேளையில் மனம் பொறுத்தல் இல்லாமல் தமது பிதாவின் இரண்டு கால்களும் துண்டாய்விட வீசிய எமது பிதாவாகிய சண்டேச நாயனாருடைய திருவடிகளை வணங்கி வாழ்த்துவோம். எ-று. (௨௧)

## அறுபத்துமூவர்.

தோகேற ஊற்றெழுசப் பசுந்தாது மலர்ந்தருக்குந் தொடையற் கொன்றை
நீடியசெஞ் சுடர்க்கற்றைச் சடைமுடியி லணிந்தவர்தா ணிழற்கே யெய்தும்
பீடுபெறு தில்லைவா ழந்தணரே முதலாய பெரியோர் பாதங்
கோடைநெடும் பவநீங்கப் புனைந்தவர்தாண் மலர்சிரமேற்கொண்டுவாழ்வாம்.

(இ-ள்) இதழ்களிலிருந்து தேன் ஊற்றெழுசப் பசுமையான மகரந்தங்களை மலர்ந்து சொரிகின்ற கொன்றைப்பூமாலையை நீண்ட செஞ்சோதித்திரட்சியான சடைமுடியில் அணிந்தவராகிய சிவபெருமானுடைய திருவடி நிழலை அடையப்பெற்ற பெருமை பொருந்திய தில்லைவாழந்தணர் முதலான பெரியோர்களாகிய அறுபத்து மூன்று நாயன்மாருடைய பாதாரவிந்தங்களை தமது வெப்பமான கெடிய பிறவித்துன்பம் நீங்கச் சிரசின்மேற்கொள்ளும் அடியார்க்கடியாருடைய பாதாரவிந்தங்களை எமது சிரசின்மேல் வைத்துக்கொள்வோம். எ-று. (௨௨)

## சிற்றம்பலதேசிகர்.

துப்புறழ்செஞ் சடைமுடியும் நிலவெறிக்கு மிளம்பிறையுஞ் சுட்டருங் காளமைப்படியுந் திருக்கரமு மொளித்துநர வுருவாகி மண்ணில் வந்து
செப்பரும்வல் வினையேனைத் தொண்டுகொண்டு வாய்மலர்ந்த தெய்வ ஞான
முப்பைதக ரழகியசிற் றம்பலவன் முண்மலர்ப்போம் முடிமேல் வைப்பாம்.



(இ-ள்) பவளம்போற்சிவந்த சடாமகுடத்தையும், நிலவொளி பரப்பும் மூன்றாம் பிறைச்சந்திரனையும், சுவாலிக்கின்ற ஆலாலவிஷந்தங்கிய கரிய கண்டத்தையும் மறைத்து, இவ்வுலகில் மானிடச் சட்டை சாத்தி எழுந்தருளி வந்து, சொல்லுதற்கருமையான கொடிய வினையையுடைய என்னை அடிமையாகக்கொண்டு, திவ்விய ஞானசாத்திரத்தைத்திருவாய் மலர்ந்தருளிய முப்பைசகரத்தில் வீற்றிருக்கும் அழகிய சிற்றம்பலவானரென்னும் ஆசிரியருடைய திருவடியை எமது சிரசின்மேல் தரித்துக்கொள்வோம். எ-று. (௨௩)

## மற்றையசிவநேசர்.

பையரவி னிமைக்குமணிச் சுடிகையுச்சிக் கிடந்தபெரும் பாரின் முக்கட்
செய்யசுடர் மழுப்படையா ரமுதின் சரிதைநெறித் திறஞ்சொல்வோர்க்குஞ்
சைவநெறி நின்றோர்க்கு மயலகலத் திருவேடந் தரித்துள்ளோர்க்கு
மையமின்றி யடிமைசெய்வா மடிமைசெய்வா முக்காலு மடிமை செய்வாம்.

(இ-ள்) ஆயிரம் படங்களையுடைய ஆதிசேஷனது இரத்தினச்சுடிகையால் விளங்கும் உச்சியின் மேல் இருக்கின்ற பெரிய பூமியிலே மூன்று கண்களையும் செம்மையான ஒளியமைந்த மழுவாயுதத்தையுமுடைய பரமசிவத்தின் சுவை நிறைந்த தேவாமிர்தம் போல் இனிமையான சரித்திரத்தின் தன்மையை எடுத்துச்சொல்லுகின்றவர்களுக்கும், சைவசமயத்தில் வழுவாமலிருக்கின்றவர்களுக்கும், மூவாசை நீங்கும்படி சிவசின்னங்களைத்தாங்கப்பெற்றவர்களுக்கும், மெய்மையாக அடிமை செய்வோம், அடிமைசெய்வோம், மும்முறையும் அடிமைசெய்வோம். எ-று. (௨௪)

## சிவயோகியார்.

நாயினிலுங் கடையேனைப் பொருளாக வெழுந்தருளி நளினக் கையிற்
றூயசெபு வடமணிந்து சடைதாங்கிப் பொடிபூசிச் சோதி ரூப
மேயதிகம் பரமாகித் தொண்டுகொண்டு வாய்மலர்ந்து விளங்கச் சொல்லித்
தாயினுநல் லருள்புரிந்த சிவயோகி யிருசரணந் தலைமேற் கொள்வாம்.

(இ-ள்) நாயைப்பார்க்கிலுங் கடையேனாகிய என்னையும் ஒரு பொருளாக எண்ணி, எனது சொப்பனத்திலெழுந்தருளித் தமது தாமரை மலர்போன்ற கையில் பரிசுத்தமான செபமாலையை யணிந்து, சடைமுடிகொண்டு திருநீறு பூசிச் சோதி சுந்தரமான திகம்பரவடிவமாய் அடிமையாகக்கொண்டு திருவாய் மலர்ந்து, சிவவசனங்களை நன்றாகச்சொல்லித் தாயைப் பார்க்கிலும் நல்ல திருவருள் புரிந்த சிவயோகியாருடைய உபய திருவடிகளையும் சிரசில் தரித்துக்கொள்வோம். எ-று. (௨௫)

## தலமான்மியம்.

பகர்கிரேதாயுகத்துப்பாவநாசப்பதிபாவநாசேசர்திரேதைதன்னி
னகர்பட்டீச்சுரம்பட்டீச்சுரரேயீசர்நற்றுவாபரயுகத்துநாகீசம்மாய்
திகழுநாகீச்சுரராய்ச்சயம்புநாதர்நின்றகலியுகத்திலேகிளிபூசிக்கச்
சுகவனமாயீசர்சுகவனேசராகிச்சொல்யுகநான்கினும்விளங்குந்தொல்லூழதாம்.

(இ - ள்) சொல்லுகின்ற கிரேதாயுகத்தில் பாவநாச க்ஷேத்திரமென்றும், பாவநாசேசரென்றும், திரேதாயுகத்தில் பட்டீச்சுரத்தலமென்றும், பட்டீச்சுரரென்றும், நல்ல துவாபரயுகத்தில் நாகீச்சுரப்பதியென்றும், திகழும் நாகீச்சுரரென்றும், சுயம்பு நாதரென்றும், நின்றகலியுகத்தில் கிளிபூசித்ததனால் சுகவனம் என்றும், சுகவனேசரென்றும், பெயர் பூண்டு சொல்லப்பட்ட நான்கு யுகங்களிலும் பழமையான பாவநாசபுரம் விளங்குகின்றது. எ-று. (௨௬)

## மூர்த்திதலதீர்த்தவிசேடம்.

சுகவனத்தா ரென்றுரைத்தார் சுகவனத்தில் வீற்றிருக்குந் தூயோ ராவர்
புகழுமனு சரணமென்றோ ரனுப்பாற் றனுசரணம் புரிந்தோ ராவர்
நகைபரவு திருப்பாவ நாசமென்றோர் தம்பாவ நாசஞ் செய்தா
ரிகலடர்வெள் ளேற்றுரோன் றேத்தாரே யியாரா யேற்றூர் தாமே.

(இ - ள்) சுகவனநாதரென்று சொன்னவர்கள் மூர்த்திஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் பரிசுத்தராவார்கள்; புகழ்ந்து பேசப்படும் மனுசரணமென்று தீர்த்தத்தின் பெயரைச்சொன்னவர்கள் சிவபெருமான் சந்நிதியில் சாஷ்டாங்க தெண்டஞ் செய்தவராவார்கள்; ஒளி மிகுந்த திருப்பாவநாசமென்று தலத்தின் பெயரைச்சொன்னவர்கள் தங்கள் பாவங்களையெல்லாம் பரிகரித்தவராவார்கள்; வலிமிகுந்த வெண்மையான ரிஷபவாகனமுடையாரென்று துதிசெய்யாதவர்களே தரித்திரராய்ப்பிச்சை யேற்று உண்பவராவார்கள். எ-று. (௨௭)

## நூல்செய்தற்குக்காரணம்.

மாலயனுக் கறிவரிய வின்னவனத் தருள்பொருந்தி மதுர வாரி
யாலயத்துள் விடைத்தேவ ருடைத்திராங்கி யலகில் ஞானச்
சிலநெடுந் தவயோகி திருக்கூழாத் திடனிருந்து திருக்கண் சாத்தி
பாலழைத்து நாயேற்கு நீறுதவி யித்தலப்பேர் பாவ நாசம்.

(இ - ள்) பிரமவிஷ்ணுக்களுக்குங் காண்பதற்கு அருமையான கிருபா வெள்ளம் பெருகும் ஆனந்தக்கடலாகிய சுகவனேசரது திருவாலயத்தின்கண் நந்தி தேவரது பக்கத்தில், சடைமுடிபூண்டு அகண்ட ஞானசிலப்பெருந்தவச்



சிவயோகியார் தமது அடியார் கூட்டத்துடன் எழுந்தருளி, திருபாடுநோக்கம் புரிந்து, தம்மிடத்தில் வரவழைத்து, அடியேனுக்கு விபூதிப்பிரசாதமளித்து, இந்தத்தலத்தின் திருநாமமானது திருப்பாவநாசத்தலம். எ-று. (௨௮)

என்றருளிப் பலவாக வெடுத்தியம்பித் திருமுறையே யெடுத்தேயீய்ந்து
தென்றமிழாற் புராணநீ செப்பென்று முகமலர்ந்து திருவாய் நல்க
அன்றுதிரு முறையேடும் வளரருளும் பதமுமுடி சூடி நாயே
னின்றுசொல்லு வேன்பாவ நாசதல புராணமென்றே யாருங் கூற.

(இ - ள்) என்று அநுக்கிரகஞ் செய்து அதன் பெருமையைப்பலவாறாக எடுத்துச்சொல்லித் திருமுறையேடு ஒன்றைக் கொடுத்து, அழகிய தமிழ்ச் சொல்லால், நீ இத்தலபுராணம் பாடு என்று சந்தோஷத்தோடு திருவாய் மலர்ந்தருள அவ்வண்ணமே, அவரா லன்றுகொடுக்கப்பட்டதிருமுறை யேட்டையும், அவரது திருவருளையும், பாதாரவிந்தங்களையும், எனது முடிமேற் கொண்டு, திருப்பாவநாசத் தலபுராணமென்று யாவரும் சொல்லும்படி இப்போது பாடத்தொடங்கினேன். எ-று. (௨௯)

பொன்றேத்து சடையாளி புகழ்நாமங் கூறினரோ
யென்றெடுத்துப் பாடென்றோ ரீந்தசெய லாமெனினு
மன்றெனினு மவையோர்கள் கிரந்தத்தி லிருந்ததனை
யின்றுதமி ழாலுரைப்பே னிறைவனருள் கடவேனால்.

(இ - ள்) "பொன்றேத்து சடையாளி புகழ்நாமங் கூறினரோ" என்று பரம சிவம் செய்யுளடி யெடுத்துக்கொடுத்து, அதை முதலடியாக வைத்துப்பாடும் படி திருவாய் மலர்ந்தருளினார்; இக்காரியம் செய்ய அடியேனால் முடியுமெனினும் முடியாதெனினும் சபையோர்கள் அங்கீகரித்த வடமொழியிலுள்ள சரித்திரங்களைச்சிவபெருமான் திருவருளைக்கடக்க மாட்டாதவனாய் இப்போது தென்மொழியிற் சொல்லலுற்றேன். எ-று. (௩0)

## அவையடக்கம்.

பொன்னகரும வலயன்வரம் பறிவரிய நன்மணிக ளொழுங்கு சேர
வெளிதாரூறற்கொடுசேர்ப்பர்வெண்ணிடைப்பொதிவர்விளங்குஞ்செம்பொ
னமுறுபொன் பட்டாகத் திடைப்பெய்வர் மெருகைப்ப மருவு மாபோ [ன்
லளியவனேன் புன்சொல்லு நன்சொல்லாஞ் சிவகதைசேரியல்பி னானே.

(இ - ள்) விலைமதித்தற்கரிதான பிரகாசம் பொருந்திய நவரத்தினங்களை வரிசையாகச் சேர்ந்திருக்கும்படி வெண்மையான நூலில் கோவை செய்வார்கள்; ஒளிபொருந்தியசெம்பொன்னை வெண்மையானவஸ்திரத்தில்முடிந்து

வைப்பார்கள்; நன்மையான பாலை மண் பாத்திரத்தில் வைப்பார்கள்; கயிலாயம் பொன் மலையைச்சார்ந்து பொன்வண்ணமானது போல் சிவசரித்திரத்தோடு சேருந்தன்மையால் அடியேனுடைய இழிசொல்லும் உயர்சொல்லாகும் எ-று. (௧௧)

மகரநெடு நீர்ப்புவியிற் பண்பறிவு தொழிலிவற்றின் மதித்தற் கொண்ணு
விகலடைந்தாற் கெவ்வளவே னுஞ்சிறப்பொன் றுளதாகி வியல்பின்மிக்காய்ப்
புகழ்வதன்றே லறிஞர்குண மாதவினூற் சிற்றறிவென் புந்திக் கீது
தகைமையென்று புலப்படுத்தி யதிசயித்தல் கற்றோர்க்குத் தகுதி யாமால்.

(இ-ள்) மகரமீன்கள் சஞ்சரிக்கின்ற விசாலமான சமுத்திரஞ் சூழப்பெற்ற உலகத்தில் நல்ல குணமும், ஞானமும், செய்கையுமாகிய இவைகளில் ஒரு பொருளாக மதிக்கத்தகாத பலகைவனிடத்திலும் கொஞ்சமேனுஞ் சிறப்பிருக்குமாகில், அதை மிகுதியாகப் புகழ்ந்து பேசுவதல்லவா? சான்றோருடைய குணம். ஆகையால், அற்ப அறிவுடையேன் புத்திக்கு இது தகுதியென்றே அறிந்து ஆச்சரியப்படுவது கற்றுணர்ந்தோர் கடமையாம். எ-று. ஆல் அசை.

அடங்கலர் புரந்தீ யூட்டு மண்ணெல்லாம் பாவ நாசத்
தடம்பதிப் பெருமை வேதஞ் சாற்றிடுந் தன்மைத் தாமால்
மடம்பயில் நாயேன் கூறும் வழக்கின்றே மதிக்கும் வண்ண
நெடுங்கட லேழுங் கையா னீந்திட நினைத்தல் போலும்.

(இ-ள்) பகைவர்களுடைய முப்புரங்களையும் எரித்தகடவுள் எழுந்தருளியிராநின்ற விசாலமான திருப்பாவநாச க்ஷேத்திரத்தின் மகிமையானது, வேதங்களால் எடுத்துக்கூறத்தக்கதாகும். ஆகையால் அறிவில்லாத அடியேன் அதனை யெடுத்துச் சொல்லுமுறையேயில்லை. அவ்வாறாக, அதனைச்சொல்ல நினைக்குந்தன்மை நெடிய கடல்கள் ஏழையும், தனது கைகளால் ஒருவன் நீந்திச்செல்ல நினைத்தலையே ஒக்கும். எ-று. (௧௩)

அன்னதோர் கதையின் றன்மை யளப்பரி தாயிற் றேனும்
முன்னவ ரருளிச்செய்த மொழியெனைத் தூண்ட லாலுந்
தன்னிக ரில்லா வீசன் சரிதையிற் றுள வொண்ணு
தென்னுளத் தாசை வெள்ள மீர்த்தலிற் றொடங்கு கின்றேன்.

(இ-ள்) அவ்வாறான ஒப்பற்ற சிவகதையின் பெருமை அளவிட்டறிவது அரிதாகுமாயினும் முதன்மையான சிவயோகியார் அருள்புரிந்த திருவார்த்தை என்னைத் தூண்டுதலினாலும் தனக்குத்தானே ஒப்பாகிய சிவபெருமானுடைய சரித்திரத்தில் பொறுக்க முடியாமல் என் உள்ளத்தில் தோன்றிய ஆசைப்பெருக்கு விரைந்து இழுக்கின்றதினாலும் சொல்லத் தொடங்கினேன். எ-று. (௧௪)



## புராணவரலாறு.

வள்ளலார் தாமுன் சொன்ன வாசகப் படியே நந்தி
யுள்ளருந் தவச்ச னற்குரைத்திடுங் காதை யீதாம்
உள்ளங்கொள் கெனவாய் விண்டிங் குரைத்திடு மருண்மேற் கொண்டு
கள்ளிருட் பவத்தை நீக்க நாயினேன் கூறு கின்றேன்.

(இ-ள்) கருணாநிதியாகிய சிவபெருமான் பூர்வம் திருவாய் மலர்ந்தருளியபடி திருநந்திதேவர் மனதினால் நினைப்பதற்கரிய தவத்தையுடைய சனற்குமாரருக்கு உபதேசித்தருளிய கதை இது வாகும். நீ உன் மனதிற் கொள்வாயாக என்று எம்பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவருளைச்சிரசின் மேற்கொண்டு, நடு ராத்திரி யிருளைப்போன்ற அஞ்ஞான விருளால் சூழப்படும் பிறவித்துன்பங்களைப்போக்க அடியேன் சொல்லுகின்றேன். எ-று. (௧௫)

கயிலையின் சருக்கம் வீர பத்திரன் றலத்தின் காதை
செயலுறு சரவ திப்பெண் டேனுவோ டனந்தன் காதை
நயமனுச் சரணக் காதை கிளிக்கதை கவிலுங் குட்டம்
பயனுறுந் தீர்த்தகாதை பரிச்சித்துக் கதையன் றொன்றே.

(இ-ள்) இந்தத் தலபுராணமானது திருக்கைலாயச்சருக்கம், வீரபத்திரசருக்கம், திருப்பாவநாசச்சருக்கம், நதிச்சருக்கம், சரவதிசருக்கம், காமதேனுச்சருக்கம், அநந்த சருக்கம், நன்மை பொருந்திய மனுசரணச்சருக்கம், கிளிபூசித்தசருக்கம், சொல்லுகின்ற குட்டத்தீர்த்த சருக்கம், பரிச்சித்துச்சருக்கம் என்று பதினொரு பிரிவுள்ளது. எ-று. (௧௬)

## சிறப்புப்பாயிரம்.

குன்றையூர்ச் சேக்கிழார் தந்தலக் கூடற் கிழாரில் வந்தோன்
வென்றவட் டாவ தான சொக்கலிங் கக்க வீசன்
மின்றிகழ் பாவ நாச புராணமே விளங்கச் செய்தான்
தென்றமி ழமுதமுண்ணச் சிவனடி யார்க டாமே.

(இ-ள்) குன்றையூர் சேக்கிழாரது மரபில் கூடற்கிழார் சந்ததியில் உதித்தவராகி, புலவர்களைச்செயித்த அட்டாவதான சொக்கலிங்கக்கவிராஜர் புகழ்வாய்ந்த பாவநாசத்தலபுராணம் என்னும் அழகிய தமிழாகிய அமுதத்தைச்சிவனடியார்கள் எல்லாரும் கலந்துண்ணும்படி விளங்கச்செய்தார். எ-று. (௧௭)

(பாயிரம் முற்றிற்று.)

# கைலைச் சருக்கம்.

மருக்கிளர் கமலநாதன் வந்தபே ருந்தியானு
முருக்கிளர்ந்தறிகிலாத வொப்பிலாவிறைவன் வாழ்குன்
றிருக்கது முதலாநாலு வேதமு மிறைஞ்சியேத்துந்
திருக்கயிலாயமென்னுந் திருப்பெயர்த்தெய்வவெற்பு.

(இ-ள்) வாசனை பொருந்திய கமலாசனத்தையுடைய பிரமதேவனும், அவர் தோன்றிய பெரிய வுந்திக்கமலத்தையுடைய மகா விஷ்ணுவும், உருமா றிக்காண ஒண்ணாதவொப்பற்றசிவபெருமான் எழுந்தருளியிராநின்ற வெள்ளியங் கிரியானது இருக்கு முதலான நான்கு வேதங்களும் வணங்கித்துதிக்குந் திருக் கைலாயமென்னுந் திருநாமம் பெற்ற தெய்வ மலையாம். எ-று. (க)

தந்திடு மிருபான் கோடி யோசனை யகலஞ் சார்ந்தெண்
ணைந்தெனுங் கோடி நீளஞ் சதகோடி யளவுயர்ச்சி
யுந்து பன்னொரிலக்கத் தோர் பன்னொ ராயிரத்தின்
வந்திடு நூற்றின் மேலே கொடுமுடி வருபன்னெட்டே.

(இ-ள்) அந்தக்கைலாய கிரியானது இருபது கோடி யோசனை யகலமும், நாற்பது கோடி யோசனை நீளமும், நூறு கோடி யோசனை உயரமும், பதி னொரு லக்ஷத்துப் பதினோராயிரத்து நூற்றுப் பதினெட்டுச்சிகரங்களையுமுடை யது. எ-று. (உ)

இகழிலெண் மதில்கள் சூழ விருநான்கு கோபுரங்கள்
பகுதமோ ரெட்டுவாயிற் புகழ்கொடு முடி பசும்பொ
னிகரறு மணித்தூண் கோயி னிரைத்த மாணிக்கக்குன்றை
திகழ்கதிர் கோடிபோலச் சிறந்தொளி பரந்த தாமால்.

(இ-ள்) உயர்வான எட்டு மதில்களால் சூழப்பட்டு, எட்டுக்கோபுரங்களை யும், பிரவேசிக்கும் எட்டு வாயில்களையும், புகழத்தக்க பசுமையான பொன்று லாகிய கொடுமுடியையும், ஒப்பில்லாத மாணிக்கத்தூண்களையும் உடையதிருக் கோவிலில் ஒழுங்காகப்பதிக்கப்பட்ட மாணிக்கத்திரட்சியானது பிரகாசிக் கின்ற கோடி சூரியர் போல் சிறந்து ஒளிபரந்திருப்பதாம். எ-று.

கீழ்த்திசை முதலீசான மீறெனக்கிளருமெட்டில்
வேழமாமுகனே வீரன் விறனந்தி வயிரவன்வேல்
வாழ்வறுசந்தன் றுர்க்கை மகா காளா முகனே சாத்தன்
சூழவே காவல் காக்குந் தூயவ ரிவர்க ளெண்மர்.



(இ-ள்) கிழக்குத்திசை முதல் ஈசானதிசை ஈறாகி எட்டுத்திக்குகளிலும் கணபதி, வீரபத்திரர், வலியமைந்த நந்தி தேவர், வயிரவர், வேலாயுதத்தை யுடைய கந்தர், துற்கை, மாகாளர், ஐயனார், ஆகிய எண்மர்களுஞ் சூழ்ந்து கா வல் செய்வார்கள். எ-று. (ங)

ஏழ்கடற்றீவேழ்குன்றமெட்டொருசெம்பொன்மேருச்
சூழ்தருநேமிவெற்புச்சொல்லிடிலுலகமாகும்
தாழ்விலாவுலகமீரேழ்சாற்றிலோரண்டமாகும்
வாழுமாயிரத்தெட்டண்டமதித்திடும்புவனமாமே.

(இ-ள்) சப்தசமுத்திரங்களும், சப்த தீவுகளும், அஷ்டகுல பர்வதங்க ளும், ஒரு மகமேருவும், இவற்றைச்சூழ்ந்துள்ள சக்கரவாளகிரியும் உடையதா யிருப்பது உலகமென்று சொல்லப்படும். இப்படி ஈரேழுலகஞ் சேர்ந் தது ஓரண்டமாகும். இப்படி ஆயிரத்தெட்டண்டங்களை உடையது ஒருபுவன மாகும். எ-று. (ச)

புவனமோரிருநூற்றெண்மூன்றகிலாண்டமெனப்பொருந்தும்
குவியகிலாண்டங்கோடிகொண்டதுபிரமாண்டந்தான்
கவில்பிரமாண்டராசிநாயகனருளிற்றோன்றி
யுவரியிற்றிவலைமொக்குளுமாதிரையெனவொடுங்கும்.

(இ-ள்) இப்படி இருநூற்று இருபத்து நான்கு புவனங்கள் சேர்ந்தது அகிலாண்டமென்னும் நாமத்தையடையும். நெருங்கிய கோடி அகிலாண்டங் கள் சேர்ந்தது ஒரு பிரமாண்டமென்னப்படும். சொல்லாநின்ற பிரமாண்டங் கள் அனேகம் சிவபெருமான் திருவருளினாலுண்டாகிச் சமுத்திரத்தில் திவலை நுரை, குமிழிபோல் தோன்றி, அத்திருவருளில் ஒடுங்கி விடும். எ-று. (ரு)

ஒவ்வொரண்டத்திலொவ்வொருருத்திரன்மாயன்வேத
னவ்வவண்டங்கடோறுமதிகாரமாகிமூவர்
கவ்வையில்வெள்ளிவெற்புவைகுண்டங்கமலக்கோயில்
செவ்விதின்மருவித்தந்தந்தொழிற்றிறந்திருந்தச்செய்வார்.

(இ-ள்) ஒவ்வொரு அண்டத்திலும், ஒரு உருத்திரன், ஒரு விஷ்ணு, ஒரு பிரமன் ஆகிய மூவரும் அந்தந்த அண்டங்கள் தோறும் அதிகாரமேற்கொண்டு குற்றமில்லாத கைலாசகிரி, வைகுண்டம், தாமரைக்கோயில் ஆகிய இந்த இடங் களில், மகிழ்ச்சியோடு வீற்றிருந்து, தங்கள் தங்கள் தொழில்களாகிய அடைத் தல், காத்தல், அக்கல் என்னும் கிருத்தியங்களைச் செம்மையாகச்செய்து வரு வார்கள். எ-று. (சா)

## வேறு.

தற்பணத்தினுள்ளடங்கிக்காட்டுகின்றபலவண்ணத்தன்மைபோலப்
பற்பலவாம்பிரமாண்டவடுக்குகளேகாண்பிக்கப்பாரித்தெண்ணில்
கற்பனைகாலங்கள்கடந்தநாதியாயியற்கையாய்க்கண்மூன்றுள்ள
நற்பரன்பாற்சமவாயமாகிமகாகயிலாயநாமமாகி.

(இ - ள்) பளிங்குக்கண்ணாடியானது தன்னிடத்திலடங்கியிருக்கும் பலவர்ணங்களைக்காட்டுகின்ற தன்மைபோல, அனேக பிரமாண்ட பந்திகளைத் தோற்றுவிக்கப்பருத்து எண்ணிறந்த கற்பனாகாலங்கடந்து அநாதியாயும், சுயம்பாயும், திரிநேத்திர தாரியாகிய பரமசிவத்திற்குத்தற்கிழமையாயும், மகாகைலாயம் என்னும் திருநாமமுடையதாயும். எ-று. (அ)

மந்திரத்தினுருவாகியெண்ணில்பிரமாண்டங்கள்வானின்மீன்போற்
றந்தநின்றுசிவபெருமானுணையாலாதாரந்தானேயாகி
யுந்திமேல்வெளியாகிவெறும்பாழாய்ப்பழவடியாருள்ளம்போலப்
புந்திகினைத்தற்குமெட்டாதானந்தவீடெனப்பொலியுமாதோ.

(இ - ள்) பிரணவாகாரமாயும், ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களைப்போல் கணக்கில்லாத பிரமாண்டங்களைச்சிருட்டித்துச் சிவபெருமானது ஆக்கினையிலுல், அவற்றிற்கு ஆதாரமாயும், பழமையான அடியார்களது உள்ளம் போல் உயர்வான பரவெளியாயும், சுத்த சூன்யாகாரமாயும், மனோசங்கற்பத்திற்கும் அகோசரமாயும், மோட்சத்தானமாயும், விளங்காநிற்கும். எ-று. (கூ)

கலைமாதுகீர்த்தியாதெழின்மாதுசயமாதுகருணைமாது
நிலமாதுசெல்வமாதுடன்வீரமாதெண்மர்நிகழ்திருக்கள்
பலராதர்புகழ்ந்திறைஞ்சுமிவாருகுசூழ்ந்துநிற்கப்பனிப்பொருப்பின்
குலமாதுபரனிடநீங்காதிருக்கும்பரஞானக்கொழுந்தாம்வெற்பு.

(இ - ள்) புகழ்ந்து துதிக்கும் வித்யாலட்சுமி, பிரதாபலட்சுமி, சுபலட்சுமி, விஜயலட்சுமி, தயாலட்சுமி, புவனலட்சுமி, தனலட்சுமி, வீரலட்சுமி, என்னும் அஷ்டலட்சுமிகளும், அனேகம் தெய்வப்பெண்களும் ஆகியஇவர்கள் புடைசூழ்ந்திருக்க, இமயமலை அரசன் மகளாகிய பார்வதி தேவியார், எம்பெருமானிடம் பிரியாதிருக்கப்பெற்ற பரஞானக் கொழுந்துபோல்வதாகிய திருக்கைலாயம். எ-று. (க0)

## வேறு.

கடுக்கைவேணிக்கடவுட்குமாகட
லடுக்கலாகஞ்சளித்ததற்கஞ்சிமெய்
நடுக்கிநல்லுபசாரநயத்தற்குக்
கொடுக்குமாரமுதக்குன்றுபோன்றதே.



(இ - ள்) திருப்பாற் கடலானது கொன்றைமாலையை யணிந்த ஜடாமகுடத்தையுடைய பரமசிவத்துக்கு முன்னாளில் தீராத ஆலகால விஷத்தைக்கொடுத்ததற்குப்பயந்து, தேகம் நடுக்கமுற்று, அவரை நல்ல உபசாரத்தால் சந்தோஷிக்கச்செய்யும்படி கொடுத்த சுவை நிறைந்த அமுதமலையைப்போன்றது. எ-று. (கக)

ஆறுகொண்டசைடமுடியண்ணலுன்
தேறவேடிலைக்கொண்டுதிருத்தொண்டு
வேறறச்செய்யுமேன்மைவிளக்குற
நீறுபூசிநிலைத்ததுபோன்றதே.

(இ - ள்) ஆகாயகங்கையைச்சடை முடியில் தாங்கிய சிவபெருமானுடைய திருவடிகள் யாவரும் கண்டு தெளியத் தன்தலைமேற்கொண்டு அச்சிவபெருமான் தன்னைவிட்டு ஒரு கணமேனும் பிரியாதிருக்கத்தான் செய்த திருத்தொண்டின் மேன்மையை யாவருக்கும் விளங்கச்செய்யும் பொருட்டு, விபூதி அணிந்து நிலைத்திருப்பதைப்போன்றது. (அந்தக்கைலாயமலை.) எ-று. (கஉ)

ஆலமுண்டருளங்கணன்வைகிய
கோலவெற்பெனக்கொண்டுவிண்ணுவிளங்
சாலுமன்புசுரந்துறுதாரையின்
பால்விருட்டியபண்பெனநின்றதே.

(இ - ள்) கைலைமலையானது ஆலகால விஷமுண்டருளிய கருணைக்கடலாகிய சிவபெருமான் வீற்றிருக்கும் அழகிய மலையென்று, உள்ளத்திற்கொண்டு, காமதேனுவின் கூட்டம் போன்பு சுரந்து தாரைதாரையாய்ப்பொழியும் பாலினால் அபிஷேகம் செய்யப்பெற்ற தன்மைபோல் வெண்ணிறமாய் விளங்கிநின்றது. எ-று. (கங)

அடிமைபூண்டவர்செய்யுமருந்தவங்
குடிகொள்வெள்ளியங்குன்றின்கொழுந்துபோற்
பொடிகொண்மேனிப்புனிதன்முடிப்பிறை
வடிவுபூத்தவனப்புவிளக்கமே.

(இ - ள்) திருநீறு தாங்கிய திருமேனியையுடைய சிவபெருமான் சடைமுடியில் தரிக்கப்பட்டிருக்கின்ற இளஞ்சந்திரனுடைய வடிவில் தோன்றும் அழகின் தன்மையானது அடிமையாவதை மேற்கொண்டிருப்பவர்கள் செய்கின்ற அரியதவங்கள் குடிகொண்டிருக்கும் வெள்ளியங்கிரியின் கொழுந்து போல்விளங்கும். எ-று. (கச)

முக்கணுற்றமுதல்வர்கள்பற்பலர்
புக்கிறைஞ்சிப்புதுமலர்தூவிட
மிக்கமாதவர்விஞ்சையரெண்ணிலர்
தக்கமாயன்சதுமுகனாதியோர்.

(இ-ள்) மூன்று கண்களையுடைய முதல்வர்களாகிய அனேகருத்திரர்களும், சந்நிதானத்திற்போய்ப்பணிந்து, புதிய மலர்களைத்தூவும் பெருமைமிகுந்த மாதவர்களும், எண்ணிறந்த வித்தியாதரர்களும், புகழத்தக்க திருமால், பிரமதேவன், முதலான தேவர்களும். எ-று. (கரு)

நாகர்தொக்கதொகையும்பொன்னாட்டுறை
தோகையன்னவராவார்தொகுதியும்
போகமீகெனும்புண்ணியமீகெனு
மாகர்சங்கமுமால்வரைப்பாங்கெலாம்.

(இ-ள்) அடியேங்களுக்குப்போகந்தந்தருளாய்! புண்ணியந்தந்தருளாய்! என்று பிரார்த்திக்கும் நெருங்கிய நாகர்கூட்டமும், பொன்னுலகத்தில் வாசஞ்செய்கின்ற மயில் போலும் சாயலுடையவர்களாகிய தெய்வப்பெண்கள் கூட்டமும், தேவர்கள் கூட்டமும் அந்தப்பெருமை தங்கிய கைலாசகிரியின் பக்கமெல்லாம் விளங்கிநிற்கும். எ-று. (கசு)

காலமென்னும்வரம்புகடந்தவர்
மாலயன்புகழ்வண்மைபடைத்துளோர்
சாலுமின்பவுருவொன்றெடுத்தவர்
கோலுமவ்வழிவாழ்கணக்குன்றனார்.

(இ-ள்) இவ்வாறு புகழ்ந்து பேசப்பட்ட அந்தக்கைலாசகிரியில் வசிக்கின்ற மலை போன்ற குணசீலர்கள் காலம் என்று சொல்லப்பட்ட எல்லையைக் கடந்தவர்கள்; பிரம விஷ்ணுக்கள் புகழ்ந்து பேசும் பெருமை படைத்தவர்கள்: அன்றியும் நிலைபெற்ற சிவானந்த சொரூபம் பெற்றவர்கள். எ-று. (கஎ)

நல்லகல்வியறுபத்துநாலுமே
செல்வமெய்க்கொடுசேவைகள்செய்வன
தொல்லைவல்வினையில்லைத்துவக்கிலை
அல்லுமில்லைப்பகலுமங்கில்லையே.

(இ-ள்) அவ்விடத்தில் நன்மை பொருந்திய அறுபத்து நான்கு கலைஞானங்களும், சிறந்த வித்தியாரூபங்கொண்டு, திருத்தொண்டு செய்வனவாம். பழைமையான தீவினைகள் இல்லை; குற்றமில்லை: இரவும் பகலுமில்லை. எ-று.



மெய்த்தவவழிமேவினமாதவர்
சித்தியோகஞ்சிறிதெனச்செப்புவர்
முத்தியீந்திடுமுக்கணற்கேசெயும்
பத்தியேபெரிதென்றுபரிவரால்.

(இ-ள்) மெய்மையாகிய தவமார்க்கத்தில் தங்கிய மகாமுனிவர்கள் சித்தியைத்தரத்தக்கயோகமார்க்கமானதுஅற்பத்தன்மையுடையதென்று சொல்லி மோக்ஷத்தை யீந்தருளும் மூன்று கண்களுடைய பரமசிவத்திற்குச்செய்யும் பத்திமார்க்கமே பெருமையுடையதென்று, அந்தப்பத்திமார்க்கத்தில் அன்புறுவர்கள். எ-று. ஆல்-அசை. (ககூ)

மருளில்வேதவொலியும்வரங்கொளப்
பரவிநின்றுபணிந்துள்ளுருகுவோர்
அரகராவெனுமன்புறுமோதையு
விரவிமாகடலென்னமிகுந்ததே.

(இ-ள்) தெளிவான நான்கு வேதங்களின் முழக்கமும், வரம்பெறுவதற்குத் துதிசெய்து நின்று பணிந்து மனம் குழைகின்றவர்கள் அன்பின் மிகுதியால் ஹரா! ஹரா! என்னும் முழக்கமும் கலந்து, பெரிய கடல் முழக்கம் போல் மிகுந்துள்ளது. எ-று. (உ0)

ஆயிரந்தலைப்பாந்தளராவினந்
தூயமாமலர்ச்சோலைகள்கற்பகஞ்
சாய்விலாதவரதனச்சாரல்கள்
மீயுயர்ந்துவிளங்குந்திருவரை.

(இ-ள்) மேலோங்கி விளங்கும் அந்தத்திருக்கைலாசகிரியின் கெடுதலில்லாத இரத்தினங்களையுடையசாரல்களிலுள்ளபாம்புகள் ஆயிரந்தலைகளையுடைய சர்ப்பங்களாம்; பரிசுத்தமான பெருமை பொருந்திய பூஞ்சோலைகள், கற்பகச்சோலைகளாம். எ-று. (உக)

அன்னவெற்பிலருள்கொண்டிருப்பவன்
பொன்னிறத்துணர்நாறும்புதுமலர்
மின்னுசெஞ்சடைவெண்பிறைக்கீற்றணி
கன்னியோர்பங்களுகியகண்ணுதல்.

(இ-ள்) அப்படிப்பட்ட கைலையங்கிரியில் அருள் உருக்கொண்டு வீற்றிருக்கின்றவர் மின்னுகின்ற செஞ்சடை முடிமேல் பொன் போலும் நிறத்தையும், கொத்தாயிருத்தலையும் வாசனையையும் உடைய கொன்றையின் புதியமலர்

கனையும், வெண்மையான சந்திர பிறையையும், அணிந்திருக்கும் பார்வதிபாக ராகிய சிவபெருமான். எ-று. (உ௧)

## வேறு.

சுந்தரர்பொற்கவரியிடத்தும்புருநாரதர்பாடச்சுருதிநாதன்
பைந்துழாய்மருக்கமழுந்திருமார்பன்முதலமரர்பணிந்துபோற்றக்
கொந்துயிர்க்குங்கடுக்கையணிகோடீரமுடியிலங்கக்குறியகூரல்
தந்துகணநாதர்புடைசூழ்ந்திருக்கவீற்றிருக்கை சாற்றலாமே.

(இ - ள்) சுந்திரமூர்த்தியார்-செம்பொற் கவரிவீசவும், தும்புருநாரதர் கள்-யாழ் வாசிக்கவும், பிரமதேவனும் பைந்துளசியின் மணம் வீசும் திருமகள் மார்பனாகிய விஷ்ணுவும் முதலானதேவர்கள் எல்லாரும் வணங்கி வாழ்த்தவும், கொத்துகளாய் மணம் வீசும் கொன்றைமலரையணிந்த சடைமுடி பிரகாசிக்க வும், இளகைகாட்டிப்பூத கணநாதர்கள்புடைசூழ்ந்திருக்கவும், (அந்தச்சிவபெ ருமான்) வீற்றிருக்கும் காட்சியை யாவரால் சொல்லக்கூடும். எ-று. (உ௩)

சடைமுடியுஞ்சிறுபிறையும்மழுமானுநுதற்கண்ணுந்தாங்கிவிண்ணோர்
தடமகுடமுடிமீதுபிரம்போச்சியொலியடக்கித்தாமவேணிப்
படவரவமைசத்தோன்முன்னின்றிருபாரிசமொழுங்...கந்தி
கடவுடிருவருட்கொண்டுகோபுரவாயிலிருப்பர்காவல்கொண்டே.

(இ - ள்) சடைமுடியையும், இளஞ்சந்திரனையும், மானையும், மழுவையும், நெற்றிக்கண்ணையும் உடையவராய்த்தேவர்களுடைய விசாலமான கிரீட மணிக்கமுடிகளின்மேல்தமதுகையில்ஏந்தியபிரம்பினால்மோதி, ஆரவாரத்தை அடக்கிக் கொன்றைமாலைசூடிய சடைமுடிமேல் படமுடைய பாம்புகளை தரித்திருக்கும் சிவபெருமான் சந்நிதானத்தில் நின்று, அத்தேவர்களை இரண்டு பக்கங்களிலும் ஒழுங்குபட நிறுத்தும் திருநந்திதேவர் எம்பெருமான் திருவரு ளினையைச்சிரமேற்கொண்டு, கைலையங்கிரியைக்காக்கும் தொழில் பூண்டு கோபுரவாயிலினிடத்தில் வீற்றிருப்பார். எ-று. (உ௪)

விண்ணவருமுனிவருமுறைமுறையேபணிந்திருதாள்விடையாற்செல்லத்
தண்ணளியேமேன்மேலுஞ்சுரந்துசுரந்தூறுகின்றசலதிபோல்வா
னண்ணலருள்பழுத்தமகாகணநாதர்பலகோடியருகுசூழ
மண்ணிலருந்தவம்புரிந்தோர்வாழ்வுபெறக்கோபுரத்திலவைகும்வேலை.

(இ - ள்) தேவர்களும், இருடிகளும் வரிசைக்கிரமமாக எம்பெருமானு டைய திருவடிகளை வணங்கி விடைபெற்றுச்செல்லவும், இனிய காருண்யமே



மேலும் மேலும் சுரந்து பெருகும் கிருபாசமுத்திரம் போன்ற சிவபெருமானு டைய திருவருள் பெற்ற அனேக கோடி மகா சிவகண தலைவர்கள் சமீபத்திற் சூழ்ந்து நிற்கவும், பூலோகத்தின்கண் பெரியதவங்களைச்செய்யும்புண்ணியர்கள் ஆனந்த வாழ்வு பெறவும், திருநந்தி தேவர் கோபுரவாயிலில் எழுந்தருளியி ருக்குஞ் சமயத்தில். எ-று. (உ௫)

அழகுதிகழ்முப்புரிநூலணிந்திலகுமணிமார்பனறிஞரியார்க்கும்
விழைவுதருபரகதிக்குவித்தாயசனற்குமரன்மிகுந்துள்ளன்பு
தழைவுபெறுமன்பினன்சிறுமுனிவன்றிருநீறுஞ்சடையுந்தோன்ற
குழைவுபடுநெஞ்சனாய்த்திருநந்திதேவன்பாற்குறுகினன்றே.

(இ - ள்) அழகால் விளங்குகின்ற பூணூலணிந்து ஒளிவீசும் மணிபோன்ற மார்பையுடையவரும், உள்ளன்பு மிகுந்து தழைக்கும் பத்தியையுடையவரும், பாலமுனிவரும், ஞானிகள் யாவருக்கும் ஆவல் தரும் சிவகதிக்கு வித்து ஆன வரும் ஆகிய சனற்குமாரமுனிவர் திருநீறும், சடையும் தோன்ற நெக்குருகும் மனமுடையவராய்த் திருநந்தி தேவரிடத்தில் அணுகினன். எ-று. (உ௬)

பணிந்தெழலும்பணிந்தமுனிமுகநோக்கியருகிருந்துபரிவுவெள்ளந்
தணிந்திலதாய்மேன்மேலூற்றெடுக்கப்பொன்னிமையச்சயிலவல்லி
யணைந்து...க்குமிக்கிரிபோற்சிறப்பாகிமன்னியோங்கி
யணைந்திடுபெருமு...யாததலமுளதோவருளின்மிக்கோய்.

(இ - ள்) அம்முனிவர் வணங்கி யெழுந்து மீண்டும் பணிந்து அருகில்நின் று பத்திவெள்ளம் அடங்காமல் மேன்மேலும் சுரந்து பெருகத் திருநந்தி தேவ ருடைய திருமுகத்தைப்பார்த்துக்கருணையால் மிகுந்தவரே! மலையரசன் மக ளாகிய பார்வதி தேவியைத்திருமணம் புரிந்து, சிவபெருமான் வீற்றிருக்கின்ற இந்தக்கைலாசகிரிபோல் சிறப்படைந்து நிலைபெற்றோங்கி, மாறிமாறி வருகின் ற பிரளய காலத்திலும் அழிவுபெறாததலம் ஏதேனும் உண்டோ? அடியேனுக் கு அனுக்கிரகம் செய்யவேண்டும். எ-று. (உ௭)

என்றமுனிமுகநோக்கியகமலர்ந்துகருணைகூர்ந்தினவண்டார்க்குங்
கொன்றைமுடித்திருநந்திதேவன்மணிவாய்மலர்ந்துகூறுகின்றான்
குன்றவில்லமகிழ்ந்துறையுந்திருப்பாவநாசமெனக்குவலயத்தி
லொன்றுளதால்தன்பெருமைசொலவரிதாயினுஞ்சிறிதிங்குரைப்பக்கேட்டி.

(இ - ள்) இவ்வாறு கேட்ட சனற்குமாரமுனிவரது முகத்தைப்பார்த்து மனமகிழ்ந்து, கிருபை புரிந்து, வண்டின் கூட்டங்கள் ஆரவாரிக்கும் கொன் றை மாலையைத்தரித்த முடியையுடைய திருநந்திதேவர்திருவாய்மலர்ந்தருளு கின்றார்:—மேருவில்லியாகியசிவபெருமான் திருவுளமகிழ்ந்து வீற்றிருக்கின்ற

திருப்பாவநாசமென்று பூலோகத்தில் ஒருதலம் இருக்கின்றது. அந்தத்தலத்தின் பெருமையைச்சொல்ல ஒருவராலும் முடியாது: என்றாலும் சிறிதளவு இவ்விடத்தில் சொல்லுகிறேன். எ-று. (உஅ)

இத்தகையதிருக்கைலைவெற்பிருக்குமெம்மானையினவெண்டிங்கள்
வைத்தசெழுஞ்சடையிமையவல்லிதழுவக்குழையுமணிமெய்யானை
முத்திதருந்தனிமுதலைக்கண்டுளத்தின்மகிழ்வடையமுன்னமோர்நா
டுத்திவிரிநாகணையானயன்மகவான்றக்கனேடுசுரர்மற்றோரும்.

(இ - ள்) இத்தன்மையான திருக்கைலாசகிரியில் வீற்றிருக்கின்ற எம்பெருமானும், வெண்மையான இளஞ்சந்திரனையணிந்த வளமான சடையையுடையவரும், பார்வதி தேவியார் தழுவக்குழைந்தருளிய வச்சிரதேகமுடையவரும், முத்திதந்தருளும் ஒப்பற்ற முதற்கடவுளும் ஆகிய சிவபெருமானைத்தரிசித்து மனமகிழ்ச்சியடையும் பொருட்டு, ஒரு நாள், படப்புள்ளியுடன் விரிந்த சேஷசயனராகிய திருமாலும், பிரமதேவனும், இந்திரனும், தக்கனும், தேவர்களும், மற்றவர்களும் வந்து. எ-று. (உகூ)

கருகுமிருட்குலைபருகுவெய்யோனைப்பகல்விளக்காய்க்காட்டுஞ்சோதி
விரியுமணிக்கோபுரவாயிலினடைந்தெம்வரவுணர்த்தவேண்டுமென்ன
மருவிடும்யான்முக்கணெந்தைபாற்சென்றுமான்முதலோர்வந்தனர்போற்றத்
திருவுளம்யாதெனவவரைத்தருதியென்றனன்புகழ்தெரித்தவாயான்.

(இ - ள்) காரிருட்கூட்டத்தையுண்ணும் சூரியனைப்பகல்விளக்குப்போல் ஒளிமழுங்கச்செய்யும் சோதியைப்பரப்புகின்றமாணிக்கக்கோபுரவாயிலினிடத்தில் நின்று எங்கள் வரவைத்தெரிவிக்கவேண்டும் என்று சொல்ல அவ்விடத்திருக்கும் நான், மூன்று கண்களையுடைய எம்பெருமானிடத்தில் போய்த்திருமால் முதலான தேவர்கள் தங்களைத்தரிசித்து வாழ்த்தவந்திருக்கிறார்கள்; தங்கள் திருவுளம் யாதோவென்று விண்ணபஞ்செய்ய, நான்கு வேதங்களையும் திருவாய் மலர்ந்தருளிய அந்தப்பெருமான் அவர்களை வரச்செய்யென்று சொல்லினர். எ-று. (௩௦)

மீண்டுவந்தியாவரையும்போற்றுதற்குச்சென்மினென்றுவிடுக்கவிண்ணோர்
பூண்டவன்புமென்மேலுஞ்சுரந்துறவிரைவினுற்புகுந்துசெந்தே
னீண்டுகொன்றைநறவுயிர்க்கும்வேணியரன்றிருமுன்னமெய்திநின்று
காண்டல்செய்துபோற்றினர்முறைமுறையேயுள்ளத்திற்களிசிறக்க.

(இ - ள்) திருநந்தி தேவர் மறுமடியும் வந்து யாவரையும் பார்த்து நீங்கள் எம்பெருமானைத் துதி செய்யப்போங்கள் என்று உள்ளேவிட அந்தத்தேவர்கள்



கொண்டிருக்கும் அன்பு மேன்மேலும் சுரந்து பெருவிரைவுடன்போய், நல்ல தேன் பொருந்திய கொன்றை மலர் மணம் வீசும் சடைமுடியையுடைய சிவபெருமான் சந்நிதானஞ் சேர்ந்து நின்று, தங்கள் மனதில் மகிழ்ச்சி வளர முறை முறையாகத்தரிசனஞ் செய்து, துதி செய்தார்கள். எ-று. (௩௧)

சாந்துழாய்மார்பகனைவருகவென்றுகூறினன்வனசக்கோயிற்
றந்தரனைநோக்கியேமுடியசைத்தான்கற்பகப்பூத்தொடையல்வேய்ந்த
விந்திரனுக்கிளநிலாக்குறுமுறுவல்புரிந்தான்மற்றேனையோரை
யந்தமிலாக்கருணைமடைதிறந்தொழுகுந்திருக்கண்ணலமையப்பார்த்தான்.

(இ - ள்) வணங்கி வாழ்த்துதலும் எம்பெருமான் திருவுளமகிழ்ந்து, தமது சந்நிதானத்திற்கு வந்த துளசிமாலையணிந்திருக்கு மார்பையுடைய விஷ்ணுமூர்த்தியைநோக்கி, வருக என்று திருவாய்மலர்ந்தருளினர்; தாமரைப்பூவைக் கோயிலாகக்கொண்டிருக்கும் பிரமதேவனை நோக்கித் தமது திருமுடியை அசைத்தருளினர்; கற்பகப்பூமாலையை யணியும் இந்திரனுக்கு இளஞ்சந்திரிகை வீசும் புன்னகை செய்தருளினர்: மற்றவர்களை யெல்லாம் அளவுபடாத கருணை மடைதிறந்து ஒழுகும் கடைக்கண்ணுற் பொருந்தப்பார்த்தருளினர். எ-று. (௩௨)

கலுழிமதமுற்றிக்குங்கரடநெடுங்கரும்பனைக்கைக்கவளயானை
யார்நறவுகொப்புளிக்குமண்டராற்றுந்தடவாவிமடுவிற்சிக்கி
யலறமுனம்விரைந்துவருங்கருமுகிலைநோக்கியேயண்டகோடி
பலவுயிருங்களைகளைப்புரந்தனையோமுறைபிறழாப்பரிசினென்றான்.

(இ - ள்) மும்மதங்களும் வெள்ளம்போல் ஊற்றெடுக்கப்பெற்ற சுவடு வாய்ந்த நெடிய கருநிறமுள்ள பனைபோலும் தும்பிக்கையையுடைய கஜேந்திரனென்னும் யானையானது தாமரை முதலிய மலர்கள் தேனையுமிழவண்டுகள் முழங்கும் விசாலமான மடுவில் முதலைவாயிற் சிக்கிக்கொண்டு, ஆதிமூலமே! என்று அலற அதைக்காக்கும் பொருட்டு, முன்பு விரைந்து வந்த கார்மேகவண்ணராகிய திருமாலைப்பார்த்து, அகிலாண்டங்களிலுமுள்ள சராசரங்களையும் ஆதார பூதனாய் முறைதவறாதபடி காத்துக்கொண்டிருக்கின்றாயோ! என்று கேட்டருளினர். எ-று. (௩௩)

ஒன்னலுமேயையமினதருட்டிறத்தினியற்றினன்யானென்றுகூறு
முன்னர்நின்றுபலவாகத்துதிபெருக்கியுள்ளன்புமுதிர்ந்தேயூறக்
கன்னவினைக்கைப்பாக்குந்திங்குதலைச்சொன்மதுரக்கன்னிபாகன்
றன்னருளேமுடிசூடிவிடைகொண்டாரெல்லோருந்தாழ்ந்துமீண்டார்.

(இ - ள்) என்று கேட்டருளுதலும் ஐயனே! அடியேன் உன்றிருவருட்டிறத்தால் என் தொழிலைச்செய்து கொண்டிருக்கிறேன் என்று சொல்வதற்கு முன் தேவர்களெல்லாரும் சந்நிதானத்தில் நின்று, பலவண்ணமாகத் துதிசெய்து, உள்ளம் ஊற்றிப்பெருகக் கரும்பைக்கசப்பாக்கவல்ல மதுரமான மழலைச் சொல்லைச்சொல்லுகின்ற இன்ப வடிவமான பார்வதிபாகனாகிய சிவபெருமான் திருவருளைச்சிரமேற்கொண்டு விடைபெற்று வணங்கித்திரும்பிப்போய் விட்டார்கள். எ-று. (௧௭)

அரியென்னைவருகவென்றானெனப்பிரமன்முடியெனக்காயசைத்தானென்னப்
பொருகுலிசத்தோனென்னைநோக்கியேகுறுமுறுவல்புரிந்தானென்னச்
சுரரெல்லாமருட்பார்வைபெற்றேமென்றேதவர்சொற்பொறாமல்
வருதக்கன்கண்ணுதலைச்சினமூளப்பழிவார்த்தைவழங்குகின்றான்.

(இ - ள்) சிவபெருமான் தன்னை வருகவென்றானென்று மகா விஷ்ணுவும், தனக்காகத்திருமுடியை யசைத்தானென்று பிரமதேவனும், தன்னைப்பார்த்துச் சிறுநகை செய்தானென்று போர் செய்தற்குரிய வச்சிரபாணியாகிய தேவேந்திரனும், நாங்கள் அவருடைய கிருபாநோக்க விசேடத்தைப்பெற்றோமென்று மற்ற தேவர்கள் எல்லாரும் சொல்ல, அவர்களுடைய வார்த்தைகளைக்கேட்கச் சகியாதவனாய் அவர்களுடன் வந்திருந்த தக்ஷப்பிரஜாபதியானவன் நெற்றிக் கண்ணுடைய சிவபெருமானை மிகுந்தகோபம் அதிகரிக்கப்பழிவார்த்தை சொல்லத்தொடங்கினான். எ-று. (௧௮)

தீதுபடுசுடலையினிற்பொடிபூசியென்பணிந்துதிரிவோனகாள
மூதராவினையணிந்தோன் மலைகடலினஞ்சுண்டோன்முறைமையாலென்னை
மாதுலனென்றெள்ளளவுமதித்திலான்றோலுடுத்தமருங்கன்பித்த
னாதலினாலிவன்செயலினுயர்விழிவென்றெண்ணுவாரறியாரென்றான்.

(இ - ள்) குற்றம்பொருந்திய சுடலையில் சாம்பலைப்பூசி எலும்பை அணிந்திருப்பவனும், விஷத்தையுடைய பெரிய சர்ப்பத்தையணிந்தவனும், திருப்பாற்கடலிலுண்டான ஆலகால விஷத்தையுண்டவனுமாகியசிவன் என்னை முறைமையால் மாமனென்று சற்றும் மதிக்கவில்லை; புலித்தோலை ஆடையாக உடுத்த இடையையுடையவன், அன்றியும் பித்தன்; ஆகையால் இவன்செயல் மேன்மை யென்றும் தாழ்மையென்றும் கருதுவோர் அறிவில்லாதவரோ யென்று சொன்னான். எ-று. (௧௯)

(கைலைச்சருக்கம் முற்றிற்று.)



என்றினையபலகூறித்தன்பதியில்நடந்துதக்கனிசையாவேள்வி
யொன்றிழைக்கமனந்துணிந்துவிண்ணவர்க்குமுனிவோர்க்குமோலைபோக்கிக்
குன்றெடுத்துநிரைகாத்ததிருமாலின்பாற்சென்றுகுலவும்வேள்வி
நன்றியற்றுகின்றனனீவருதியெனநேர்வித்துநடந்துபின்னும்.

(இ - ள்) இவ்விதமாகப் பல பழிச்சொற்களைச் சொல்லித் தன் பதிக்குச் சென்று, தக்கன் வேதத்திற்கு ஒவ்வாதயாகமொன்று செய்ய மனதில் நிச்சயித்து தேவர்களுக்கும், முனிவர்களுக்குந்திருமுகமனுப்பிக்கோவர்த்தனகிரியைக் குடையாக எடுத்துப்பிடித்துப் பசுக்களைக்காத்த மகாவிஷ்ணுவினிடஞ்சென்று, யான் ஒரு யாகம் நன்மையாகச்செய்யப்போகின்றேன்; நீர் வருதல்வேண்டுமெனக்கேட்டு, அவரைச்சம்மதிக்கச்செய்து பின்னும் நடந்து. எ-று. (௧)

உள்ளமெழுந்தோங்கும்விருப்புந்தமென்மேற்றானதெனுமுலகம்பூத்த
வெள்ளெகினவூர்தியான்பாற்சென்றுமகமொன்றுவிதியினாற்றக்
கள்ளவிழ்தாமரைநாதாவருகெனவங்குடன்படுத்திக்கடிமீண்டு
தெள்ளறிவொன்றன்றிதெனத்தன்பதியினண்ணினான்றீர்ந்தநெஞ்சன்.

(இ - ள்) மனதில் எழுந்து ஓங்கும் ஆசையானது மென்மேலும் முன்தள்ளுதலினால், தீமை செய்யத்துணிந்த மனமுடையனாகிய தக்கன் தன் தந்தையாகிய உலகம் படைத்த வெண்மையான அன்னவாகனமுடைய பிரமதேவனிடஞ்சென்று, வேதவிதிப்படியாகமொன்று யான் செய்வதற்குத்தேனொழுகும் தாமரைப்பூவில் வீற்றிருக்கும் நாதனே! தேவரீர் வருதல் வேண்டுமென்று கேட்டு, அதற்கு அவரை உடன்படுத்திக்கொண்டு, பின் விரைவாகத்திரும்பி, அறிவுடையோர் யாவரும் இக்காரியம் தெளிவான அறிவுடைமைக்குரியதல்ல என்று சொல்லும்படி தன் தலத்திற்குப்போனான். எ-று. (௨)

மகம்புரியுநெடுஞ்சாலையமைப்பித்தான்முகடொளிரமாணிக்கங்க
ளகம்புறம்வில்வீசநவமணிநிறைத்தவன்னசரமடையநாற்றித்
திகழ்ந்தபலசிறப்பாகச்சிற்பவியற்படிவகுக்கத்தெய்வத்தச்சன்
சகம்பரவுமிருநிதியுங்கற்பகமும்வேண்டியவைதானேநல்க.

(இ - ள்) உலகத்தார் புகழ்ந்து பேசும் சங்கநிதி, பதுமநிதி என்னும் இருவகை நிதிகளும், கற்பகமுதலியபஞ்சதருக்களும், வேண்டியவைகளைத்தாமே கொடுக்க, சிற்பலட்சணத்தின்படியமைக்கத் தெய்வத்தச்சனால் முகட்டில் மாணிக்கங்கள்பிரகாசிக்க, உள்ளும்புறமும்ஒளிவீசும்நவரத்தினங்கள் இழைத்த

பலவர்ணமாலைகளைத்தொங்கவிட்டுப்பலவிசித்திராலங்காரமாக விளங்கவேள்வி செய்தற்குரிய பெரியயாக சாலையைச்செய்வித்தான். எ-று. (ரு)

## வேறு.

பைந்துளவிநேன்மறைபகர்ந்தமலர்வேதா
விந்திரன்முதற்றலைமையெய்தினரியக்கர்
கந்தருவர்கின்னரர் கணங்கொண்மணிநாகர்
செந்தபனர்செஞ்சடைசெறிந்தமுனிவோர்கள்.

(இ-ள்) பசுந்துளசிமாலை யணிந்த திருமாலும், வேதங்களை ஓதும் தாமரை மலரில் வாசஞ்செய்யும் பிரமதேவனும், தேவேந்திரனுமாகிய மேன்மையுடையோரும், இயக்கர்களும், கந்தருவர்களும், கின்னரர்களும், மாணிக்கத்தைச் சிரசிலுடைய நாகலோகக்கூட்டத்தார்களும், பன்னிரு சூரியர்களும், சிவந்த சடைமுடியுடைய முனிவர்களும், எ-று. (சு)

கொங்குலவுதாரிதழிகொண்டமுடிமீது
திங்களொடுகங்கையணிசெம்மலொருபாக
மங்கையிருவோர்தவிரமற்றையவராருந்
தங்கண்மடமாதரொடுதாமவணடைந்தார்.

(இ-ள்) வாசனை தங்கிய கொன்றைமாலையை யணிந்த சடாமகுடத்தில் சந்திரனையும், கங்காதேவியையும் தரித்தருளியசிவபெருமானும் அவரது இடது பாகத்தைப்பெற்ற பார்வதி தேவியாருந் தவிர மற்ற தேவர் யாவரும், தங்கள் மனைவியரோடு அந்த யாக சாலைக்கு வந்தனர். எ-று. (எ)

வேதவொலிமிக்கெழுவியன்கடலடக்கு
மாதவர்குழாத்தினடுவுதித்தவிதிமைந்தன்
நீதபடுநெஞ்சதிருத்தவினைத்தே
கோதறுதபசிமுனிகட்டுரைகள்கூறும்.

(இ-ள்) வேதமுழக்க மிகுதியால் விசாலமான எழுகடல் முழக்கத்தை அடக்கும் மகா தபசிகள் கூட்டத்தின் நடுவில் பிரமதேவனுடைய குமாரனான தக்கனுடைய தீமை பொருந்திய மனதைத்திருத்த வினைத்துக்காமம், வெகுளி, மயக்கம், என்னும்முக்குற்றமும் நீங்கிய ததீசிமுனிவர்சில உறுதி மொழிகளைச் சொல்லத்தொடங்கினர். எ-று. (அ)



சக்கிறகுநீர்தொழியவேகுமெனவோரா
தூக்கமதுவுண்ணுவரிவண்டினமுரன்று
தேக்கெறிகடுக்கையணிசெஞ்சடையினானை
நீக்குமகசாலையிதுகாடுநிகராமால்.

(இ-ள்) தமது இறகுகள் முறிந்து ஒழிந்துபோய்விடும் என்று எண்ணாமல் ஊக்கத்தோடு பாய்ந்து, மதுபானஞ் செய்யும் வரிகளையுடைய வண்டுகள் முழங்கி எப்பமிடத் தேன் ஒழுகும் கொன்றைமலர் சூடிய செஞ்சடைகளையுடைய சிவபெருமானை நீக்கப்பெற்றிருக்கும் யாக சாலை சுடுகாட்டுக்கு ஒப்பாகும் எ-று. ஆல்-அசை. (கூ)

தொல்லைவினையாலழிவுதோன்றவருமேது
நல்லவைவிட்டெண்ணுமனமல்லவையப்பார்
வல்லவறிவோரறுதெளிப்பினுமயக்காய்க்
கல்லினையசொல்லெறிவர்கட்டுரையிடத்தே.

(இ-ள்) முற்பிறப்பில் செய்தபாவத்தால்கேடு உண்டாகும்; அந்தப்பாவத்திற்குக்காரணம் நற்காரியங்களை விட்டுத்தீயகாரியங்களைச்செய்ய நினைக்கும் மனமேயாம். அத்தத்தீயகாரியங்களைச்செய்ய விரும்புகிறவர்களுக்குக் கல்வி கேள்விகளில் வல்லபெரியோர்கள் உறுதிமொழியால் அதைத்தெரியச்சொன்னாலும் தெரியாமல் கல்அடி போலும் கடுஞ்சொல்லால் அடிப்பார்கள். எ-று.

தாழிடகிலாதவருதாவுதிரைகன்னிர்
சூழ்சருகுகுறைவளிசுற்றுவழிசுற்று
மேழ்கடல்வரைப்பினிவையாவர்தடுப்பா
ரூழின்வழியேயொழுகியோமெனதுமுண்மை.

(இ-ள்) தாவிவருகின்ற அலைகளையுடைய ஆற்றின் வெள்ளத்தை அணை போட்டுத்தடுத்தாலும் கட்டுப்படாது. நெருங்கிய சருகுகள் சூறைக்காற்று சுழலுகின்ற விதமாய்ச்சுழலும். எழுகடல் சூழ்ந்த உலகத்திலே இவைகளைத் தடுப்பவர் யார்? ஒருவருமில்லை. ஆதலால் மனமானது பூர்வகர்மவசத்தாய்ச் செல்லும்; இது சத்தியம். எ-று. (௰)

என்றமுனிகூறவிதிமைந்தனிவைகேளாக்
கன்றிகனைகொண்டுமிகுகட்டுரையில்வல்லீர்
நின்றுபொடிபூசிவிடமுண்டுசுடுகாடு
நின்றவொருபித்தனையனிதியறமேலோ.

(இ - ள்) இவ்வண்ணந் ததீசி மகாமுனிவர்சொல்லத் தக்கன் அவைகளைக் கேட்டு கோபமுஞ் சிரிப்புங்கொண்டு, மேலான உறுதிவசனங்களைச்சொல்ல வல்லமுனிவரே! சுடுகாட்டில் அடர்ந்த சாம்பலைப்பூசி ஆலகால விஷத்தை யுண்டு மயானத்தில் கூத்தாடும் பித்தனுடைய நீதி மிகவும் மேலானதா? அல்லவே. (௧௦)

என்னுமிவ்விதமைந்தனுரையெய்யுமழலம்பாய்
முன்னிவெறுபின்னுருவமுற்றுசெவிமோத
வன்னமுனியக்கணநடுங்கியெய்யகன்றான்
றன்னிகரினாரதனெனும்பெயர்தரித்தோன்.

(இ - ள்) இவ்விதமாகத்தக்கன் சொல்லிய வார்த்தைகள் அக்கினியாஸ்திரமானது சரீரத்தில் ஊடுருவிப்பாய்வது போலத் தமது ஞானநூற் கேள்வியால் முற்றிய திருச்செவியில் நுழைந்ததனால், அம் மகாமுனிவர் அந்த நிமிஷமே சரீர நடுக்கமுற்று, அந்த இடத்தை விட்டுப்போயினார். தனக்கு நிகரில்லாத நாரதரென்னும் பெயரைத்தரித்த மகா முனிவர், எ-று. (௧௧)

மெல்லியவிடத்துறையும்வெண்கயிலைமேவி
வல்லிநிகரனவுமைமாதினைவணங்கி
யெல்லையினெடும்புவனமீன்றருளுமன்னாய்
சொல்லரியதக்கனெனுநின்னையருளியோன்.

(இ - ள்) வெண்மையான கைலையங்கிரியை யடைந்து, சிவபெருமானுடைய இடப்பாகத்தில் வசிக்கும் மிருதுவான பூங்கொடிக்கு ஒப்பான உமாதேவியாரது திருவடிகளைப்பணிந்து, கணக்கில்லாதபெரிய உலகங்களைப்படைத்தருளிய தாயே! தேவரீரையீன்ற சொல்லுதற்கரிய புகழுடைய தக்கனென்னும் நாமத்தையுடைய தாதன், எ-று. (௧௨)

தன்மதியிழந்துமகமொன்றுகொடிதாற்ற
வுன்னுடனுதித்தமணியொண்டொடிமினாரை
யன்னவர்மணாளரைமகிழ்ந்தவணழைத்தே
நின்னையிடம்வைத்தவனைநிந்தைமொழிசொன்னான்.

(இ - ள்) தனது புத்தியையிழந்தவனாய் ஒரு கொடிய யாகத்தைச்செய்ய நிச்சயித்துத் தேவரீருடனவதரித்த அழகிய பிரகாசம் பொருந்திய வளையலையணிந்த மற்ற தேவதைகளையும், அவர்களுடைய நாயகர்களையும் சந்தோஷத்தோடு அவ்விடத்திற்கு அழைத்துத் தேவரீரைத் தமது இடதுபாகத்தில் வைத்தருளிய பரமசிவத்தின் பேரில் இகழ்ச்சியான வார்த்தைகளைச்சொன்னான். எ-று. (௧௩)



## வேறு.

என்னவீணைமுனிவனிசைத்தலுங்
கன்னிமாதுமைகண்ணுதலொடு
மென்னையாளுடைநாயகவெந்தைசெய்
நன்மகந்தனைக்காணநயந்தனள்.

(இ - ள்) இவ்விதமாக வீணைவாசிப்பதில் வல்லவரான நாரத மகா முனிவர் சொல்லவும், இளமைமாறாத உமாதேவி பரமசிவத்தின் பாதார விந்தங்களைப்பணிந்து, என்னை அடிமையாகக்கொண்ட சுவாமி! எனது பிதாவாகிய தக்கன் செய்யும் நன்மையான யாகத்தைப்போய்ப்பார்க்கப் பிரியப்படுகிறேன். (௧௪)

ஐயவின்றுவிடையுதந்தனுப்பென
மையுலாவுகளத்தன்மறுத்தலுஞ்
செய்யவேணியன்றாளினைசிந்தித்துப்
பையராவல்குன்மாதுபடர்ந்தனள்.

(இ - ள்) சுவாமி! இன்றையதினம் அடியேனுக்கு விடை தந்து அனுப்ப வேண்டுமென்று கேட்க, நீலகண்டத்தையுடைய சிவபெருமான் போகவேண்டாமென்று தடுக்கவும், சிவந்த சடாமகுடத்தையுடைய சிவபெருமானது திருவடிகளை உமாதேவி திரும்பவும் பணிந்து, விடைபெற்றுக்கொண்டு போயி எ-று. (௧௫)

மாகமாதவர்மேனிமறைபடு
நாகமாணிக்கக்கோவைதூற்றிய
யாகசாலையிலெய்தினளேந்திழை
யோகமாதவர்விண்ணிலுறைந்துளோர்.

(இ - ள்) ஆகாயமார்க்கமாகச்சஞ்சரிக்கும் தவயோகிகளுடைய திருமேனி தோற்றாமல் மறைபடச்செய்யும் நாக இரத்தின மாலைகள் தொங்க விட்டிருக்கின்ற யாக சாலையில் உமாதேவி வந்து சேர்ந்தனள். சிவராஜயோகத்திற் சிறந்த மகா தவசிகளும் தேவர்களும், எ-று. (௧௬)

வாசவன்றிருமாலயன்மற்றுளோர்
மூசுவண்டலர்மொய்ப்பதுபோலவே
தேசுலாவுதெரிவையர்தம்முட
னாசைகூரவமர்ந்ததுகண்டனள்.

(இ - ள்) தேவேந்திரனும், மகாவிஷ்ணுவும், பிரமதேவனும், மற்ற தேவர் யாவரும், மலரும் புஷ்பங்களில் ஆரவாரிக்கின்ற வண்டுகள் திரள் திரளாய்க்

கூடுவது போல் காந்தியோடு விளங்கா நின்ற திவ்விய சரீரங்களையுடைய தங்கள் நாயகிகளுடன் அவ்விடத்தில் வந்து கூடியிருப்பதை உமாதேவி பார்த்தனள். எ-று. (௧௭)

உற்றவன்பினுடன்பிறந்தாரொடு
மற்றமாதர்மணாளர்கள்தம்முடன்
பற்றுதக்கனவரிசைகள்பாலிக்கப்
பெற்றதன்மையைக்கண்டனள்பேதையே.

(இ-ள்) மிக்க அன்பிற்சிறந்த நம்முடன் பிறந்தாராகிய மற்ற தேவதைகள் தங்கள் நாயகருடன் தங்கள் பிதாவாகிய தக்கன் கொடுத்த வரிசைகளைப் பெற்றுக்கொண்டதை உமாதேவி கண்டனள். எ-று. (௧௮)

சுற்றைவார்சடைக்[illegible]பெருனிவர்
சுற்றிருப்பநாவினிற்[illegible]யே
யுற்றகோலத்துறைவதுகண்டனள்
பெற்றதக்கனையன்னையைப்பேதைமான்.

(இ-ள்) தொகுதியாகிய [illegible]சடை முடியையுடைய காசிபர் முதலான இருடிகள் சூழ்ந்திருக்க, அவர்களுக்கு மத்தியில் தம்மையீன்ற தக்கனும் மாதாவும் தவவேடத்தோடு தோன்றி விளங்குவதை உமாதேவி பார்த்தனள். எ-று. (௧௯)

முருந்த[illegible]த்தமுறுவற்செவ்வாய்திறந்
தருந்தவத்தினருமகமாற்றுவீ
ரிருந்த[illegible]னைமறந்தனிரோனுமெம்
மருந்தனைமறந்ததுமென்கொலோ.

(இ-ள்) மயிலிறகின் அடிபோல் தோன்றும் தந்தவரிசைகள் பொருந்திய சிவந்ததிருவாயைத்திறந்து, அருமையான தவத்தினால் மேன்மையான யாகத்தைச்செய்கின்றீர்; இவ்விடத்திற்கு வந்திருக்குமென்னை மறந்து விட்டீராயினும், எனதுயிர்த்துணையாகிய சிவபெருமானை மறந்ததும் யாது காரணமோ! சொல்லீர். எ-று.

எம்மிடத்திற்குறையுளதென்கொலென்
றம்மைசொற்றசொற்கவன்சொல்லுவான்
செம்மைநீங்கியபித்தற்குத்தேன்மொழி
கொம்மைவெம்முலையாளைக்கொடுத்ததே.

(இ-ள்) என்னிடத்தில் உள்ள குறையாது ? என்று உமாதேவி சொல்லிய சொல்லுக்கு, அவன்சொல்லுகிறான்:—உன்னிடத்தில் யாதொருகுறையும்



இல்லை; என்னிடத்திலே உள்ளது. தேன்போல் மதுரமான சொல்லையும், குவிவாகிய விருப்பம்தரும் தனங்களையும் உடைய உன்னைப் பெருந்தன்மையில்லாத பித்தனுக்குக்கொடுத்ததே, எ-று. (௨௧)

என்னிடத்திற்குறையென்றிசைத்தனன்
சொன்னசொற்குலைவேலிற்றுளைத்தென
வின்னல்கூரவிவன்மகளென்பது
தன்னைநீக்கித்தக்கன்றலையற்றிட.

(இ-ள்) என்னிடத்தில் உள்ள குறை என்று தக்கன் சொன்னான். கூர்மையான வேலாயுதத்தால் செவியில் துளையிட்டதுபோல் அவன் சொன்ன சொல்லால் வருத்தம் அதிகரிக்க, உடனே தேவி இந்தத் தக்கன் மகள் என்னும் முறையை நீக்கி அவன் த[illegible]போகவும், எ-று. (௨௨)

ஆமமேலெழுசெய்சொரிந்திடு
மோமசாலையெனும்பெயரொடியே
யீமபூமியெனு[illegible]
தாமவார்குழலிட்ட[illegible]சாபமே.

(இ-ள்) புகைமேலெழும்படி நெய்சொரியும் யாகசாலையென்னும் பெயர்நீங்கிச் சுடலையென்னும் பெயரை அடையவும், புஷ்பம் சூடிய நீண்ட அளகபாரத்தையுடைய உமாதேவி சாபமிட்டனள். எ-று. (௨௩)

அழகுபூத்தவருண்மணிவல்லிநே
ரெழுதலாவுருப்போர்வையிகழ்ந்துமுன்
பழையதானவுருவைப்பாரபரா
தழுவினளிமயஞ்செய்தவத்தினால்.

(இ-ள்) உமாதேவியானவள் அழகெல்லாம் திரண்டு ஒரு வடிவமாகத் தோன்றிய கருணையையுடைய மாணிக்கக்கொடிபோல் யாவராலும் எழுதவொண்ணாததிருமேனியின் சட்டையை அந்தத் தக்கன் முன் நீக்கி, மலையரசன் செய்த தவத்தினால் புத்திரியாகத் தன் பழமையான திருவுருவங்கொண்டனள். எ-று. (௨௪)

யாகசாலைமுகட்டினிலேறியே
கூகையஞ்சக்குளறியொலித்தன
சோமமேகங்குருதிசொரிந்தன
தீயெழுந்துசிறந்தனவில்லையால்.

(இ-ள்) கோட்டான்கள் அந்த யாக சாலையின் முகட்டில் உட்கார்ந்து, யாவரும் அஞ்சும்படி குளறிக்கூவின. மேகங்கள் யாவருக்கும் துன்பந்தரும் இரத்த மழை பெய்தன. யாகத்தீயானது கொழுந்து விட்டு விளங்கவில்லை. எ-று. ஆல், அசை. (உ௫)

துன்னிமித்தங்கள்பற்பலதோன்றின
வென்னிமித்தம்பொய்த்தாலும்பொய்யாவிவை
யன்னவாகனன்மாலயிராவத
னென்னநேர்குறுமோவென்றிருந்தனர்.

(இ-ள்) பலவிதமான துர்ச்சகுனங்கள் தோன்றின; மற்ற எந்தச்சகுனங்கள் பிசகினாலும், இந்த யாக சாலையிற் காணப்பட்ட சகுனங்கள் பொய்யாக மாட்டா; அன்னவாகனனுடைய பிரமதேவனும், மகா விஷ்ணுவும், தேவேந்திரனுமாகிய இவர்கள், என்ன துன்பம் வந்து நேரிடுமோவென்று பயந்திருந்தார்கள். எ-று. (உ௬)

மாடகக்கலைமகதிமுனிதிசைக்
காடகத்திற்றிருநுதற்கண்ணினன்
ராடனோக்கியுள்ளஞ்சிமென்மெல்லென
மாடுநின்றதிருவாய்புதைத்துச்சொல்வான்.

(இ-ள்) முறுக்காணிகளையுடைய மகதி என்னும் வீணையைக் கையில் ஏந்திய நாரதமுனி அழகிய நெற்றிக்கண்ணுடையவராகிய சிவபெருமான் இடமகன்ற இடுகாட்டில் நடனமாடுவதைப்பார்த்து, மனதில் அச்சமடைந்து மெள்ளமெள்ளச்சென்று, அவர் பக்கத்தில் நின்று, தன் வாயை ஒருகையால் மூடிக்கொண்டு, சொல்லுகிறார்:—எ-று. (உ௭)

பெருகும்வஞ்சப்பிதாமகன்றீச்சொலாற்
றிருவுருவந்தெரிந்தவிரண்டினு
ளுருவமென்னும்வடிவையொழித்துமை
யருவமென்னும்படிவமடைந்தனள்.

(இ-ள்) மிகவும் வஞ்சனை நிறைந்த சிறுவிதி யென்னும் தக்கனுடைய கொடுஞ்சொல்லால் உமையவள் உருவம், அருவம் என்னும் இரண்டு உருவங்களில், உருவமான வடிவத்தை நீக்கி, அருவமான வடிவத்தைப்பொருந்தினள். எ-று. (உ௮)

ஐயவேள்விசகத்துநிகழ்தரு
செய்தியென்னத்திருவுளமீதுநின்
றெய்துசீற்றத்தையென்னென்றுரைசெய்வாம்
வையமேழுண்ணும்வன்னியுந்தீயுமால்.



(இ-ள்) ஐயனே! யாக சாலையில் நடந்த சங்கதிகள், இவையென்று சொன்னவுடன், சிவபெருமான் திருவுள்ளத்தில் உண்டான கோபத்தை எவ்வாறு சொல்வது? ஏழுலகங்களையும் நாசமாக்கத்தக்க அக்கினியும் வெந்து விடும். எ-று. ஆல், அசை. (உ௯)

ஆலகாலவிடத்துக்குமாற்றருங்
காலநீக்குங்கடுங்கடைவன்னிக்குங்
கோலுமேழுலகுஞ்செறுகூற்றுக்கு
மேலுமவ்வவையிங்கிவனென்னவே.

(இ-ள்) சகிக்கமுடியாத ஆலகால விஷத்திற்கும், ஊழிக்காலத்தை அழிக்கும் யுகாந்த காலத்தீயினுக்கும், அணி அணியாயுள்ள பதினான்கு உலகங்களையும் நிக்ரகிக்கும் யமனுக்கும், உள்ள கொதிப்புகள் எல்லாம் இவ்விடத்தில் இவரே என்று சொல்லவும். (௩௦)

பூமிதாங்கும்புணற்றிரட்காரிமோட்
டாமையென்புமதாணியழகுற
வாமயிக்கொளிர்வானவர்மாமுடித்
தாமமாலைகண்மார்பிற்றயங்குற.

(இ-ள்) கடலாற் சூழப்பட்ட பூமியைச்சுமக்கும் ஆதிசேஷன் ஆரமாகவும், மந்தாரகிரியைத்தாங்கிய பெரிய ஆமையின் ஓடு பதக்கமாகவும் திருமார்பில் அழகு செய்யவும், அழகு மிகுந்து விளங்கும் தேவர்களுடைய மாலை சூடிய பெரிய தலைமாலைகள் பிரகாசிக்கவும், எ-று. (௩௧)

காவின்மீதுகனைகழலார்ப்புறக்
கோலவார்சடைக்கொக்கிறகோங்குறச்
சாலவெண்பொடியாகந்தயங்குற
மால்வரிப்புலிப்போர்வைமருங்குற.

(இ-ள்) அவரது திருத்தாள்களில், நெருங்கிய வீரக்கழல் கலீரென்று ஒலிக்கவும், அழகுவாய்ந்த நீண்ட சடாமகுடத்தில் கொக்கிறகு உயர்ந்தோங்கவும், திவ்விய திருமேனியில் மிக்க வெண்மையான விபூதி விளங்கவும், பெரிய புள்ளிவாய்ந்த புலித்தோல் இடையில் பொருந்தவும், எ-று. (௩௨)

செழிந்தநிக்குத்திசைகள்திரள்புய
மழிந்தகோடிபுவனமென்றஞ்சுறப்
பொழிந்தநீக்கட்கடைதொறும்பொங்குற
வெழுந்தசீற்றத்திசெய்தினன்வீரனே.

(இ - ள்) செழிப்பானஎட்டுத்திக்குகளாகத்திரண்டிருக்கின்றஎட்டுத்தோள்களால் கோடி அண்டங்கள் அழிந்து விட்டன என்று அச்சமுண்டாகவும், கடைக்கண்கள் தோறும்பொழிகிற தீ பெருகவும், உண்டானகோபத்தில் வீரபத்திரசுவாமி திருஅவதாரம் செய்தருளினார். எ-று. (௩௩)

திக்குத்திசை மீமிசை. செழித்த எனற்பாலது விகாரத்தால் செழிந்த என்றாயிற்று.

கார்வயிற்றிற்கருவைக்கலக்கியே
நீர்குடிப்பருயர்ந்தகுலவரை
மேருவைத்துகள்செய்வர்விரலினால்
வாரியேழும்வறளத்திடர்செய்வர்.

(இ - ள்) மேகத்தின் வயிற்றில் உள்ள கருவைக்கலக்கி, நீருண்பவர்களும், உயர்ந்த மகாமேருமலையைத்தமது சிறுவிரலினால் பொடியாக்க வல்லவர்களும், ஏழுகடல்களும் நீர் வற்றித் திவுகளாகச்செய்ய வல்லவர்களும், எ-று. (௩௪)

ஆயிரந்தலைப்பாம்பரையார்த்தவர்
தூயவெண்டலைமாலைகள்சூடினோர்
காய்தழற்கைக்கணிச்சிபுனைந்தவ
ராய்மயிர்ப்பன்றிவெண்மருப்பார்த்தவர்.

(இ - ள்) ஆயிரந்தலைகளையுடைய சர்ப்பங்களை இடையிற்றரித்தவர்களும், தூய்மையான கபாலங்களை மாலையாக அணிந்தவர்களும், தீப்போல் காயும் மழுவாயுதத்தைக் கைகளில் தரித்தவர்களும், ஆராயும் மயிர்ப்பன்றியையுடைய வெண்மையான கொம்புகளைச்சூடினவர்களும், எ-று. (௩௫)

வாளும்வேலுமழுவுஞ்சிலைகளுங்
கோளின்மூத்தலைகொண்டவயிற்களு
நீளுங்காழ்ப்புநிறைந்தகணையமுந்
தோள்களாம்பொருப்பேய்ந்தகைதூக்கினார்.

(இ - ள்) வாள்களையும், வேல்களையும், மழுக்களையும், வில்லுகளையும் குற்றமில்லாத மூன்று கிளைகளையுடைய சூலங்களையும், நீண்ட வயிரம் பொருந்திய வளைதடிகளையும், மலைக்கு ஒப்பான புயங்களையுடையகைகளில் எடுத்துக்கொண்டவர்களும், எ-று. (௩௬)

அண்டகோளகைவிண்டதனப்புறங்
கண்டுமீண்டுதிரிவர்கள்கால்கொடே
மண்டுவீரனுயிர்ப்பினில்வந்தவ
ரண்டபூதகணங்களனந்தமே.



(இ - ள்) கால்நடையாகஅண்ட கோளத்தைத்தாண்டிஅப்பாலும்போய்ப் பார்த்துத் திரும்பிச்சுற்றுவோர்களும், ஆகிய எண்ணிறந்த தேவ பூதகணங்கள் வீரபத்திரசுவாமியுடைய சுவாசத்திலிருந்து தோன்றினவர்களாகும். எ-று.

அகிலகோடிகள்யாவுமருந்துகோ
முகில்களேழும்பிழிந்துமுறுக்குகோ
நுகர்கவோவலையேழையுமொய்தினிற்
பகர்தியென்றிறையோனைப்பணிந்தனன்.

(இ - ள்) கோடிக்கணக்காக உலகங்கள் யாவையும் உண்ணவோ? ஏழு மேகங்களையும் நீர் ஒழுகும்படி பிழிந்து முறுக்கவோ? ஏழு கடல்களையும் விரைவில் பருகிவிடவோ [illegible]வாய் மலர்ந்தருளுகவென்று வீரபத்திரசுவாமி சிவபெருமானை வணங்கினார். எ-று. (௩௮)

நிலவு[illegible]ஞ்சடையந்தணன்
வலியதக்கன்மணிமுடிமாற்றியே
யிலகுவேள்வியவியுணவெய்திய
தொலைவில்வானவரைத்துகள்செய்குவாய்.

(இ - ள்) இளஞ்சந்திரனோடு தோன்றும் நீண்ட சடாமகுடத்தையுடைய வேதவதியனாகிய சிவபெருமான் வீரபத்திரனை நோக்கி, வல்லமையுடைய தக்கன் தலையையறுத்து, விளங்கும் யாகத்தில் அவிப்பாகம் உண்ணவந்த எண்ணிறந்த தேவர்களை நாசஞ்செய்யக்கடவாய். எ-று. (௩௯)

ஐயனேகென்றருள்விடையேகொடு
கையில்வாண்முதலாய்ப்பலகாட்டியே
செய்யதாடொழுஞ்சீருடைக்கூளிபி
னெய்தக்கூற்றுமினையநடந்தனன்.

(இ - ள்) எம்பெருமான் போவென்றருளியவிடையைத்தலைமேற்கொண்டு தன் கைகளில் வாள் முதலாகப் பல ஆயுதங்களைக்காண்பித்து, தனது சீர்பாதங்களைத்தொழும் சிறப்பினையுடைய பூதகணங்கள் பின் சூழ்ந்து வர, யமனும் வருந்தும்படி நடந்து போனார். எ-று. (௪௦)

ஆனகம்படுபேரியோடாகுளி
கூன்வலம்புரிகொம்புகள்சல்லரி
யேனைவன்கடலேழுமொலித்தென
மேன்மையண்டம்வெடிக்கமுழங்கின.

(இ-ள்) தம்பட்டம், ஒலிக்கின்ற பேரிகை, சிறு பறை, வளைவான வலம்புரிச்சங்கு, ஊது கொம்புகள், பம்பை முதலான வாத்தியங்கள் ஏழுகடல்களும் முழங்கினாற்போல் மேலான அண்டங்கள் படீர் என்று வெடிக்க முழக்கியிட்டன. எ-று. (௪௧)

காளிசண்டன்கடுமணிமானுடன்
கோளில்நந்தியிந்நால்வர்கொடும்படை
யாளிமொய்ம்பிற்றலைவர்களாகவே
கூளிநாதர்[illegible]முன்னடந்தனர்.

(இ-ள்) காளி சண்டன் கடுமையான மணிமானுடன்குற்றமில்லாத நந்தி ஆகிய இந்த நான்கு பெயர்கள் கொடுமையான சேனைகளுக்கு யாளிச்சிங்கம் போல் வலியமைந்த தலைவர்களாக வீரபத்திரருடைய சேனைக்கு முன்னே நடந்து சென்றனர். எ-று.

பாரணிந்தபணியுங்[illegible]
சீரணிந்தவத்தேவர்திறன்கெடப்
போரணிப்படையிற்படப்போர்த்தெழீஇத்
தாரணித்திரள்கிட்டினசாலையே.

(இ-ள்) அந்தப் பூதகணங்கள் பூமியைத்தாங்கும் ஆதிசேஷன் அலறவும், சிறப்பமைந்த அந்தத்தேவர் வலிகெடவும், காவற் பெருஞ்சேனைபிற்பட்டு ஓடவும், அடிபெயர்த்துச்சென்று யாக சாலைக்கு வந்து சேர்ந்தன. எ-று. (௪௩)

அவியுந்தியுமமரர்க்ககல்கென
வலியுந்தியுமென்றார்த்தல்செய்தேயவை
யவியுந்தியுந்தமனச்செருக்கின
னவியுந்தீயிலென்றேயணைந்தானரோ.

(பதவுரை) அமரர்க்கு-தேவர்களுக்கு உரித்தான, அவியும் தியும்-ஆகுதியும் ஆகவநீயம் என்னும் அக்கினியும், அகல்க எனு-இல்லாமற் போகக்கடவன என்றும், தீயும்-யாகாக்கினியும், அவியும் என்று-அழியும் என்றும், அவை அவியும் என்று-யாகசாலையிற் கூடிய கூட்டங்கள் அழியும் என்றும், தீ உந்து-கொடுமையால் செலுத்தப்பட்ட, அ மனம்-அந்த மனதில், செருக்கினன்-இறுமாப்புடையவனாகிய தக்கன், தீயில்-கொடிய செய்கையால், அவியும் என்று-அழிவான் என்றும், ஆர்த்தல் செய்து-ஆரவாரம் செய்துகொண்டு, அணைந்தான்-வீரபத்திரசுவாமி யாகசாலையை அணுகினார். எ-று. அரோ, அசை. (௪௪)

முத்தீயில் ஆகவநீயம் என்னும் தீ தேவர்களுக்குப்பிரியமானது என்று உபேந்திரருடன் அத்தேவர்கள் சொல்லியதைத்தக்ஷ புராணத்தில் அறியலாம்.



பூமலிந்தபுதுமணச்சாலையிற்
றீமலிந்தெழவூட்டினர்திக்கெலா
மாமலிந்தசடைமுடிமாதவர்
கூமலிந்தனகுற்றுயிராயினர்.

(இ-ள்) புதிய மலர்களில் நிறைந்துள்ள பரிமளம் வீசும் யாக சாலையில் தீ மிகுந்தோங்கும்படி நான்கு திசைகளிலும் தீ மூட்டினார்கள். மேன்மை பொருந்திய சடாமுடியையுடைய மகா தபசிகளுடைய கூக்குரல்கள் எங்கும் நிறைந்தன; என்செய்வோம் என்று ஏங்கி மூர்ச்சையடைந்தார்கள். எ-று. (௪௫)

பூழியாகப்புயத்துக்கிணையலாச்
[illegible]வெற்புப்பறித்துத்தொலைத்துண
ரேழ்திசைக்களிறெற்றியெறிந்தனர்
[illegible]கைகளில்யூபங்கள்சாடினர்.

(இ-ள்) புயத்துக்கு ஒப்பு சொல்லக்கூடாத கணைகளுள்ள மலைகளைப் பிடுங்கித்தூளாகும்படி விட்டெறிந்தார்கள்; எழுதிசைகளிலுள்ள யானைகளைத் தூக்கி வீசினார்கள்; விசாலமான தங்கள் கைகளினால் யாகப்பசுகட்டுந்தறியை ஒடித்தார்கள். எ-று. (௪௬)

ஓடுவார்சிலரோடவழிகளே
தேடுவார்சிலர்தேடித்திகைத்துடல்
வாடுவார்சிலர்மாதவர்பக்கலிற்
கூடுவார்சிலர்கும்பிடுவார்சிலர்.

(இ-ள்) அந்த யாகசாலையிலிருந்தவர்களிற் சிலர் ஓடினார்கள். சிலர் ஓடுதற்கு வழிதேடிப்பார்த்தார்கள். சிலர் அப்படித்தேடுகையில் வழியில்லாமை கண்டு என்ன செய்வோமென்று திகைப்புற்றுச்சரீரவாட்டமடைந்தார்கள். சிலர் தவத்திலுயர்ந்த முனிவர்களிடத்தில் வந்து சேர்ந்தார்கள். சிலர் தெண்டனிட்டுப்பணிந்தார்கள். எ-று. (௪௭)

வாட்பிடித்தமர்வந்தெதிர்ப்பார்சிலர்
வேட்குமாதரைக்கைவிடுவார்சில
ரீட்டுநீச்சமன்போற்றியிறைஞ்சிடுந்
தாட்டுணைக்குச்சரணமென்பார்சிலர்.

(இ-ள்) சிலர் வாளாயுதங்களைக்கைகளிற் பிடித்துக்கொண்டு எதிர்த்தார்கள். சிலர் தாம் விரும்பும் மாதர்களைக் கைசோர விட்டார்கள். சிலர் கொடுமையடர்ந்த யமன் துதித்துவணங்கும் திருவடிகளுக்குச்சரணம் என்றுசொன்னார்கள். எ-று. (௪௮)

இன்னவாறுநிகழ்ந்துழியிந்திரன்
றன்னுவாப்பிடரேறிச்சமர்பொர
மின்னுமாமுடிவிண்ணவர்பற்பலர்
துன்னுநீள்படைசூழ்ந்துநெருங்கவே.

(இ-ள்) இவ்விதமாக நடந்துகொண்டிருக்கையில் தேவேந்திரன் தனது வெள்ளையானையின் மீதேறி யுத்தஞ்செய்யும்படி ஒளி மிகுந்த பெரிய கிரீடந்தரித்த பற்பலதேவர்கள் அடர்ந்து நீண்டசேனையாகச்சூழ்ந்துவர, எ-று. (௮௯)

உலகிலாருயிருண்ணும்வெங்கூற்றனு
மலைபுனற்கிறையாயவருணனும்
வலிகொடீயும்பவனனுமற்றுள
விலகுதேவர்களியாவுமெதிர்ந்தனர்.

(இ-ள்) உலகத்திலுள்ள உயிர்களை யெல்லாம் உண்ணும் கொடுமையுள்ள யமனும், அலைகின்ற சலத்திற்கு அதிதேவதையான வருணனும், வலிமையான அக்கினி தேவனும், வாயுவு தேவனும், இன்னுமுள்ள மற்ற தேவர் யாவரும் எதிர்த்துச்சண்டை செய்தார்கள். எ-று. (௯௰)

கொண்டதோமரங்கப்பணங்கொய்சிலை
தண்டமாழியெடுத்தெதிர்தாக்கின
ரண்டகோளகைக்கப்புறம்பிண்டன
விண்டுபாரும்வெடித்தனநீயெழ.

(இ-ள்) தாங்கள் தரித்திருந்த எறி ஆயுதம், கைவேல், அறுக்கும் வில், தெண்டாயுதம், சக்கரம் முதலியவற்றை எடுத்து வீரபத்திரருடைய சேனை மேல் வீசினார்கள். அதனால் அண்டகடாகத்திற்கு அப்பாலும் பிளவுபட்டது; பூலோகமும் தீ பெழும்படி வெடித்தது. எ-று. (௯௧)

பூதநாதர்கண்மேற்புலவோரெலா
மோதுவாய்களதுக்கியுறுக்கியே
நீதில்பல்படைகொண்டுசெலுத்தன
ராதிநந்தியவர்களைக்கண்டனன்.

(இ-ள்) வீரபத்திரருடைய பூதகணத்தலைவர்களின் மேல், தேவர்கள் எல்லாரும் உதட்டைக்கடித்துப் பயமுறுத்திப் பழுதுபடாத பல ஆயுதங்களைக் கொண்டு போர் செய்தார்கள். முதன்மையான நந்திதேவர் அத்தேவர்களைப் பார்த்தார். எ-று. (௯௨)



நெஞ்சுகன்றிநினைந்துகெடிதுயிர்த்
தஞ்சுமாறமரோசன்முடித்தலை
பஞ்சுபோலப்பறக்கப்புடைப்பனென்
றெஞ்சலின்றிவெகுண்டெதிர்ந்தானரோ.

(இ-ள்) பார்த்து மனதிற் கோபங்கொண்டு நன்றாய்யோசித்துப் பெருமூச்சுவிட்டு யாவரும் பயப்படும்படி தேவேந்திரனது கிரீடந்தரித்தசிரசைக்காற்றிலகப்பட்ட பஞ்சு போல் பறக்க அடித்து ஓட்டுப்பேனென்று தாமதமில்லாமல உக்கிரங்கொண்டு எதிர்த்தார். எ-று. அரோ, அசை. (௯௩)

அடுக்கியொன்றுபத்தாயிரங்கோடியா
யிடிக்குலங்கள்றெறியிடித்தனன்
பொடித்துகட்கநந்திபுடைத்தலுங்
கடுத்தநெஞ்சினன்கண்டுவெகுண்டனன்.

(இ-ள்) ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், இலட்சம், பத்திலட்சம், கோடி என்று சொல்லுகின்ற வரிசையாக இடிக்கூட்டங்கள் இடிப்பது போல் தாக்கினார். இவ்வாறு தூள் தூளாய்ப் போம்படி நந்திதேவர் அடிக்கவும், கடுத்தமனத்தையுடைய தேவேந்திரன் பார்த்துக்கோபித்தான். எ-று.

கெடுவருந்திறற்கொண்டகிரிச்சிறை
யடியரிந்தகுலிசம்விட்டார்த்தனன்
கடிமலிந்தகணிச்சிமுன்னணியே
யடலைவெண்பொடியாயவண்வீழ்ந்ததே.

(இ-ள்) கெடுதி செய்யும் வலியமைந்த மலைகளின் சிறகை அடியோடு அறுத்த வச்சிராயுதத்தைச்செலுத்தி ஆரவாரம் செய்தான். அப்படி விட்ட வச்சிராயுதமானது ஒளிமிகுந்த நந்திதேவரது மழுவாயுதத்தின் முன் சென்று அவ்விடத்திலேயே பஸ்பமாய்ப்பொரிந்து விழுந்து விட்டது. எ-று. (௯௫)

ஊற்றிருந்தகொழுகுங்குருதிநீ
ராற்றுவெம்படையாயிரம்விட்டனன்
பாற்றினஞ்சுழல்பல்படைவிட்டமர்
மாற்றருஞ்சிலைமற்றொன்றுவாங்கினன்.

(இ-ள்) அதன் மேல் ஊற்றிலிருந்து சலம் உண்டாவதுபோல ஒழுகும் இரத்த வெள்ளத்தை உண்டாக்க வல்ல எண்ணிறந்த கொடிய ஆயுதங்களைத் தேவேந்திரன் எறிந்தான். ஆகாயத்தில் பருந்தின் கூட்டங்கள் சுழலும்படி

பலவிதமான பாணங்களைச்செலுத்தி யுத்தத்தில் தடுக்கக்கூடாத ஒரு வில்லை யெடுத்தான். எ-று. (௫௬)

நாணொலித்தநவிற்கோலவயாய்த்
தூணிவாயிற்றொடைகள்தொடுத்தனன்
பாணியாறுபெருகிப்பரந்தென
காணுமாறிடையின்றிக்கவர்ந்தன.

(இ-ள்) நடுவிரலினால் வில்லிலநாணேற்றிட்டுக்குணத்தொனிசெய்து, அம்பறாத்தூணியிலிருந்த பாணங்களை யெடுத்து, வரிசையாகத்தொடுத்தான். அதனால் இரத்த வெள்ளம் பெருகிப் பரவினதுபோல் பூமியைக்கண்டறியும் விதமில்லாமல் எங்கும் மூடிக்கொண்டன. எ-று. (௫௭)

நீறுபூசியநெற்றியங்கண்ணன்பா
லாறுநூறுபல்லாயிரங்கோடியாய்
வேறுவேறுவிதவிதமாகியே
ஊறடைந்தனவொண்சிலைவாளிகள்.

(இ-ள்) விபூதியை யணிந்த அழகிய நெற்றிக்கண்ணையுடைய நந்திதேவரிடத்து வில்லினாற்செலுத்தப்பட்ட அந்தப்பாணங்கள் ஆயிரக்கணக்காயும், இலட்சக்கணக்காயும், கோடிக்கணக்காயும், பல வேறு விகற்பமாய் அழிந்தன. எ-று. (௫௮)

எரிகனக்கியெழுங்கணைமாரிகள்
சொரிதல்கண்டுதுணையறுநந்திவெந்
நடுதிரையிராவதக்குன்றின்மே
லருவிபோலமுடுக்கியடித்தனன்.

(இ-ள்) பின்னும் நெருப்பை உமிழும் பாணமழையைப்பொழிவதைப் பார்த்துத் தமக்கு நிகரில்லாத திருநந்தி தேவர் தேவேந்திரனுடைய வெள்ளை யானை யென்னும் மலைமேல் அருவி பாய்வதுபோல் கொடிய இரத்த வெள்ளம் பாயும்படி அதட்டி அடித்தார். எ-று. (௫௯)

சுற்றியேயயிராவதந்துஞ்சிட
வற்றமாகிமகபதியங்ஙனே
பற்றருக்குயிலாகிப்பறந்தனு
மெற்றியீர்த்துச்சிறையகத்திட்டனன்.

(இ-ள்) அந்த வெள்ளை யானை சுழன்று நாசமடையவே, தேவேந்திரன் அச்சமுற்று, அவ்விடத்திற்றானே குயிற்பட்சி ரூபமெடுத்துப்பறந்தான். உடனே நந்திதேவர் எட்டிப்பிடித்து அதனைக்கூண்டிலடைப்பித்தார். எ-று. (௬௦)



ஓர்பெருங்குறட்பூதமுலப்பிலாக்
காரினங்கள்படியுங்கடற்கிறை
சேர்வயிற்றையுகிர்கொடுசேதித்தே
யீருள்பற்றியெடுத்துச்சுவைத்ததே.

(இ-ள்) எண்ணிறந்த மேகங்கள் படியப்பெற்ற கடலுக்கு அதிதேவனான வருணனுடைய மேன்மையான வயிற்றை ஒரு பெருங் குள்ள பூதமானது நகத்தினாற் கிழித்து, குடலைப்பிடுங்கி, யெடுத்துத்தின்றது. எ-று. (௬௧)

வன்றிறற்கடுங்கூற்றுமறலியைத்
தன்றவன்களம்பாசத்திற்சுற்றியே
பொன்றவீர்த்துப்பிதுங்கப்புரல்விழி
நின்றுறுத்தனன்வீரசண்டனே.

(இ-ள்) தனக்கு ஒப்பில்லாத சண்டனென்னுஞ்சேனாபதி மிகுந்த வல்லமையுடைய கொடுமையான யமனுடைய கழுத்தைக் கயிற்றினால் இறுக்கிச் சாகும்படி யிழுத்துச் சலமயமான கண்கள் பிதுங்கும்படி அவனைத் துன்பஞ்செய்தான். எ-று. (௬௨)

எண்டருந்திசைகுன்றலையேழ்புவி
யுண்டபோதும்பசியடங்காதழல்
மண்டுகூளிநிருதியைவவ்வியே
கொண்டதிருவாயாவிகுன்றயவே.

(இ-ள்) எட்டுத்திக்கு, எட்டுப்பருவதம், ஏழுகடல், ஏழுலகம் ஆகிய இவற்றையெல்லாம் ஒருங்கேபுசித்தாலும் அடங்காத பெரும்பசியால்வருந்தும் ஒரு பூதமானது நிருதி என்பவனைப்பிடித்து, உயிர்மாயும்படி அவன் ஈரலைத் தின்றது. எ-று. (௬௩)

அண்டகோடிகண்மாலையணியெனக்
கொண்டபூதங்கனற்கிறைகூறவி
யுண்டவேழ்மணிநாவுமுகுத்தியே
வண்கபோலத்தடித்துக்கைமாற்றின.

(இ-ள்) அண்டகோடிகளையெல்லாம் மாலிகாபரணமாகக்கொண்டிருக்கும் ஒரு பூதமானது அக்கினிதேவனுக்குரிய அவிப்பாகத்தை உண்டு, அந்த அவிப்பாகத்தை உண்ணும் அவனுடைய அழகிய ஏழு நாக்குகளையும் அறுத்தெறிந்து, அவனது மண்டையை அடித்துக்கைகளையும் வெட்டித்தள்ளியது. எ-று.

துளக்கமின்மணிமான்கதைசுற்றியே
யிளக்கநெஞ்சமியக்கர்மருத்துவர்
வளத்தின்மிக்கவசுக்கள்குருதிசொப்
புளிக்கவேதலைமொத்திப்புரட்டினன்.

(இ - ள்) அச்சமில்லாத மணிமான் என்னும் சேனைத்தலைவன் தண்டாயுதத்தைச்சுழற்றிப் பேதமையான மனதையுடைய இயக்கர், மருத்துவர், அதிக வளமுடைய அஷ்ட வசுக்களாகிய இவர்களை இரத்தம் ஊற்றெடுக்கும்படி தலையில் அடித்துப்புரட்டினன். எ-று. (௬௫)

வேள்வியிற்பல்லவியுண்ணும்வெய்யவ
னொளிப்பன்னிரைகடகர்த்தியே
வாளினற்பொருதிறன்வலியறத்
தாளினனிலந்தேய்த்தனன்சண்டனே.

(இ - ள்) சண்டன் என்னும் படைத்தலைவன் யாகத்தில் அவிப்பாகம் புசிக்கும் சூரியனுடைய நீண்ட பிரகாசமுடைய பல் வரிசைகளையுடைத்து, வாளினற் சண்டை செய்த சந்திரனைத் தனது பாதத்தினால் பூமியிற்போட்டு மிதித்து அவனது வலி கெடும்படி வருத்தினன். எ-று. (௬௬)

தோள்களற்றவர்சூழ்முடியற்றவர்
தாள்களற்றவர்நரம்புகளற்றவர்
நீள்செவித்துணையற்றவர்நெய்த்துடை
வாள்கள்பட்டுமரித்தவரெண்ணிலார்.

(இ - ள்) அந்த யுத்தகளத்தில் புஜங்களை யிழந்தவர்களும், சிரசு நீங்கின வர்களும், கால்கள் முறிப்பட்டவர்களும், நரம்புகள் அறுந்தவர்களும், இரண்டு காதறுந்தவர்களும், இரத்தந்தோய்ந்த வாளாயுதந்தாக்கி இறந்தவர்களும் கணக்கில்லாதவர்கள். எ-று. (௬௭)

திங்கடங்கியசெஞ்சடைக்காளிவெண்
பங்கயத்திருமாளிகைப்பல்கலை
மங்கையைக்கதிர்வாள்கொடுசீறியே
யங்கைபற்றியரிந்தனளாசியே.

(இ - ள்) சந்திரனைத் தனது சடாமகுடத்தில் வைத்தருளிய காளியானவள் தாமரைமலரில் வாசஞ்செய்பவளும், அனேக வித்தைகளுக்குத்தலைவியுமாகிய சரஸ்வதியைக்கோபித்து அழகிய கையினால் பிடித்து, ஒளி பொருந்திய வாளினால் மூக்கை அறுத்து விட்டாள். எ-று. (௬௮)



நாறுபூங்கற்பகநிழல்நாயக
னீறில்மால்வரையீர்ஞ்சிறைகொய்பவ
மேறித்தேய்ந்தனவென்னப்புலோமசை
கோறல்செய்யுங்குயங்கள்குறைத்தனள்.

(இ - ள்) வாசனை தங்கிய மலர்களையுடைய கற்பக விருட்சத்தின் நிழலில் வீற்றிருக்கின்ற இந்திரன் முடிவில்லாத பெரிய மலைகளின் சிறகை அரிந்த பாவம் மிகுந்து, அதனால் நாசமுற்றன என்று சொல்லும்படி இடையை ஒடித்துக்கொலை புரிவதற்கு ஏதுவான இந்திராணியின் தனங்களை அறுத்து விட்டாள். எ-று. (௬௯)

பாவவேள்விபுரிந்திடுபாதகன்
றேவிதன்குழல்கொய்தனள்சீறியே
சாய்வில்கோதிதிதிதனுதிரப்
பூவிவெள்கவரிந்தனளாயையே.

(இ - ள்) பாவத்துக்கேதுவான யாகத்தைச்செய்த பாதகனாகிய தக்கனுடைய முதல் மனைவியான திதியினுடைய கொண்டையை அறுத்துக்கோபித்து, நல்ல அழகையுடைய அதிதி என்னும் மற்றொரு மனைவியின் சிவந்த உதட்டைப் பிராணன்போகும்படி காளிதேவி அறுத்து விட்டாள். எ-று.) (௭௦)

ஏனையோரையிருஞ்செவிநாசிகண்
டேனிரைக்குங்கருங்குழற்செங்கர
மானமிக்கமணிமுலைமற்றவை
யானவோரொன்றரிந்துவிடுத்தனள்.

(இ - ள்) மற்றவர்களை வலிமையான காது, மூக்கு, கண், தேனைத்துளிக்கின்ற கருமையான கூந்தல், சிவந்த கை, நாணத்துக்கு முதன்மையான அழகிய கொங்கை ஆகிய இவற்றுள் ஒவ்வொன்றை அறுத்துவிட்டாள். எ-று. (௭௧)

நெடியகாசிபனாதியநீரரைச்
சடையினாலிருதாள்கைதளைசெய்தே
யொடிவில்யூபத்திற்றூக்கியுதைத்தனர்
கொடியசெய்திகள்கூறரிதாமரோ.

(இ - ள்) காசிபன்முதலான நற்குணமுள்ள இருடிகளை அவர்களது நீண்ட சடையினால் அவர்களது இரண்டு கால்களையும், கைகளையும் கட்டி முறிதலில்லாத யூபத்தம்பத்திற்றூக்கி யுதைத்தார்கள். இவ்விதமாக அவ்விடத்தில் அந்த சேனாபதிகள் செய்த கொடுமைகள் எடுத்துச்சொல்ல முடியாதனவாகும். எ-று. அரோ, அசை. (௭௨)

## வேறு.

இன்னதன்மைநிகழுமெல்லையிறைவன்வீரபத்திரன்
மன்னுபூதநாதர்சூழயாகசாலைவந்தன
ளின்னல்கூரவாவிகொண்டிருந்துளார்கள்யார்கொலோ
சொன்மினென்றுவெஞ்சினத்தொடர்ந்தெழுந்துசொல்லினன்.

(இ-ள்) இவ்விதமாய் நடந்து கொண்டிருக்க சமயத்தில், மகா சேனாபதியாகிய வீரபத்திரர் நிலையான பூதத்தலைவர்கள் சூழ்ந்து தொடர, அந்த யாகசாலைக்கு வந்தார். துன்பம் மிகும்படி தமதுபிராணனை இன்னும் தாங்கிக்கொண்டிருக்கிறவர்கள் யார்? சொல்லுங்கள் என்று கடுங்கோபத்தோடு கேட்டார். எ-று. (௭௪)

வாரிசாதநாபனின்கொழிந்துமற்றியாவருஞ்
சேரவிங்கிறந்துளார்களென்றுசெப்பவக்கணங்
காருலாவுமேனியன்கணங்களோடெதிர்த்தனன்
னேரிலாதபோர்குறித்துநின்றவீரர்முன்னரோ.

(இ-ள்) நாபிக் கமலத்தையுடைய விஷ்ணு தவிர மற்றயாவரும் இங்கே ஒருமிக்க மாண்டு போனார்களென்று சொல்ல, அக்கணமே நிகரில்லாதயுத்தத்தைக்குறித்து நின்ற வீரபத்திரசுவாமிக்கு முன் இருந்த நீலமேகமேனியனாகிய அந்த விஷ்ணு தன் சேனைகளுடன் சண்டை செய்தார். எ-று. (௭௫)

வாள்கள்கோடிவேல்கள்கோடிவாங்குசிந்துவாரநீள்
வாளிகோடிகோடிகொண்டுவன்சமர்விளைத்தலுங்
கூளிநாதர்கொக்கரித்துவட்டமிட்டுலாவியே
தோள்கள்வீறுகாணுமாறுசூழ்ந்துகொண்டுபோர்செய்தார்.

(இ-ள்) எண்ணிறந்த வாளாயுதங்கள், எண்ணிறந்த வேலாயுதங்கள் வில்லினிடமாகச்செலுத்தும் எண்ணிறந்த நீண்ட அம்புகள் ஆகிய இவைகளைக்கொண்டு கொடிய யுத்தம்செய்தலும், பூதகணத்தலைவர்கள் ஆரவாரம் செய்து, வலசாரி யிடசாரியாக உலாவித் தங்களுடைய புஜபலத்தை யாவரும் கண்டு தெரியும்படி சூழ்ந்து சண்டை செய்தார்கள். எ-று. (௭௬)

ஆரணிந்தகற்றையாயசடையன்வானிலையநீ
காரணிந்தமேனியானைவிடுவிடென்று கழறலுஞ்
சீரணிந்ததக்கன்முன்புசீறிநின்றுசென்னியை
யேரிழந்தவேள்விவன்னியிடையின்மூழ்கவிட்டனன்.

(இ-ள்) ஆத்தி மலரையணிந்த அடுக்கான சடை முடியையுடைய சிவபெருமான் வானத்தில் நின்று வீரபத்திரசுவாமியைப்பார்த்து, ஐயனே! நீ நீலமேக மேனியாகிய மகா விஷ்ணுவை விட்டுவிடுதல் வேண்டுமென்று சொல்லவும், சிறப்போடிருந்ததக்கன்முன்பாகக்கோபத்தோடுசென்று, அவனது சிரசையறுத்து, அழகில்லாத யாகத்தீயின் மத்தியில் விழும்படி போட்டார். எ-று.



மருவுயிர்த்துகுறவொழுக்குவாரிசாதமாளிகை
யாசிருக்கும்வேதன்முக்கணாதன்றிக்கிலெய்தியே
யுரககங்கணந்தரித்தவொருவர்வானுளோரெலா
மரியவாவிநீக்கினார்பின்னருள்புரிதல்வேண்டுமால்.

(இ-ள்) வாசனை வீசித் தேனை யூற்றும் தாமரைமலர் என்னுங்கோயிலில் வீற்றிருக்கும் பிரமதேவன் மூன்று கண்களையுடைய சிவபெருமானிருக்கும் திக்குநோக்கிச்சென்று, சர்ப்பத்தைக்கங்கணமாகத்தரித்த ஒரு வீரர் தேவலோகத்திலுள்ளவர் யாவரையும் கொன்று விட்டார்; தேவரீர் கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார். எ-று. (௭௭)

நிறைத்தபாடகச்சிலம்புநேர்விளைத்துவக்கினன்
மறப்புவந்துசெய்தமன்னையன்னவள்ளலே
யிறைப்பொழுதுநெஞ்சிலெண்ணிவில்லைவேறுதஞ்சநீர்
பொறுத்தல்வேண்டுஞ்சையுண்டுமுன்புகாத்தபுண்ணியா.

(இ-ள்) நவமணிகளால் நிறைக்கப்பட்ட பாடகத்தின் கட்டுபோன்ற பாசபந்தத்தால் அறியாமை பொருந்திச்செய்த பிழைகளைத் தாய்க்கு நிகரான வள்ளலே! கணப்பொழுதாயினுந்திருவுளத்தில் நினைக்கவேண்டாம்; எங்களுக்கு வேறுதுணையில்லை; ஆகையால் திருப்பாற்கடலிலுண்டான விடத்தை முற்காலத்திற் புசித்துப் பாதுகாத்த புண்ணியமூர்த்தியே! தேவரீர் அடியேங்களுடைய பிழைகளைப்பொறுத்தருளவேண்டும். எ-று. (௭௮)

என்றுகூறவேள்விசெரிடத்திலெய்தியெம்பிரான்
பொன்றுவானுளோர்க்குயிர்கொடுத்துமீண்டுபோர்த்தொழில்
வென்றுகன்றுசீர்த்திபெற்றவீரவென்றுரைத்தலும்
நன்றுநன்றெனாவெவர்க்குமாவியங்குதல்கினன்.

(இ-ள்) இவ்வாறு விண்ணப்பம் செய்யவும் நமது பெருமானாகிய சிவபிரான் அழிந்துபோன யாகசாலைக்கு எழுந்தருளி வந்து யுத்தம் செய்து ஜெயித்து, நல்ல கீர்த்திபெற்ற வீரபத்திரா! இறந்துபோன தேவர்களுக்கு மீண்டுமுயிர் கொடுத்துக்காக்கக்கடவாயென்று கட்டளையிடவும், மனதிற் சந்தோஷப்பட்டு நல்லது! நல்லது! என்று சொல்லி, அந்தத்தேவர்களுக்கெல்லாம் உயிர் கொடுத்தருளினார். எ-று. (௭௯)

வீரபத்திரசருக்கம் முற்றிற்று.

# பாவநாசசருக்கம்.

பொன்றேத்தசடையாளிபுகழ்நாமங்கூறினரோ
மின்றேத்ததிருவிறெவிளங்கியுலகாள்பவர்கள்
குன்றேத்தும்வரிசிலையாய்க்கொண்டமுக்கட்கொற்றவனை
நின்றேத்துமறிவிழந்தார்நிலையிழந்தநீர்மையரே.

(இ - ள்) பொன்னினும் மிகுந்த ஒளி பொருந்திய சடையையுடைய பரம சிவத்தின் புகழ்பெற்ற திருநாமங்களை யுச்சரிப்பவர்கள் யாரோ அவர்கள் மின்னலிலும் மிகுந்த ஒளியுள்ள நவமணி முதலான அஷ்ட செல்வங்களைப்பெற்று இந்த உலகத்தையும் அரசாள்வார்கள். மலைகளிற் சிறந்த மகா மேருவைவில் லாகத்தரித்த மூன்று கண்களையுடைய சிவபெருமானைப்பணிந்து போற்றாதவர்கள் முத்திநெறி நீங்கி[illegible]யோராவார்கள். எ-று. (௧)

மருமலிபூந்துணர்நாறுகற்பகஞ்சூழ்வானுளோ
ரொருவியேநின்றருறையொன்றினுற்றிருமதோ
வெருவருஞ்சிறுலாலமுண்டிருண்டமென்களத்தான்
பொருவிலாத்திங்குமற்றம்புரிந்ததிருவுளமானுன்.

(இ - ள்) வாசனை நிறைந்த மலர்க்கொத்துகள் பரிமளிக்குங் கற்பகவிருட்சத்தையுடைய விண்ணுலகத்திலுள்ள தேவர்கள் பரமசிவனை நீக்கிய பாவம் எந்த விதத்தினாலும் ஒழியுமோ? ஒழியாது. ஆகையால்பயப்படத்தக்க கொடிய ஆலகால விஷத்தையுண்டு கறுத்த கண்டத்தையுடைய சிவபெருமான் ஒப்பில்லாத மிகுந்த துன்பத்தை அவர்கள் இன்னும் அடையும்படி திருவுளத்தில் சிந்தித்தார். எ-று. (௨)

மாயையீனுற்சூரனையேவரவழைத்துவான்றவங்கள்
மேயினதெல்லாமருளிவிண்ணேர்கள்செருக்கழிய
வாயிரத்தெட்டண்டமுமேயாங்கவனுக்கருள்செய்து
போயினன்சதுமறைநூல்புகன்றதிருமணிவாயான்.

(இ - ள்) மாயையைக்கொண்டு சூரனை உற்பத்தி செய்து, அவனியற்றிய மேன்மையான தவங்களுக்கிணங்க அவன் கோரிய வைகளையெல்லாம் தந்தருளித்தேவர்களுடைய அகம்மதை நீங்கும்படி ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் அங்கே அரசாட்சி செய்யும்படி அவனுக்கு வரம்தந்து, நான்கு வேதங்களையும் சொன்ன அழகிய திருவாயையுடைய சிவபெருமான் மறைந்தருளினார். எ-று.

அரமகளிர்சிறையிருக்கவாடவர்யாருங்கரவாய்
வெருவவேகொடுந்துயரம்விளைத்தவைமற்றுரைக்கடங்கா
பரவியெயிறையோனைப்பணிந்திருக்கவருள்புரிந்து
பெருகுதிறல்வேலவனைப்பெற்றருளித்தந்தனனால்.



(இ - ள்) அரம்பை மாதர்கள் சிறையிலிருக்கவும், தேவர்கள் யாவரும் மறைந்து கொண்டு பயப்படும்படி சூரன் முதலாயினோர் கொடுமையான துன்பம் உண்டாக்கினதை யெடுத்துச்சொல்ல யாராலும் முடியாது. ஆயினும் அவர்கள் பரமசிவத்தைப்பணிந்து துதிக்கவும், சிவபெருமான் கிருபை கூர்ந்து, மிகவும் வல்லமை பொருந்திய வேலாயுதக்கடவுளை யீன்றருளினார். எ-று. (௩)

முருகவேளவுணர்குலமுற்றுமொறுத்தப்பாவி
வரும்விண்ணோர்சிறைமீட்டுவான்பதவிதனையளித்தா
னெரிமணிப்பூண்முடியமரரொல்லோருமித்துயரம்
௪ வருதிமித்தமென்கொலென்றுமற்றிதனையுன்னினரால்.

(இ - ள்) முருகக்கடவுள் சூரனுடைய குலமுழுவதையும் நாசஞ்செய்து தம்மைப் போற்றுதல் செய்த தேவர்களைச்சிறையினின்று விடுவித்து, வானுலகத்திலே வாழச்செய்தருளினார். அக்கினியைப்போல் ஒளிவீசும் இரத்தினங்கள் பதித்த கிரீடந்தரித்த தேவர்கள் யாவரும் இப்படிப்பட்ட துன்பம் நமக்கு நேரிட்ட காரணம் யாதெனப் பின்வருமாறு சிந்தித்தார்கள். எ-று. ஆல், அசை.

## வேறு.

தீயவன்மகத்திற்சேருஞ்செருக்கினுல்வந்தபாவ
மோய்விலாதம்பாலிவ்வாறுருற்றினதுன்பமென்ன
மாய்விலாதின்னும்யாதோவருந்தியாதியோமுக்கட்
டூயவனருளைப்போற்றியிக்குறைதுடைத்தல்வேண்டும்.

(இ - ள்) பாதகனாகிய தக்கன் செய்த யாகத்திற்குச்சென்ற செருக்கினால் நேரிட்ட பாவம் இது வரையில் நீங்குதலில்லாமல் நம்மிடத்தில் இவ்வண்ணம் உண்டாகிய துன்பமிகுதி ஒழியாமலிருக்கிறது; இன்னும் என்ன கேடு வந்தடையுமோ? அதை அறிந்திலோம். ஆகையால் மூன்று கண்களுடைய சிவபெருமான் திருவருளைத்துதித்து, நமக்குச்சம்பவித்த இத்துன்பத்தை நீக்கிக்கொள்ளவேண்டும். எ-று. (௫)

என்றுதஞ்சிந்தைகூரவெண்ணியேவானைத்துன்னோர்
[illegible]தோட்டுறவுகொப்புளிக்குந்தூய
[illegible]ான்றிகழ்கங்கைவேணிப்புராந்தகன்றிருமுன்பேறி
யொன்றியவுளத்தராகியாருயிருதவிபூப்ப.

(இ - ள்) இவ்வாறு தமது மனதிற் சிந்தித்து விண்ணுலகத்தில் வசிக்கும் தேவர்கள் விளங்கும் மகரந்தப்பொடிகளைச்சிந்தி இதழ்களினின்று தேன் சொரி

யும் உயர்ந்த பொன் போன்ற கொன்றை மாலையணிந்த சடாமகுடத்தையுடைய முப்புரத்தை யெரித்த மகாதேவன் சந்நிதியடைந்து, ஒருமைப்பட்டமனதையுடையவர்களாய் அருமையான சிவகோடிகளுக்கு உதவி செய்யும்படி, எ-று.

அருள்கனிந்தமுகமுநுமைமுகத்தமலநாதா
வளர்தருவல்விபாகாமறைகளோர்நான்குந்தேடி
யுருவினும்றிலாதவொருபெருஞ்சுடரோதீராப்
பெருவினைநோய்கடீரப்பெறலருமருந்தாய்வந்தோய்.

(இ - ள்) கிருபைகூர்ந்த அமுத கலை சுரந்த வாமதேவம்முதலான ஐந்து சிரசுகளையுடைய மகாதேவா! இமயமலையரசன் பெற்ற பார்வதி தேவியை இடது பக்கத்தில் வைத்தருளிய பெருமானே! இருக்கு முதலான நான்கு வேதங்களும் தேடித்திருவுருவம் இன்னதென்று அறியாத ஒப்பற்ற பரஞ்சோதியே! தீராத பெரிய கரும நோய்களும் ஒழியும்படி பெறுதற்கரிய ஞானமிர்தம் போல் எழுந்தருளியிருக்கும் சிவபிரானே! எ-று. (௮)

சிறியோஞ்செய்ததீமை திருவுளம்பொறுத்தல்வேண்டும்
பிறிதொருதுணைமற்றில்லேம்பேதையிற்பேதையேம்யாம்
முறைமுறைமுறையோவென்றுமொய்த்தவரிரங்குநின்றே
பெறலருந்தவத்தோர்போற்றும்பெய்கழற்றுள்வணங்க.

(இ - ள்) அடியேங்கள் குற்றத்தைத் திருவுளத்தில் வைக்காமல் பொறுத்தருளவேண்டும்; அடியேங்கட்கு வேறுதுணை இல்லை: அன்றியும் கிஞ்சித்தும் அறிவில்லாத பேதையர்கள். எங்கள் பெருமானே! அடியேங்களை வருத்துவது முறையோ? முறையோ? முறையோ? என்று தேவர்கள் விண்ணப்பஞ்செய்து அடைதற்கருமையான தவத்தையுடைய சிவயோகிகள் துதிக்கும் சிவபெருமான் திருவடிகளைத்தொழுது வணங்கவும், எ-று. (௯)

ஒன்றுமாய்ப்பலவுமாகியாருயிர்க்குயிருமாகித்
துன்றிநிற்பனவுமாகித்தொழிற்சரிப்பனவுமாகி
யன்றுமாயிவைகள்யாவுமறிந்தவரறியத்தோன்றி
நின்றவன்முகமலர்ந்துநேரிலாமுறுவல்பூத்து.

(இ - ள்) தனித்த பொருளாயும், பல பொருள்களாயும், அருமையான உயிருக்குயிராகியும், நிலையாய் நிற்பனவாகிய-மலை-மரம்-முதலிய அசரப்பொருள்களாயும், தொழில் புரியும் விலங்கு-பறவை-மனிதர் முதலான நடப்பனவாகியும், இவைகள் அல்லனவாகியும், இது விவரங்களை அறிந்த பெரியோர்கள் அறியும்படி தோன்றி நிற்பவருமாகிய சிவபெருமான் திருமுக மலர்ந்து இணையில்லாத சிறுநகை கொண்டு, எ-று. (௧0)



மலிதருகருணைவாரிமடைதிறந்தொழுகுங்கண்ணாற்
பொலிவுறநோக்கிப்பாவம்புரிந்துளோர்க்கிலமீது
தொலையவப்பாவம்யாவுந்தோன்றுவோரன்பிற்கேற்ற
பலன்றரக்களித்துநாமேபயிந்துறைதலங்கள்கோடி.

(இ - ள்) விளங்கா நின்ற கருணையாகிய கடல் மடை திறந்து ஒழுகுவது போல் திருக்கண்ணால் அருள் நோக்கம் வைத்து, உலகத்தில் பாவஞ்செய்தவர்களுக்கு அந்தப்பாவமெல்லாம் நீங்கும்படி, வந்து தெரிசிப்பவர்களுடைய அன்புக்குத்தகுந்த வரமளிப்பதற்குச் சந்தோஷத்தோடு யாம் எழுந்தருளியிருக்கும் தலங்கள் அனேகமுண்டு. எ-று. (௧௧)

செம்மையிற்றிறம்பினோர்க்குநிரயமேதீர்க்கும்பாவ
மிம்மையிலதனுக்குள்ளமஞ்சினோரிடுக்கண்டீர
மெய்ம்மையாய்யாமேவைகும்வியன்பதிபலவுண்டேனு
மெம்மிடைக்குறைசெய்தாரோலெங்கணுந்தீராதென்றும்.

(இ - ள்) தரும மார்க்கத்தைக் கை விட்டவர்களுக்கு அவர்களுடைய நரகமே அவர்களது பாவத்தைத் தண்டனையால் நீக்கும். இந்த வுலகத்தில் பாவத்துக்குப்பயந்து நடப்பவர்களுடைய துன்பம் நீங்கும்படி உண்மையாய் யாம் வீற்றிருக்கும் சிறந்த தலங்கள் அனேக மிருந்தாலும், எம்மிடத்திலொருவர் குற்றம் புரிந்தால் அது வேறு எந்தத்தலத்திலும் எக்காலத்திலும் ஒழிய மாட்டாது. எ-று. (௧௨)

எவ்வழிப்பவமுந்தீர்தற்கியநெறியதையக்கேண்மின்
செவ்வியகடலிற்றோன்றுந்தெள்ளமுதுண்ணுந்தேவீர்
கைவயின்வைத்தநெல்லிக்கனியெனமுத்திகாட்டுந்
தெய்வமாநகரமவ்வைதிருவவதாரஞ்செய்யூர்.

(இ - ள்) செம்மையான பாற்கடலில் உண்டான சிறந்த அமிர்தத்தை புசித்த தேவர்களே! எப்படிப்பட்ட பாவமும் நீங்குதற்கு எற்ற மார்க்கத்தைச்சொல்லக்கேளுங்கள். உள்ளங்கையிற் பொருந்திய நெல்லிக்கனியைப்போல முத்திநெறியைச் செவ்விதாகக் காட்டும் திவ்விய தலம் ஒன்றுண்டு. அஃது ஔவையார் திருவவதாரம் செய்தபதியாகும். எ-று. (௧௩)

அப்பதிக்கேகிற்பாவமகன்றிடும்மைவிட்டே
யெப்பறவாசஞ்செய்வோர்க்கியல்பயனுரைக்கற்பாற்றோ
விப்பொழுதங்கேசென்மினெனத்திருவாய்மலர்ந்தான்
கைப்படுபணியாய்நாகங்கணைத்தரித்தவனெனல்.

(இ - ள்) நீங்கள் அந்தத்தலத்துக்குச்சென்றால் செய்த பாவமெல்லா உங்களை விட்டோடும். சுகமாக அதில் எப்பொழுதும் வாசஞ்செய்யும் அன்பர்கள் அடையத்தக்க இலாபத்தைச்சொல்லக்கூடுமோ? ஆகையால் இப்பொழுது நீங்கள் அந்தப் பதிக்குப்போங்கள் என்று சர்ப்பத்தைக்கங்கணமாகத்தரித்தருளிய சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினர். எ-று. (கச)

பாய்திரைசுருட்டுதெண்ணீர்ப்பரவையைமுடிமேல்வைத்த
நாயகனருண்மேற்கொண்டுநெறுகினார்மதியந்தாழ
மீயுயர்சினகரங்கள்விளங்கியதொல்லைமூதூர்
தூயவாமுதமுண்ணுஞ்சுடர்முடியமரர்யாரும்.

(இ - ள்) குற்றமற்றவரும், தேவாமிர்தம்புசித்தவரும், ஒளி வீசும் கிரீடம் புனைந்தவருமாகிய தேவர்கள் யாவரும் மோதுகின்ற அலைவாய்ந்த பரிசுத்தமான கங்காதேவியைச்சடாமகுடத்தில் தரித்தருளிய கைலாசபதியின் அருட்கட்டளையைச்சிரமேற் கொண்டு, சந்திர மண்டலத்திலும் மிகவும் உயர்ந்த கோவில்கள் விளங்காநின்ற பழமையாகிய பாவநாசப்பதியில் வந்து சேர்ந்தார்கள். எ-று. (கரு)

கற்பனைதீர்க்கும்பஞ்சாக்கரநதிதீரமேவி
யுற்றவக்கணமேகாகவுருக்கொடுபாவம்யாவு
மிற்றிலைகரிந்துவீழ்தற்கண்டனர்யாதோவென்று
மற்புதப்புதுமைமேல்கொண்டறிவினையோங்கிநின்றார்.

(இ - ள்) பொய்யான எல்லாப்பந்தங்களையும் போக்கும் பஞ்சாக்கரநதியின் கரையடைந்து, அதில் ஸ்நானம் செய்த அந்த நிமிஷமே பாவமெல்லாம் காகவுருவெடுத்துத்தீய்ந்து வீழ்ந்திறந்ததைக்கண்டு, இதுவென்ன அதிசயமென்று நினைந்து, அந்த விநோத அற்புதத்தால் அறிவு மயங்கி நின்றார்கள். எ-று. (கசு)

அதிசயித்துணர்வுபெற்றேயந்நதிநன்னீராடி
மதிவளாயிலிற்றுங்கொன்றைநறாதுளையலர்கடுவிப்
பதமலர்வழுத்திப்பூசைபலபகல்புரியத்தோன்றி
மதர்விழிப்பங்கனன்னோர்வேண்டியவரங்களீந்தான்.



(இ - ள்) ஆச்சரியப்பட்டு மயங்கித்தெளிந்த அறிவுடையவராய் அந்தப் புண்ணிய நதியின் நல்ல தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, தேனொழுகுகின்ற கொன்றை மலர்களைத் தூவிச்சிவபெருமானுடைய பாதாரவிந்தங்களைத்துதி செய்து, நெடுங்காலம் பூசைசெய்ததனால் பார்வதி சமேதராகிய சிவபெருமான் பிரத்தியட்சமாகி, அந்தப்பெரியோர்களுக்கு வேண்டிய வரங்களைக்கொடுத்தருளினார். எ-று. (கஎ)

நாதனுற்பாவநாசமென்னலாநகரின்பேரு
மீதிறையவரும்பாவநாசனென்றிறைஞ்சியன்பாய்
மீதுயர்பசும்பொன்னாட்டில்விண்ணவர்துதித்துச்சென்று
ராதலாற்புவியின்மிக்காயநற்றிபெதியீதாமால்.

(இ - ள்) சிவபெருமான் எழுந்தருளியிராநின்ற இந்த நகரத்தின் பெயர் திருப்பாவநாசமென்றும், இதில் வீற்றிருக்கும் மகாதேவன் திருநாமம் திருப்பாவநாசேசர் என்றும்சொல்வது தகுதியே! என்று மிகவும் அன்போடுபணிந்து போற்றித்தேவர்கள் தமது பொன்னாட்டுக்குப்போனார்கள். ஆகையால் பூலோகத்தில் மிகவும் மேன்மையுள்ளதெனச்சொல்லும் தலம் இந்தத்திருப்பாவநாசப்பதியேயாம். எ-று. ஆல், அசை. (கஅ)

கன்னலின்செவிகுழுங்கழனைப்பாவநாச
நன்னகர்ச்சிறப்பையாருகவிற்றுதற்கெளிதோபாரின்
முன்னருந்தவத்தின்மிக்கவொழுக்கமாமுனிவகேட்டி
யென்னவேநந்திதேவனினிதெடுத்தியம்புகின்றான்.

(இ - ள்) கரும்புகள் ஓங்கிவளரும் வயல்களால் சூழப்பட்டமங்கலதிருத்தன்னபாவநாசம் என்னும் புண்ணியஸ்தலத்தின் சிறப்பினை யாவராயினும் எடுத்துச்சொல்லுதற்குச் சாத்தியப்படுமோ? சாத்தியப் படமாட்டாது. யாவராலும் நினைப்பதற்கு அருமையான தவத்தில் சிறந்த ஒழுக்கமுடைய முனிவனே! கேள் என்று நந்திதேவர் சந்தோஷத்துடன் எடுத்துச் சொல்லத்தொடங்கினார். எ-று. (க௯)

இப்பெரும்பதிக்குகோாயிசைக்குமோர்பதியும்வானிற்
றப்பில்செங்கதிரோனென்னச்சுடருநீள்கைலமின்ற
த்ப்புறழ்வாயன்பங்கனனக்கினைசொல்லுந்தேவும்
பொய்ப்படுமென்னத்தேற்றப்புகலுவனன்மைநம்மா.

(இ - ள்) இந்த மகா தலத்துக்கொப்பாகச்சொல்லும் வேறுதலமும், ஆகாயத்தில் விளங்குஞ் சூரியனைப்போல் பிரகாசிக்கும் நீண்ட இமயமலையரசன்

பெற்ற பவளம் போலும் சிவந்த வாயினையுடைய பார்வதியை இடப்பக்கத்தில் வைத்தருளிய சிவபெருமானுக்கு நிகராகச்சொல்லும் வேறு தெய்வமும் பொய்யாகுமென்று நான்கு வேதங்களும் நிச்சயமாக எடுத்துச்சொல்லும். எ-று. அம்மா-அசை. (௨௰)

வடலெலாங்கரும்பின்முத்தம்வரப்பெலாமன்னப்பேடை
யியலெலாஞ்செம்பொன்சோலையிடமெலாந்தோகைமஞ்ஞை
யயலெலாங்கமலவாவியலரெலாம்வண்டுபைந்தார்
செயலெலாங்கல்விகேள்விதெருவெலாஞ்சித்திரத்தேர்.

(இ-ள்) வயல்களில் எல்லாம் கரும்பீன்ற முத்துகளும், அவற்றின் வரப்புகளில் எல்லாம் பெண் அன்னப்பக்ஷிகளும், நடக்குமிடங்களில் எல்லாம் செம்பொன் குவியலும், சோலை தோறும் தோகையுடைய மயில்களும், அவற்றினருகாமையில் தாமரைத்தடாகங்களும், புஷ்பங்களெல்லாம் வண்டுமொய்க்கும் வண்ணமலராகவும், அங்ககரிலுள்ளோருடைய செய்கைகளெல்லாம் அறிவை வளர்க்கும் கல்வி கற்றலும், அதில் தேர்ந்தவர்களிடத்தில் கேட்டும் கேட்டலும், தெருக்கள் தோறும் சித்திரத்தேர்களும், பொலிந்து விளங்கும். எ-று. (௨௧)

மங்கலமுரசினுர்ப்பைமுகின்முழக்கென்றெண்ணிப்
பொங்கரின்மஞ்ஞையாடப்புதுமலர்மௌவல்காட்டுந்
திங்களினுதயமென்றுதெரிவையர்வதனநோக்கிப்
பங்கயங்குவியுமாம்பற்பகலிடைமலருமாதோ.

(இ-ள்) கலியாணபேரிகையின் முழக்கத்தைக் கார்மேகத்தின் முழக்கம் என்று எண்ணிப்புதிய மலர்களையுடைய வனமல்லிகைகள் அடர்ந்திருக்கும் சோலைகளில் மயில்கள் கலாபத்தைவிரித்துக்கொண்டு நடனமாடப்பகற்காலத்திலே மாதருடைய முகத்தைப்பார்த்துச் சந்திரோதயமாயிற்று என்று தாமரைமலர்கள் குவிந்துபோகும்; அல்லிகள் மலரும். எ-று. மாதோ, அசை. (௨௨

பற்பலமணியின்வேய்ந்தபைம்பொனின்மேடைநின்று
நற்புதவின்ஞோர்காவினணிதிகழ்கொம்புபோல்வார்
பொற்புறுமிடையார்காமவல்லியைப்பொருவர்வாய்மைக்
கற்பசமணத்தைக்கொண்டாரற்பகமணமுங்கொள்வார்.

(இ-ள்) பலவகைப்பட்ட அனேக இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட பசும் பொன்னுற் செய்தமைத்த உப்பரிகையின் பேரில் உலாவும் இள



பெண்கள் தேவர்கள் வாழும் ஆச்சரியமான கற்பகச்சோலையில் உள்ள அழகிய பூங்கொம்பிற்கு ஒப்பாவார்கள்; அழகிய இடையினால் கற்பகத்தருவில் படரும் வல்லிக்கொடிக்கு நிகராவார்கள்; மனதிலே உண்மையான கற்பு என்னும் வாசனைநிறையப் பெற்றிருக்கின்ற அந்த மாதர்கள்முல்லை மலர்களிலஉள்ள வாசனையையும் கொள்வார்கள். எ-று. (௨௩)

காவலரளியிராகங்காவலரளியிராகம்
பூவியலன்னமானுர்பூவியலன்னமானுர்
கோவைநேராம்பல்வாய்ப்பார்கோவைநேராம்பல்வாய்ப்பார்
பாவநாசப்புரத்தோர்பாவநாசப்புரத்தோர்.

(பதவுரை) கா-நந்தவனத்திலே, அலர்-மலர்களில், அளி-மதுவை உண்ணவரும் வண்டுகளின், இராகம்-ரீங்காரமும், காவலர்-அந்த நந்தவனத்தில உலாவும் அரசர்கள், அளி-அன்புடன், இராகம்-பாடும் பாடலின் முழக்கமும் ஒன்றனவாம், பூ-பூமியில், இயல்-சஞ்சரிக்கிற, அன்னம்-அன்ன நடையையும், மானுர்-மானின் பார்வையையுமுடைய மாதர்கள், பூ-செந்தாமரைப்பூவில், வீற்றிருக்கின்ற, அன்னம்-இலட்சுமிக்கு, ஆனுர்-ஒப்பாயினர், கோவை-கோவைப்பழத்தையும், ஆம்பல் செவ்வல்லி மலரையும், நேர்-ஒத்திருக்கும், வாய்-இதழையும், பார்-இப்பூமியில், கோவை-முத்துமாலைக்கு, நேர்ஆம்-ஒப்பான, பல்-தந்தங்களையும், வாய்ப்பார்-அந்த மாதர்கள் பெற்றிருப்பார்கள், பாவநாசப்புரத்தோர்-இருப்பாவநாசபுரவாசிகள், பாவம்-சகல பாவங்களையும், நாசம் நசிக்கச்செய்யும், புரத்தோர்-சிவலோக வாசிகள் ஆவார்கள். எ-று. (௨௪)

அணிதிகழுநெடுவாவியரும்புவனமலரும்புவன
லிணையிலாமேடைகளினின்பவளமின்பவள
மிணைவயல்வின்நெடுவரம்பினலங்காரமலங்கார
மணமலிசெங்கமலத்தைவலம்புரியும்வலம்புரியும்.

(பதவுரை.) அணி-அழகினால், திகழும்-விளங்கும், நெடுவாவி-நெடியதடாகத்தில், வனம்-அழகான, அரும்பு-தாமரை அரும்புகள், அரும்புவன-மலரும், இணையில்லாத-ஒப்பில்லாத, மேடைகளின்-உப்பரிகைகளில்உள்ள, இன்-இனிமையான, பவளம்-பவளக்கால்கள், இன்பம்-சந்தோஷம் தரும், வளம்-வளப்பங்களைவகளாம், அணை-நெருங்கிய, வயலின்-வயல்களின், நெடுவரம்பின்-நெடிய வரப்புகளில், அலங்கு-பிரகாசிக்கின்ற, ஆரம்-முத்துகள், அலங்காரம்-அலங்காரமாயிருக்கும், மணம்மலி-வாசனை நிறைந்துள்ள, செங்கமலத்தை-செந்தாமரைமலர்களை, வலம்புரியும்-வலம்புரிச் சங்குகளும், வலம்புரியும்-பிரதட்சணம் செய்யும். எ-று. (௨௫)

## வேறு.

உருப்படிவமழியாதசித்தரொடுதவயோகருள்ளம்பூற்றி
யிருப்பதற்குமிடமாகிச்சித்தமூலிகையுதவியிலகுந்
பொருப்புகளும்பவவாரிகரைகாணவருள்பொழியும்புனிதன்வாழுந்
திருப்பதிகம்புனைந்ததிருப்பதிகளுமேசிறந்தோங்குந்தெய்வநாடு.

(இ - ள்) தெய்வத்தன்மையுள்ள இந்த நாடு காயசித்திபெற்ற சித்தர்களும் சிவயோகிகளும் மனமகிழ்ந்து வாசம்பண்ணுவதற்குத்தக்க இடமாகிச்சித்தர்கள் தேடும் மூலிகைகளைக்கொடுத்து விளங்கும் தெய்வத்தன்மையுள்ள மலைகளாலும், பிறவிக்கடலின் கரையைக்காணும்படி அப்பர்முதலாயினோர்திருவருளால் மழைபோற் பொழிந்த தேவாரப்பதிகங்களைப்பெற்றுள்ள சிவபெருமான் வீற்றிருக்கும் அழகியஸ்தலங்களாலும் சிறப்புற்றோங்கும். எ-று. (உசு)

கடற்புவியிலரனேலைப்பாணனுக்காவெழுதிவிடக்கையிற்கொள்வோன்
றடுத்தானைப்பாவைபாற்றாதிருளில்விடுவோனைச்சார்ந்துநண்பா
லெடுத்தவுடல்கைலைக்கேவந்தனையச்சிறந்தகுலத்தெய்துமந்த
வடற்குரிசில்புரந்தருளுந்திருநாட்டின்கொழுந்தாகவனைந்ததோரூர்.

(இ - ள்) கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் சிவபெருமான் பாணபத்திரனுக்காக வேண்டுந்திரவியத்தைக் கொடுக்கும்படி எழுதியனுப்பிய திருமுகத்தைப்பெற்றுக்கொண்டவரும், தடுத்தாட்கொண்ட சிவபெருமானைப்பரவையாரிடத்தில் நடுராத்திரியில் தூதனுப்பிய சுந்தரமூர்த்தி நாயனாரது நட்பைக்கொண்டு வந்த சரீரத்தோடு அவருடன் திருக்கைலாசத்தையடையும்படி அக்கினிகுலத்தில் அவதரித்தவருமாகிய வலிமை பொருந்திய சேரமான்பெருமாணாயனார் அரசாட்சி செய்த அழகிய சேரநாட்டின் கொழுந்துபோல் இந்தத்திருப்பாவநாசப்பதிவிளங்கும். எ-று. (உஎ)

நீராழிசூழுலகமணிப்பூணிற்சிவஸ்தலங்கணிகரின்றாக
வாராய்ந்தபலமணிகளவற்றுணைமெணியாகவமைந்துதோன்றுங்
காராருமலர்ப்பொழில்சூழ்திருப்பாவநாசநகர்கருத்துட்கொண்டோர்
நீராதவல்வினைநோய்தீர்வதற்கோராருமருந்துதெரிந்தோர்தாமே.

(இ - ள்) கடல் சூழ்ந்த பூலோகமாகிய இரத்தினங்கள் பதித்த பதக்கமென்னும் ஆபரணத்தில் பூலோகத்திலுள்ள சிவஸ்தலங்கள் எல்லாம் அந்தப் பதக்கத்திலிழைத்த தெரிந்தெடுத்த பல இரத்தினங்களாகவும், அந்த இரத்தினங்களுக்கு நடுநாயகமாய்ப்பொலிந்து விளங்கும் மேகங்கள் நிறைந்த பூஞ்சோலை சூழ்ந்த திருப்பாவநாசப்பதியை நிர்மலமான மனதில் தியானிப்பவர்



யாரோ அவர்களே நீக்க முடியாத சஞ்சிதத்தாலுண்டாகும் பவவியாதியைப் போக்கிக்கொள்வதற்கு அருமையான மருந்தை அறிந்தவர்கள். எ-று. (உஅ)

தேமாவின்கனியிருக்கக்காஞ்சிரத்தின்கனிதேடிச்செல்வார்போலுங்
காமாதமலரிருக்கமுருக்கலரின்மணங்கொள்வார்கருத்துப்போலு
நாமேவுமாமதுரவின்சொலன்றிவன்சொல்லேயந்தார்போலும்
பூமேவுவளர்பாவநாசமன்றித்தலந்தேடிப்புலருமாறே.

(இ - ள்) பூலோகத்தில் வளர்ந்தோங்கும் திருப்பாவநாசப்பதியை விட்டு வேறு தலத்துக்குச்செல்லக்கருதித்தேடி வாட்டமுறுதலானது மதுரமானமாங்கனிகளிருந்தும் அவற்றை விட்டு எட்டிப்பழத்தைத்தேடிச்செல்வானைப்போலவும், சோலையில் விருப்பந்தரும் அழகியமலர்களிருந்தும் அவற்றைநீக்கிவிட்டுக் காட்டிலுள்ள முருக்கம் பூக்களை மோந்து வாசனை கொள்வோர் எண்ணத்தைப் போலவும், நாவாலுச்சரிக்கப்படும் மிகவும் இனிமையான வசனங்களல்லாமல் கடுஞ் சொல்லில் இச்சை வைத்தல் போலவும் இருக்கின்றது. எ-று. (உகூ)

விழியிருக்கவீணிலேவெறுங்குருடுமேவிநின்றுமெலிவார்போலும்
வழியிருக்கத்திங்குதரும்பெருங்குழியில்வீழ்ந்துழலுந்தியோர்போலு
மொழிவிலாமலர்வாவிநீரிருக்கச்சேற்றுநீருண்பார்போலும்
பழிகெடுக்குந்திருப்பாவநாசநகரொன்றிருக்கப்பவத்துள்வீழ்வார்.

(இ - ள்) பிறவியைப்போக்கும்திருப்பாவநாசப்பதி ஒன்றிருந்தும் அதை வந்தடைந்து தங்கள் பிறவித்துன்பத்தை நீக்கிக்கொள்ளாமல் பிறவிக்கடலில் விழுந்து வருந்துவோர்கள் நேத்திர விளக்கமிருந்தும் அதை நீக்கிக் குருடன் வேஷங்கொண்டு துக்கிப்பவர்களைப்போலவும், நல்லமார்க்கமிருந்தும் அதை விட்டுத்துன்பத்தைக்கொடுக்கும் பெரிய குழியில் விழுந்து துயரம் அடைவோரைப் போலவும், நீங்குதலில்லாத தாமரைத்தடாகத்தில் ஜலமிருந்தும் அதை விட்டுச்சேற்று நீர் உண்பவர்களைப்போலவும் இருக்கின்றார்கள். எ-று. (௩0)

இருக்குமுதலான்குமறைபணிந்தேத்தமிக்கதலத்தினின்புற்றோங்குந்
தருக்குலங்கள்பொன்னுலகிற்கற்பகமேமுதலாயதருக்களாகுந்
திருக்குலவுமக்களாய்வந்துதித்தோர்மணிமருட்டுத்தேவராகும்
உருக்கினருமாமகளிர்முலைசுமக்குமிற்றிடைக்கோருவமையில்லார்.

(இ - ள்) இருக்கு முதலாகச்சொல்லப்பட்ட நான்கு வேதங்களும் பணிந்து போற்றும் இந்தத்திருப்பாவநாசப்பதியில் இனிமையாக ஒங்கிவளரும்விருட்சக்கூட்டங்கள் விண்ணுலகத்திலிரா நின்ற கற்பகம் முதலான விருட்சங்களை

யுள செல்வத்தால்விளங்கும் இத்தலத்தில்புருஷராக அவதரித்தவர்கள் தேவ ஸபநங்கைகளைச்சுமக்கும் சிற்றிடைக்கு ஓர் உபமானமில்லாத மா லாரும் அழகால் விளங்கும் அரம்பையர்களே யாவார்கள். எ-று.

விரித்திறகிற்பறப்பனவுமூர்வனவுநடப்பனவாம் விலங்குமற்றுஞ்
சரிப்பனநிற்பனவாகுஞ்சராசரமெல்லாங்கடவுட்டன்மையராமாற்
பெருத்திடுதீவினையாவுமாதவன்முன்னிருகிலாப்பெற்றிபோலுந்
திருத்தகுமிப்பதிகாணிலவனைவிட்டுநீங்குமிதுதிண்ணந்தானே.

(இ - ள்) இறக்கைகளை விரித்துப்பறக்கும் பக்ஷிகளும், ஊர்வனவாகிய எறும்பு முதலியவைகளும், நடக்கும்சக்திபெற்றமிருகங்களும், மற்றுமுள்ள சரப் பொருள்களும், நிலையாயிருக்கும் தாவரப்பொருள்களும் ஆகிய எல்லாம் தெய் வத்தன்மையுடையனவாம். சிறப்பு வாய்ந்த இந்தத் திருப்பாவநாசப்பதியை யாவனொருவன் காண்கிறானோ அவனது பெருத்த தீவினைகள் யாவும் சூரியன் முன்பாகச்சந்திரனுடைய ஒளி எப்படி மழுங்கி நிற்குமோ அப்படியே அவனை விட்டு நீங்கிப்போம்; இது சத்தியம். எ-று. தான், அசை. (௰௨)

இத்தலத்திற்பசிகொண்டுவருந்தினற்கோர்பிடிபூணிட்டார்சோலைத்
தத்தைமொழிகிஞ்சுகவாயஞ்சனக்கண்வெற்பீன்றதையலோடு
நித்தமாயரனிருக்குமாங்குன்றவார்பசிமுற்றுநீக்கிற்பேறு
புத்திவினைத்தற்குமெட்டாததன்பெருமையாவரேபுகலவல்லார்.

(இ - ள்) இந்தத்திருப்பாவநாசப்பதியில் பசியினால் துன்பப்படுவோனுக்கு ஓர் பிடி அன்னமாயினும் அன்னம் கொடுத்தவர்கள் சோலைகளில் வாழும் கிளி யைப்போல் இனிய மொழியும், சிவந்தவாயும், மை தீட்டப்பெற்றகண்களையுமு டையபர்வதராஜபுத்திரியாகிய பார்வதி தேவியாரோடு எப்போதும் சிவ பெருமான் வீற்றிராநின்ற திருக்கைலாயத்தை யடைந்து வாழ்வார்கள். பசி முற்றிலும் நீங்கும்படி அன்னம் கொடுத்தால் அடையும் இன்பம் புத்தியினால் இப்படிப்பட்டதென நிச்சயிக்கக்கூடாது. ஆகையால் அதன் பெருமையை வாக்கினால் அளவிட்டுக்கூறவல்லார் யார்? ஒருவருமில்லை எ-று. (௰௩)

பாவநாசச்சிறப்பைக்காணுதகண்குருடுபட்டதாகும்
பாவநாசக்காதைகேளாதசெவிசெவிடுபோய்த்ததாகும்
பாவநாசப்பதியைப்பரவாதநாவூமைப்பழுதுதோற்றும்
பாவநாசத்தலத்தைநினையாதநாளெல்லாம்பாழ்நாட்டாளே.

(இ - ள்) திருப்பாவநாசத்தலத்தின் சிறப்பைக்காணாத கண்கள் குருட்டுக் கண்களாம்; திருப்பாவநாசத்தலபுராணத்தைக்கேட்காத செவிகள் செவிட்டுத்



தன்மையுள்ளவைகளாகும்; திருப்பாவநாச க்ஷேத்திரத்தின் பெருமையை சொல்லித்துதிக்காத நாக்கு ஊமை யென்னுங் குறைவைப்பெற்றதாகும் திருப்பாவநாசப்பதியை நினையாத நாள்களெல்லாம் வீண்நாள்களேயாம். எ-று. தான், அசை. (௰௪)

## வேறு.

இத்தனையெனவெண்ணில்லாப்பிறப்பிறப்பிளப்பைமாற்ற
வுத்தரியத்தால்வீசுமுமையவள்பட்டீசன்றான்
மெய்த்தவோமொழுத்தையோதிவீட்டினிற்சேர்ப்பானுமால்
வைத்தவவ்வுயிர்போங்காலம்வலச்செவிமேலாய்ப்போகும்.

(இ - ள்) இத்தனை யென்று கணக்கிட முடியாத பிறப்பு, இறப்பு என்னுந் துன்பத்தை நீக்குதற்காகக் கொடிபறக்கச்செய்யும் உமாதேவியை யிடப்பாகத் தில் வைத்தருளிய பட்டீச்சுரன் உண்மையான பிரணவமந்திரத்தைத்தியா னிக்கும்படி செய்து மோக்ஷத்தையடையச்செய்தருளுவார். அம்முடிவான பிறப்பில் சீவன் பிரியும்போது முத்தியடையும் அறிகுறியாய் வலக்காது உய ர்ந்து விளங்கும். எ-று. ஆல், அசை. (௰௫)

அகங்காரவெகுளிமாற்றியைம்புலனடக்கியிந்தச்
சகங்கண்டுகொளனீராய்த்தாமரையிலைநீர்போன்று
பகுந்துமைக்கொருபாலீந்தபரமனையருளையுன்னி
நிகழ்ந்திடுநகரமெல்லாம்பாவநாசத்தைநேரும்.

(இ - ள்) யான் என்னுஞ் செருக்கையும் அதனாலுண்டாகும் கோபாதிக ளையும் நீக்கிச்சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்னும் ஐம்புலன்களும் அவ் வுவற்றின்வழியிற்செல்லவொட்டாமல்அடக்கி, இந்தச்சகத்தைத்தக்கானவிற்றோன் றுஞ்சலமாகக்கருதி, உலக வாழ்க்கையிலுண்டாகும் இன்பதுன்பங்களைத்தாம ரையிலையும் தண்ணீரும்போலப்பற்றுதலில்லாமல் அனுபவித்துத்திருமேனியிற் பாதியை உமாதேவியாருக்குப்பகுத்துக்கொடுத்த சிவபெருமான் திருவருளைச் சிந்தித்து விளங்கும் எல்லா நகரங்களும் இந்தப்பாவநாசமென்னும் பதிக்கு ஒப்பாகும். எ-று. (௰௬)

புண்ணியஞ்செய்யிற்சித்தம்புனிதமாய்ஞானமெய்து
முண்ணிறைஞானத்தாலேயுலகத்துப்பற்றுநீங்கு
மெண்ணுறுபற்றுநீங்கவிரண்டறவொன்றுமுத்தி
திண்ணமேபாவந்தேயப்புண்ணியஞ்செய்வர்மாதோ.

(இ - ள்) புண்ணிய கருமங்களை ஈச்சுரப்பிரீதியாய்ச்செய்தால் சித்தம் சுத் தியாய்ச்சிவஞானம் சித்திக்கும். அந்த அகமுகமான பூரணஞானத்தால் உலக

வாழ்க்கையில் இச்சை ஒழியும்; அவ்வாசை நீங்க, அந்த நீக்கத்தால் ஜீவாத்மா பரமாத்மா என்கின்ற துவிதபாவமற்று, அபேதமாய்ச்சிவசாயுச்சிய நிலைபொருந்துவது சத்தியமே. ஆகையால் செய்த பாவம் கழிந்தொழிவதற்கு அறிவுடையோர் சற்கருமங்களைப்புரிவார்கள். எ-று. மாதோ, அசை. (௯௭)

ஆதலாற்பாவந்தேடப்புண்ணியநதிகளாடித்
தீதறுதலவாசங்கள்செய்குவாரறிவிலுய்ந்தோர்
மாதவப்படிவத்தாற்பாவநாசவூர்வாசமாவர்
காதலாமுத்திகாயங்கழன்றிடுங்காலமெய்தும்.

(இ-ள்) ஆகையால் சாதாரணமானவர்கள் எல்லாரும் செய்த பாவம் தீரும் பொருட்டுப்புண்ணிய நதிகளில் விதிப்படி ஸ்நானம் செய்து, குற்றமற்ற திவ்விய தலங்களில் நியமத்தோடு வாசஞ்செய்வார்கள். ஆனால் தெளிந்த அறிவையுடையோர் மாட்சிமையுடையதவத்துக்கு ஏற்ற கோலத்தோடு இந்தத் திருப்பாவநாசப்பதியில் வாசஞ்செய்வார்கள். விரும்பத்தக்க மோட்ச வீடானது சரீரநீக்கத்தின் போதே வந்து பொருந்தும். எ-று. (௯௮)

## வேறு.

மின்கயிலைவைத்தபணிவிண்ணவர்துதிக்க
நன்கயிலேயேந்தியைமுனல்குபரமேசன்
முன்கயிலைவெற்பனருள்முற்றியதிறத்தாற்
றென்கயிலையென்றுபெயர்செப்புவர்கள்முன்னோர்.

(இ-ள்) ஒளி பொருந்திய கடைப்புணர்வுவைத்த (செய்வனவனைத்தும் செய்து முற்றிய) ஆபரணங்களைத்தரித்த திருமால்முதலிய தேவர்கள் பணிந்து போற்ற, அவர்கள் வேண்டுகோளின்படி நல்ல வேலாயுதத்தைத்திருக்கரத்தில் தாங்கிய முருகக்கடவுளை முன்பு தந்தருளியவரும், பழமையான திருக்கயிலாயகிரிக்கு இறைவருமாகிய பார்வதி பங்கனது திருவருள் இந்தத்திருப்பாவநாசப் பதியிலும் முற்றும் விளங்குகின்ற தன்மையால் இதைத்தென்கைலாயமென்று பெரியோர்கள் சொல்வார்கள். எ-று. (௯௯)

முத்திதருமேழ்நகர்க்குமுந்துநகரீதென்
றத்திறனடற்குரிசிற்சோலனறிந்தே
மெய்த்தலவாசமுறுமேன்மையினிதன்பேர்
வைத்தனர்கள்சேரபுரியென்றிடவழங்கும்.

(இ-ள்) மோக்ஷத்தைத்தருவதற்கேற்ற காசி முதலாகச்சொல்லப்பட்ட ஏழு தலங்களுக்கும் பழமையான தலம் இந்தத்திருப்பாவநாசபுரமென்கின்ற



தனமையை வல்லமைபொருந்தியசோலராஜன் உணர்ந்து உண்மையான ஸ்தலவாசஞ்செய்த மேன்மையால் இத்தலத்துக்குச்சேரபுரி என்று பெயரிட்டார்கள். அது முதல் சேரபுரி என்று வழங்கிவருகின்றது. எ-று. (௱0)

சோலனிருந்தமலைசோரன்மலையென்னப்
பேரதுகொடுத்தனர்கள்மிக்கபெரியோர்கள்
சோலமெனும்பெயர்திரிந்திடுமொருஉச்சொல்
பாரிலுயர்சேலமெனநாமமுறுபான்மை.

(இ-ள்) சோல ராஜன் வசித்திருந்த பர்வதத்துக்குச்சோரவராயன்மலையென்று மிகுந்த பெரியோர்கள் பெயரிட்டார்கள். சோலம் என்னும் (இந்நகரத்தின்) பெயரானது திரிந்து மருவிய சொல்லின்தன்மையேற்றுப் பூதலத்தில் மேன்மை பொருந்திய சேலமென்னும் நாமத்தையடைந்தது. எ-று. (௱௧)

ஐம்புலனவித்துளத்தகந்தையையறுத்தே
நம்பனருள்பெற்றகணநாதரடியார்க
ளும்பரொடுமாதவருமொன்றுறநெருக்கிச்
சம்புசிவசங்கரவெனப்புகழ்வர்சால.

இ-ள்) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும்ஐந்துபுலன்களின்வழிச் செல்லும் ஆசையை நழித்து, உள்ளத்தில் நான் என்றெழுஞ் செருக்கை நீக்கிச்சிவபெருமானுடைய திருவருளைப்பெற்ற சிவகணத்தலைவர்களும், தொண்டர்களும், தேவர்களும், தவத்திற் சிறந்தவர்களும், சந்நிதியைச்செவ்வையாய்க் காணுமாறு ஒருவரை யொருவர் நெருக்கிக்கொண்டு சம்பு! சிவ! சங்கர! என்று சிவநாமங்களைச்சொல்லி, மிகுதியாய்ப்புகழ்வார்கள். எ-று. ([illegible])

கடலொலியடக்குமரகரவெனுமுழக்கம்
நடனமடமாதர்புரிநாடகமுழக்கம்
புடவிபுகழாகமபுராணகன்முழக்க
முடிவறியுமந்தணர்கள்வேள்வியின்முழக்கம்.

(இ-ள்) அன்பர்கள் ஹர! ஹர! என்று சொல்லித்துதிக்கும் ஒலியும், ஆலயத்தில் தொண்டு பூண்டொழுகும் பரதமோகன நடனதேவதாசிகள் செய்யும் நாட்டிய முழக்கமும், பூலோகத்தில் புகழா நின்ற சிவாகமபுராணங்களின் கோஷ்டியும், சித்தாந்த நிலையறிந்த வேதப்பிராமணர்கள் செய்யும் யாகத்தின் வேத கோஷ்டியும், கடலோசையை யடக்கும். எ-று. (௱௩)

## வேறு.

பலபலவாகியநகர்சதகோடிகள்பாரிடையுண்டேனுமித்
தலமதிலேசிவபூசைபுரிந்தோர்தவமதியுற்றிடுவோர்
புலரியினன்னதிபூபடிந்தேபுரவாசஞ்செய்வோர்
குலமொருமூவேழ்தலைமுறைபெறுவார்குலவுஞ்சிவலோகம்.

(இ - ள்) இப்பூமண்டலத்தில் வெவ்வேறு விதமான நகரங்கள் நூறு கோடிகளாக உள்ளனவேனும், இந்தத்தலத்தில் சிவபூசை செய்வோர்களும், தவம் செய்யும் புத்தியைப்பொருந்தி ஒழுகுவோர்களும், விடியற் காலத்தில் இந்தத் திருப்பஞ்சாக்கரப்புனித நதியில் விதிப்படி ஸ்நானம் செய்து இந்தத்திருப்பாவநாசப்பதியில் தலவாசம் செய்வோர்களும், தங்களோடு இருபத்தொரு தலைமுறைகள் சிவலோகத்தைப்பெறுவார்கள். எ-று. (௪௪)

இம்மையிலவரவர்நெஞ்சில்விழைந்ததுமின்பாகப்பெறுவா
ரம்மையிலேசிவலோகம்பெறுவாரரனார்தாமடைவார்
மெய்மையிதென்னநினைத்திடுவாரவர்மெய்ப்பதமேயடைவார்
பொய்மையிதென்னநினைத்திடுபாதகர்பொல்லாநரகெய்வார்.

(இ - ள்) அன்றியும் இப்பிறப்பில் அவரவர் மனதில் விரும்பிய பெறுகளையெல்லாம் சந்தோஷமாக அடைவார்கள்; மறு பிறப்பில் சிவலோகத்தைச் சேர்வார்கள்; சிவசமானத்தையும் பெறுவார்கள். இவ்வாறு சொல்லியவைகள் உண்மையென்று கருதுவோர்கள் மெய்யான சிவபதத்தையும்பெறுவார்கள். இவைகள் உண்மையல்லவென்று உள்ளத்தில் பாவிக்கும் பாவிகள் மிகுந்த துன்பத்தைக்கொடுக்கும் நரகத்தை அடைவார்கள். எ-று. (௪௫)

அந்தணரைக்கொலைசெய்திடுபாதகராவைக்கொன்றவர்கள்
செந்துவர்வாய்மடவாரைவதைத்தோர்சிறுகுகவைக்கொன்றோர்
தந்தியுரித்தோன்றன்னையிகழ்ந்தோர்கலைகளைபொய்யென்போர்
நிந்தையுளாப்போராகாநரகிற்கிடந்துநீங்காதுழல்வார்கள்.

(இ - ள்) பிராமணர்களைக்கொன்ற பாதகர்களும், பசுக்களைக்கொலை செய்தவர்களும், சிவந்த வாயையுடைய மாதர்களைக்கொன்றவர்களும், சிசுவைக் கொன்றவர்களும், யானையை யுரித்த பரமசிவனைத்தாழ்வாகப்பேசினவர்களும், தகுதியான சாஸ்திரங்களைப்பொய்யென்று சொல்வோர்களும், தூஷிப்போர்களும், பொல்லாத நரகத்தை யடைந்து, எப்போதும் துன்பத்தைப்பொருந்தி வருந்துவார்கள். (௪௬)



இத்தீவினையையியற்றினனிங்கிடவெங்கேபோனாலும்
பொய்த்தேபோகாதவனுடன்முழுதும்புண்ணியப்புழுவாகும்
பித்தேயாதவனித்தலவாசம்பெறுவார்பெறுபேறு
சித்தாய்ச்சிவஞானத்தைத்துய்ப்பார்சிவலோகந்தன்னில்.

(இ - ள்) இப்படிப்பட்ட பாவங்களைச்செய்தவன் அவைகளை நீக்கிக்கொள்ளும் பொருட்டு வேறு எந்தத்தலத்துக்குப்போனாலும் அவனது சரீரம்முழுதும் புண்ணாய்ப்புழுநெளிந்து சித்தசுவாதீன மற்றவனாய் உழல்வான் என்பதுபொய்யாகாது. இது நிற்க இந்தப்பதியில் தலவாசம் பண்ணுவோர் பெறத்தக்க பிரயோசனம் யாதெனின் சித்துருவத்தைப்பெற்றுச் சிவலோகத்தையுற்று சிவஞானவமுதை அருந்துவார்கள். எ-று. (௪௭)

கற்றவரொன்றுங்கல்லாமூடர்களானாலும்
நற்றவரேனுமிக்குறுபாவநாசப்பதிவாச
முற்றவருடல்விடின்முத்திபலிப்பெனவுண்மைச்சதுமறைநூற்
சொற்றவழக்கிதுசத்தியமென்றுதுணிந்தாலும்பெறுவார்.

(இ - ள்) சகல நூல்களையும் கற்றுத்தெளிந்தவர்களானாலும், சற்றும் கல்வி பயிலாத முழு மூடர்களானாலும், நல்ல தவசிகளானாலும், சிறப்பு மிகுந்த திருப்பாவநாசப்பதியில் தலவாசம் செய்தவர்கள் சரீர நீக்கத்தில் மோக்ஷம் பெறுவது திண்ணமென்று நான்கு வேதங்களும் எடுத்துச்சொல்லிய தன்மை சத்தியமென்று துணிந்தாலும் முத்தி அடைவார்கள். எ-று. (௪௮)

மற்றொருபதியிற்செய்திடுபாதகம்வல்வினையேதவிர
முற்றறவிப்பதிகண்ணுவரென்றுமொழிந்திடுநீதியினை
யுற்றிடுமிப்பதியிற்புரிதீவினையோர்பதிபோக்குமெனாற்
கற்றிலரெண்ணுவர்கற்றவரெண்ணங்கருதார்கருதாரே.

(இ - ள்) வேறொரு தலத்தில் பண்ணின பாதகமும், தீயகருமமும் முற்றிலும் நீங்கும்படி தருமம் நிறைந்த இப்பதிக்கு வந்து தலவாசம் செய்வார்கள் என்று வேதாகமங்கள் சொல்லும் முறைமையினால் இந்தப்பதியில் செய்யும் பாவங்கள் வேறுபதி நீக்குமென்று கல்வியறிவில்லாத புல்லியர் நினைப்பார்களே அல்லாமல் கற்றுணர்ந்த மேலோர்கள் ஒருபோதும் நினைக்கமாட்டார்கள். எ-று.

பாடுநாடுநாசையில்வந்துபடர்ந்தவர்பட்டிசன்
முடொருநெஞ்சினிலொளிருஞ்சந்நிதியிற்போகி
றுடொறுங்கள்செய்திடுதீவினைகாடாகோடிமொற்
பீடுறுமன்பர்புரிந்துவணங்கிப்பெறுபேறென்சொல்வேன்.

(இ - ள்) பாடுவோர்களிடத்தாவது, ஆடுவோர்களிடத்தாவது இச்சையுற்று வந்து பார்ப்பவர்கள் திருப்பட்டீச்சரன் பாதாரவிந்தங்களைத்தொழுது வணங்கத்தமது மனதில் நினைவு சிஞ்சித்தும் உண்டாகப்பெறாதவர்களேயானாலும் சிவபெருமான் சந்நிதியிற் தற்செயலாய்ச்செல்வார்களாயின் அவர்கள் நாடோறும் செய்யும் தீவினைகள் அவர்களைப்பற்றாமல் முற்று நீங்குமானால், பெருமைவாய்ந்த சிவநேசர்கள் அன்போடு தொழுது போற்றி அடையும் இலாபத்தை என்னென்று எடுத்துச்சொல்வேன்? எ-று. (௫0)

## வேறு.

இந்தப்பதியிற்செய்பாவமிந்தத்தலத்தேதீர்வதல்லா
லெந்தப்பதியிற்சென்றாலுமெக்காலத்துந்தீராது
பந்தப்படுவர்நரகுழல்வர்பன்னாட்பிறவிபலவெடுத்துக்
தொந்தப்படுவரிப்பாவந்தொலையுமாறுகூறிடுவாம்.

(இ - ள்) இந்தத்திருப்பாவநாசப்பதியில் செய்தபாவம் இதிற்றானே நீங்குமல்லாமல் வேறு எந்தத்தலத்திற்குப்போனாலும் எந்தக்காலத்தும் நீங்காமல் நரகத்தையடைவார்கள்; பந்தப்பட்டு வெகு காலம் பல பிறவிகளை யெடுத்துச் சம்சாரமென்னுந் துக்கசாகரத்திற்படிந்து வருந்துவார்கள். இக்கப்பாவமானது தீர்வதற்கு ஏற்ற மார்க்கத்தைச்சொல்லுவோம். எ-று. (௫க)

சிறியேன்செய்தேனிப்பாவமென்றேசிந்தையிரக்கமெய்தி
நிறையவீசனடியார்பாலனேசஞ்செய்துபிழைசொல்லி
யறியப்பஞ்சாக்கரநதிநீராடியம்மாலையத்திற்
செறியுமீசனைத்தாற்றொசிக்கிற்றீருந்தீருமிதுதிண்ணம்.

(இ - ள்) அடியேன் இந்தப்பாவத்தைச்செய்துவிட்டேனே என்று சிந்தை நைந்து, சிவனடியார்களுக்கு மிகுந்த அன்போடு தொண்டுசெய்து, தமது குற்றங்களை அவர்களிடத்தில் தெரியச்சொல்லித்திருப்பஞ்சாக்கர நதியில் ஸ்நானம் செய்து, ஆலயத்தில் பொலிந்து விளங்கும் சிவபெருமானை மனதில் கொண்டு தெரிசனம் செய்தால் பாவநாசமாகும்; இது சத்தியம். எ-று. (௫௨)

(பாவநாசசருக்கம் முற்றிற்று).

---

# நந்திச்சருக்கம்

செழுமுகில்சேர்மலையரையன்வரத்துதித்தபவளம்போற்சிவந்தவாயா
டொழுதரனைக்கேட்கவேதந்தநதியின்பெருமைசொல்லலுற்றான்;
பழவினையைக்கட்டறுத்துஞானமங்கைகைப்பிடிக்கப்பரமரால
நிழலிலேயன்றருளப்பெற்றசனற்குமாரனுக்குநிமலநந்தி.

(இ - ள்) பழமையான வினையை நீக்கி ஞானமென்னும் ஸ்திரியைப்பாணிக்கிரகணம் புரிந்து கொள்ளும்படி கல்லால விருக்ஷத்தின் நிழலிலிருந்து சிவபெருமான் முன்பு அருள் செய்யப்பெற்ற சனற்குமார முனிவருக்கு நிர்மலனாகிய நந்திதேவர் செழுமையான மேகங்கள் படர்ந்த பர்வதராஜன் தவத்தினால் அவதரித்த பவளம் போன்ற சிவந்த வாயையுடைய பார்வதி சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து இறைஞ்சிக்கேட்கவும் அவராலீந்தருளப்பட்ட நதியின் சிறப்பை எடுத்துச்சொல்லத்தொடங்கினார். எ-று. (க)

விமலமாயிமயவரையிற்பிறந்துகைலைமேல்விளையாடுஞ்சீ
ரமையுமொருபச்சையிளம்பிடியென்னுமுலகீன்றவன்னையாவா
டிமிரமறநிலவெறிக்கும்பிறைமுடிபோன்முகநோக்கிச்சிலர்தம்மை
நமனுலகநிரயத்தேவைத்ததென்னவருளாகரத்தயனேவென்றாள்.

(இ - ள்) நிர்மல சொரூபியாய் இமயகிரியில் அவதரித்துத்திருக்கைலாசகிரியில் விளையாடல் புரியும் மேன்மையுடைய ஒப்பற்ற பச்சை நிறமும் இளமையும் தங்கிய பெண் யானை யென்று சொல்லும் சகல அண்டங்களையும் அளித்த உலகமாதாவாகிய உமாதேவி, அஞ்ஞான இருள் நீங்கும்படி நிலவைப்பரப்பும் இளஞ் சந்திரனைச் சடாமகுடத்திற்றரித்த சிவபெருமான் திருமுகத்தைப்பார்த்துக்கருணை மிகுந்த திருக்கண்ணனே! யமலோகத்தில் சில பேர்களை நரகத்தில் வைத்த வகை என்னவென்று கேட்டாள். எ-று. (உ)

அம்மொழிகேட்டிறையவனுங்கூறுகின்றான்நிரையத்தேயாழ்ந்துதுன்ப
வெம்மையிலேயனுபவித்தாலல்லாமற்பாவவினைவிட்டுப்போகா
தம்முயிர்க்குப்பகையானார்தீவினையேசெய்வரிதுசத்தியந்தான்
இம்மையிலேசமந்தீர்த்துவருந்துமொருசிறுமருங்குற்கொம்பனையே.

(இ - ள்) அந்த வசனத்தைக்கேட்ட சிவபெருமான் விடை சொல்லத்தொடங்கினார்:—அழகிய தனபாரத்தாங்கி மெலிந்து வருந்தும் ஒப்பற்ற சிறிய இடையையுடைய பூங்கொம்புக்கு நிகரான பெண்மணியே! ஒருவன் தான் செய்த பாவத்துக்காக நரகத்தில் வீழ்ந்து கொடுமையான துன்பத்தை அனுப

வித்தாலொழிய அவன்செய்த பாவம் நீங்கமாட்டாது. தமதாத்துமாவுக்கு விரோதியானவர்கள் பாவத்தொழிலையே புரிவார்கள். இது உண்மைதான். எ-று. (௩)

மானமுன்னோர்தீவினையினஞ்சுவார்நல்வினையேமதித்துச்செய்வர்
தானவுலகம்பெறுவர்சத்தியலோகம்பெறுவர்சாலோகத்து
மேனனுகிச்சாமீபசாருபந்தமடைவர்மேலாம்பாத
ஞானநெறிசாயுச்சியத்தடைவராலுயிர்ப்பருவநானாபேதம்.

(இ - ள்) பெருமைக்குணமுடையவர்கள் பாவஞ்செய்வதற்குப் பயப்படுவார்கள்; புண்ணியத்தையே பாராட்டிச்செய்வார்கள்; தாங்கள் செய்த புண்ணியங்களுக்கேற்றபடி தேவலோகத்தையடைவார்கள்; அல்லது சத்தியலோகத்தைப்பெறுவார்கள்; அல்லது அதற்கு மேலாயுள்ள சிவலோகத்தைப்பொருந்திச்சிவசாமீபம் சாரூபம் என்னும் பதவிகளையடைவார்கள், இவற்றிற்கெல்லாம் மேலான நான்காம் பாதமாகிய சிவஞானமார்க்கத்தால் சிவசாயுச்சியபதத்தைப்பெறுவார்கள். ஆதலால் சீவகோடிகளின் மலபரிபாகம் பல வேறு விதங்களாகும். எ-று. (௪)

வெவ்வியபாதகம்புரிந்தார்நரகவுலகம்புகுதல்விதியேகண்டா
யெவ்வினைகள்செய்தாரோவவ்வினைகட்கேற்றவுலகெய்துவாரா
னவ்விழியாய்வினைகளனுபவிக்கக்கரியாகிநாமிருப்போ
மிவ்வனத்திற்றாமரையைப்பருவமாக்குங்கிரணவிரவிபோல.

(இ - ள்) கொடுமையான கொலையாதிபஞ்சமாபாதகங்களைச்செய்தவர்கள் நரகலோகத்தைச்சேர்தல் கருமகாண்டத்தில் நாம் ஏற்படுத்திய விதியாகும். அன்றியும் எவ்வகைப்பட்ட கருமங்களைப் புரிந்தார்களோ அவ்வகைக்கருமங்களுக்குத்தக்க உலகத்தையடைவார்கள். மான் போன்ற கண்களையுடைய உமையே! கிரணங்களையுடைய சூரியன் இந்த வனத்திலுள்ள தாமரை மலரைப்பக்குவமாக்கும் தன்மைபோல நாம் ஆன்மகோடிகளை அவர்கள் செய்த கர்மத்திற்கீடாகப்பக்குவப்படுத்திச் சுகதுக்கங்களை யநுபவித்துவரச் சாட்சியாயிருப்போம். எ-று. (௫)

அரனிவ்வாறுரைத்திடலுமின்பமின்றித்துன்பமேயிரானுபவிக்கத்
திருவுளத்துக்கியையுமோவருட்கென்றுமென்றுமைமொழிசெப்பவ்
பரவுமிருமுதுகுரவர்மைந்தனையேயோதுவிக்கும்பள்ளியேற்றிக்
குரவன்பாலொப்புவித்தேதண்டித்தலருட்குணமேகொடுமையன்(



(இ - ள்) சிவபெருமான் இவ்வாறு திருவாய் மலர்ந்தருளவும், உமாதேவி சுகம் சற்றுமில்லாமல் துக்கத்தையே சீவகோடிகள் அனுபவிப்பது தேவரீர் திருவுளத்துக்குப்பொருத்தமாமோ? திருவருட்டிறத்துக்கு எவ்விதம் பொருந்தும்? என்று சொல்லவும் சிவபெருமான் மறுமொழி சொல்லத்தொடங்கினார்:—அறிவுக்குத்தக்க தாய்தந்தையர் தங்கள் குமாரனை, வித்தை கற்பிக்கும் பள்ளிக்கூடத்தில் வைத்து, உபாத்தியாயரிடம் ஒப்புவித்து, (தீதாக செயல் செய்யும் போது) தண்டிக்கச்செய்தல் கருணைத்திறமேயன்றிக் கொடுங்குணமாகாது. எ-று. (௬)

சன்றமைந்தனங்கத்தில்வீக்கமாய்ச்சீக்கொண்டேயிருக்கிற்பெற்றோ
ருன்றியருள்வைத்தியனாற்சத்திரஞ்செய்தறுப்பர்சுட்டுருபாயஞ்செய்வர்
மீன்றிகழ்கண்ணாய்நமனார்நரகவேதனையினால்விடியற்கங்குற்
போன்றபாதகப்பொல்லாவினையெல்லாநீங்குமெனப்புத்திகொள்ளே.

(இ - ள்) தாம் பெற்று வளர்த்த குமாரனுடைய சரீரத்தில் சிலந்தி வீக்கமுற்றுத்துன்பத்தைக்கொடுக்கும் சீப்பிடித்து இருந்தால், தாய் தந்தையர் இரக்கமாய் யோசித்து, கிருபையுள்ள இரணவைத்தியனைக்கொண்டு, அப்புண்ணைக் கத்தியிட்டு அறுத்துக்காரம் வைத்தும் ஆற்றுவார்கள். சேல்மீன்போன்ற கண்ணையுடையவளே! யமதரும ராஜனுடைய பட்டணத்தில் அடையும் நரக வாதனையினால் விடியற்காலத்து இருட்டானது சூரியனால் ஒழிந்து போவது போல், பஞ்சமாபாதக முதலிய எல்லாத்தீயகருமங்களும் அவர்களை விட்டு நீங்குமென்று அறியக்கடவாய். எ-று.

வேறு.

என்னவீசன்கூறுதலுமிரோழுலகுமீன்றவரு
ளன்னைநோய்கள்கொண்டாருக்காங்குத்துன்பஞ்செய்யாம
லுன்னுமணிமந்திரமருந்தாலொழிக்குமாறுமுளதென்னக்
கன்னன்மதுரிப்பினைப்பாகுங்கனிவாய்மலர்ந்துகூறிடலும்.

(இ - ள்) இவ்வண்ணமாகச் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளலும் பதினான்கு லோகங்களையும் படைத்த கிருபாவல்லியாகிய உமாதேவி, பவரோகம் கொண்டவர்களுக்கு மேற்கூறிய வாறு நரக வாதனையைக்கொடாமல், கருதுகின்ற மணி மந்திர ஔஷதங்களால் தீர்த்துக்கொள்ளும் மார்க்கமும் உளதோ? என்று கரும்பின் சுவையைப் பின்னிடச்செய்யும் இனிமையையும் கோவைக்கனிக்கொப்புமுடைய திருவாய் திறந்து கேட்டவுடன், எ-று. (௭)

மாதேபவநோய்தீர்க்கமணியாய்ப்புனைதலக்குமணி
யோதியமெந்திரமாதற்பஞ்சாக்கரத்தையுச்சரித்தற்
காதன்மருந்தென்பதுநாறுங்கதிர்வெண்ணீறுசாற்றதனாற்
போதமுடையோர்பாதகங்கள்போக்கிக்கொள்வாரிவற்றாலே.

(இ - ள்) பெண்மணியே! பவரோகம் நீங்குதற்கு உருத்திராக்ஷமணிகளை அணிதலே மணியாகும்; திருப்பஞ்சாக்ஷரத்தையுச்சரித்தலே சொல்லும் மந்திரமாகும்; பிரகாசமுள்ள வெண்மையான விபூதியைத்தரித்துக்கொள்ளுதலே ஆசைகொள்ளும் ஔஷதமாகும். அறிவுடையோர் இவ்வாறு கூறிய மணிமந்திர ஔஷதங்களால் பாவங்களைப்போக்கிக்கொள்வார்கள். எ-று. (௯)

ஒளிதிற்றீர்க்காரொளிற்பாவமியமன்றீர்ப்பனிரயத்தி
லொளிகொணீறுமேற்பூசியோதிப்பஞ்சாக்கரத்தவிற்
றெளியுமக்குமணிபுனைந்தோர்சிந்தைவிளங்குமடியா
ரளிசேர்குழலாய்நமதுலகமடைவாரென்னூற்கூறும்.

(இ - ள்) வண்டுகள் மொய்க்கும் கூந்தலையுடையாளே! இவ்வண்ணஞ் சொன்ன சுலபமான மார்க்கத்தினால் பாவத்தைத் தீர்த்துக்கொள்ளாராயின் எமதர்மராஜன் அவர்களை நரகத்தில் வீழ்த்தி, அதனால் அவர்கள் பாவ விமோசனமாகும்படி செய்வன். பிரகாசம் பொருந்திய திருவெண்ணீற்றையணிந்து, நாவினால் திருப்பஞ்சாக்ஷரத்தைத் தியானித்து, ஒளிபொருந்திய உருத்திராக்ஷ மாலையைத்தரித்து, ஒருமை மனதோடு விளங்கும் நமது தொண்டர்கள் சிவலோகத்தையடைவார்கள் என்று சிவாகமங்கள் மொழியும். எ-று. (௧௦)

கடையானோர்க்குநூல்வேண்டாங்கற்றுங்கேட்டுமறிவிலரா
மடைவாற்றலையானோர்கட்குமியற்கையறிவானூல்வேண்டா
மிடையானோர்க்கேயான்சொன்னவெல்லாநூலுமிசைத்தபயன்
படையார்விழியாய்விளக்கிற்குத்தூண்டுகோற்போற்பலநூலும்.

(இ - ள்) வேல்போலும் நீண்ட கண்களையுடையாளே! வேதாகமங்களைக் கற்றும் சான்றோர் பால் கேட்டும் அறிவை வளர்க்காத அஞ்ஞானிகளாகிய அதமர்களுக்கும் சாஸ்திரங்கள் வேண்டுவதின்று; சுபாவமாய் மெய்யறிவுடையாராதலின்மெய்ஞ்ஞானிகளான உத்தமர்களுக்கும்சாஸ்திரங்கள் வேண்டுவதின்று; ஆதலின் யாம் கூறிய எல்லாச்சாஸ்திரங்களும் அவைகளின் பிரயோசனமும் விளக்கிற்குத்தூண்டுகோல்போல, மத்திமர்களுக்கே வேண்டும். எ-று. (௧௧)



கொல்லார்நல்லோர்தமையொன்றுகொல்லவரினுஞ்சிவன்செயலே
யெல்லாமென்பர்மத்திமர்கடனைக்கொல்பசுவைக்கொல்லென்பார்
பொல்லார்தமக்கோர்தீங்குசெய்யாப்புட்கள்விலங்குதேடிப்போய்க்
கொல்வார்நரகக்குழியுள்ளேகுடியாய்க்கிடந்துதுயருழப்பார்.

(இ - ள்) உத்தமகுணமுடையார் யாதோருயிரையும் கொலை புரியார்; வேறு சென்று தம்மைக்கொல்ல வந்தாலும், யாவும் சிவன் செயலே என்று சொல்வார்கள். மத்திமகுணமுடையோர் தம்மைக்கொல்ல வரும் பசுவையுங்கொல்லலாம் என்று கூறுவார்கள்; அதமகுணமுடையாராகிய தீயவர்கள் தமக்கு யாதொரு கெடுதியும் செய்யாத பறவைகளையும் மிருகங்களையும் தேடிச் சென்று கொல்வார்கள்; அதன் பயனாக மீளாவண்ணம் நரகத்தில் ஆழ்ந்து என்றும் துக்கத்தை யநுபவிப்பார்கள். எ-று. (௧௨)

தொழிலின்றிமைந்தர்செய்யவுயிர்தொலைக்குங்கொலையுங்குலவியல்பின்
வழுவும்பொய்யுங்களவுஞ்சினமும்பாவவகைகளைந்தாம்
மெழுகலஞ்சிசீரிசிவிளங்கவில்லமலகிடலாற்
பழுதின்மாதர்தினந்தோறுமீட்டும்பாவமைவகையே.

(இ - ள்) புருஷர்கள் செய்யுந் தொழிலினால் நுட்பமாகிய வுயிர் உடலைவிட்டு நீங்கப்பண்ணுங்கொலையும், குலாசாரத்தினின்று வழுவுதல் முதலிய குற்றமும், பொய் பேசுதலும், களவு செய்தலும், கோபித்தலும், ஆகிய இவைகளினால் தினந்தோறுந்தேடும் பாவம் ஐந்து வகையாகும். குற்றமற்ற அழகையுடைய ஸ்திரிகள், வீடுமெழுகுவதினாலும், தீமூட்டுவதினாலும், சலந்திரட்டுவதினாலும், அரிசிகுத்துவதினாலும், வீடு சுசியாகும்பொருட்டுப்பெருக்குவதினாலும்; நாடோறும் தேடுகின்ற பாவமும் ஐந்து வகையாகும். எ-று. (௧௩)

குருவினியற்றும்பூசையினுங்குறித்துச்செயுநம்பூசையினும்
விரவுமடியார்பூசையினும்விட்டுநீங்குந்தினப்பாவம்
பரிவினிவருக்கன்றியேபாகச்செயலிலட்டவன்ன
மொருவனுண்ணிலவன்வாயினுமிழ்தபுழுவென்றேமிகுநூல்.

(இ - ள்) குருமூர்த்தியைச் சிவமெனக்கருதிச் செய்யும் பூசையாலும், நம்மை உட்குறி வழிபாட்டிலமைத்துச்செய்யும் பூசையாலும், நமதடியார்களைக்குறித்துச்செய்யும் பூசையாலும், நாடோறுஞ்செய்யும் பாவம் ஒழியும். அன்போடு குரு-லிங்க-சங்கமம் ஆகிய இவர்களுக்கல்லாமல் மற்றவர்களுக்குப்பாகத்தோடு சமைத்த சாதத்தை ஒருவன் சாப்பிட்டால் அது அவன் வாயிலுண்டான புழுவென்று சாஸ்திரங்கள் சொல்லும். எ-று. (௧௪)

கொண்டான்பசியாயேயிருக்கக்குழிபோலாழ்ந்தபாழ்வயிற்றுக்
குண்டாள்கணவன்பொல்லானென்றஞ்சாதுரைத்தேவாதுசெய்வ
ளண்டாவெகுளியாய்ப்பொறுமைதழுவாளன்பன்கிழவனென
விண்டாளிவர்கணரகிடையேவிழுவாரழுவார்சுழல்வார்கள்.

(இ - ள்) கொண்டகணவன் பசியோடிருக்கக் குழிபோலாழ்ந்த தன்வயிற்றுப்பசி தீரவுண்பவளும், நாயகன் பொல்லாதவன் என்று பயப்படாமல்பொய்மொழி கூறிச்சண்டை செய்பவளும், மிகுந்த கோபத்தையே மேற்கொண்டு பொறுமையை விட்டவளும், புருஷனைக்கிழவனென்றுபிழிந்து இகழ்ந்து நீங்கி விட்டவளும், ஆகிய இவர்கள் நரகக்குழியில் விழுந்து கண்ணீரும் கம்பலையுமாய் வருந்துவார்கள். எ-று. (க௬)

பதிசெய்கின்றபுண்ணியத்திற்பாதிமனையாட்பங்குசேர்வாட்
சதிசெய்கின்றபாவத்திற்பாதிதலைவன்கைக்கொள்கின்
விதியின்மனைக்குசெய்மணவாளன்விளம்புமாற்றங்கடவாடன்
மதிநின்னுதலாட்சுதந்தரமொன்றின்மையதனல்வழிபாடே.

(இ - ள்) மணவாளன் செய்யும் புண்ணியத்தில் பாதியை அவனது மனையாட்டியவ்வாறு அடைவாள்; மனைவி புரிந்த பாவத்திற் பாதியை நாயகன் அடைவான். சர்மகாண்ட நியமப்படி மனைக்கு செய்த கணவனது சொற்களைக்கடவாமல் ஒழுகுபவளாகிய பிறைச்சந்திரன் போன்ற நெற்றியையுடைய கற்புடையாள் தனக்கு கர்த்தத்துவம் சிறிதும் இல்லாமையால் கணவனைத்தெய்வமென்று வணங்கல்வேண்டும். எ-று. (கஎ)

செய்தநன்றிமறப்பாருஞ்செப்புநூலிற்கூறுபொருட்
பொய்யீதென்னவுரைப்பாருமில்லாநிந்தைபுகல்வாரும்
வெய்யமயலாப்பிறர்மனையைவிரும்பிச்சேரும்புல்லர்களும்
வையநாரைக்குருவினையேமதிப்பாருந்நிரகடைவார்.

(இ - ள்) தமக்கொருவர் செய்த உபகாரத்தை மறந்து விடுவோர்களும் சான்றோர் மொழிந்த சாஸ்திரங்களிற் சொல்லும் விஷயங்கள் பொய்யென்று கூறுவோர்களும், நிந்தை சொல்வோர்களும், கொடுமையான காமவெறிகொண்டு அந்நியருடைய மனைவியரிடம் இச்சை வைத்து அவர்கள் கற்பைப் பங்கப்படுத்தும் பாதகர்களும், தம்மையாட் கொண்ட சற்குருநாதனைப்பூலோகத்து நரசன்மமென்று கருதுவோர்களும், கடுமையான நரகத்தையடைவார்கள். எ-று. (கஅ)



என்னுமிவற்றுண்மறமோன்றிமெருக்கிதகொழுந்தாய்ப்படர்ந்தேறும்
மன்னும்பஞ்சாக்கரமலினெருக்காறுமாக்கமலைபோலத்
தன்னும்பாவம்பஞ்சாகச்சுடுமோர்நெருப்புப்பொறியாகுங்
கன்னியுண்மையிதுவென்னவுமையாட்சொல்லாட்கைகூப்பி.

(இ - ள்) இப்படிப்பட்ட செய்கைகளினால் பாவம் மிகுந்து வளர்ந்து கொழுந்து விட்டெப்பரவியோங்கும். நிலைபெற்ற திருப்பஞ்சாக்ஷரத்தை நவிலுதல் ஒருதரம் உச்சரித்தவளவில், பாவங்கள் மலைபோல மிகுந்திருந்தாலும் அது பஞ்சாய் அதைச்சுடும் அக்கினிப்பொறியாகும். நீங்காத இளமைப் பருவமுடையயினே! இது சத்தியம் என்று சிவபெருமான் திருவாய் மலர்ந்தருள, உமாதேவி கைகூப்பி வணங்கிச்சொல்லத்தொடங்கினர். எ-று. (க௯)

அறிவில்லாததன்மையினலணியாரக்குமணிநீறு
செறியோரோதாக்கெழுத்தினையுஞ்செபியார்சிலர்நோடைப்பாரூர்
பெறவேயரியவடிவைப்பெற்றுமிழந்தார்இருவளத்திற்
பொறையாய்ப்பஞ்சாக்கரஞ்செபித்தபலனைப்புரிவீர்க்கென்ன.

(இ - ள்) சில மக்கள் நல்லறிவைப்பெறாத காரணத்தால் உருத்திராக்ஷமணிகளையும் திருவெண்ணீற்றையும் தரித்துக்கொள்ளார்கள்; திருப்பஞ்சாக்ஷரத்தையும் தியானிக்கமாட்டார்கள்; பெறுதற்கரிய மானிடப்பிறவியெடுத்தும், அதன் பலனையடையாராகையால், நயமின்றி இறந்தொழிப்பவார்கள். நல்ல மனதில் சாந்த சித்தத்தோடு திருப்பஞ்சாக்ஷரத்தைச்செபித்த பலனையடையும்படி அவ்வறிவில்லாதவர்களுக்கு அநுக்ரகம் செய்தருள்க என்று சொல்லுதலும். எ-று. (உ0)

பஞ்சாக்கரத்தைநதியாக்கிப்பாவநாசமமைத்தே
னெஞ்சாளினைந்துமுழுகிடினுநினைப்பில்லாதுமுழ்கிடினு
பஞ்சாம்பாவநெருப்பாறுந்தாபத்துக்கேயமுதமுமா
மஞ்சார்குழலாயுயிர்நிலையகருவாவென்றான்மதிச்சடையோன்.

(இ - ள்) மேகம் போற்கறுத்திருக்கும் கூந்தலையுடையாளே! யாம் பாவநாசப்பதியையுண்டாக்கி, திருப்பஞ்சாக்ஷரத்தை அதில் ஓடும் நதியாகச்செய்திருக்கின்றோம். சகலமான பேர்களும் மனதினால் திருப்பஞ்சாக்ஷரத்தைத் தியானித்து ஸ்நானம் செய்தாலும் தியானமின்றி ஸ்நானம் செய்தாலும் அது அவர்கள் செய்த பஞ்சமாபாதகங்களுக்கும் அக்கினியும், ஆதியாத்மிகம் ஆதிதெய்வீகம் ஆதிபௌதிகமென்னும் மூன்றுதாபத்துக்குந்தண்புனலுமாகும். ஆகையால் சிவகோடிகள் நரகத்தையடையமாட்டார்கள் என்று சந்திரனைச்சடாமகுடத்தில் தரித்த சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினர். எ-று. (உக)

மணியுமுத்துங்கொழித்துறலான்மணிமுத்தாறென்றொருநாமம்
பணியும்பிறையுந்தரித்தபிரான்பவளத்திருவாய்மலர்ந்தருள
வணியுமணிப்பூண்முலைவல்லிவரத்தில்வந்தநதியாமாற்
பிணியும்வினையுமகன்றோடும்பெட்பாய்த்துளியொன்றுட்கொளினும்.

(இ - ள்) அந்தப்பஞ்சாக்கரநதியானது நவமணிகளையும் அவற்றுள் மிகுதியாக முத்துகளையும் திரட்டிக்கொண்டு வருவதனால் திருமணிமுத்தாநதி என்று ஒருபெயரும் பெறும்; அணிதற்குரிய இரத்தினாபரணங்களை பணிந்த தனபாரங்களையுடைய சிவகாமவல்லித்தாயார் வரத்தால் உண்டான நதியாகையால் அதில் ஒரு துளி நீரை அன்போடு உட்கொண்டாலும் சகல வியாதிகளும், பாவங்களும் விட்டோடிப்போய் விடும் என்று சர்ப்பங்களையும் இளம் பிறையையும் சடைமுடியில் தரித்திருக்கும் சிவபெருமான் செம்பவளம் போலும் திருவாய் மலர்ந்தருளி, எ-று. (௨௧)

அறல்கள்கொழிக்குமணல்கொழிக்குமாநிறநதியாயிந்நதியு
முறவிபெருகித்தென்கடலிலோடிப்பரந்துகலந்திடுமுன்
குறியமலையாசலமுனிவன்கமண்டலத்திற்கொண்டுவந்த
வெறியுந்தரங்கக்காவேரியிடையேகொண்டுபோயதுவே.

(இ - ள்) கருமணலையும் வெண்மணலையும் அலையினால் வாரி எறியும் பூர்வநதியாகிய இந்த நதியும் ஊற்றுப்பெருக்கெடுத்துப்பரவியோடி தென்கடலில் சங்கமாவதற்குமுன், குறுகியவடிவத்தையுடைய அகஸ்தியமுனிவர் கொண்டு வந்த கமண்டலத்தில் மோதுகின்ற அலைவாய்ந்த காவேரி நதியானது (இதன் பெருமையைக்கண்டு) இடையில் இதைப்பற்றிக்கொண்டு போய் விட்டது. எ-று. (௨௨)

அறுகான்மிதிக்கமுகைமலர்ந்தேநறவுவிரியுமலர்மேவிச்
சிறுகான்முகந்துமணம்வீசச்சிறந்தசிகரச்சித்திரத்தேர்
மறுகால்விளங்குஞ்சேலநகர்மணிமுத்தாற்றின்மாதவங்கட்
பெறுவார்பெறுவார்நீராடிப்பெம்மான்பூசைசெய்யவுமே.

(இ - ள்) மகத்தான தவம் செய்யப்பெற்ற பெரியோர்கள், ஆறுகால்களையுடைய வண்டுகள் மிதிப்பதினால் மலர்ந்து தேனொழுகும் புஷ்பங்களிற் பொருந்தி இளந்தென்றற்காற்று மணமுற்று வாசனை வீச அழகிய சிகரத்தையுடைய சித்திரத்தேரோடும் வீதிகளால் விளங்கும் சேலமா நகரின் திருமணிமுத்தா நதியில், நீராடிச்சிவ பூசை செய்யவும் பெறுவார்கள்; (மற்றயர்களுக்கு வாய்த்தல் அரிதாம்.) எ-று. (௨௩)



குருவைவணங்கித்தீக்கைகொள்ளார்குடியாய்நரகிற்கிடந்திழிவ
ருரியமுவேழ்தலைமுறைக்குமொருசேய்பிறந்து அறிவுளனாய்த்
திருநன்மணிமுத்தாற்றினதுதீரத்தெய்திக்கடன்கழிக்க
நரகம்விட்டேயெழுந்திருப்பார்கண்ணுவார்களுயர்துறக்கம்.

(இ - ள்) சற்குருவைப்பணிந்து உபதேசம் பெற்றுக்கொள்ளாதவர்கள் நரகத்தில் எப்போதும் வாசமாயிருந்து துக்கிப்பார்கள். அவர்களுக்குச்சொந்தமான இருபத்தொரு தலைமுறைக்குள் ஒரு புத்திரன் பிறந்து நல்லறிவைப் பெற்றவனாய் நல்ல திருமணிமுத்தா நதிக்கரையில் வந்து அப்பிதுர்களுக்குச் செய்யும் கருமங்களையியற்றினால் அவர்கள் நரகத்தினின்று நீங்கிமேலான சுவர்க்கலோகத்தையடைவார்கள். எ-று. (௨௪)

தேவருரகர்கின்னரர்கள்சித்தரியக்கர்கந்தருவர்
பூவைமாதருந்தவர்களைபுலரியெழுந்துநீராடிப்
பாவைபங்கன்கழற்போற்றிப்பணியுமாறவாரங்கண்
மேவுதீரத்திருபுறமும்வேலைமுழக்கம்போன்முழங்கும்.

(இ - ள்) தேவர்களும், நாகர்களும், கின்னரர்களும், சித்தர்களும், இயக்கர்களும், கந்தருவர்களும், குயிலைப்போன்ற குரலையுடைய ஸ்திரீகளும், அருமையான தபசிகளும் விடியற்காலத்தில் எழுந்து இந்நதியில் ஸ்நானம்செய்து பார்வதி பங்கனாகிய சிவபெருமான் திருவடிகளைத்தொழுது வணங்கும் முழக்கமானது கரையின் இருபக்கத்திலும் கடல் முழக்கம்போல் முழங்கும். எ-று.

முனிவர்மடங்கள்பசித்துவந்தோர்முழுவன்னசத்திரங்கள்
பனிமேன்மலர்கந்தாவனங்கள்பரமன்கதைப்புராணமடங்
தனிமையோகர்குகைகளினைகள்தவஞ்செய்முதத்துளிநிறக்
கனிகளுதிருமின்சோலைகளாயினிருபாரிசமெங்கும்.

(இ - ள்) முனிவர்கள் தங்கிவாழும் மடங்களும், பசியோடு வந்தவர்கள் வருந்தாதபடி அமுதுபடைக்கும் தருமசத்திரங்களும், பனியை மேற்கொண்டு மலரும் புஷ்பங்களையுடைய பூங்காவனங்களும், சிவபெருமான் அருளாடலை விளக்கும் புராணகாவியங்கள் ஓதப்படும் மண்டபங்களும், தனிமையாய் வாசஞ்செய்யும் சிவயோகிகள் தவஞ்செய்யும் குகைகளும், பசுக்கூட்டங்களும், தேன் சிந்தும்படி கனிகள் உதிர்ந்து விழும் அழகிய சோலைகளும், இந்த நதிக்கரையின் இருபுறத்திலும் விளங்கும். எ-று. (௨௫)

கிளியின்பூசைகொண்டபிரான்கிளர்கோயிற்குக்கீழ்பாலாய்க்
களிமாமயில்சேரிளஞ்சோலைகளாநின்பஞ்சாக்கரநதிதா
னொளிசேர்சேரமான்மலையினுதித்தேதெற்குமுகமாகு
களிநீர்நதியிதென்னார்கள்ஞானநதியென்பார்நல்லோர்.

(இ - ள்) கிளியினுடைய பூசையை ஏற்றுக்கொண்ட சிவபெருமான்எழுந்தருளியிரா நின்ற ஒளி பொருந்திய ஆலயத்திற்குக்கிழக்காக மிகுந்த களிப்பையுடைய மயில்களாடும் சோலைகளைக்கரையிலுடைய நீண்ட மணி முத்தாநதியானது கீர்த்தி பொருந்திய சோராயன் மலையிலிருந்து உற்பத்தியாகித்தெற்கு திசையை நோக்கிச்செல்லும். இதை நல்லோர்கள் குளிர்ந்த புனலுள்ள நதியென்று சொல்லாமல் ஞானநதி யென்றே கூறுவார்கள். எ-று. (உஎ)

கின்னவனத்தர்கரபுரத்தர்கீர்த்திவீரட்டர்வீமேசர்
வள்ளலாரந்திருவேலிநாதரென்னவழங்குபெயர்
விள்ளுநான்குமறைகளுமேவிளம்பிலிங்கத்திசெய்மு
முள்ளமணிமுத்தாற்றுக்குமேல்பால்வடபாலிருக்குத்தாமே.

(இ - ள்) சுகவனேசர் என்றும், கரபுரேசர் என்றும், கீர்த்திபெற்ற வீரட்டேசர் என்றும், வீமேசர் என்றும், ஞானவள்ளலாராகிய திருவேலிநாதர் என்றும் வழங்குகின்ற திருநாமங்களை இருக்குமுதலிய நான்குவேதங்களும் சொல்லுகின்ற விசேடமான பஞ்சலிங்கங்கள் திருமணி முத்தாற்றுக்கு மேற் புறத்திலும் காவேரி நதிக்கு வடக்கிலும் இருக்கின்றன. எ-று (உஅ)

நீங்கதகற்றுமந்நதியின்றீரத்தைந்துதலமாமா
ஓங்குதங்கேழுந்தமுருக்கொண்டசுயம்புவொருவர்செயலன்று
லிங்குமலிர்முகமுத்தும்பஞ்சாக்கரமென்றிசைத்ததன்மை
பாங்குபெறுமந்நகர்க்குமுதற்பாவநாசமெனும்பதியே.

(இ - ள்) பாவத்தைப்போக்கும் திருமணி முத்தாற்றின் கரையில் ஐந்து சிவதலங்கள் விளங்குகின்றன. அவை மகிமை தங்கிய பஞ்சாக்ஷரங்களும் லிங்க ரூபமாகத்தோன்றிய சுயம்புதலங்களாம்; ஒருவர் செயலினால் அமைந்தனவல்ல; நிருமல மூர்த்தியாகிய சிவபெருமானுடைய ஈசானம் முதலிய ஐந்து திருமுகங்களும் பஞ்சாக்ஷரங்கள் என்று வேதமுரைத்தது சத்தியமே. சிறப்பு பொருந்திய அந்த ஐந்து தலங்களுக்குள் தலைமையானது திருப்பாவநாசப்பதியேயாம். எ-று. ஆல், அசை.

சதலித்தண்டேபசைவிறகுகாய்ந்தவிறகுபஞ்சின்மரம்
பதிநீர்க்கூபம்வாவிகளும்பதலையாறுமுகக்கடவு
ணதியுமணிமுத்தாறென்னும்நதியுமென்னநான்குவகை
யுதகந்தழற்காரணமருளாலோராணிழலிற்பொருந்துணர்ந்தோய்.

(இ - ள்) கல்லாலின் நிழலில் தக்ஷிணமூர்த்தியின் திருவருளினால் மெய்ஞ்ஞானத்தை யுணர்ந்த சனற்குமார முனிவனே! இப்பாவநாசப்பதியிலுள்ள சிறு



கிணறுகளும், பெருந்தடாகங்களும், குன்று தோறும் எழுந்தருளும் சண்முகக்கடவுளது நதியும், திருமணிமுத்தாறும் ஆகிய இந்நான்கு வகைத்தீர்த்தங்களும் இவற்றில் ஸ்நானம் செய்வோர்களுடைய பாவத்துக்கு முறையே வாழைத்தண்டு, ஈரவிறகு, காய்ந்தவிறகு, இலவம்பஞ்சு ஆகிய இவற்றுடன் சேர்ந்த அக்கினியாகுமென்று நீயறியக்கடவாய். எ-று. (கூ0)

காமவெகுளிமயக்கமற்றுற்கருநிலதுமானதீர்த்த
மேமவர்க்கிற்பாடுத்தார்க்கெல்லாதீருஞ்சமமாகும்
நாமவிளருமணிமுத்தாநதிநீராடப்பெற்றவர்க
டாமுமானதீர்த்தமாடேந்துதிபெற்றேரோ.

(இ - ள்) காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களையும் ஒழித்தால் அதுவே ஞானபூமியிடத்தில் சிறப்பு பொருந்திய மானதீர்த்தமாம். அதில் நீராடப்பெற்றவர்களுக்கு எல்லாத்தீர்த்தங்களும் சரியாகும். மணிமுத்தாநதியென்று பெயர் விளங்கும் இந்நதியில் ஸ்நானம்செய்தவர்கள் கீர்த்திபொருந்திய மானதீர்த்தத்தில் படிந்த தன்மையைப்பெற்றவர்களாவார்கள். எ-று. (கூக)

பரவையுண்டபொதியமுனித்தமிழ்நெல்லைப்பரப்புமட்டு
மரசுபுரிந்துமனுநெறியாயறத்தைவளர்த்துப்புகழ்நிறுவுந்
திருவின்மிக்கமூவேந்தர்சேரசோழபாண்டியரு
முருகுமன்பாய்மணிமுத்தாற்றுண்மையறிந்தார்முனிவாக்கால்.

(இ - ள்) கடல் நீரை ஆசமனம் செய்த அகத்திய மாமுனிவரால் உண்டாக்கப்பட்ட தமிழ்ப்பாஷை வழங்கும் எல்லை அளவும், மனுநீதியின்படி ஆளுகை செய்து, தருமமார்க்கத்தை விருத்தி பண்ணிப்புகழைத்தாபித்த செல்வமிகுந்த சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூன்று அரசர்களும் அம்மகா முனிவரது திருவாக்கால் மிகுந்த அன்போடு மணிமுத்தா நதியின் சிறப்பைத் தெரிந்துகொண்டார்கள். எ-று. (கூஉ)

வேறு.

மாதவியெனுமிடைச்சிமகதநாடடைந்தாளீன்ற
பேதையோபிறவியென்பாளிருவரும்பெற்றகூலி
மீதியிலுண்டிகொண்டொருடிலிடைமேவுநாளி
லூதையினவ்லைவந்தாண்மழையினினைந்தேயோர்நாள்.

(இ - ள்) மாதவியென்னும் நாமத்தையுடைய ஓர் இடைச்சி மகததேசத்தில் இருந்தாள். அவள் பெற்ற பெண்பிள்ளை பிறவி என்னும் பெயரையுடை

யவன். அவர்கள் இருவரும் வேலை செய்து பெற்ற கூலியினால் தங்கள் வயிறு வளர்த்துக்கொண்டு ஓர் குடிசையில் வாழும் நாளில், ஔவை குளிர் காலத்தில் ஒரு நாள் மழையில் நனைந்துகொண்டு அங்கு வந்தாள். எ-று. (கூ௩)

கங்குலிற்கால்கண்ணாகக்கலையாயிடைக்குலத்து
மங்கைவாழ்குடிலின்முன்னேவந்துவாய்திறந்துசொல்வா
ளிங்குளார்யாவரேனுமிரந்திடுமிடங்கொடுத்தாற்
றங்கியேவிடியற்காலைக்கேகுவல்யானாற்றுமென்றாள்.

(இ-ள்) இருட்டின் மிகுதியால் காலே கண்ணாக வழிநடவிக்கொண்டு வந்து மனவருத்தத்தோடு இடையர் குலத்தில் உதித்தமாதவியென்பவள் வசிக்கும் குடிசைக்கு எதிரில் வந்து, இவ்வீட்டிலுள்ளவர் யாவரேனும் என்பாலிரக்கமுற்று, இன்று இராத்திரி மட்டும் இடங்கொடுத்தால் இவ்விடத்தில் தங்கியிருந்து, பொழுது விடிந்தவுடன் போய்விடுவேன்; சொல்லுங்கள் என்று உரக்கச்சொன்னாள். எ-று. (கூ௪)

அம்மொழிகேட்டிடைச்சியன்னைநீவாராயென்று
செம்மையிலிருக்கத்தந்தாளவ்வையைத்திருந்தநோக்கி
யிம்மழைநனைந்தவாடைக்கிணையாடையில்லையென்று
கைம்மைதான்றன்மருங்குற்சரித்துணியாடையீந்தாள்.

(இ-ள்) ஔவை சொன்ன வார்த்தைகளைக்கேட்டு இடைச்சி என்னமாதாவே! உன்னை வருகவென்று சொல்லிப்பரிசுத்தமானகுடிசையில் தங்கியிருக்க இடங்கொடுத்தாள்; அவளது திருமுகத்தை நன்றாய்ப்பார்த்து இந்த மழையில் நனைந்ததினால் ஈரமாய் விட்ட புடவையை மாற்றித்தரிப்பதற்கு அவளிடத்தில் வேறு வஸ்திரமில்லாமையை அறிந்து, விதவையாகிய இடைச்சி தான் தரித்துக்கொள்ளும் அழுக்குத்துணியை அவளுக்குக்கொடுத்தாள். எ-று. (கூ௫)

தன்னுடைகளைந்திடைச்சிதனக்களித்திடைச்சியாடை
பொன்னுடைபோன்மகிழ்ந்துபுனைந்தனடன்மருங்குன்
முன்னுடைக்குளிரையாற்றமுழங்கெரியிடைச்சிமூட்டி
யென்னிடையன்புவைத்தசெத்தனையெனமகிழ்ந்தாள்.

(இ-ள்) ஔவை தான் தரித்திருந்த ஈரவஸ்திரத்தைக்களைந்து விட்டுத்தனக்காக இடைச்சி பரிந்து கொடுத்த அழுக்குத்துணியை மினுக்குப்புடைவையாக மதித்துச்சந்தோஷப்பட்டு, தனதிடையில் உடுத்திக்கொண்டாள். முன்னேயணிந்திருந்த ஈரவஸ்திரத்தினாலுண்டாயிருந்த குளிரை நீக்கிக்கொள்ளும்



படி முழங்கும் தீயை மூட்டிப்பின்னும் எனக்குச்செய்த உபகாரமெத்தனையென்று சொல்லி மகிழ்ச்சி யடைந்தாள். எ-று. (கூ௬)

புலர்ந்ததுகங்குல்வேலைப்புனலிடைவண்டுபாட
மலர்ந்ததுகமலக்காடுமாதிரமடக்கைதமார்க
ணலந்தரநீங்குகொண்கனண்ணினனென்றிருட்டாம்
பொலிந்திடுதுயர்தீர்த்தார்கள்புறப்பட்டான்குணபால்வெய்யோன்.

(இ-ள்) அன்று இராப்பொழுது கழிந்தது, கிழக்குத்திசையில் சூரியன் உதயமானான்; அதனால் சலத்தில் வண்டுகள் ரீங்காரம் செய்யத்தாமரை மலர்க்காடு மலர்ந்தது; திசைகள் என்னும் பெண்கள் நன்மையைத்தரும்படி தம்மைப்பிரிந்த கணவர் திரும்பிவந்தார் என்று இருள் என்னும் மிகுந்ததுக்கத்தை நீக்கினார்கள். எ-று. (கூ௭)

பிறவிநீபெற்றாயேனும்யான்பெற்றபெண்ணேமன்றன்
முறைமையாய்முடிக்கும்போதுமுன்னின்றேயான்முடிப்பேன்
வறுமைகளெல்லாந்திரவழங்குவேன்சீதனங்க
ளுறவினைமறவேலென்றேயுரைத்தனளப்பாற்சென்றாள்.

(இ-ள்) பிறவி யென்னும் பெண்பிள்ளையை நீ பெற்று வளர்த்த போதிலும் அவள் என்னுடைய பிள்ளை ஆவாள். அவளுக்குக்கலியாணம் கருமகாண்டத்தின்படி செய்யும்போது நான் அதற்கு முதன்மையாயிருந்து அச்சுபகாரியத்தைப்பூர்த்தி செய்வேன். தரித்திரம் நீங்கும்படி அவளுக்குச்சீதனம் கொடுத்து, சீர் வரிசைகளைச்செய்வேன். நமக்குள்ள சிநேகத்தை மறந்து விடாதே என்று மாதவிக்குச்சொல்லி ஔவை அவளது வீட்டை விட்டுப்புறப்பட்டுப் போனாள். எ-று. (கூ௮)

வள்ளுவருடன்பிறந்தவவ்வையாமுலகமாதா
விள்ளருந்தமிழ்நாட்டெல்லாநாற்றிசைவியப்புக்கண்டே
கள்ளவிழ்கமுகம்பாளைகவரிபோற்கதிர்க்குக்காட்டுந்
தெள்ளியதமிழ்மணக்குஞ்சேலமாநகர்க்குவந்தாள்.

(இ-ள்) திருவள்ளுவ நாயனாருடன் பிறந்த உலக மாதாவாகிய ஔவை சொல்லுதற்கரிய புகழ்பெற்ற தமிழ் நாடுகளின் நான்கு திசைகளிலுமுள்ள பல அதிசயங்களைப்பார்த்து, பாக்கு மரங்களின், தேன் சொரிகின்ற அழகிய பாளைகள் சூரியனுக்கு வெண்சாமரம் போடுவது போல் விளங்குந்தன்மையை

யும், செம்மையான தமிழ்பொலிந்து பிரகாசிக்கும் சிறப்பையும் உடைய சேல மாநகரில் வந்து சேர்ந்தான். எ-று ஆம், அசை. (ருகூ)

சின்மயச்சிவமணக்குஞ்சிறப்பினையறிவிற்றேர்ந்தா
னென்னையாளுடையகோமானீங்காதவிடமென்றெண்ணி
நன்மையாநதியைப்புஞ்சாக்கரமெனவுண்மைநாடிப்
புன்மைதீர்நதியின்வாசம்பொருந்திடநினைவுகொண்டான்.

(இ-ள்) சின்மயசொரூபமாகிய பரமசிவம் விளங்கும் சிறப்பை அறிவில் தெளிந்தவனாகிய ஔவை என்னை யாளாகவுடைய சிவபெருமான் நான்கு யுகத்திலும் நீங்காமல் எழுந்தருளியிருக்கும் தலம் இது வெனக்கருதி நன்மையான மணிமுத்தாநதி பஞ்சாக்ஷரம் என்கின்ற உண்மையையுணர்ந்து சகல பாவங்களையும் தீர்க்கும் இந்த நதிதீரத்தில் வாசஞ்செய்ய நினைத்தான். எ-று. (சா0)

கொன்றைவேந்தன்முன்னாத்திருடியென்றிருநாற்கூறித்
தென்றமிழ்நாட்டுமன்னர்மூவர்க்குஞ்சிறந்தஞான
மன்றல்சேர்நதியின்வாசமருவியேபுனிதராக
வின்றுதாம்வருகவென்றேயெழுதியேயோலைவிட்டாள்.

(இ-ள்) யாவரும்மதிக்கும்படியான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், என்னும் முதற்குறிப்புள்ள நீதிநூல்களைத்திருவாய் மலர்ந்தருளித்தென்திசையிலுள்ள தமிழ்நாடுகளின் அரசர்களான சேர, சோழ, பாண்டியர் என்னும்மூன்று வேந்தர்களுக்கும் மேன்மை பொருந்திய ஞானமணம் கமழ்கின்ற [illegible] முத்தாநதியில் வாசஞ்செய்து ஞான சீலராகும்படி இத்தலத்திற்கு வருதல் வேண்டுமென்று திருமுகம் எழுதி அனுப்பினள். எ-று. (சாக)

அரசர்களரசராஞ்சேரோலைகண்டகமகிழ்ந்தே
முரசொலிமுழங்குதானைமொய்ப்பவெண்குடைநிழற்றித்
திரைமுந்நீரெழுந்துமூன்றுதிசையினும்வருவதேபோல்
வருவதுகண்டாளவ்வையெதிர்கொண்டாளுவகைவாய்ப்ப.

(இ-ள்) அரசர்களுக்கு அரசரான சேர, சோழ, பாண்டியரென்னும் மூவேந்தர்களும் ஔவையனுப்பியதிருமுகத்தைப்பார்த்துச்சந்தோஷப்பட்டு, அலைகள் வாய்ந்த சமுத்திரம் மூன்று திக்குகளிலும் எழுந்து வருவது போல், முரசவாத்தியம் தொனிக்கின்ற தேர், யானை, குதிரை, காலாள் என்னும் நால்வகைச்சேனையுஞ்சூழ்ந்துவர, சந்திரனுக்கொப்பான பூச்சக்கரக்குடை நிழல் செய்ய வருவதைப்பார்த்து, ஔவை மிகுந்தகளிப்போடு அவ்வேந்தர்களை எதிர்கொண்டு அழைத்து வந்தாள். எ-று. (சாஉ)



கழறிற்றறிவான்சேரலன்பேர்சுதிரோன்மரபுத்தமசோழன்
பழமைத்திங்கட்குலவீரபாண்டியப்பேர்மன்னவனும்
விழைவைத்தருநன்னதியாடவேண்டிப்பாவநாசநகர்க்
கொழுகிச்சிறக்கும்பொன்பிணுற்றூர்நதிக்குமேற்கரையில்.

(இ-ள்) அக்கினி குலத்தில் அவதாரம் செய்த கழறிற்றறிவார் என்னும் சேர ராசனும், சூரிய குலத்திற்றோன்றிய உத்தம சோழ ராசனும், பூர்வவமிசமாகிய சந்திர குலத்திற் பிறந்த வீரபாண்டியனென்னும் நாமத்தையுடைய பாண்டியராசனும், மிகுந்த ஆசையைக்கொடுக்கும் இந்நதியில்ஸ்நானம்செய்ய விரும்பித்திருப்பாவநாசப்பதியில மணிமுத்தாநதிக்கரையின் மேலண்டையில், சிறந்து விளங்கும் அன்போடு வந்து சேர்ந்தார்கள். எ-று. (சாங)

அவரவர்நெறியினுள்ளமளவளாய்முகமன்கூறி
நவையறநீவிரோர்பாற்கூடினீர்நன்றோமா
லவிரொளிமதியஞ்சூடிபிரதிட்[illegible]ம்பேராக்கி
யுவமையிக்கிரபுரிக்கேநிகர்தரவ[illegible]றுமென்றாள்.

(இ-ள்) அவரவர்கள் தன்மைக்குத்தக்க வாறு மனதில் எட்டத்தக்க உபசாரவார்த்தைகளைச்சொல்லிக் குற்றமில்லாதபடி நீங்கள் இவ்விடத்தில் ஒன்று சேர்ந்தது மிகவுஞ்சிறப்புடையது; ஆகையால் ஒளி பொருந்திய இளஞ்சந்திரனைத்தரித்த சிவலிங்க பிரதிஷ்டைகளுடைய பேரால், செய்து அத்தலம் [illegible]பாக விளங்கும்படி செய்யுங்கோள் என்று சொன்னாள். எ-று.

வேறு.

அந்தணர்நால்வருணத்தாரழகுதிகழுமணிவீதி
யோங்குமேடைசத்திரங்களுண்டாமுனிவர்க்குயர்மடங்க
டோங்கவமைத்தேயளகையெனத்திசைகள்போற்றத்திருநாமம்
பாங்குபெறுமும்முடியென்னப்பாருக்கணிபோலமைத்தனரால்.

(இ-ள்) பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், என்னும் நான்கு வருணத்தவர்களுக்கும் ஏற்ற மிகவுஞ்சிங்காரமான தெருக்களும், உன்னதமான மாடங்களும், சத்திரங்களும், முனிவர்களுக்குச்சிறந்த மடாலயங்களும் விளங்கும்படி குபேரனுடைய அளகாபுரிக்கொப்பாக ஒரு நகரத்தை அவ்விடத்திலுண்டாக்கிப் பூமாதேவிக்குத் திருவாபரணம் போல் பிரகாசிக்கும் அந்நகரத்துக்கு, எட்டுத்திக்குகளும் புகழ்ந்து துதிக்கத்தக்க சிறப்பு பொருந்திய மும்முடித் தலைவாசலென்னும் திருநாமத்தைச்சூட்டினார்கள். எ-று. (சாச)

ஈசர்கோயிற்பிரதிட்டைபிசைக்கும்பேர்மும்முடிநாதர்
பூசைமூன்றுகாலங்கள்பொலிவாயாடல்பாடலோடு
நேசமாசத்திருவிழாநிறையநடத்தித்திருவிளக்கு
மாசதிரவவ்வைசொல்லின்வரம்பினடங்கிமகிழ்கொண்டார்.

(இ - ள்) ஔவை சொல்லிய வார்த்தைகளுக்கு இசைந்து, தங்கள் பாவப் ஒழியும்படி, சிவலிங்க பிரதிஷ்டை செய்து, ஈச்சுரனுக்கு மும்முடி நாதர் என்னும் திருநாமம் அமைத்து, தேவதாசிமார்களுடைய ஆடல்பாடலோடு சிறப்பாக மூன்று கால பூசைகள் செய்வித்தும், குற்றம் நீங்கும்படி திருவிளக்கு ஏற்றுவித்தும், அன்போடு திருவிழா நடப்பித்தும், மனதிற் சந்தோஷமடைந்தார்கள். எ-று. (௪௬)

## வேறு.

மகதநாட்டிடைச்செபெற்றமகளெனும்பிறவிக்கேற்ற
தகுதியாமுரிமையானென்றன்னையுங்கூட்டிக்கொண்டு
திகழ்தரவவ்வைவந்துசேரமாநகர்க்குவந்தாள்
புகழ்பெறமணஞ்செய்விப்பாயென்னவுமன்னர்பாற்போய்.

(இ - ள்) மகதநாட்டிடைச்சியாகிய மாதவியென்பவள் தான் பெற்று வளர்த்த பிறவியென்னும் பெண்ணையுடைய பெண்ணையும் அவளுக்குத்தகுதியான நல்ல முறைமையையுடைய உரிமையாளனாகிய பிள்ளையையும் அழைத்துக்கொண்டு வந்து சிறப்போடு ஔவை வாசஞ்செய்யும் சேரமாநகருக்கு வந்து புகழ்ச்சியடையும்படி திருமணம் முடித்தல் வேண்டுமென்று வேண்ட அரசர்களிடம் சென்று, எ-று. (௪௭)

என்மகளொருத்திவந்தாளெனவவ்வைமொழிகின்றாளாற்
றொன்மையிலுரிமையானொன்றுனையவட்கிசையவந்தா
னொண்மணிமாடவீதிப்புறமெலாமலங்கரித்தே
நன்மணமனைசெய்விப்பீர்நாயிறு நாளையென்றே.

(இ - ள்) "என் மகளாகிய பிறவி யென்பவள் இவ்விடம் வந்திருக்கிறாள். பழமையான பாத்திய வகையையுடைய அவளுக்குத்தக்க கணவனும் வந்திருக்கிறான். பொன்னினாலும், இரத்தினங்களினாலும் அலங்கரித்த மாடங்களையுடைய வீதியின் பக்கங்களெல்லாம் அழகுபெறச்செய்வித்து நாளையதினம் சூரியோதயத்துக்குள் சிறப்பு பொருந்திய கலியாண வீடு ஒன்று ஏற்படுத்துக" என்று ஔவை சொன்னாள். எ-று. (௪௮)



உனக்கொருமகளுண்டென்றாயுலகெலாமக்களன்றி
நினைக்கில்வேறுண்டோபிள்ளைநிலத்தோர்பொருட்டான்
மனக்கினியானாடிவதுவைதான்செய்யவேண்டிக்
கனக்கநீசொன்னாலெங்கள்கடனன்றோவதுமுடித்தல்.

(இ - ள்) உனக்கு ஒரு பெண்பிள்ளை யிருப்பதாய்ச்சொல்லுகின்றாயே! இந்த உலகத்தின்கண் உள்ளவர்கள் எல்லாம், உனக்குப்பிள்ளைகளேயல்லாமல், நினைக்குமிடத்தில், உனக்கெனத்தனியாய் வேறு பிள்ளை உண்டோ? விசாலமாகிய இந்தப்பூலோகத்தில் ஒரு நிமித்தமாக உனது மனதுக்கு இசைந்த கற்றோனை நிலைக்கருதி அவர்களுக்குக்கலியாணம் சிறப்பாகச்செய்விக்கவேண்டுமென்று நீ மொழிந்தால், அப்படியே அக்காரியத்தை முடிப்பது எங்கள் கடமையல்லவா? என்றார்கள். எ-று. (௪௯)

இப்பரிசனைத்திடாமலென்மகளொருத்தியென்றே
யப்பரிசனைத்ததென்னென்றரசர்கள்சொல்லவவ்வை
செப்புவாளிடைச்சிபெற்றாள்சிறக்கநானுவிற்பெற்றே
னொப்புமையுறவுபெற்றாற்போலுமிவ்வுலகியற்கை.

(இ - ள்) இத்தன்மையான சங்கதிகளைச்சொல்லாமல் எனது குமாரத்தி ஒருத்தியிருக்கிறாள் என்னும் தன்மையான வார்த்தைகளைச்சொன்ன வகை யாது? என்று மூவேந்தர்களும்கேட்க, அப்பெண்ணைப்பெற்றவள் மாதவியென்னும் இடைச்சியாயினும், அவளை எனது நாவினால் சிறப்பாக யான் பெற்றேன். நாம் ஒப்பிச்செய்த உறவு பெற்றாற்போலவே போலும். இது உலகத்தில் சுபாவமென்று ஔவை சொன்னாள். எ-று. இவள் என் அபிமான புத்ரி என்பது கருத்து. (௫௦)

ஒருவர்தமுறுப்புப்போலவொருவருக்கயன்செய்யானுற்
பிரமனுக்கும்வெண்கஞ்சவாணிக்கும்பெருவழக்கா
யொருவனைக்கண்டேயன்பாலொப்புமையின்றொன்னப்
பிரிவறநாவிற்சொன்னபெற்றியாற்பெற்றோராவர்.

(இ - ள்) பிரமனுக்கும் வெண்டாமரைப்பூவில் வீற்றிருக்கும் சரஸ்வதிக்கும் பெரிய வாக்குவாதம் உண்டாய்ப்பிரமதேவன் ஒருவருடைய சரீரத்தின் அவயவம்போல் மற்றொருவருக்கு உண்டாக்கமாட்டான். ஒருவனைப்பார்த்து அவனிடத்தில் வைத்த அன்பினால் அவனை இன்ன முறைமையான் என்று பேதமின்றி நாவினாற் சொன்ன தன்மையான அந்த முறைமையை உண்மையாய் அடைந்தவர் ஆவார். எ-று. (௫௧)

என்னலுமௌவைசொற்கேட்டவேலீர்செய்கவென்று
பன்னுநன்னகர்நாற்றிக்கும்பச்சிலைத்தோரணங்கள்
தன்னிலாமழைக்கம்பங்கள்காவணநாட்டினார்க
ளென்னுமித்திசைகடோறுநிலவெனச்சுதைகடற்றி.

(இ - ள்) என்று ஔவை சொன்ன வார்த்தைகளைக்கேட்டு அரசர்கள், வேளாளர்களே: நீங்கள்செய்யுங்கள் என்று கட்டளையிட, அவர்கள் அந்த நகரத்தில் நான்கு திசைகளிலும் சந்திரிகை யென்று சொல்லும்படி சுண்ணச்சாந்து பூசி நான்கு திக்குகளிலும் பசுமையான மாவிலைத்தோரணங்கள் கட்டி வாழைக்கம்பங்கள் நாட்டி பந்தல் போட்டார்கள். எ-று. (௫௨)

நிறைகுடந்தீபமல்கநிலைசெய்துகோலஞ்செய்து
தறையகங்குளிரும்வண்ணஞ்சந்தனநீர்தெளித்தார்
நறியவில்லங்கடோறுநறும்புகைகமழவூட்டிக்
குறைவறவிதானஞ்செய்தார்கொடிஞ்சைகள்குச்சுவிட்டே.

(இ - ள்) அந்தப்பந்தலிலே பூரண கும்பங்களும் தீபங்களும் நிறை[illegible]படி சிறப்பு செய்து, பூமி குளிரும்படியாகச் சந்தனக் குழம்பைத்தெளித்துக்கோலமிட்டார்கள். வீடுகடோறும் நல்ல வாசனை வீசும் அகிற்புகைமணக்கச்செய்து கொடிஞ்சைகள்குஞ்சங்களைத்தொங்க விட்டுக் குறைவில்லாதிருக்க மேற்கட்டி கட்டினார்கள். எ-று. (௫௩)

மரகதமிழைத்ததூணின்மாணிக்கக்கொடிஞ்சைசேர்த்[illegible]
தரளநீள்சட்டம்பூட்டித்தமனியப்பலகைபாவி
யிருளகன்மணவறைக்கேயிந்திரவிமானமேபொன்
றுரைவல்லோர்சொல்லுமாறுசிறப்பறவொழுங்கிற்செய்தார்.

(இ - ள்) பச்சை ரத்தினங்கள் பதித்த தூண்களின் மேல் மாணிக்கம் இழைத்த கொடிஞ்சை யமைத்து, முத்துகள் கட்டிய நீண்ட சட்டங்களைத் தொடுத்து, பொற்பலகையிட்டு, தேவேந்திரனது விமானத்துக்கு ஒப்பாமென்று கலைவல்லோர் சொல்லும்படி, ஒளிவீசும் மணவறைப்பந்தலைச்சிறப்[illegible]வின்படி செய்தார்கள். எ-று. (௫௪)

காய்கறியரிசிநெய்பால்-கனிமுதலானவெல்லா
மோய்விலெண்டிசையி[illegible]முன்னனவொருபாற்றந்தார்
ஞாயிறுநாணப்பந்தர்க்குழுமணிமாலைநாற்றி
தூயதாய்மணச்சடங்குதொடங்கியேசெய்யலுற்றார்.



(இ - ள்) அரிசி, காய் கறிகள், நெய், பால், பழவர்க்கங்கள் இவை முதலான சகல சாமான்களும் நானா திசைகளிலுமிருந்து வரவழைத்து ஓரிடத்தில் சேகரித்து வைத்தார்கள். சூரியன்பார்த்து வெட்கமடையும்படி இந்த [illegible]ணப்பந்தலில் நவரத்தின மாலைகள் தொங்கச்செய்து, பரிசுத்தமாகக்கலியாணச் சடங்குகளைச்செய்யத்தொடங்கினார்கள். எ-று. (௫௫)

ஔவைவந்தரசரோடீதுரைத்திடவருகவென்றார்
தெய்வமுமொப்புக்கொள்ளாதுலகுக்குமொவ்வாச்செய்கை
கை[illegible]நெல்லிபோனீகாட்டினோரதிசயந்தா
னவ்விபோனோக்கினாட்குநாமறுகிடுவோமென்றார்.

(இ - ள்) வேந்தர்களே! சேலை யரிசியிடவாருங்கள், என்று ஔவை சொல்லவும், இக்காரியம் நாங்கள் செய்தால் தெய்வமும் அங்கீகரிக்கமாட்டாது: உலகத்தாருக்கும் ஒவ்வாத செயலாகும். ஆகையால், உள்ளங்கை நெல்லிக் கனிபோல, நீ ஒரு அற்புதம் விளங்கக்காட்டினால், மான்போன்ற விழியையுடைய இந்த மணப்பெண்ணுக்கு நாங்கள் சேலையரிசியிடுவோமென்று அரசர்கள் மறுமொழி சொன்னார்கள். எ-று. (௫௬)

நினைந்ததென்னெனவேயவ்வைநின்முடியரசர்சொல்வார்
கனங்குறைந்தொன்றுநாளாய்க்கோடரிகண்டஞ்செய்த
பனந்துண்டமிதுவெழுந்துபங்கெனமூவருக்கு
[illegible]னமகிழானப்பழமூன்றீந்தாலறுகிடவருவோமென்றார்.

(இ - ள்) நீங்கள் நினைத்தது என்னவென்று ஔவை கேட்கவும் பருவங் குறையப்பெற்று ஒன்று நாளாய்க்கோடாலியினால் துண்டிக்கப்பட்ட இந்தப் பனந்துண்டங்கள் ஒன்று சேர்ந்துமரமாயெழுந்து நின்று, நாங்கள்மூவரும் மனதிற் சந்தோஷிக்கும்படி, எங்களுக்குப்பங்கிட்டதுபோல் மூன்று பனம் பழங்களைத்தந்தால், நாங்கள் சேலையரிசியிட வருவோமென்று மீண்டகிரீடங்களைத் தரித்த மூன்று அரசர்களும் சொன்னார்கள். எ-று. (௫௭)

பரமனும்பாவநாசப்பதியுநன்மணிமுத்தாறு
மிருளறக்கதிகொடுத்தல்சரதமேயென்பதாகிற்
கருநிறப்பனையுமூன்றுகனிதாவுண்மையென்று
திருவுளத்தெண்ணியௌவையின்றதாய்செய்யுள்பாடும்.

(இ - ள்) பாவநாசமென்னுந்தலமும், அதில் வாழும் பரமேசனும், அதிலோடும் திருமணிமுத்தா நதியும், அஞ்ஞானம் நீங்கும்படி, மோக்ஷவின்பத்தைக்கொடுக்குமென்பது உண்மையாமாயின், கறுத்த நிறத்தையுடைய இப்

பனந்துண்டங்கள் மூன்று பழங்களைத்தருவதும் உண்மையாகுமென்று சிந்தித்து என்னைப்பெற்ற அன்னையாகிய ஔவை ஒரு செய்யுளைப்பாடினள். எ-று. (௫௮)

திங்களென்றெடுத்துப்பாடத்துண்டம்வேர்கொண்டெழுந்து
பைங்குலைமடற்குருத்துப்பாளைகள்விரித்துநின்று
நுங்குகண்முற்றிக்காயினுனிமுகங்கறுப்படைந்து
பங்கெனமூவருக்கும்பழங்கள்மூன்றளித்ததன்றே.

(இ-ள்) திங்கள் என்று தொடங்கி ஒரு செய்யுளை ஔவை பாடி முடிக்கவே, அப்பனந்துண்டுகள் பூமியில் வேரூன்றி மரமாகவெழுந்து, குருத்தையும் மடலையும் விரிந்தபாளையையும் பசியகுலையையும் உடையதாய் நின்று, நுங்குகள் முதிர்ந்து, காயின் நுனிமுகம் கறுத்து, பங்காக அரசர் மூவருக்கும் மூன்று பழங்களைத்தந்தது. எ-று. (௫௯)

வீழ்ந்திடுகனியைக்கண்டார்வியப்பின்வேற்றுடலமானார்
சூழ்ந்தநீர்விளிம்புசூழ்ந்தவவனியிற்றிருவிழாப்போற்
சூழ்ந்தனரதிசயித்துத்துதித்தனர்நினைத்ததெய்தி
வாழ்ந்தனர்போலவுள்ளமகிழ்ச்சியின்மூழ்கினரே.

(இ-ள்) அப்பனமரத்திலிருந்து பூமியில் விழுந்த பழங்களைப்பார்த்தார்கள்; ஆச்சரியத்தால் மெய்ம்மறந்து பரவசமானார்கள். கடல் சூழ்ந்த இவ்வுலகில் திருவிழாவுக்கு வருவது போல் திரண்டு வந்த ஜனங்கள் வியந்து புகழ்ந்து, இச்சித்த பொருள் கிடைக்கப்பெற்றவர்களைப்போல, மனதில் அளவற்ற சந்தோஷம் அடைந்தார்கள். எ-று. (௬0)

அரசரேபெரியோரென்பாரவ்வையேதெய்வமென்பார்
பரகுமிடைச்சிசெய்தும்பாக்கியம்பாருமென்பார்
விரைசெறிகமலக்கோயின்மெல்லியலிடைப்பெண்ணான
வுருவென்பார்பனையைப்பார்த்தேயுருகுவார்வணங்கிநிற்பார்.

(இ-ள்) சிலர் இம்மன்னர்களே மகான்களென்று சொல்வார்கள். சிலர் ஔவையே பிரத்தியக்ஷதெய்வமென்று கூறுவார்கள். சிலர் கீர்த்திபெற்ற இவ்விடைச்சியடைந்த செல்வத்தைப்பாருங்களென்று மொழிவார்கள். வாசனை பொருந்திய தாமரை மலரில் வாழும் இலட்சுமியே இவ்விடைச்சியாய் அவதரித்தாளென்று சிலர் சொல்வார்கள். சிலர் பனமரத்தைப்பார்த்து மனமுருகிப்பணிவார்கள். எ-று. (௬௧)



ஔவைதன்காண்மேல்வீழ்வாரரசர்தாள்சென்னிசேர்ப்பார்
கொவ்வைவாயிடைச்சிதாளில்வீழ்ந்துகும்பிட்டுநிற்பார்
தெய்வமிங்கில்லையென்பார்வாய்திறவாதபித்தம்
பொய்யிதுமாப்பேயன்றேபுகழ்பனையிதுமாப்பென்பார்.

(இ-ள்) சிலர் ஔவையாருடைய திருவடிகளில் விழுந்து கும்பிடுவார்கள். சிலர் மூவேந்தர்களுடைய பாத தாமரைகள் தமது முடியிற் பொருந்தும்படி பணிவார்கள். சிலர் கோவைகனிக்கொப்பான இதழையுடைய இடைச்சியின் திருவடிகளுக்குத் தெண்டனிடுவார்கள். சிலர் இவர்களைத்தவிர வேறு தெய்வமில்லை யென்பார்கள். வாய் திறவாத வுன்மத்தம் பொய்யான மயக்கத்தினால் வந்ததல்ல. யாவரும் புகழும்படியான பனமரத்தைப்பார்த்ததினால் வந்த பெருமகிழ்ச்சியினால் என்று சொல்வார்கள். எ-று. (௬௨)

முடிபுனைதெய்வமன்னர்மூவருமொருங்கெழுந்தே
யுடைதிரைகடன்முழக்காய்ப்பல்லியமொலிதையார்ப்பக்
கடிமணப்பந்தற்காலைக்கன்னிக்குமறுகிட்டார்கள்
வடிவதாய்க்கனகத்தாலிமாதுக்குப்புனைவித்தார்கள்.

(இ-ள்) கிரீடங்களைத் தரித்த தெய்வத்தன்மையுள்ள மூன்றரசர்களும் ஒன்றாகப்புறப்பட்டு வந்து, மோதுகின்ற அலைநிறைந்த கடலின் ஆரவாரத்தைப் போலப்பலவாத்தியங்கள் முழங்க, அழகு பொருந்திய கலியாணப்பந்தலில் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் சேஷை அரிசியிட்டு உருவமைக்கப் பட்ட பொன்னாலாயமாங்கல்யத்தை மணமகளைக்கொண்டு மங்கைக்குத்தரிக்கச்செய்தார்கள். எ-று. (௬௩)

குரும்பையங்கொம்மையொண்கட்குலவுதோடணிமுசத்துக்
கரும்பனையானைநோக்கிக்காவலர்மணமுடித்தார்
குரும்பையங்கொம்மையொண்கட்குலவுதோடணிமுகத்துக்
கரும்பனையானைநோக்கிக்காவலர்மணமுடித்தார்.

(பதவுரை.) குலவு-விளங்குகின்ற, தோடு-பூவிதழ்களின் ஏடுகளையும், அம்-அழகிய, கொம்மை-திரட்சியுள்ள, குரும்பை-இளங்காய்களையும், அணி-ஆபரணமாகத்தரித்த, முகத்து-உச்சியையும், ஒண்கண்-ஒளி பொருந்திய கணுக்களையும், கருமை-கறுத்த நிறத்தையும் உடைய, பனையானை-பனமரத்தைச்செம்மையாக, நோக்கி-பார்த்து, கா-சோலையிலுள்ள, மணம்-வாசனை நிறைந்த மலர்-புஷ்பங்களினால்தொடுத்த, தார்-மாலைகளையும், முடி-கிரீடங்களையும்தரித்த, காவலர்-மூன்று அரசர்களும், குரும்பை-தென்னங்குரும்பைக்கொப்பான,

அம்-அழகிய, கொம்மை-தனங்களையும், ஒள்-பிரகாசமுள்ள, கண்-கண்களையும், தோடு-காதணியின், நுலவு-விளங்கும், அணி-அழகிய முகத்து-முகத்தையும் உடைய, கரும்பு-கரும்புக்கு, அனையாளை-ஒப்பான மொழியாளாகிய அடைப்பெண்ணை, நோக்கி-அன்புடன் பார்த்து, மணம்-திருக்கலியாணத்தை, முடித்தார்-சிறப்பாக முடித்தார்கள். எ-று. (௬௪)

4-வது அடியில் அனையாள் என்பது அனையார் என்முனது ஒருமையிற் பன்மைவந்தவழுவமைதி. கொம்மை-ஆகுபெயர். 2-வது அடியின் பனை என்பது உயர்வுபற்றி ஆர் விகுதி பெற்றுப் பனையார் என நின்றது.

அந்தணர்பூரிதானத்தளப்பிலாநிதிபெற்றார்கள்
பைந்தமிழோர்கள்வேண்டும்பரிசெலாநிதியும்பெற்றார்
வந்தவர்பசிகடாச்சத்திரம்வகுத்தா
ரிந்திரதருக்களொப்பார்மணிமுத்தாற்றிருதீரத்தே.

(இ - ள்) கல்யாணவாசலில் செய்த பூரிதானத்தினால் பிராமணர்கள் அளவில்லாததிரவியத்தைப்பெற்றார்கள். செந்தமிழ்ப்புலவர்கள் தாங்கள்விரும்பிய வண்ணம் திரவியத்தை அடைந்தார்கள். கற்பக விருக்ஷத்தைப்போன்ற அரசர்கள், வந்த சனங்களுடைய பசி நீங்கும்படி திருமணிமுத்தா நதியின் இருகரையிலும் அன்னசத்திரங்களை ஏற்படுத்தி வழங்குவித்தார்கள். எ-று. (௬௫)

சீதனமாகமூன்றூர்கறவையுஞ்செழிக்கச்செய்யும்
மாதனங்கோடியாடைவரிசைபூண்பலகொடுத்தார்
தாதியர்பலர்கள்சூழ்ந்தண்டிகைகளாகியீந்தார்
காதடர்கண்ணிதன்னைத்தங்கையாய்க்கருத்தின்வைத்தார்.

(இ - ள்) காதுகளுடன் போர் செய்யுங் கண்களையுடைய அந்தப்பெண்ணைத்தங்கள் தங்கையாக மனதிற்கொண்ட அரசர் மூவரும் மூன்று ஊர்களையும், கறவைப்பசுக்களையும், மிகவும் செழிக்கச்செய்யும்பெருஞ்செல்வத்தையும், பல வஸ்திராபரணங்களையும், சீதனமாகக்கொடுத்துப் பல தாதிமார்கள் சூழ்ந்து வரும் பல்லக்குகளையும், குதிரைகளையும் கொடுத்தார்கள். எ-று. (௬௬)

ஔவையங்குரைத்தஞானவநுபவத்துள்ளந்தேறிச்
செவ்விதாற்றெளிவடைந்துகழிந்துசின்னாட்கள்செல்ல
ஐவகையெழுத்தாஞ்சனநுளப்பாடவனிப்பேறு
மெய்யுண்மைமூவருக்கும்விளங்கவேயறிவித்திட்டான்.

(இ - ள்) அவ்விடத்தில் ஔவையார் உபதேசித்த ஞானநுபவத்தால் அரசர் மூவரும் அறிவுமுதிர்ந்து நல்ல சாஸ்திரவிசாரணையால் தத்துவஞானம்



மடைந்து சிலநாள்கள் கழிந்து போகப்பின்பு சிவபெருமான் உலகத்தாருக்கு மெய்ச்செல்வமாகத்திருப்பஞ்சாட்சரநதியைக்கருணை கூர்ந்தளித்ததின் உண்மையைஅவ்வரசர் மூவருக்கும் விளங்கத்தெரிவித்தான். எ-று. (௬௭)

இந்நதிவாசஞ்செய்தார்க்கியமனூர்வாசமில்லை
இந்நதிக்கண்மேவிட்டாலில்லைமேலினியோர்மெய்யு
மிந்நதிப்பஞ்சலிங்கந்தெரிசித்தாரெல்லாங்கண்டா
ரிந்நதிக்கொப்பாய்வேறுநதியிலையெனவுரைத்தான்.

(இ - ள்) இந்தத்திருமணிமுத்தா நதி தீரத்தில் வாசஞ்செய்தவர்களுக்கு நரகப்பிராப்தியில்லை, இதில் ஸ்நானம் செய்தால் இனிமேலுண்டாகும் சரீரமில்லை. இந்நதி தீரத்தில் விளங்கும் பஞ்சலிங்கங்களைத் தெரிசித்தவர்கள் மற்றெல்லாலிங்கங்களையும் தெரிசித்தவர்களாவார்கள். ஆகையால் இந்நதிக்கொப்பாக வேறு நதி யில்லையென்று ஔவைசொன்னாள். எ-று. (௬௮)

தையல்பங்காளர்சேலத்தலமொடுமணிமுத்தாறு
மெய்யெனவெண்ணினார்கள்வெவ்வியவினையொழிப்பார்
பொய்யெனவெண்ணினோர்க்குப்பொய்ம்மையேயாமவர்க்கே
யையமிலவ்வைபாட்டாற்புனைந்துண்மைதுவேதிட்டம்.

(இ - ள்) பார்வதி பங்களுகிய சிவபெருமான் வீற்றிருக்கும் சேலமென்னுந்தலமும், திருமணிமுத்தாநதியும் உண்மையென்று எண்ணினவர்கள் கொடுமையான பாவத்தை நீக்கிக்கொள்வார்கள். பொய்யென்று நினைத்தாராயின் அவர்களுக்குப்பொய்யே யாகும். இதற்குச்சந்தேகமில்லை. ஔவையாருடைய பாட்டினால் பலகாலும் எழுந்த மரமானதே சாக்ஷியாகும். எ-று. (௬௯)

## வேறு.

சோன்வளஞ்செய்நகராமாற்சேரபுரியென்றொருநகரந்
சோர்வில்சோழனியற்றுதலாற்சோழபுரமென்றொருநகரம்
வீரபாண்டியன்செயலால்வீரபாண்டியென்றொருநக
ரேவாசம்பலர்செய்யச்செய்தார்மடங்களகரங்கள்.

(இ - ள்) சேராஜன் அமைத்த நகரமானதினால் சேரபுரி யென்கிற பெயருடைய நகரமும், தருமஞ்செய்வதில் தளர்ச்சியில்லாத சோழ ராஜன் ஸ்தாபித்தபடியால் உத்தமச்சோழபுரம் என்றொரு நகரமும், வீரபாண்டிய ராஜன் உண்டாக்கியபடியால் வீரபாண்டி யென்னும் நகரமும் மடாலயங்களும் அக்

கிராமங்களும் பல வருணத்தார்களும் இந்நகரத்தில் வாசஞ்செய்யும்படி உண்டாக்கினார்கள். எ-று. (௭௰)

காலைநதியின்மூழ்கிச்செய்கடன்கள்கழித்துப்பட்டீச
ராலயத்தைவலம்புரிந்தேயன்பாயுருகிப்பணிந்துகொன்றை
மாலைமுடியார்புகழ்நாவில்வழுத்தியிருவரருட்காளாய்ச்
சாலவொருவன்சுந்தரனைச்சார்ந்தான்சேரன்றோழனென.

(இ-ள்) அதிகாலையிற் எழுந்து திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து, நித்தியகருமங்களைப்புரிந்து, சுவனேசர் திருக்கோயிலைப்பிரதக்ஷிணஞ் செய்து அன்பினால் மனங்கரைந்து தொழுது வணங்கிக்கொன்றைமாலையணிந்த சிவபெருமான் புகழை, சோழராஜன், பாண்டியராஜன் ஆகிய இருவரும் தமது நாவினால் போற்றுதல் செய்து, திருவருளைப்பெற்றார்கள். சேரராஜனாகிய மற்றொருவர் சுந்தரமூர்த்தி நாயனாருக்குத்தோழராக அவரை அடுத்துக் கொண்டார். எ-று. (௭௧)

பாவநாசப்பதிவாசம்பலித்தபலத்தானீறணிந்து
தேவதேவன்றிருநடனச்சிலம்பினோசைசெவிகேட்க
மேவுகாலமறிந்தபின்புவிமலர்க்கன்பாமடியாரைக்
கூவியுண்பதல்லாமற்கொள்ளாரன்னந்தினந்தோறும்.

(இ-ள்) பாவநாசமென்னும் இப்பதியில் செய்த தலவாசத்தினுடைய பிரயோசனத்தினால் திருவெண்ணீறு அணிந்து சிவபூசையைத்தொடங்கிச்சிவ பெருமானுடைய ஆனந்த நிர்த்தனச்சிலம்பினோசையைச்செவியாரக்கேட்டுப் பூசைமுடித்துப்பரமசிவத்துக்கு அன்புசெய்யும்திருத்தொண்டர்களை அழைத்து வந்து அமுதுபடைத்தபின் புசிப்பு எடுத்துக்கொள்வதேயல்லாமல் தனியே ஒருநாளும் சாப்பிடமாட்டார். எ-று. (௭௨)

பனந்தார்மார்பன்பரமன்றாள்வழுத்துமதனாற்பலவுயிரு
நினைந்தேபேசும்பாடையெல்லாநெறியினுணர்ந்தானந்தாதி
புனைந்தானோர்மும்மணிக்கோவையாதியுலாப்பின்புனைந்தா
னனந்தாதரிக்குங்கங்கைமுடிநாதற்கடிமைத்திறமுதிர்ந்தான்.

(இ-ள்) பனம்பூந்தார் புனைமார்பனாகிய சேரமான் பெருமானாயனார் சிவபெருமான் திருவடிகளைப்பூசித்த தன்மையால், சீவகோடிகளெல்லாம் நினைத்துப்பேசுகிற எல்லாப்பாஷைகளையும் நின்றநிலையில் அறிந்து கொள்ளும் தன்மையைப்பெற்றார். பொன்வண்ணத்தந்தாதி, மும்மணிக்கோவை, ஆதியுலா என்னும் பாமாலைகளைச்சூடி, ஆன்மகோடிகளைக்காக்கும் குளிர்ந்தகங்கை



யையணிந்த சடாமகுடத்தையுடைய நடராஜப்பெருமானுக்குத்தொண்டு செய்யும் தன்மையிற் சிறந்தவரானார். எ-று. (௭௩)

தேருஞானத்திடனுடனேசென்றுகயிலைக்கிரிமேவுஞ்
சீர்நாவலூராளித்துணையாய்ச்செலவேசிந்தித்துப்
பாரின்விளங்கியேயோங்கும்பாவநாசப்பதியினிற்றண்
ணீருமதியும்புனைந்தமுடிநித்தரருட்பார்த்திருந்திடுநாள்.

(இ-ள்) பெரியோர்கள் தேடும் சத்திய ஞானபலத்துடன் கயிலையங்கிரிக்குச்செல்லும் சிறப்புற்ற திருநாவலூர்க்குஅரசராகிய சுந்தரமூர்த்தி நாயனாரைத் துணையாகக்கொண்டு, அவருடன் கயிலாயகிரிக்குச்செல்லத்திருவருளைச்சிந்தித்துப்பூலோகத்தில் மிகுந்த மேன்மையோடு விளங்கும் பாவநாசப்பதியில் குளிர்ந்த கங்கையையும், சந்திரனையும் சடையிற்றரித்த சிவபெருமான் இருவருக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். எ-று. (௭௪)

மலைநாட்டுள்ளோரமைச்சர்சிலர்வந்துவணங்கிமுறைநாக்கக்
கொலைநாட்டயிலாவருகவென்றுகூறியிரந்துவேண்டுதலுஞ்
சிலைநாட்டும்பொற்கொடியானுஞ்சிவன்றாள்பணிந்துவிடைகொண்டு
நிலைநாட்டுஞ்சீர்க்குடதிசைக்குநினைவுமன்பிற்செலநினைந்தான்.

(இ-ள்) மலைநாட்டிலுள்ளவர்களும், மந்திரிகளிற் சிலரும் அங்கு வந்து வணக்கஞ்செய்து, பகைவரைக்கொல்லும் வேலையுடைய மகாராஜாவே! இராச்சியபரிபாலனஞ் செய்ய வாருங்களென்று சொல்லிப்பிரார்த்திக்க, வில் உருவம் நாட்டப்பெற்ற அழகிய கொடியையுடைய சேரமான்பெருமானாயனார் சிவபெருமான் திருவடிகளைப்பணிந்து விடைபெற்றுக்கொண்டு குறைவில்லாத பெருமை வாய்ந்த மேற்றிசையை நோக்கி, ஆசையோடு செல்ல நினைத்தார். (௭௫)

## வேறு.

இவ்வவனிக்கண்வந்தகாயமுமிறந்திடாம
லவ்வைதான்கயிலைக்கேகுங்காலமுமறிவிற்கண்டாள்
செவ்வழிவண்டுபாடுஞ்செழும்பொழின்மணிமுத்தாற்றின்
மெய்வளர்நீரவாசம்புரிபலன்விளைவுபெற்றான்.

(இ-ள்) இந்த வுலகத்தில் எடுத்த சரீரத்தோடு கயிலாயத்துக்குச்செல்லுங்காலத்தை ஔவை தனது அறிவில் உணர்ந்தாள். செவ்வழி என்னும் பண்

லைப்போல், வண்டுகள் பாடுகின்ற வளப்பமுள்ள சோலை சூழ்ந்த திருமணிமுத்தாநதி தீரத்தில் மெய்மையான தலவாசம் செய்த பிரயோசனத்தை இம்மை யி... பெற்றான். எ-று. (௭

அர... ரவாலயஞ்செய்செங்கலையாற்றிவிட்டு
விரிகுளத்திற்பொன்கொண்டார்கயிலைக்கேமேவுங்காலம்
பொருனையாற்சேரனுஞ்செல்வன்றுணைக்கொடுபோகத்தானுந்
திருவுளத்தெண்ணிள... ளாற்சேரன்பாற்செ... சொல்வான்.

(இ - ள்) சிவாலயப்பணிக்கு வைத்திருந்த செங்கல்லைச் சிவபெருமான் பொன் ஆக்கித்தர, அதை அவர் ...ட்டளைப்படியே விருத்தாசலத்தில் ஓடும் மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர்க் கமலாலயம் ... திருக்குளத்தில் அந்தப் பொன்னைகவே யெடுத்த சுந்தரமூர்த்திசுவாமி திருக்கைலாயத்திற்கு எழுந்தருளுஞ் சமயத்தில் தாமிரபருணியையுடைய சேரமான் பெருமாணாயனாரும் எழுந்தருளுவார். அவர்களைத் துணையாகக்கொண்டு ஔவை தானும் திருக்கை...யத்திற்குப்போகத் திருவுளத்தில் நினைத்துச் சேரமான்பெருமாணாயனாரிடஞ் சென்று சொல்லலானாள். எ-று. (௭

ஆதிதான்பகவற்கூடியளித்...னனெனையிவ்வூரி
னேதமில்சென்னபூமியிதுமகாதலமேகண்டாய்
காதலாய்க்கஞ்சவெற்பிற்கருநெல்லிக்கனியைச்சித்த
ர்தலாற்பெற்றான்...லத்ததிகமானென்னும்வேந்தன்.

(இ - ள்) ஆதி யென்பவள் பகவனென்பவனோடுசேர்ந்து என்னை இத்தலத்திற்பெற்றாள். இது எனது ஜெனனநாடு; அன்றியும் இது மகிமை தங்கிய தலமாம். இந்தச்சேலத்தில் அதிகமான் என்னும் அரசன் கஞ்சமலையிலுள்ள கருநெல்லிக்கனியை ஒரு சித்தர் கொடுக்கப்பெற்றான். எ-று. (௭

அக்கனிதானுன்னதேயருளினனெனக்கேயீந்தான்
மிக்கவிந்நாடுபோலவிளங்கியநாடுமுண்டோ
திக்குநின்போலும்வேந்தரில்லையாற்செய்தேன்வாச
மிக்கணநின்பாலொன்றுசொலவந்தேனிதுமறுத்தே.

(இ - ள்) அவ்வரசன் அப்பழத்தைத் தான் தின்னாமல் அன்பாய் ...க் கொடுத்தான். இந்நாட்டைப்போல் ...த்திபெற்ற நாடு வேறு இல்லை. உன்னைப்போலும் ஜனங்களுக்கு ஆதரவு செய்யும் அரசர் வேறில்லை. ஆகையால்



இந்தத்தலத்தில் யான் வாசம் செய்தேன். இச்சமயம் உன்னிடத்தில் ஒரு வார்த்தை சொல்லவந்தேன்; இதைத்தடுக்காதே. எ-று. (௭௯)

பயில்புகழொற்றியூரிற்சங்கிலிபரவைகொண்கன்
கயிலைக்கேயேகுங்காலமணிந்துனைக்கைவிட்டேகான்
மயலறுதுணைநீராகவருகின்றேன்கொடுபோகாயென்
றியையவேயவ்வைசொல்லவெதிர்மொழிசேரன்...ல்வான்.

(இ - ள்) ... ...லியையும், திருவாரூரில் பரவையையுந் திருமணஞ்செய்து கொண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலாயத்துக்கு எழுந்தருளும் சமயம் நெருங்கிவிட்டது. தோழனாகிய உன்னைக் கைவிட்டுப்போகமாட்டார். நீங்களே நல்ல துணைவர் ஆவீர்கள்; யானும் வருகிறேன்; என்னையும் கூட்டிக்...கொண்டு போகவேண்டுமென்று ஔவையார் பொருத்தமாகச்சொல்ல, சேரமான் பெருமாணாயனார் விடை சொல்லத்தொடங்கினார். எ-று. (௮௰)

வேறு.

ஔவைநீதாயுன்சொன்மறேனருமை...யுடைத்துநெடுந்தூர
மெவ்வமுறுமியாநடந்துபோ...யாதி...ப்பாமென்மெலவே
பவ்வவாடைமருங்குடுத்த...ரில்வரல்போலன்றெனவே
செவ்விதுணர்த்தினிலாது...சென்றான்வினைவின்மகிழ்சிறக்க.

(இ - ள்) ஔவையே! நீ யெனது தாய் போல்வாய்; ஆதலால் உனது வார்த்தையை மறுக்கமாட்டேன்; ஆயினும் கைலைக்குச்செல்லும் வழி கஷ்டமானது; நீண்ட தூரமாயுமிருக்கிறது; நீ வருத்தமடைவாய்; நம்மால் நடந்து போக முடியாது; மெள்ள மெள்ளப்போனாலும் களைத்துப்போவோம். சமுத்திரத்தைவஸ்திரமாக இடையிற்றரித்தவுலகத்தில் வழி நடப்பதுபோல் அல்லவென்று பொருத்தமாகச்சொல்லிச் சேரமான் பெருமாணாயனார் மனக்களிப்புடன் சீக்கிரமாகப்போய் விட்டார். எ-று. (௮௧)

கொந்துவிரியுமலர்ச்சோலைமலைநாட்டின்னகொடும்படைக்கை
மைந்தர்கலினவான்பரிகண்மதநீர்சொரிக்குன்றங்கண்
முந்துநெருங்கியெதிர்கொள்ளமூதூர்திருவஞ்சைக்களத்திற்
சிந்தையுருகவந்தானைவணங்கித்தெரிசித்துளங்களித்தான்.

(இ - ள்) மலர்ந்த மலர்க்கொத்துகளையுடைய சோலைகள் சூழ்ந்த மலைநாட்டிலே இயத்தில் கொடிய ஆயுதங்களைக்கையில் ஏந்திய ஆடவர்களும், கடிவாளம்பூட்

டிய சிறந்த குதிரைகளும், மும்மதங்களை அருவிபோல் ஒழுக்கா நின்ற மலை போன்ற யானைகளும், முன்னே நெருங்கி வந்து தம்மை எதிர்கொண்டழைக்கச் சேரமான்பெருமாணுயனுர் பழைய நகரமாகிய திருவஞ்சைக்களத்துக்கு வந்து [illegible]யில் எழுந்தருளியிராநின்ற சிவபெருமானைத் தெரிசித்து மனமுருகித் துதித்து வணங்கிச் சந்தோஷம் அடைந்தார். எ-று. (௮௨)

உரிமையரசி[illegible]கொடுங்கோளூர்க்குற்றபெருஞ்சேனைகள்சூழ்
விரிவுகடல்போ[illegible]முழங்கவீதிபுகுந்து[illegible]வலமா[illegible]
திருவின்விளங்குமணி[illegible]ரியிற்செம்பொற்சிவிகையினிழிந்[illegible]
யரனினைத்தங்குவகை[illegible]யரியாசனத்திலமர்ந்தனனுல்.

(இ - ள்) நால்வகைப்பெருஞ்சேனைகள் சூழவும், கடல் போல் வாத்தியங்கள் முழங்கவும், சொந்தமான அரசு செய்யும் [illegible]தானியாகிய கொடுங்கோளூர் வந்து, ராஜ வீதியிற் பிரவேசித்துப்பட்டணத்தைப்பிரதக்ஷிணம் செய்து, ஒளி மிகுந்த பொன்னுல் அலங்கரித்த பல்லக்கை விட்டு இறங்கிச் செல்வம் திகழும் அழகிய அரண்மனையிற் புகுந்து சிவபெருமான் திருவடிகளைத் தியானித்துச்சந்தோஷத்தோடு சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். எ-று.

அஞ்சலாகச்சைவம[illegible]றயவரை[illegible]றுவித்தினந்தோறு
மஞ்சுண்டவற்குமஞ்சனநீராட்[illegible]மணிமுத்தாநதிநீர்
விஞ்சுமன்பாற்றருவித்துவிளங்குங்கொடுங்கோளூர்த்தவத்தாற்
செஞ்சொல்பாடிப்பரமனடித்திருத்தொண்டின்சீர்முறைநின்ருன்.

(இ - ள்) பலவளங்களால் விளங்குந்திருக்கொடுங்கோளூரில் வீற்றிருக்கின்ற சிவபெருமானுக்குத் தினந்தோறும் திருமஞ்சன நீராட்டும் பொருட்டுச் சைவபிராமணர்களை அஞ்சலாக வைத்துத்திருமணிமுத்தாநதியிலிருந்து தெண்ணீர் தருவித்து அபிஷேகம் பண்ணித் தபோபலத்தால் செந்தமிழ்ப்பாடல் பாடிச் சிவபெருமான் திருவடிக்குரிய திருத்தொண்டின் சிறப்பான நெறியில் சிறிதும் தவருது நிலைபெற்றிருந்தார். எ-று. (௮௪)

சுருக்கரியவெண்ணெய்நல்லூர்தம்மைப்பாடென்னப்
பரிவிற்பித்தாவென்றெடுத்துப்பாடுஞ்சைவசிகாமணியார்
கருதித்துணைக்கொள்சேரலனைக்காணும்விருப்பாயாரூரி
லரனைப்பணிந்துவிடைகொண்டங்ககன்ருர்சென்ருரொருகொங்[illegible]

(இ - ள்) தேவர்களும் தெரிசித்தற்கரிய திருவெண்ணெய் நல்லூரில் வீற்றிருக்கும் சிவபெருமான் தம்மைப்பாடும்படி கட்டளையிட, அன்போடு பித்தா



வென்றெடுத்துத்தேவாரம் ஓதிய சைவசமயாசாரியாராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள் மதித்துத் தமக்கு நண்பாகக்கொண்ட சேரமான்பெருமாணுயனுரைப் பார்க்க விருப்பங்கொண்டு, திருவாரூரில் சிவபெருமான் திருவடிகளை வணங்கி விடைபெற்று அப்பதியை விட்டுப் புறப்பட்டுக் கொங்குநாடு வந்து சேர்ந்தார். எ-று. (௮௫)

ஆலைமுழக்கமள்ளர்வயலறையின்முழக்கமறைமுழக்க[illegible]ம
வேலைமுழக்கஞ்சிலைக்காமன்வெற்றிமுழக்கமண[illegible]செய்வார்
மாலைமுழக்[illegible]ன்னுமயிலின்முழக்கஞ்சிவன்கோயிற்
காலைமுழக்கமிகுபாவநாசநகரைக்கண்ணுற்ருர்.

(இ - ள்) கரும்பாலையின் சத்தமும், வயலில் பள்ளர்களுடைய பறையொலியும், வேதகோஷ்டியும், தொழில் புரிவோருடைய இரைச்சலும், கரும்புவில்லையுடைய மன்மதனுடைய வெற்றியோசையும், கல்யாணஞ் செய்வோர்களது வீடுகளில் மாலைப்பொழுதில் மிகுந்து விளங்கும் மங்கல வாத்திய முழக்கத்தை மேககர்ச்சனை யென்று கருதும் மயில்களின் ஆரவாரமும், சிவாலயத்தில் காலைப்பொழுதில் மிகுந்து விளங்கும் ஆடல் பாடல் முதலான கோஷ்டியும் [illegible]சேடமாகப்பெற்ற பாவநாசமென்னும் பதியைப்பார்த்தார். எ-று. (௮௬)

வேறு.

தெண்டனிட்டெழுந்துநின்றுசிந்தையன்புபொங்கவே
மண்டுகாதலாகியேமரம்விலங்குபுட்குல
மெண்டிசாமுகங்களுமிலி[illegible]கருப[illegible]கவே
கண்டுகண்களிப்படைந்துகயிலையென்னவுன்னிஞர்.

(இ - ள்) மனதில் அன்பு வெள்ளம்போல் பெருக நெருங்கிய ஆவலுடையவராய் மரங்களும், மிருகங்களும், பலவகைப்பக்ஷிகளும், எட்டுத்திக்குப்புறங்களும் சிவலிங்க வடிவமாய் விளங்கக்கண்டு தெரிசித்துப் பணிந்து எழுந்து நின்று ஆனந்த மடைந்து, இத்தலம் கைலாயமென்று கருதினர். எ-று. (௮௭)

வண்டுகிண்டுமாலையோதிமாதரார்குருக்கண்மார்
தொண்டுசெய்யுமன்பர்கற்றகருதியந்தணாளர்கள்
கொண்டல்போன்முழங்குபல்லியங்கறங்குகொள்கையா
யண்டைசூடியென்றுவந்தெதிர்ந்துதாள்வணங்கினர்.

(இ - ள்) வண்டுகள் கிளறும் பூமாலையணிந்த கூந்தலையுடைய ஸ்திரிகளும், குருக்கள்மார்களும், அன்பு செய்யும் தொண்டர்களும், வேதாகமங்களைக்கற்

(இ - ள்) வேதங்களும் காணுதற்கரிய சிவபெருமான் கைலாயகிரியிலிருக்கும் பரிசுத்தமான சிவகணத்தலைவர்களைப்பார்த்து நீங்கள் துரிதமாகப்போய் வெள்ளை யானையின் பேரில் வன்றொண்டனை ஏற்றிக்கொண்டு இங்கு அழைத்துவாருங்களென்று கட்டளையிடச் சிவகணத்தலைவர்கள் கைலாயபதியின் திருவடிகளைப்பணிந்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு அன்புடன் திருவஞ்சைக்களத்தையடைந்து பரமசிவத்தின் திருக்கோயிலின் முன்பாக. எ-று. (௧௪)

வந்துபணிந்தார்கைலைக்கேவருதற்கருளப்பாடென்னச்
சுந்தரர்க்குச்கைகூப்பிச்சொல்லவெழுந்தார்சேரலனைச்
சிந்தைநினைந்தார்களிற்றெருத்தஞ்சேர்ந்தார்சிவனைத்துதித்துருசி
யந்தரத்திலெழுந்தேகவதனையறிந்தான்சேரலனும்.

(இ - ள்) வந்து வணங்கி, சுந்தரமூர்த்தி நாயனார்க்குமுன் கை குவித்து நின்றுதேவரீரைத் திருக்கைலாயத்துக்கழைத்து வரும்படி சிவபெருமான் கட்டளையிட்டிருக்கிறதென்று விண்ணப்பஞ் செய்து வன்றொண்டர் உடனே எழுந்து சேரமான் பெருமாளநாயனாரைத்திருவுளத்தில் நினைத்து அந்த வெள்ளை யானைமேல் ஏறி மனமுருகச்சிவபெருமான் திருவருளைத்துதித்துக்கொண்டு ஆகாயமார்க்கமாக எழுந்தருள, அப்படி எழுந்தருளுவதைச்சேரமான் பெருமாணாயனாருந்தெரிந்துகொண்டார். எ-று. (௧௫)

கவரிவீசச்சிலமாதர்கற்பகப்பூமழைபொழியத்
திவலைவாரிமுழக்கம்போற்சிலம்பவானத்துந்துமிக
ளுவமையில்லாக்கணநாதருபசாரம்மிகக்கூறச்
சிவனுலகம்வழிக்கொண்டுசென்றார்மகிழ்ந்துதிசைபோற்ற.

(இ - ள்) சில மாதர்கள் சாமரம்போடவும், தேவர்கள் கற்பகப்பூமாரி பொழியவும், வானதுந்துமிகள் கடலொலிபோல் முழங்கவும், ஒப்பில்லாத சிவகணத்தலைவர்கள் உபசாரவார்த்தைகள் சொல்லவும், எல்லாத்திசைகளும் போற்றும்படி சுந்தர மூர்த்தி சுவாமிகள் களிப்போடு திருக்கைலையை நோக்கிச்சென்றார். எ-று. (௧௬)

மனத்தின்வேகக்கொப்பாவல்வார்மாவிலேறவைத்தெழுத்தை
நினைத்துக்காதிலோதவுமேகிகரிக்குவெள்ளையானைமுன்னே
யனைத்துமுணர்ந்தசுந்தரனாரன்பர்வருகவென்றருள
வினைத்துன்பம்வீழ்த்தேகுகின்றான்கைலைக்கிரிக்கேவில்லவனும்.



(இ - ள்) மனோவேகம் போலும் வேகத்தையும், சுத்திரித்து நீண்ட பிடரி மயிரையுமுடைய குதிரை மேல் ஏறும்படி திருப்பஞ்சாட்சரத்தை அந்தக் குதிரையின் காதில் ஓதிய மாத்திரத்தில், அது தனக்கு நிகரில்லாத வெள்ளை யானைக்கு முன்னே சென்றது. எல்லாவற்றையும் உணர்ந்த சுந்தரமூர்த்திசுவாமிகள் அன்பரே! வருக! என்று திருவாய் மலர்ந்தருள வில்கொடியுடையவராகிய சேரமான் பெருமாணாயனாரும் தமது பிறவித்துன்பங்கள் எல்லாவற்றையும் ஒழித்துத் திருக்கைலாயத்திற்குச் செல்லுகின்றார். எ-று." (௧௭)

## வேறு.

பின்றமதிருமேம்வெள்ளைப்பிள்ளையார்திருமுன்பேறி
நின்றதருமவ்பாலவ்வைநீடிருக்கைலைக்கேகச்
சென்றுனைநினைத்தேசேரன்செல்கின்றான்சுந்தரன்பின்
குன்றுபயநுவாமிநின்றனும்பிட்டுக்கூறிநிற்க.

(இ - ள்) நீண்ட கைலாயத்திற்குப் போகத் தன்மனதில் நினைத்த ஆவலோடு ஒளவை இளம்பிறையணிந்த பிள்ளையாகிய விநாயகர், சந்நிதானத்திற் சென்று சுவாமி! சேரமான் பெருமாணாயனார் தக்கதுணையென்றெண்ணிச்சுந்தர மூர்த்திசுவாமிகள்பின் கைலாயத்திற்குப்போகின்றார். இதுவே அடியேன் குறையைத்தீர்க்கும் வரம் என்று கும்பிட்டு விண்ணப்பஞ்செய்து நிற்கையில், எ-று. (௧௮)

மூக்கண்மூம்மதக்களோர்மொழிவருமையார்ந்பூசை
யிக்கணங்கொள்ளவுள்ளமெண்ணினேனவிருப்போடென்னைத்
தக்கதுதான்றுணைமூத்திப்போதேனைவன்மையுடனீக்கொம்புள்ள
மிக்கவர்சேரன்முன்னுமேவுவிப்பேனென்ன

(இ - ள்) சொல்லுதற்கரிய பூமொட்டுக்கொண்டு இந்த நிமிஷம்செய்யும் பூசையை யேற்றுக்கொள்ள நினைக்கிறேன், உன் இஷ்டம் என்ன? என்று மூன்று நேத்திரங்களையும், மும்மதங்களையும் உடைய யானைமுகக்கடவுள் திருவாய்மலர்ந்தருள, அதற்கு ஒளவை தனக்குத்தம்பியான துணை முன்னதாய்ப் போய்விடுமென்று விண்ணப்பஞ்செய்ய, ஒற்றைக் கொம்புடைய விக்கினேசுரர், முன்னே செல்லும் சேர ராஜனுக்கு முன்னதாக உன்னைக்கைலாயத்தில் சேர்த்துவிடுகிறேன் என்று மறுமொழிசொன்னார். எ-று (௧௯)

எவ்வண்ணமேவிப்பாவெணவவ்வையிடும்பச்சொல்வா
ரவ்வழியவர்க்குத்தாமணிந்தாகும்வழிபோன்றுவன்டு
தெய்வரேர்சுந்தரருஞ்சேரற்றுமறிவொருதாக
ளைவயின்கனிபோற்காட்டக்கடிதுசெய்பூசையென்ன.

(இ - ள்) எந்த விதத்தினால் அவ்வாறு விரைவிற் சேர்ப்பீரென்று ஔவை கேட்க, அந்த வழி அவர்களுக்கு மிகவும் தூரமானது; மிகச்சமீபமான வழி ஒன்றுளது; அது தெய்வத்தன்மையுள்ள சுந்தரனுக்கும் சேரனுக்கும் தெரியமாட்டாது; அதை யுனக்குயான் உள்ளங்கை நெல்லிக்கனி போல் காட்டுகிறேன். நீ சீக்கிரத்தில் என்னைப்பூசிப்பாயென்று கணேசர் திருவாய் மலர்ந்து அருளினர். எ-று. (க00)

அன்புளமுருகிப்பொங்கவபிடேகத்திரவியங்க
ளென்பலவையாவுந்தந்தேவிதிப்படியிசையும்வண்ண
முன்புறத்தூபதீபமொழிசந்தனதிமாலை
யின்புறவெல்லாஞ்செய்தான்நிவேத்தியமியையச்செய்தான்.

(இ - ள்) மனங்கரைந்து அன்புமிகுந்து அபிடேகஞ்செய்வதற்குரிய பொருள்கள் எல்லாவற்றையுஞ் சேகரித்து ஆகமத்திற்குறித்த விதிப்படி அபிடேகம் செய்து, பூம்பட்டாடைசாத்தி, சந்தனப்பொட்டிட்டு, பூமாலை சூட்டி, அர்ச்சித்துப் பின்பு தூப தீபங்கொடுத்து, சந்தோஷத்தோடு நிவேத்தியமும் செய்தான். எ-று. (க0க)

வடவரையேடதாகமருப்பெழுத்தாணியாகப்
படியுளோருய்யும்வண்ணம்பாரதம்பொறித்தாய்போற்றி
கடகரிமுகத்தாய்போற்றிகந்தற்குமூத்தாய்போற்றி
யடியனேன்றன்னையாளுமங்கரபோற்றிபோற்றி.

(இ - ள்) மகமேருவே ஏடாகவும், கொம்பே எழுத்தாணியாகவும், இந்தப் பூலோகத்திலுள்ளவர்கள் பிழைக்கும்படி பாரதமென்னும் இதிகாசத்தைத்திருக்கரத்தாலெழுதிய தேவே! சரணம்; மும்மதங்களையுடைய யானைமுகக்கடவுளே! சரணம்; கந்தசாமிக்கு முன் அவதரித்த கணேசனே! சரணம்; நாயினேனையடிமையாகக்கொண்ட ஐந்து கரங்களையுடையானே! சரணஞ் சரணம். எ-று.

மறைமுதலாகியீறுமன்னுயிர்க்குயிராய்வைகு
நிறைதருமூலமாகிநிரஞ்சனமாகிநின்றாய்
முறையெனக்கருமமேனுமுன்னைச்சிந்தியாரோற்
குறையுறச்செய்வாய்முன்னிற்கொடுப்பைநீவரங்களெல்லாம்.

(இ - ள்) வேதத்துக்கு முதலாகியும், அந்தமாகியும், நிலைபெற்ற சகலவுயிர்களுக்கும் உயிராகியும், நிறைந்த மூலப்பொருளாகியும், பரிபூரணசொரூபமாகியும் விளங்குகின்றாய்! எந்தக்காரியத்தையும் முறைமையாக உன்னை முதலில்



தியானஞ்செய்யாமல் ஒருவர் தொடங்கினால் அது நிறைவேறாமற்போகச் செய்வாய்! உன்னைச்சிந்திப்பவர்களுக்கு எல்லா வரங்களையும் முன்னின்று கொடுப்பாய்! எ-று. (க0உ)

மலைமகடிருமுலைப்பால்மணத்திடும்வாயாய்போற்றி
அலைவிடமுண்டோர்தம்மைவலம்வந்தாயருங்கனிக்கிவ்
வுலகிடையன்குவார்தமுள்ளத்திலுறைவாய்போற்றி
நிலைபெறுவரங்கொள்வோர்கணினையமுன்னிற்பாய்போற்றி.

(இ - ள்) பார்வதியம்மையின் திருமுலைப்பால் மணம் வீசும் வாயையுடையோனே! சரணம்; திருப்பாற்கடலிலுண்டான விஷத்தை உண்டருளிய சிவபெருமானை மாங்கனியைப்பெறும்படி பிரதக்ஷணம் செய்தவனே! சரணம்; இப்பூவுலகத்தில் அன்போடு தியானிப்பவர்களுடைய மனதில் வாழ்பவனே! சரணம்; அழியாத வரங்களைப்பெறத்தக்க அடியார்கள் நினைக்கும்போது எதிர்நிற்பவனே! சரணம். எ-று. (க0ங)

என்னவேதுதிகள்கூறியிறைஞ்சியவவ்வைதன்னைத்
தன்னொருதுதிக்கையாலேதடவியேறுனியிலேந்தி
யுன்னியகருமம்வேறொன்றுண்டெனிலோதுகென்ன
வென்னையேந்தியதிப்பாரோரறியுமாறினிதுசெய்வாய்.

(இ - ள்) இவ்விதமாகத்தோத்திரங்கள் சொல்லி வணங்கிய ஔவையை ஒப்பற்ற துதிக்கையினால் தடவி நுனியில் தூக்கிக்கொண்டு நீ கோரும் காரியம் இன்னும் இருந்தால் சொல் என்று கேட்கவும், என்னை உயரமாகத்தாங்கிப் பிடித்ததை இவவுலகத்தார் காணும்படி செய்தருளுவாய். எறு. (க0ச)

என்றவுமௌவைசொற்கேட்டின்னருள்சாந்தமென்மே
னன்றெனவலம்புரிக்கைக்கணேசனுர்நாமமாக
வின்றுதொட்டெவரும்போற்றவிக்கரமிருக்குங்கண்டாய்
பொன்றிகழ்பூவின்மாரிபொழிந்தனரிமையோரெல்லாம்.

(இ - ள்) என்று ஔவை சொன்ன வார்த்தைகளைக்கேட்டு, மேலும் இனிமையானகருணை மிகுந்து உனதெண்ணம் போற்செய்கின்றேன்; வலம்புரிக்கைக்கணேசர் என்று எனக்கு நாமம் வழங்கும்படி, இன்று முதலாக என்னுடைய இக்கரத்தில் வலம்புரிச்சங்கு விளங்கும். இதை நீ அறியக்கடவாய் என்று விநாயகர் திருவாய் மலர்ந்தருளத்தேவர்களெல்லாரும் பொன்போலப் பிரகாசிக்கும் பூ மழை பொழிந்தார்கள். எ-று. (க0ரு)

வேறு.

கருணைநிறைபுங்கடலனையனைம்மாமுகத்தோனவ்வையைக்கொண்
டருணநிறத்தன்றுதிக்கையாலண்டகோடிக்கப்பால்வெள்
வருணவரைக்கோபுரமுகப்புவாயில்வைக்கவருள்கொண்டா
டருணமாதுபங்கன்வரைச்சாரற்சேரன்வரக்கண்டாள்.

(இ-ள்) கருணை நிறைந்த கடலுக்கொப்பாகிய யானைமுகக்கடவுள் மிகவுஞ் சிவந்த நிறமுள்ள தனது துதிக்கையினால் ஒளவையை ஏந்திச் சகல அண்டங்களுக்கும் அப்புறத்தில் விளங்கும் கைலைமலைக்கோபுரத் தலைவாசலில் வைக்கும்படியான அருளினைப் பெற்றவளாய் இளமைப்பருவமுள்ள பார்வதிபங்கனாகிய சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கயிலாயபர்வதத்துக்குச் சமீபமாகச் சேரராஜன் வருவதைப்பார்த்தாள். எ-று. (௧0௭)

வாளார்செங்கைவில்லவர்கோன்வருகவென்னவிக்கவலுந்
தாளால்வரமாட்டாயென்றேனெனக்குமுன்னேசார்ந்திருந்தாய்
கோளார்துணையார்வியப்பென்றுகடகன்கூறவவ்வைசொல்வாள்
கேளாய்குதிரைக்குங்கர்தங்கிழவிக்குங்காதம்மென்றாள்.

(இ-ள்) சிவந்தகரத்தில் வாளாயுதத்தைத் தரித்தவில்லவருடைய சனே! வருக என்று ஒளவை சொல்ல, அவ்வேந்தன், நீ காலால் நடந்து வர முடியாதென்று நினைத்தேன்; எனக்கு முந்தியே நீ இவ்விடம் வந்திருக்கிறாய் இது ஆச்சரியம்! வலிமையான துணை யார்! என்று சேரமான் பெருமானுயனை கேட்கவும், அரசே! நீ கேள் குதிரை சவாரி செய்து வந்த உனக்கும் கர்தவழி கிழவியாகிய எனக்கும் காதவழி; என்று ஒளவை மறுமொழி சொன்னாள் எ-று. (௧0௮)

சிந்தாமணியினொளிருந்திருக்கோபுரத்தின்வில்லவர்கோன்
வந்தான்றடையாய்நின்றிடலும்வள்ளலருளப்பாட்டதனால்
முந்தாதரவிற்றடுத்தாட்கொண்டமுறைமையுடையவன்றொண்டர்
கொந்தார்கொன்றையணிந்தபிரான்கோயிற்புகுந்தார்திருமுன்பு.

(இ-ள்) சிந்தாமணியின் கூட்டம் ஒளி வீசும் திருக்கோபுரத்தருகில் சேரராஜன் வந்து உள்ளே செல்லக்கூடாமல் நந்திதேவரால் தடுக்கப்பட்டு வெளியிலேயே இருந்திடவும், சிவபெருமான் திருவருளினால் முன்பு தன்னைத் தடுத்தாட்கொண்ட தன்மையை நினைத்துச் சுந்தரமூர்த்திநாயனார் கொத்துகளாக



அடர்ந்திருக்கும் கொன்றைமாலையைத்தரித்த பரமசிவம் எழுந்தருளியிருக்கும் ஆலயத்திற்குள் சென்று சந்நிதியிலிருந்து, எ-று. (௧0௯)

நயனமூன்றுங்கருங்களமுநகுவெண்டலையுமான்மழுவும்
பயிலுமணிப்பன்னகப்பூணும்பனிவெண்மதியுஞ்சடைமுடியு
மியலுங்கொன்றைநறுந்தாருடைத்தன்னார்களெண்ணிலரா
லயலங்கொருபாலெதிர்நின்றேயாவைகாணாக்கன்றொத்தார்.

(இ-ள்) மூன்று கண்களையும், கறுத்த கண்டத்தையும், தலைமாலையையும், மானையும், மழுவையும், மாணிக்கத்தையுச்சியிலுடைய சர்ப்பாபரணத்தையும், சீதளமும் வெண்மையுமான இளஞ் சந்திரனையும், சடைமுடியையும், வாசனை பொருந்திய கொன்றைமாலையையும், உடைய ருத்திரகணத்தவர்கள் கணக்கிட்டுச்சொல்ல முடியாதபடி அங்கிருந்ததைக்கண்டு, ஒரு பக்கமாக எதிர் நின்று பசுவைக்காணாத கன்றைப்போலிருந்தார். எ-று. (௧௧0)

விரைவாயங்கைமலர்கூப்பவீழ்ந்துவீழ்ந்துபணிந்தெழுது
மருவார்பதிகத்தமிழ்பாடவந்தாயோசுந்தராவென்று
திருவாய்மலரவாய்புதைத்துச்சேரன்வந்தான்விண்ணப்ப
மருளாயென்னவேன்வந்தானென்னவுலாவொன்றதுகொணர்ந்தான்.

(இ-ள்) துரிதமாக அழகிய கைமலர்களைக் குவித்துச் சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிட்டு எழுந்து, புகழென்னும் வாசனை நிறைந்த தேவாரம் ஓதவும், "சுந்தரா வந்தாயோ" என்று பரமசிவம் திருவாய் மலர்ந்தருள, வன்றொண்டர் மிகுந்த வணக்கத்தோடு [illegible] வாயைப் பொத்திக்கொண்டு சேர ராஜனும் வந்திருக்கிறான்; உன்னைவர உத்தரவு வேண்டுமென்று விண்ணப்பம் செய்யச்சிவபெருமான் அவன் இங்கு வந்த காரணம் ஏதுவென்று கேட்க, உலா ஒன்றுகொண்டு வந்திருக்கிறான். என்று சொன்னார். எ-று. (௧௧௧)

வருகவென்றுபெருங்கருணைவாரிதிருவாய்மலர்ந்திடலுந்
தருவைநிகர்க்கைச்சேரலனுந்தடையைநீங்கியுட்புகுந்து
திருமுன்பெய்திவீழ்ந்திறைஞ்சிச்சிந்தையன்புபெருக்கெடுத்தே
யுருகவடியேனுலாவொன்றுகொணர்ந்தேனென்னவோதுகின்றான்.

(இ-ள்) வருகவென்று பெருங்கருணைத்தடங்கடலாகிய சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளக்கற்பக விருக்ஷத்தைப்போல் வரையாது கொடுக்கும் கரத்தையுடைய சேர ராஜன் நந்திதேவருடைய தடையினின்று நீங்கித்திருக்கோயிலுக்குள் வந்து சந்நிதியைக்கண்டு பணிந்துபோற்றி அடியேன் உலா

வொன்று கொண்டுவந்தேனென்று பத்திவெள்ளம் பெருகி மனம் உருகும்படி அதை வாசிக்கத்தொடங்கினர். எ-று. (௧௧௨)

ஆதியுலாவையரங்கேற்றியருளைப்பெற்றேவிளங்குகண
நாதராகிச்சிவபோககண்ணியுலாவைத்திருப்பிடவூ
ரோதுசாத்தனர்க்குதவியுலகத்திதனைவிளக்குமெனக்
கோதையார்தம்பெருமானுமகிழ்ந்தானுள்ளங்குளிரவே.

(இ-ள்) கோதை என்னும் நகரவாசிகளுக்குத் தலைவரான சேரமான் பெருமாளுயனர் தாம்பாடிய திருக்கைலாச ஞானவுலாவென்னும் நூலை உலைவச்சிவபெருமான் சந்நிதானத்தில் அரங்கேற்றல் செய்து அநுக்கிரகம் பெற்றுவிளங்கும் கணங்களுக்குத்தலைவராகிச் சிவானுபவச்செல்வம் அடைந்து யாவரும் புகழ்ந்து பேசும் திருப்பிடவூர் சாத்தனாரிடத்தில் கொடுத்து இதை உலகத்தில் விளங்கச்செய்யும் என்று திருவுளம் குளிர்ந்து மகிழ்ந்திருந்தார். எ-று. (௧௧௩)

ஆதலாலம்மணிமுத்தாநதியின்பெருமைக்களவில்லை
யோதமுடியாதேரர்திவலையுற்றுலொருவனுடலத்திற்
பாதகங்கள்விட்டகலும்பரஞானத்தையுண்டாக்கும்
கோதையார்தம்பெருமானைக்கரியாய்வையங்கூறிடுமே.

(இ-ள்) ஆகையால் மணிமுத்தாநதியின் மகிமைக்கு அளவில்லை; அவைகளையெல்லாம் எடுத்துச்சொல்ல முடியாது; சுருக்கமாய்ச்சொல்லுமிடத்தில் அதின் ஒரு துளி சலத்தை ஒருவன் [illegible] படி பெறுவானுனால் அது அவன் செய்த பாவங்களையும் நீங்கப்பண்ணிச்சிவஞானத்தையடையும்படி செய்யும். இதற்குச்சாட்சியாகச் சேரமான் பெருமாளுயனரைச்சான்றோர் எடுத்துச்சொல்லுவார்கள். எ-று. (௧௧௪)

நதிநீரத்தில்வளர்[illegible]களின்வாசமருவியதால்
மதியங்குலத்தமன்னவனும்வரிகொள்வேங்கைக்கொடியானு
விதியின்முறையாலுடல்விட்டுமேலாம்பதமாம்பெறற்கரிய
கதியைப்பெற்றார்நதிமகிமைபுவிமேல்விளங்கக்காட்டியதே.

(இ-ள்) திருமணிமுத்தாநதிக்கரையிலுள்ள வளப்பமான சேலமாநகரில் வாசம் செய்த பயனுகச்சந்திரகுலத்தரசனுகிய வீரபாண்டிய ராஜனும் வரிகளுள்ள புலிக்கொடியுடைய உத்தமச்சோழ ராஜனும் விதியின் நியமப்படி சரீரம் நீங்கியபோது அடைவதற்கருமையான சிறந்த மோக்ஷ இன்பத்தைப்பெற்றார்



கள். அதனுல் இந்தத்திருமணிமுத்தாநதி தன்பெருமையை இவ்வுலகத்தவர்களுக்கு நன்றாய் விளக்குகின்றது. எ-று. (௧௧௫)

சங்கமகிழக்கிழிவீழத்தமிழைப்பாடுந்தெய்வவவ்வை
திங்கள்சூடிகோயிலிற்போய்த்திருமுன்பெய்தவெனையின்று
ளிங்குவருகவென்றுரைக்கவப்பாவந்தேனென்றுரைத்தே
அங்குமகிழ்ந்தேபணிந்திருந்தாளென்றுநந்தியருள்செய்தான்.

(இ-ள்) சங்கத்தார்கள் சந்தோஷப்படவும் பொன் முடிப்பு அறுந்து விழவும் தமிழ்ச்செய்யுள் பாடியருளிய தெய்வத்தன்மையுள்ள ஔவை பிறைச்சந்திரனைத்திருமுடியிற்றரித்த கைலாயபதியின் ஆலயத்துக்குட்புகுந்து சந்நிதியடைந்தவுடன் தேவதேவன் "அன்னையேவருக" என்று திருவாய் மலர்ந்தருள ஔவை சிவபெருமானைப்பார்த்து "அப்பா வந்தேன்" என்று விண்ணப்பஞ்செய்து அவரது திருவடிகளை அன்போடு வணங்கி இன்புற்று வாழ்ந்திருந்தாள் என்று நந்திதேவர் சனற்குமாரனுக்கு அருளிச்செய்தார். எ-று. (௧௧௬)

நதிச்சருக்கம் முற்றிற்று.

---

# சரவதிசருக்கம்.

முந்தையிம்மணிமுத்தமாநதிப்புனன்மூழ்குறலான்
வந்தமாதொருசரவதிதன்கதைவகுப்பாய்
நந்தியெம்பெருமான்றிருவாயினனவில்வான்
பந்தமில்சனற்குமாரமாமுனிமுகம்பார்த்து.

(இ - ள்) பாசம் நீங்கிய சனற்குமார முனிவர் பூர்வம் இந்தத் திருமணி முத்தாநதியின் தீர்த்த விசேடம் பெற்ற சரவதி யென்னும் ஒரு பெண்ணின் சரித்திரத்தைச் சொல்லவேண்டுமென்று வினவத்திருநந்திதேவர் அம்முனிவர் முகம்பார்த்துச்சொல்லத்தொடங்கினர். எ - று. (௧)

தாளதாமரைமேவனப்பார்ப்புணத்தாக்கும்
வாளைமீனிளங்கன்றெனமடிசுரப்பிரங்கி
நீள்வனச்சுனைமுலைதிறந்தொழுகுபாலிறைக்குங்
கோளின்மேதிசெய்குலவுகாம்பீலிநன்னாடு.

(இ - ள்) தண்டுகளையுடைய தாமரைமலரில் வாழும் அன்னப்பக்ஷிகளின் குஞ்சுகள் உண்ணும்படி மோதுகின்ற வாளைமீன்களைத்தமது கன்றுகளென்று மனமிரங்கிப்பால்மடி சுரந்து, நீண்ட முலைக்கண்ணினுள்ள தாரை விரிந்து ஒழுகும் பாலைச்சிதறுகின்ற குற்றமில்லாத எருமைகள் திரியும் வயல்கள் சூழ்ந்த காம்பீலியென்னும் சிறந்த நாடு ஒன்றுண்டு. எ-று. (௨)

அன்னநாட்டிடையருமறைக்குடியெனுமூர்
மன்னிவாழ்தருபுராந்தகனென்றொருமறையோன்
பன்னுகேள்வியின்புதல்வரைப்பெறாதுளம்பரிவாய்க்
கன்னிமாதினைப்பயந்தனன்கலைமதிகடுப்ப.

(இ - ள்) அந்த நாட்டில் அருமறைக்குடியென்னும் பழம் பதியில் நிலையாக வாழ்ந்த புராந்தகனென்னும் பிராமணன் சொல்லாநின்ற கல்வி, கேள்வி அறிவுள்ள புத்திரர்களைப்பெறாமல் மனவருத்தமுற்றுக்கலைகளையுடைய சந்திரனுக்கொப்பாக ஒரு பெண்பிள்ளையைப்பெற்றான். எ-று. (௩)

காளிமப்பிறைமதியெனவளர்ந்தனணங்கை
கேள்விகண்டவரழகுக்காட்சியுங்கிடைத்தார்
நீளுநன்பெயர்சரவதியென்றிடநிலமேல்
வேள்படைக்கொருவிருதெனவிளங்கினள்பெதும்பை.



(இ - ள்) அந்தப்பெண் இளம்பிறைச்சந்திரனைப்போல வளர்ந்து வந்தாள்; சோதிட நூலில் வல்லவர்கள் அப்பெண்குழந்தையின் அழகுள்ள வடிவத்தையும் பார்த்துப்புகழ்வாய்ந்த சரவதியென்னும் நாமஞ்சூட்ட, அப்பெண் மன்மதனுடைய சேனைக்கு ஒரு விருதுக்கொடிபோல் விளங்கினள். எ-று. (௪)

பருவமாகினபெதும்பையைப்பயந்தவர்பரிந்து
விரவிநாமுடித்தேமிலையென்றுளமெலிய
வருமறைக்குலச்சாரதியென்பவற்கன்றே
யுரியதன்மையோர்மணத்திறங்கூறவந்துற்றார்.

(இ - ள்) பெதும்பைப் பருவமடைந்த பெண்ணைப்பெற்ற தாய்தந்தையர் நாம் நமது உறவினரோடு கலந்து நமது பெண்ணுக்கு விவாகம் செய்வித்தோமில்லை என்று மனம் வருந்திவாடும் சமயத்தில் அருமையான வேதியர் குலத்தில் பிறந்த சாரதி யென்பவனுக்கு உரியவர்கள் பெண்கேட்க வந்து சேர்ந்தார்கள். எ-று. (௫)

ஆங்கவர்க்குநேர்ந்தனனவர்களுமகன்று
ரோங்குமன்றனுட்கூடியேவருகவென்றோலை
நீங்கருங்கிளைக்கெழுதியேவிடுத்தனர்நிலையை
தேங்குநெஞ்சினோர்மணவினைமுடித்தனர்சிறக்க.

(இ - ள்) அவ்விடத்தில் அவர்களுக்குத் தன் பெண்ணைக்கொடுக்கச்சம்மதித்தான். அவர்களும் தங்கள் ஊருக்குப்போய் உயர்ந்தசுபதினத்தில் நடக்கும் கலியாணத்திற்கு வருக என்று திருமுகம் அனுப்பி, உறவினரை வருவித்து, அறிவு நிறைந்த மனமுடையவர்களாகிய அந்தப்பிராமணர்கள் கலியாணத்தைச் சிறப்பாகச்செய்து முடித்தார்கள். எ-று. (௬)

பங்கயாசனத்திருமகள்பாரினிற்பிறந்து
தங்கும்வண்ணமோவுயிருடையோவியந்தானோ
கொங்கையேந்தியவற்புதக்கொடிகொலோவென்ன
மங்கைநல்லெழிலணிநலமுற்றியேவளர்ந்தாள்.

(இ - ள்) தாமரைக்கோவிலில் வீற்றிருக்கும் இலட்சுமிதேவி இந்த வுலகத்தில் அவதரித்திருக்குந்தன்மையோ? அல்லது உயிர் விளங்கப்பெற்ற சித்திரந்தானோ? அல்லது தனமென்னும் பூவைத்தாங்கிய ஆச்சரியமுள்ள வல்லிக்கொடியோ? என்று சொல்லும்படி, இப்பெண் நாளுக்கு நாள் நல்ல அழகு மிகுந்து வளர்ந்தாள். எ-று. (௭)

## வேறு.

கூற்றினுடனேயொருபள்ளிக்கூடம்பழகிக்கொலைசெய்யு
மாற்றல்கற்றக்கடைநடித்தேயனகத்தனியின்விளையாடும்
போற்றும்வேதன்மதனரசபொய்த்தானிறந்தவிருவைவேல்
தோற்றவித்தேதன்னிச்சலிக்கவைத்தான்போலுந்துணைக்கண்கள்.

(இ - ள்) மன்மதன் தன்னுடைய அரசாட்சியை இழந்துவிட்டான். அப்போது முரிந்துபோன அவனுடைய கூர்மையான இரண்டு வேலாயுதங்களை அவனுக்கு வேண்டுமேயென்று பரிந்து யாவரும் வணங்கும் பிரமதேவன் மீண்டுஞ் சிருட்டித்துத் தன் இருப்பிடமாகிய கமலக்கோயிலில் பத்திரப்படுத்தி வைத்ததுபோல் அந்தச்சரவதியின் முகமென்னுந் தாமரையில் விளங்குங்கண்கள் ஒரே பள்ளிக்கூடத்தில் யமனுடன் சினேகமாகிக்கொலைபுரியும் திறத்தைக்கற்று நனிநடித்துக்கூந்தலில் விளங்கும் வண்டுகளோடு விளையாடும். எ-று. (அ)

வலக்கண்வலசாரிகையாகவிடசாரிகையாய்வாமக்க
ணலக்கவிருசாரிகையாகவிளையாடிக்குமென்றெண்ணி
நிலக்கவலன்செய்தடையினையேநெடுங்காதென்னவிசைத்தார்க
ளுலத்தமேற்பாயாத்தடையைப்புருவக்கோடென்றுரைத்தார்கள்.

(இ - ள்) வேல்போலும் வலதுகண் வலப்பக்கமாகவும், இடதுகண் இடப்பக்கமாகவும் வலசாரி இடசாரியாகப்பாய்ந்து, பூலோகத்தில் ஆடவர்களை நாசமாக்குமென்றெண்ணி, அப்படிப்பாயாமல் தடுக்கும்படி பிரமதேவன் சிருட்டித்த தடைகளை, கற்றோர்கள் நீண்ட செவிகளென்றும், மேற்புறம் பாயாத வண்ணஞ் செய்த தடையைப்புருவமென்றும் சொல்வார்கள். எ-று. (௯)

கரியவழகாய்நெய்யுண்டேட்டுண்டதனுஞ்நீண்டதனுற்
றிருவேயுறனான்மாலெனப்புன்னேறிச்செழுந்தாரணிபடைத்து
விரிபூமேலாயயனென்னவேணியுற்றபிறைசூடி
இருகூறுடையரனெனமூவராயுமொப்பாமெழிற்கூந்தல்.

(இ - ள்) அம்மடமங்கையின் சுந்தரமான கூந்தல் கறுத்து அழகாயிருத்தலினாலும், கரிய தைலம் பூசப்பெற்றுக்கட்டப்பட்டிருப்பதினாலும், நீண்டிருப்பதினாலும், சீதேவியென்னும் தலைக்கோலம் பொருந்தியிருப்பதினாலும், (திருமேனியான அழகினாயிருப்பதினாலும், வெண்ணெயைத்திருடியுண்டு உரலின் கட்டப்பட்டிருப்பதினாலும், விஸ்வரூபம் எடுத்ததினாலும் சீதேவியைத்



தமது மார்பில் தரித்திருத்தலினாலும்) மகாவிஷ்ணுவுக்கு நிகராகவும், வண்டுகள் தன்மேல் விளங்க வளப்பமுள்ள பூமாலையை அழகுபெறச்சூடியிருப்பதினாலும், மலர்ந்த உதிர் புஷ்பங்களைச்சொருகியிருப்பதினாலும் (அன்னவாகனத்தோடாய்ச்செழுமையான இப்பூவுலகத்தைச்சிருஷ்டித்துத் தாமரைக்கோவிலில் வீற்றிருத்தலினால்) பிரமாவுக்கு ஒப்பாகவும், சடையில் சந்திரபிறையென்னும் ஆபரணத்தை அணிந்திருப்பதினாலும், வகிர் எடுத்து இரண்டு பிரிவாக விளங்குதலினாலும் (தமது சடாமகுடத்தில் பிறைச்சந்திரனைத்தரித்திருப்பதினாலும், அர்த்தநாரீஸ்வரகோலமாகப் பொலிவதினாலும்) சிவபெருமானுக்கு நிகராகவும் இருப்பதினால் திரிமூர்த்திகளுக்கும் ஒப்பாகும். எ-று. (௧௦)

இறுகித்திரள்பொற்கிளையிடைமேற்கோபமடங்காமற்
கறுவிப்பருத்துக்கண்சிறந்துக்கச்சையறுத்துப்பளபளத்து
நிலைநிற்பாற்குடத்தையிகழ்நானேசமைக்கவாதுவென்று
மலைநிறையிற்செறிந்துபணிபூண்டெழிற்றுமார்தனமுலைகள்.

(இ - ள்) அம்மங்கையின் கொங்கைகள் கெட்டியாய்த் திரண்டுருண்டு மார்பின் அகன்று மிருதுவாகி, இடையின்மேல் கோபம் அடங்காதபடி மிருத்து, விம்மி, காம்பு கறுத்துக்கட்டியிருக்கும் இரவிக்கையைக்கிழித்து, மிருத்த காந்தியைப் பெற்றுப்பொன்னினாலாகிய குடத்தையும், இளநீரையும் ஜலத்தையே சமைக்கும்படி அடிமையாகவிக்குன்றைப்போலடர்ந்து விலையுயர்ந்த ஆபரணங்களைத்தரித்துப்பருத்து நிமிர்ந்தன்றுசிறு விளங்கின. எ-று. (௧௧)

எல்லாவுறுப்புமயன்படைத்தாளிகைக்குவமைப்பொருள்களுண்டா
மில்லாதவளைப்பொருளாயொருறுப்பேயியற்றவெண்ணினால்
வல்லாருமாற்றிருமேனிவடிவாவிலாவோருறுப்பை
யல்லார்மதிபோற்றிருமுகத்தாட்கருவாயமைத்தான்மருங்குலென்றே.

(இ - ள்) நான்முகக்கடவுள் சரீரத்திலெல்லா அவயவங்களையும் சிருஷ்டித்தார்; அவைகளுக்கெல்லாம் ஒப்பு சொல்லுவதற்கு உவமைப்பொருள்களிருக்கிறபடியால் ஒப்புப்பொருளில்லாதபடி ஓரவயவத்தை உண்டாக்கும்படி நினைத்துப் படைப்புத்தொழிலில் வல்லவராகையால் இருளிற்றோன்றிய சந்திரனைப்போன்ற அழகிய முகத்தையுடைய அப்பெண்மணிக்குச்சரீரமேவில் இடையென்னும் ஒருறுப்பைப்பார்வைக்குத்தோன்றாத வண்ணம் அவ்வளவு நுட்பமானதாய்ச்சிருட்டித்தார். எ-று. (௧௨)

## வேறு.

விண்முகிற்குலநழுவிவீழ்மின்கொடியொன்றே
கண்ணுருக்கொளுநல்லெழிற்கடலுறுகணையோ
பெண்ணுருக்கொவெருமழுதோவெனப்பெரிது
மண்ணும்விண்ணினுக்கதிகமென்றுரைதரவந்தாள்.

(இ - ள்) ஆகாயத்திற் சஞ்சரிக்கும் மேகக்கூட்டங்களினின்றும் நழுவி விழுந்த ஒரு மின்னற்கொடியோ? அல்லது கண்கொள்ளாக் காட்சியுடைய நல்ல அழகென்னுங்கடலுக்கு ஒரு கணையோ? அல்லது பெண்வடிவமெடுத்துவந்த தேவாமிர்தமோ? என்று சொல்லும்படி பூலோகத்தாரையல்லாமல் தேவலோகத்தாரைப்பார்க்கிலும் சிறப்புற்றவளென்று மெச்சும்படி வந்திருந்தாள். எ-று.

கருகங்குலும்வெண்ணிறமெய்திடக்கருது
மருவுலாவியபூங்குழன்முதலியவணப்புப்
புரியுமோர்சொலகிளைப்பவரறிவிலர்புதுமை
தெரியுமாண்பினர்செப்பியார்தனிநிகர்சிறப்பு.

(இ - ள்) கருமையான இருட்டும் வெளுத்து வெண்மையாம் என்று நினைக்கும்படி வாசனை நிறைந்த மலர்க்கூந்தல் முதலியவைகளின் அலங்காரத்துக்கு ஒப்பு சொல்லக்கருதுகிறவர்கள் அறிவில்லாதவர்களாம். அவற்றின் அழகையுண்மையாயறிந்தவர்கள் அவைகள் தமக்குத்தாமே நிகராக விளங்குகின்றன, அவற்றிற்கு உவமையில்லையென்று சொல்வார்கள். எ-று. (௧௪)

இன்னபேரொழில்வாய்ந்துமூவுலகினுமியைந்த
கன்னிமாதருட்கருஞ்செழுங்கயல்விழிமுகத்தா
டன்னைமேவியகாதலன்சாரதியென்போன்
மன்னுகற்பினளாமெனமகிழ்ந்தனன்மயங்கி.

(இ - ள்) சொர்க்க மத்திய பாதலமென்னும் மூன்று உலகத்திலுமுள்ள பெண்களில் இப்படிப்பட்ட பேரழகு பொருந்திய அழகிய மீன்போன்ற கண்களையுடைய முகத்தாளாகிய சரவதியை மணஞ்செய்து கொண்ட நாயகனாகிய சாரதியென்பவன் தனது மனைவியின் நடிப்பைக்கண்டு மயங்கி மிகுந்த கற்புடையவளென்று நினைத்துச்சந்தோஷப்பட்டான். எ-று. (௧௫)



நாணமுற்பவோர்குணநீத்திடுநங்கை
பூணும்வெற்றிவேள்கன்னல்விற்குனித்தமர்பொருதும்
பாணவோயிறுத்புணர்ந்தனள்பகைவலைவிசிறி
தோணிநீர்த்திரிமீன்பிடித்துண்பவன்றேன்கள்.

(இ - ள்) கற்புக்கு அங்கமாகிய நாணம்-மடம்-அச்சம்-பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும் ஒழித்துவிட்ட சரவதி வெற்றியையே ஆபரணமாக அணியும் மன்மதன் கரும்புவில்லை வளைத்துச்சண்டை செய்யும் புஷ்பபாணங்களினுடைந்த காமநோயினால் படகின்மேல் ஏறிப்பகைவலை வீசித்தண்ணீரில் வாசம் செய்யும் மீன்பிடித்து உண்பவனாகிய செம்படவனோடு புணர்ச்சி செய்தாள். எ-று. (௧௬)

கற்புநீர்த்திறவினைப்பழிதருகளவி
னுற்றவஞ்சிதேனோர்வலையனைக்கூடியவவ
ளுற்றசிந்தையைவேட்டதன்கொழுநனுள்ளந்
தெற்றுருவகையியற்றினள்வஞ்சனைத்திறத்தாள்.

(இ - ள்) பதிவிரதாதர்மம் நீங்கிப்போகப்பழிபாவங்களைத்தரும் திருட்டுத்தனத்தால் அற்பபுத்தியால் ஒரு செம்படவனைப்புணர்ந்த அவலமான தன் எண்ணத்தைத்தன்னைக்கலியாணம் செய்த கணவன் அறியாதபடி மோசவலை செய்தாள். எ-று. (௧௭)

ஐயுறுவகைக்கணவன்மாட்டன்புகொண்டவள்போற்
செய்யவினியமொழிகளேயற்பனபுகலுஞ்
செய்கையாலினித்செல்லினுங்கணவனோர்சிறிதி
எய்தினும்முடனியான்வருவேனெனவியம்பும்.

(இ - ள்) கணவன் தன் பேரில் சந்தேகப்படாதவகையாய் அவனிடத்தில் அன்புள்ள கற்புடைய சாயைபோல் பொய் வார்த்தைகளை அநேகமாகச் சொல்வாள்; தன் கணவன் யாதொரு காரியம் செய்யப்போனாலும் ஒன்றுக்குப் போனாலும் நான் உம்முடனே வருவேன் என்பாள். எ-று. (௧௮)

கணவன்சொல்லினைக்கடக்கரிதாகியகற்புப்
புனருமாதரார்பெருமையையாவரோபுகல்வா
ரினையுருத்திருவொன்றுளதோவலரொவரும்
பனியும்வெங்கதிர்மேற்றிருமிம்பொழுதளம்பதைக்கும்.

(இ - ள்) மணஞ்செய்த கணவன் வார்த்தையைக்கடந்து நடவாத பதிவிரதாதர்மத்தைப்பாதுகாக்கும் ஸ்திரிகளுடைய சிறப்பை யார் அளவிட்டுச்சொல்வார்கள்? அவர்கள் அடையாத செல்வம் ஒன்றுளதோ? அக்கற்புள்ள ஸ்திரிகள் யாவரும் வணங்கும் சூரிய கிரணம் அக்கணவர் மேனியிற்படும்பொழுது மனம்பதைப்பார்கள். எ-று. (கக)

எய்துதற்கரிதாகியகற்பினையெய்துந்
தையலார்குலம்விண்ணுலகி…குடிதழைவர்
துய்யகற்பிலாதார்குலஞ்சுற்ற…ந்தாழு
மையகோவெனநரகிடைக்குடி…ந்தழுவார்.

(இ - ள்) பெறுதற்கரிதாகிய பதிவிரதாதன்மையை…பெற்ற இவ்வுருணமாதர்கள் தங்கள் குலத்தோடு சுவர்க்கத்தில் சுகமாய் வாழ்வி…ன். குற்றமில்லாத கற்பு என்னும் குணத்தைப்பெறாத ஸ்திரிகளுடைய பந்து…ரும் தாங்களும் ஐயகோவென்று வருந்தும்படி நரகத்தையடைந்து அதை விட்டு நீங்காமல் துக்கப்படுவார்கள். எ-று. (உ0)

என்னநூனெறிநினைந்திலரூழ்வினையினைசவா
வன்னநீக்களவொழுகியநாட்களிலோர்நாட்
பன்னுவேதியன்மனைவியும்வலையனும்பரிவாய்
நன்மனைப்புறத்தோன்றியேசயந்துகண்டான்.

(இ - ள்) இவ்வண்ணஞ்சொல்லுகிறசாஸ்திரமார்க்கத்தைச்சற்றும் எ…தவளாய்ப்பிரார்த்த கருமத்துக்கீடாய் மனதார ஈனமான …செய்கை புரிந்து…நாள்களில் ஒரு நாள் சாசதி என்னும் பிராமணன் தனது மனைவியும் செம்படவனும் அன்பாகத்தன் வீட்டின் ஒரு பக்கத்தில் சம்பந்தப்பட்டுச்சரசவுல்லாசமாயிருந்ததைப்பார்த்தான். எ-று. (உக)

கண்டவன்றனைக்கண்டிலர்தனித்தவர்கண்டே
கொண்டுமீண்டனனயலவன்றருகுறிகொண்டு
வண்டுபோன்முரல்கருங்குழல்மனையிடைவந்தான்
பண்டுபோற்சிலபயன்மொழிபுகன்றனன்படிறாய்.

(இ - ள்) கண்டுகொண்ட பிராமணனை மதன லீலாவிநோதமாயிருந்தவர்கள் பார்க்கவில்லை. ஆயினுமவர்களை நோக்கண்டு கொண்டு மறையவன் திரும்பிவந்து விட்டான். அன்னியனாகிய செம்படவனோடு புணர்ந்த அவ-



யானத்தோடு வண்டுகள் கீதம்பாடும் வாசனை பொருந்திய கூந்தலையுடைய சாலதி வீட்டுக்குள் வந்து பழையமாதிரியாகவே வஞ்சனையாய்ச் சில பயன் தரும் வார்த்தைகளைச்சொன்னான். எ-று. (உஉ)

வந்தகாரிகைதன்னொடுபேசினன்மறையோன்
சிந்தைவேறுகொண்டாளெனவுணர்தருஞ்செயலான்
முந்துகற்பிலாவஞ்சகியென்பதுமுன்னிப்
புந்திமேல்வெறுப்பு…பழுந்தநெருஞ்றுறப்பெரலிந்து.

(இ - ள்) இழிந்த காரி…யைச்செய்து வந்த தன்மனைவியோடு வேதியன் சற்றும் பே…வில்லை. அ…னியன்பால்மனம் வைத்து விட்டாளென்று அதினாலும் கற்பைப்பங்க… செய்துகொண்டு செய்யாதவன்போல் கபட நாடகம் நடிக்கும் வஞ்சகி …ன்று நினைத்ததினால் தன்மனதில் அவள்மீதுகொண்ட அருவருப்பு நெரு… விட்டெழுந் தீயைப்போல் வளர்ந்தோங்கியது. எ-று.

இல்லவட்கவலக்துணமெய்திடலவளை
யொல்லையிற்றுறந்தேவிடானெறியொழுக்கம்
புல்லுகாதன்மற்றோர்பொருட்டாலவட்புணரில்
வல்லதேசிகன்மனைவியைமருவினவழக்கால்.

(இ - ள்) கொண்ட பெண்சாதி இழி குணத்தையடைந்தால் அவளையுடனே நீக்கி விடுதலே தருமசாஸ்திரம் கூறும் விதியாம். மற்றவர் சொல்லுக்குடன்பட்டு அவளிடத்தில் திரும்பவு மிச்சையைவைத்து அவளோடு சம்பந்தப்…டால் அது போதிக்குந்திறமையுடைய குருபத்தினியைச்சேர்ந்த பாவத்துக்கொப்பாகும். எ-று. (உங)

இத்திறத்திருநூனெறியுணர்ந்தவனிழுக்காந்
தந்தைமென்மொழிவஞ்சகவஞ்சியைத்தணந்து
மூத்தநீர்வயலங்கநாடடைந்துபூண்முலையாற்
பொய்த்தநுண்ணிடையோர்மடந்தையைமணம்புரிந்தான்.

(இ - ள்) இப்படிப்பட்ட காரணங்களினால் தருமசாஸ்திரநீதியை யறிந்தவனாகிய மறையவன் ஈனசெயலைப்புரிந்தவளும், கிளிக்கு நிகராகிய இனிய சொல்லையுடையவளும், கபடநாடகம் நடித்து வஞ்சித்து மோசஞ் செய்தவளுமாகிய மனைவியை நீக்கி, முத்துகள் செறிந்த சலம் நிறைந்த வயல்களையுடைய அங்க நாட்டையடைந்து, அழகிய தனங்களைத் தாங்கமுடியாதபடி அவ்வளவு சிறிய இடையாய்ந்த வொரு பெண்ணை விவாகம் செய்து கொண்டான். எ-று.

உரியகாதலனிங்கிடச்சரவதியுவந்து
கரவுநாயகன்றன்னுடனுறைவதுகண்டு
புரியில்வேதியர்ன்னகரகற்றிடப்போந்து
வெருவியேயுழன்றிரந்தனன்பதிதொறுமிடியால்.

(இ - ள்) கொண்ட கணவன் போய் விட்டபடியால் சரவதி மனதிற் களிப்புடையவளாய்ச்சோர நாயகனாகிய வலையனோடுகூட வசிப்பதைப்பார்த்து அவ்வூரிலுள்ள பிராமணர்கள் அவளை அப்பதியை[illegible] விட்டுப்போகும்படி துரத்தினபடியால் அவள் பயந்து அதை விட்டு நீங்கிச்[illegible]த்திரத்தையடைந்து பற்பல வூர்களிலும் அலைந்து திரிந்து யாசித்து வருந்தினாள். எ-று. (உசு)

மிக்கபாவமும்புண்ணியவினைகளும்வி[illegible]ந்து
தக்கவிம்மையில்வருமெனுநான்மறைநித்த[illegible]ற்
பொக்கமிக்கதீவினையெலாஞ்செறுத்திடப்[illegible]வுங்
கக்குசோரியுமாய்ப்பெருநோய்கொடுகவன்றாள்.

(இ - ள்) மிகுதியாவொருவன் செய்த பாவகருமங்களும் புண்ணியச்செயல்களுந்துரிதமாக இந்தச்சென்மத்திலேயே அவற்றிற் கிசைந்த பலனைக்கொடுத்து விடுமென்கிற தருமசாஸ்திர வொழுக்கத்துக்குப் பொருத்தமாகச் சரவதி தான்மானமிழந்து தேடியபாவங்களெல்லாம் வருத்த, அதனால் இரத்தங்கக்கிப் புழுவிழுந்த பெருத்த வியாதியை யடைந்து துன்பப்பட்டாள். எ-று. (உஎ)

அவலமுற்றியபாதகியணிநலமழியச்
சவலைநெஞ்சினன்காண்டலும்வெறுத்தவன்றணந்தா
னவிலுமூர்களிற்புகுதொறுந்தவன்மனகாற்றங்
கவலையுற்றுவெம்பசிகொடுகலங்கியேதிரிந்தாள்.

(இ - ள்) இழிந்த செயல் புரிந்த பாவியாகிய சரவதியின் மேனியழகு குலைந்ததைத்தளர்ந்த மனமுடைய வலையன் பார்த்து, அது முதல் அவளை வெறுத்து நீங்கி விட்டான். சொல்லாநின்ற புற்பல வூர்களிலும் செல்வதற்குக்கூடாதபடி மிகுந்த துர்நாற்றத்தைப்பெற்றவளாய்த்துக்கப்பட்டுக்கொடுமையான பசியினால் மனவருத்தமுற்று அலைந்து திரிந்தாள். எ-று. (உஅ)

பாதிமாதருட்பாவநாசத்தலப்பரமர்க்
காதிரைத்திருநாள்விழாக்கண்ணுறவங்கண்
போதுவாருடனெறியயற்கானிடைப்புகுந்து
தீதுநாற்றமெய்துயர்கொடுசென்றனடிளைத்து.



(இ - ள்) திருப்பாவநாசப்பதியிலே பார்வதி சமேதராய் வீற்றிருக்கும் கருணாநிதியாகிய சிவபெருமான் திருவாதிரைத்திருக்கல்யாண முதலிய உற்சவத்தைத்தரிசிக்கும்படி அத்தலத்திற்குச்செல்வாருடன் புறப்பட்டு, அடுத்த காட்டினிடைப்பிரவேசித்துத் தீயநாற்றமுடைய சரீரத்தினால் துக்கப்பட்டு மனந்தளர்ந்து வழி நடந்தாள். எ-று. (உகூ)

ஆறலைத்தனும்வன்றொழிற்கானவரடங்கிக்
கூறலின்றிவே[illegible]ந்துறைதருமிழையினைக்குறுகி
நாறுமேனிய[illegible]கண்டனராங்கவர்நணுகி
யூறுசெய்[illegible]ரயலறியாதாய்மொழிய.

(இ - ள்) வழிபறி[illegible]ச்சினம் செய்யும் பாவத்தொழிலையுடைய வேடர்கள் உரக்[illegible]பேசா[illegible]யாருங்காணாதபடி மறைந்து பதுங்கி வாழுமலைக்குகைக்குச்சமீபமாக [illegible] தொழுநோயுற்றுத்துர்க்கந்தம் வீசப்பெற்ற சரீரத்தையுடைய ச[illegible] அவர்களைப்பார்த்தாள். உடனே அவர்கள் எழுந்துவந்து அன்னியர் அறியாதபடி அவளுக்குயிர் போகும்படி துன்புஞ்செய்தார்கள். எ-று.

இருண்டமேனியர்செக்கர்வான்குஞ்சியரிருப்புத்
திரண்டதின்கதைசுற்றியகையினர்தெறுதீ
புரண்டெழுங்கடர்க்கண்ணினர்கொலைமையேபுரிவா
ருருண்டவெண்பிறைப்பற்வினர்யமபுரத்துறைவோர்.

(இ - ள்) யமபுரத்தில் வசிப்ப[illegible]கள் கருமையான சரீரம் உடையவராகியும், செவ்வானம் போன்ற சிவந்த குடுமியையுடையவராகியும், இரும்பினாற் செய்த திரண்டபெருத்த கதாயுதத்தைச்சுற்றுங் கைகள் உடையவராகியும், பகைவரை நாசஞ் செய்யும் அக்கினிப்பொறி மிகுந்துண்டாகும்நேத்திரங்கள் உடையவராகியும், கொலையே செய்பவராகியும், உருட்சியும் பிறைபோல் வளைவுமுள்ள வெண்மையான பற்களை உடையவராகியும் இருப்பார்கள். எ-று. (ஙக)

இன்சொல்சொல்லுநவெவ்வன்மையோடெனவறியார்
வன்சொனாவழங்கலிவாயினர்மறலி
தன்சொலாணையர்தூதவர்சரவதிதன்னை
முன்செய்தீங்கினுக்கிறுதியாத்தனர்முறுக.

(இ - ள்) இனிமையான வார்த்தைகளைச்சொல்லுதல் இம்மாதிரியென்று சற்றுமறியாதவர்களையும், கடுமையான சொற்களைக்கூறுந்தன்மையால் பெருப்பைபக்கக்கும் வாயையுடையவராயும், யமதரும ராஜன் கட்டளையின்படி யமைந்து நடப்பவர்களையுமுள்ள யமதூதர்கள் சரவதியை அவள் முன்செய்த

தீவினைக்குத் தெண்டனையாகத் துன்பப்படும்படி நன்றாய் இறுக்கிக் கட்டினார்கள். எ-று. (௩௨)

கொண்டுபோயவர்கூற்றுவன்றுணைகழல்வணங்க
மண்கோலனும்வடலைகட்கடைதொறும்வழங்க
விண்டுநோக்கியேசித்திரகுத்தனைவினாத்து
கண்டுநீயிவள்வினையெலாங்கழறுதியென்றான்.

(இ-ள்) யமதூதர்சரவதியை அப்படி கட்டி எடுத்துக்கொண்டு யமதரும ராஜனிடத்திற்கு வந்து அவரது மலர்ப்பதங்களை வணங்கி நிற்க, யமதரும ராஜன் வடவாக்கினிக்கு நிகரான நெருப்புப்பொறிகள் தன் கண்களினின்று பறக்கும்படி மிகுந்த கோபத்தோடு சித்திரகுத்தனைப் பார்த்து, இச்சரவதி செய்த பாவங்களையெல்லாம் கணக்குப்புத்தகத்தைப் பார்த்துச் சீக்கிரத்திற் சொல்லும் என்று கட்டளையிட்டான். எ-று. (௩௩)

அய்யவிங்கிவள்செய்திடுமோர்கமனந்தந்
செய்யகற்பிலனேயிலாண்டனைப்புணர்ந்திடு
மய்யலாகியேமீன்பிடித்துண்டிடும்வாயாள்
வெய்யகூடசாலரசகுழுத்துதல்விதியே.

(இ-ள்) தருமராஜாவே! இந்தச்சரவதி செய்த பாவகருமங்கள் அநேகம்; சிறப்பைத்தரும் கற்பில்லாதவள்-காமவிகாரங்கொண்டு தன்னை மணந்தவனல்லாத அன்னியனுடனே புணர்ந்த மீன் பிடித்துண்ணும் வலையனைப்புணர்ந்த அறிவிலி-ஆதலால் இவளைக்கொடுமையான கூடசாலமென்னும் நரகத்தில் தள்ளுதல் முறைமையாகும். எ-று. (௩௪)

என்னலுங்கனலெனவிடியிடித்தனம்வெகுண்டு
முன்னர்நின்றிடுகயத்திலையயிர்த்துப்போய்முதிர்ந்த
வன்னியூசிகளேற்றியேமயிர்தொறும்வருத்து
னின்னல்கூரழல்சுடப்பிணித்திடுமெனக்கென்ன.

(இ-ள்) இந்தப்பிரகாரம் சித்திரகுத்தன் சொல்ல யமதருமராஜன் கோபங்கொண்டு நெருப்பிடிபோல ஆரவாரஞ்செய்து, எதிரிலிருந்த இழிந்த குணமுள்ள சரவதியை இழுத்துக்கொண்டு போய் நன்றாய் அக்கினியிற் காய்ந்த ஊசிகளை மயிர்க்கால்கள் தோறும் செலுத்தி வருத்தப்படுத்தி, துன்பத்தைத் தரும் அக்கினி அவளது சரீரத்தைச்சுடும்படி நரகத்தில் தள்ளி விடுக என்று கட்டளையிட, எ-று (௩௫)



வேறு.

மூடித்தலையோடொடுசிதறமூளைக
ளடித்தனர்பாறையிலடிகள்பற்றியே
பிடித்தனருரல்விட்டிடென்னெய்காய்ச்சியே
விடுத்தனருடலெலாம்விரிந்துவேகவே.

(இ-ள்) மயிர் வாய்ந்த தலையின் கபாலத்தோடு மூளைகள் சின்னாபின்னமாகும்படி அடித்தார்கள்; கால்களைப்பிடித்துத்தூக்கிப் பாறையில் தாக்கினார்கள்; இருப்புக்கொப்பரையில் எண்ணெயை விட்டுக்காய்ச்சி, அவள் தேகம் வெந்து விரிந்துபோகும்படி அந்த எண்ணெய்க்கொப்பரையில் தூக்கிப்போட்டார்கள். எ-று. (௩௬)

செந்தழலுருகியசெம்பிலாண்மகன்
சந்தரந்தழுவெனத்துயர்விளைத்தனர்
வெந்தகூருசிகள்விரலிலேற்றினா
ரந்தவெந்துயர்தனையறையற்பாலதோ.

(இ-ள்) நெருப்பில் உருகிய செம்பினால் அமைந்த அழகிய புருஷனைக் கட்டித்தழுவென்று அவளுக்குத்துன்பம் உண்டாக்கினார்கள். அக்கினியிற் காய்ச்சிய கூர்மையான ஊசிகளை அவளுடைய விரல்களில் ஏற்றினார்கள். இம்மாதிரி அச்சரவதி அவ்விடத்தில்அடைந்ததுன்பம் சொல்லிமுடியாது. எ-று. (௩௭)

மூன்னுறுதீவினைமுற்றுஞ்சிந்தையாய்த்
தன்னுணர்வழிந்துயிர்சாம்பிச்சாற்றொணா
வின்னபல்வகைத்துயரெய்தினின்றனள்
என்னலைவிசமூமைமைதிதன்னிலே.

(இ-ள்) சரவதிதான் முன்செய்த தீயகாரியங்கள் எல்லாவற்றையும் எண்ணித்தன் அறிவுகெட்டு உயிர்வாட்டமடைந்து யாவராலும் சொல்லவொண்ணாத இத்தன்மையான பலவிதத்துன்பங்களை அடைந்திருந்தாள். அக்காரியங்கள் நடக்குஞ் சமயத்தில், எ-று. (௩௮)

காட்டிடையாறலைசெய்யுங்கானவர்
வீட்டிடவன்னமழிந்தமெல்லுடல்
கூட்டுணும்பறவைகள்கூர்கொடுண்டமே
மாட்டிவெண்ணின்றசைவாய்மடுத்தன.

(இ-ள்) காட்டிலே வழிபறித்துண்ணும் வேடர்கள் கொல்ல, அவ்விடத்திலே அழிந்துபோன உடம்பைக் கூட்டமாய்க்கூடியுண்ணும் கழுகு முதலிய

பட்சிகள் கூர்மையான மூக்கினால் கொத்தி வெண்மை மிகுந்த மாமிசத்தைப் பிடுங்கித்தின்றன. எ-று. (௩௯)

நசையொடுமொழிந்திடுதவனவெள்புள்
வசைபடக்கிடத்தலும்வன்னுயிர்ச்சாண்
மிசையுறமிசித்துவெண்கூரெயிற்றினு
னசையிலென்பெடுத்தொருஞமலிசென்றதே.

(இ - ள்) இவ்வாறு மாமிசமுற்றும் நீங்கிய வெண்மையான எலும்புகள் பலரும் நிந்தை சொல்லும்படி கிடக்கிடத்தலும், கூர்மையான நகங்கள் பொருந்திய கால்களினால் ஒரு நாயானது கன்றாய் மிதித்து வெண்மையுங் கூர்மையுமான பற்களினால் அந்த எலும்புகளிலொன்றை ஆவலோடு கடித்துத்தூக்கிக் கொண்டு ஓடிற்று. எ-று. [illegible]

மடலவிழ்பாளையங்கமுகுவான்முடி
யடைநிழற்றண்டலைபழகுமஞ்ஞைகள்
நடமிடுபெருவளப்பாவநாசநீர்த்
தடநதியிடைவிடுத்தயலிற்சார்ந்ததே.

(இ - ள்) ஆகாயத்தையளாவி யிராநின்ற மடல் விரிந்த பாளைகள் தங்கிய அழகிய கமுகுவிருக்ஷங்களையும், நிழல்தரும் பூஞ்சோலைகளையும், மயில்கள் தோகை விரித்து நிர்த்தனஞ்செய்யும் மிகுந்த வளப்பத்தையுமுடைய திருப்பாவநாசப்பதியிற் பாவிச்செல்லும் பஞ்சாக்கரநதியினிடத்திற் போட்டு விட்டு அப்பால் போய் விட்டது. எ-று. (௪௧)

அக்கணமருள்புரிந்தாலமுண்டவன்
மெய்க்கணாதரைநோக்கிவெண்ணிசிக்
கிக்கணமெய்துறயமபுரத்திடைப்
புக்குநீர்தருகென்றருள்புரிந்தனன்.

(இ - ள்) அந்தக்ஷணமே தேவர்கள் யாவரும் பிழைக்கக்கருணை செய்து ஆலகால விஷமுண்டருளிய பரமசிவம் சகல கண நாதர்களையும் பார்த்து, நீங்கள் இக்க்ஷணமே யமலோகத்திற்குப்போய்ச்சரவதி என்பவன் [illegible] கிரிக்கு வந்து சேர அழைத்துக்கொண்டு வாருங்கள் என்று, திருவாய் மலர்ந்தருளினார். எ-று. (௪௨)

தாயினுநல்லருளுடையதற்பர
நாயகனருள்கொடுநண்ணினாரவண்
பாயிருட்பிழம்பெறிபரிதிபோலொளிர்
மாயிருவிமானமவ்விடத்தில்வந்திட.



(இ - ள்) நம்மைப்பெற்று வளர்த்த தாயைக்காட்டிலும் இனிய அன்பையுடைய தமக்குத்தாமே நிகராகிய சிவபெருமானுடைய அருளாக்கினையின்படி சிவகணத்தலைவர்கள் யமபுரிக்கு வந்தார்கள். பரவிய திரட்சியான இருளைப் போக்கும் சூரியனைப்போல் பிரகாசிக்கும் மிகவும் பெருமை தங்கிய விமானமும் அவ்விடத்துக்கு வந்து விட்டது. எ-று. (௪௩)

வந்தனரெழுந்தனர்வைதுதூதரை
யுந்தினர்படைத்தலையூன்றக்கைமலர்த்
தந்தமெல்லாம்விழவாயிற்றாக்கினு
ரிந்திரவிமானமேலிவனையேற்றினார்.

[illegible] அவ்விடம் வந்த சிவகணத்தலைவர்கள் யமதூதர்களைத்தூஷித்து [illegible] தள்ளினார்கள்; தங்கள் மலர் போன்ற கைகளில் ஏந்திய ஆயுதங்களால் அவர்கள் பற்களெல்லாம் விழும்படி வாயில் தாக்கினார்கள். பிறகு சாவதியைத்தாங்கள் கொண்டுவந்த இந்திரவிமானத்தின் மேலேற்றினார்கள். எ-று. (௪௪)

கூற்றுவன்றூதர்கள்கூட்டமாயினோர்
காற்றினுமனத்தினுங்கடிதினோடினார்
வீற்றுவீற்றாய்நமபுரத்தின்மேயினார்
சாற்றிசைசினிதுஞ்சகெக்கமுற்றனர்.

(இ - ள்) யமதருமராஜனுடைய தூதர்களாகிய கூட்டங்கள் வாயுவைக் காட்டிலும் வேகமாய்ச்செல்லும் மனதைக்காட்டிலும் விரைவாக ஓடினார்கள். யமபுரத்தில் வேறு வேறாய் நான்கு திக்குத்தெருக்களிலுமிருந்தவர்கள் அச்சமுற்றார்கள். எ-று. (௪௫)

அங்கவரோடினர்முறைகொண்டந்தகன்
பூங்கழல்வணங்கினர்தருமம்பொய்த்ததே
யேங்கிடும்பாதகிவிமானமேறின
டாங்கணநாதர்கடண்டித்தாரெமை.

(இ - ள்) அந்தத்தூதர்கள் பயந்துசென்று முறையோவென்று சொல்லி, யமதருமராஜனுடைய அழகிய பாதங்களை வணங்கி, தருமமார்க்கம் பொய்மையாய் விட்டது; ஏனென்றால் பாவியாகிய சாவதி விமானமேறினான்; சிவகணத்தலைவர்கள் எங்களைத் தண்டித்தார்கள் என்று சொன்னார்கள். எ-று. (௪௬)

என்றதாள்கூடியேயிரங்கினின்றனர்
என்றெனக்கேட்டதூதனைகொண்டந்தகன்
புன்மொழிசால்லனர்புலைச்சியாயினு
னென்சொலேசவியபுரத்தெய்துமாறெனா.

(இ - ள்) இவ்வாறு தூதர்கள் சொல்லி மனமெலிந்து நின்றார்கள்; யமதரு மராஜன் அவர்கள் வசனத்தைக்கேட்டு, இது கல்லதாயிருக்கிறது! என்று சொல் லிச்சிரித்து, இழிந்த செய்கையாளன் சிவனுஞ்செய்த அற்பத்தன்மை பொருந்திய சவதி எவ்வாறு சிவலோகத்துக்குப்போவான்? என்று மொழிந்து எ-று. (௭௭)

எழுந்தனன்விரைவினிவெல்லியந்தகன்
றனைபூர்சிசிவகணநாதர்தாள்மிசை
விழுந்தெழிர்வணங்கினன்மெய்மைபோய்த்தது
கொழுந்தழைத்துவினைவளர்ச்சிகொண்டதே.

(இ - ள்) எழுந்து சீக்கிரமாய் வந்த யமதருமராஜன் மேன்மை பொருந் திய சிவகணத்தலைவர் பாத தாமரைகளுக்கு நமஸ்காரஞ்செய்து சத்தியம் அழிந் து விட்டது; பாவவினை கொழுந்துவிட்டு ஓங்கி வளர்ந்தது. எ-று. (௭௮)

பாவசேயியற்றியவலமபாதகி
பாவநாசனைவிதுஞ்செய்ததீந்திறைக்
மேவியமரபினிதொழுக்கவிட்டவ
டாவியேதிலேனையேதழுவுநிரியால்.

(இ - ள்) செய்யத்தகாத காரியங்களாகிய பாவகிருத்தியங்களையே செய்த இழிந்த தன்மையுள்ள பாவியாகிய சாவதி செய்யத்தருந்தவைகளாகிய புண்ணி ய கருமங்களைச் சொற்பனத்திலாவது செய்ததாய் உணர்ந்தவனல்ல; அன்றி யும் தான் பிறந்த குலத்துக்கேற்ற ஆசாரங்களைக் கைவிட்டவன்; அல்லாமலும் அன்னியனுடைய மனைவியை ஆசையோடு புணர்ந்த விபசாரி. எ-று. ஆல், அசை.

விழுங்கிநரகமேயிட்டமிழ்ந்திடா
தழுங்கியேயிரவியுள்ளவழுந்துவான்
தொழுங்குலத்தோர்வசைசூழவந்தவட்
செழுந்தவிமானமேதென்கொலென்றனன்.

(இ - ள்) இவன் செய்த இப்படிப்பட்ட பாவங்களுக்கு இவனை விழுங்கிய நரகம் மறுபடியும் இவனைவிட்டு விடாமல் சூரியன் இப்பூலோகத்திலுள்ளளவும் வருந்தத்தக்கவன்; யாவரும் வணங்கத்தக்க பிராமணகுலத்தோர்களுடைய சா-



பத்தோடு வந்தவனாகிய இச்சாவதிக்கு இப்போது விமானம் வந்த காரணம் யா தென யமதருமராஜன் வினவினான். எ-று. (௮௦)

மறவினையறமதாய்வரினும்வந்தறு
மறவினைப்பாவமாதலுமாய்விடும்
முறைமையாய்மூடியிதுமுறையுமிந்திற
மிறைவனல்லாமன்மற்றியாரறிந்துளோர்.

(இ - ள்) பாவகாரியங்கள் புண்ணிய கருமங்களாக வந்தாலும் வரும்; புண் ணியச்செயல்கள் பாவகிருத்தியங்களாக மாறினும் மாறும்; பாவச்செய்கை கள் பாவமேயாகவும், புண்ணியச்செய்கைகள் புண்ணியமேயாகவும், இப்படி ஒழுங்காய் சேர்ந்தாலும் சேரும். இவ்வாறுமெய்ப்பதத்தெப்பெருமானன்றி வேறியார் அறிவார்கள்? எ-று. (௮௧)

தொக்கவன்புணரிலொனுக்கலக்கிறுன்
மிக்கதன்றுதக்கொலைவிடுபெற்றிட
முக்கணர்தன்மையமுனைக்குறுகிறுர்
தக்கனும்வேள்வியிறலையிழந்தனன்.

(இ - ள்) உன்னைப்புடையார் இவனிரும் கேடுறுவதற்கில்லையென்றும் வேறுவிருல் சண்டேஸ்வர நாயனார் தமது பிதாவைக்கொன்று கொலைபாதகத் தால் மோக்ஷம் அடையப்பெற்றுஞர் மூத்தகாலத்தில அருள் செய்தார்; தக் கனும் யாகஞ்செய்து (அன்பில்லாமையால) தன்தலையை இழந்து விட்டான். எ-று. (௮௨)

பிரமவிச்சையுறப்பெறுமுமக்
கருமவிச்சையுறக்குறுமொழுதார்
றருமமோபாவமோவொருவன்றன்வினை
வருமைதாறுன்றறுவறியும்பாலதோ.

(இ - ள்) பிரமமென்னும் பொருள் உண்டென்று நிச்சயமாகச் சொன்ன போதிலும் ஒருவன் செய்த கருமம் நன்றென்றும் அன்றென்றும் வரையறுத் துக்கூற யாராலும் கூடாது. ஆகையால் ஒருவனுடைய கிருத்தியம் பாவமா மோ-புண்ணியமாமோ நிச்சயிப்பதற்குரியமையான அவவிஷயம் உன்னால் அறி யத்தக்கதாகுமோ? ஆகாது. எ-று. (௮௩)

பண்மொழிக்கண்டனைப்பற்றியேயுதைப்
புண்டமறக்கனையுனுள்ளோமொரசு
கண்டுறுமொழித்தவர்குமிராக்கவார்
விண்டிடக்கேட்டவர்வெருவியாங்குவார்.

(இ-ள்) பூர்வகாலத்தில் மார்க்கண்டேய முனிவனைப் பாசக்கயிற்றால் இழுத்தபோது பரமசிவத்தாலுதைப்பட்ட தன்மையை மறந்து விட்டாய் போலும்; பூலோகவாசிகள் தாங்கள் கண்ட அக்காட்சியை இன்னமும் தலைமுறை தலைமுறையாகச்சொல்லி வருகிறார்கள்; அவ்விஷயத்தை நினைத்தாலும் பயப்படுவார்கள்; அதைச்சொல்லக்கேட்டவர்களும் திகிலடைந்து வருந்துவார்கள். எ-று. (௩௪)

இன்னம்நீயுயிருடனிருக்கவேண்டினுன்
மன்னியேயரன்பதமறந்திடாதிரு
வென்னவேகூறினர்விமானமேலுற
மின்னுமோர்க்கொடிவிமானவினெய்தினார்.

(இ-ள்) இன்னும் நீ உயிரோடிருக்க விரும்புவாயானால் எப்போதும் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டிருக்கவேண்டுமென்று, யமதரும ராஜனுக்கு மறுமொழி சொன்ன சிவகணத்தலைவர்கள் மின்னலுக்கொப்பான பிரகாசவடிவுள்ள சரவதியை விமானத்திலேறச்செய்து, சீக்கிரமாகப்புறப்பட்டார்கள். எ-று. (௩௫)

அமரர்துந்துமியெழுகடலினார்ப்புற
விமையவர்மாதரசீட்டச்சாமரை
சமனுலகிகழ்ந்துவெண்சசிகொள்செஞ்சடை
யுமையொருபங்கனுலகத்துய்த்தனர்.

(இ-ள்) தேவர்கள் சப்த சமுத்திரங்களின் கோஷத்தைப்பார்க்கிலும் அதிகமாய் ஒலிக்கும்படி துந்துபிமுழங்கச்செய்யவும், தேவமாதர்கள் விண்ணுலகைவிட்டு சாமரைபோடவும், சிவகணத்தலைவர்கள் சரவதியை வெண்மையான சந்திரன் விளங்குஞ் சிவந்த சடையுடைய உமாதேவியைத்தமது இடப்பாகத்தில் வைத்த சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருக்கயிலாசத்திற் கொண்டுவந்து சேர்த்தார்கள். எ-று. (௩௬)

இனைத்தபாதகிதனைதின்றருளியோன்
றனித்திடுமெம்பெருமான்மணிமுத்தாற்றிடைக்
குனித்தநாசிவபுரமெய்துங்கொள்கையை
வினைத்ததென்றுலகில்வியப்புடன்சொல்வேன்.

(இ-ள்) மாண்டுபோன பாவியாகிய சரவதியின் பிரேதசரீரமாம்சத்தைத் தின்ற ஒரு காயானது கொண்டுவந்து போட்ட அவளுடைய எலும்பானது திருமணிமுத்தாநதியில் கரையப்பெற்ற மாத்திரத்தில் அவள் சிவலோகத்தையடையுந்தன்மையையுண்டாக்கியது என்றால் அம்மகாநதியின் மகிமையை எவ்வாறு அளவிட்டுக்கூறுவேன். எ-று. (௩௭)

சரவதிசருக்கம் முற்றிற்று.

---

# தேனுச்சருக்கம்.

காதியென்றுலகுயிர்க்குக்கனகனுக்காகப்பூண்டோன்
மேருவரைத்தாற்பெற்றகோசிகனென்னும்வேந்தன்
நீதகல்வேட்டமாடக்கானகத்திற்றிரிந்திளைத்து
மாதவவசிட்டன்சாலைவந்தனனடிவணங்கி.

(இ-ள்) அடைக்கலம் புகுந்தவரைக்காப்பதுபோல் பூலோகத்திலுள்ள ஜீவகோடிகளைப்பாதுகாத்த காதி ராஜன் தான் செய்த மேன்மையான தவத்தினால் பெற்ற கௌசிகனென்னும் மன்னவன் குற்றமற்ற வேட்டையாடக்காட்டிற் சென்று, அலைந்து திரிந்து, இளைத்துக்களைத்து, மகா தவசியாகிய வசிஷ்ட முனிவர் எழுந்தருளியிருக்கும் பர்ணசாலைக்கு வந்து அவரது திருவடிகளுக்குத்தெண்டனிட்டு, எ-று. (௧)

போற்றியேநிற்கவேந்தன்வசிட்டனும்புகன்றமாற்ற
மேற்றனனுலகஞ்செங்கோலினிதினிக்காற்றுகின்றாய்
நாற்றிசைதுதிக்குங்கீர்த்திநல்லனீயாதலாலே
யாற்றலாய்நம்மிடத்திலுன்னைவிருந்தல்வேண்டும்.

(இ-ள்) அரசன் வணக்கஞ்செய்து நின்று, வசிஷ்டமுனிவர் சொல்லிய ஆசீர்வாதங்களைப்பெற்றான். பின்பு அந்த வசிஷ்டர் அரசனை நோக்கி "நீ இந்த உலகத்தில் நன்மையுண்டாகச் செங்கோல் செலுத்துகிறாய்; நான்கு திசைகளில் உள்ளவர்கள் புகழ்ந்து பேசும் கீர்த்தி வாய்ந்த நல்லவனாயிருக்கிறாய்; ஆதலால் வலியோனே! நம்மிடத்தில் உன்னை விருந்தாக உண்ணச் வேண்டும்". எ-று. (௨)

என்னலும்முனிவன்கூறவெதிர்மொழியிசையச்சொல்வான்
றன்னியசேனைவெள்ளஞ்சூழ்ந்திடவேட்டம்வந்தே
னின்னுரைக்கிதுநீர்சொல்லினைவெகுசேனைதன்னா
லென்னருநீசைவதன்றுகிலைவினைமறுத்துநின்றான்.

(இ-ள்) என்று அந்தவசிஷ்டர் சொல்லவும், அதற்குப்பொருத்தமாக அவ்வரசன் பதிலுரைக்கத்தொடங்கி, நெருங்கிய சேனைக்கூட்டம் சூழ்ந்துவரும்படி இவ்வனத்தில் வேட்டையாடவந்தேன். தம்மைப்போன்ற தவசிகளுக்குச்சாப்பிடுங்கள் என்று நாம் சொல்லவும், அவர்கள் மனப்பூர்த்தியாய்ச்சம்ம

றிப்பதல்லாமல் என்னைப்போன்ற இராஜாவுஞ் சூழ்ந்த இராஜாக்கள் இனைந்து உதிவலை பென்று மறுத்துச்சொன்னான். எ-று. (௫)

உதிரமுண்டுசேனைத்தேயொளிதிகழ்மாலிவேலை
விதலேயுறுஞ்சேர்கவென்னாவியிசைநவனோர்க்கான்
முந்நூறவிருந்துசெய்யவேட்டனர்வதிய
கதுமெனவருகவென்றுகாமதேனுவையழைத்தான்.

(இ-ள்) சத்துருக்களுடைய இரத்தத்தைக் குடித்துத்தசையைத்தின்று பிரகாசிக்கின்ற செவ்வேனைப் போற்றிவந்த வேலாயுதத்தையுடைய வேந்தனே! உமது சேனைகளுக்கெல்லாம் இவ்வெப்படி புபசரிப்பாரென்று மனதில் சந்தேகமென்னும் பெரிய வருத்தத்தை நீரடையாமல் சம்மதிக்கவேண்டுமென்று வசிஷ்ட முனிவர் சொல்லவும், கௌசிகராஜன் ஒத்துக்கொண்டான். அதன் மேல் முனிவர் அவர்களுக்குத்திருத்தமாக விருந்து செய்யவும், இச்சித்தபொருளைத்தருணத்திற்கொடுக்கவும், "காமதேனுசீக்கிரம் வரக்கடவது" என்று நினைத்து சிந்தித்தார். எ-று. (௬)

வந்தகாமதேனுவதிட்டனைவணங்கிப்போற்றி
யென்னைநீநினைந்ததென்கொலேப்பணிசெய்கவென்ன
மன்னவன்சேனைக்குவிருந்துநீமுடித்தப்பின்னை
யிந்திரன்பாற்செல்லென்னவிசைத்தனனெவர்க்குமேலோன்.

(இ-ள்) அக்கணமே காமதேனுவானது அவ்விடம் வந்து வசிஷ்ட முனிவரைப்பணிந்து துதித்து, எனதுபெருமானே! தாங்கள் நினைத்த காரியம்யாது? நான் செய்யவேண்டிய வேலை என்ன? என்று விண்ணப்பஞ் செய்யத்தவசிகளெல்லாருக்கும் மேலான அம்முனிவர் "இந்த இராஜாவுக்கும் இவருடைய இராணுவத்தார்க்கும் இப்போது விருந்துசெய்து பிறகு நீ தேவேந்திரனிடத்திற்குப் போ" என்று சொன்னார். எ-று. (௭)

நல்லதெனச்சாலைப்பாங்கர்ஞாயிறுகாணலியாக
நில்லிடவுறுநகைப்பாளெமேடைப்பள்ளியாக்கித்
தந்தியவாயில்காப்போர்தொழில்செய்வோர்பலர்களாக
மன்றமுமிருக்கச்சோலையணிவிளைநீர்க்காற்றி.

(இ-ள்) நல்லதென்று சொல்லிக்காமதேனு அம்முனிவருடைய பன்னசாலைப்பக்கத்தில் சூரிய பூமியாக விலைபெற்று விளங்கும்படி பல அறைகளும், அதற்கு அப்புறம் நீண்ட சாலைகள் அறையும் உண்டாக்கி, பலரிருக்க விசா



லமான இடமுள்ள பட்டசாலையும் அமைத்துப்பிரகாசம் பொருந்திய இரத்தின மாலைகள் தொங்கும்படி கட்டி வாசல்காவற்காரர்களும், ஏவலாளர்களுமாகப் பலரிருக்கச்செய்தது. எ-று. (௮)

எத்தலத்தினின்றநறுக்கசெய்திணன்சேனைமுமப்
போந்துபோகாதாலேக்கேபுருநறுமிருக்கப்பந்தி
யுந்தவிரிந்தேயக்கூறிபொருக்கெனப்பரிமாறக்கை
யமைந்தவராயிரம்பேர்வந்தவணிறகின்றார்.

(இ-ள்) அரசனிடஞ்சென்று அமுதுண்ணவாருங்களென்று அழைத்தவுடன் அவ்வேந்தன் தனது சைனியத்துடன் எழுந்துவந்து, சாப்பிடுவதற்கமைந்த தானத்தை அடைந்தபோது, அவ்விடத்தில் வரிசை வரிசையாய் அழகிய ஆசனம் போட்டுத்திருப்தியாகப்பரிமாறுதலில் கைதேர்ந்த அனேகம் பேர் அவர்களுக்கு முன்பாக நின்றார்கள். எ-று. (௯)

அறுசுவைத்திரித்தக்கட்டிமாம்பையினிலைவொணர்ந்தே
வாய்த்திடவிருந்தாளைவலப்புறமாகப்போட்டுப்
போக்குதீர்தெளித்துச்செங்கைபொருந்துநவெடுத்தெடுத்து
நித்திடவியதாருடனேதகனிகனியைசிறச்சென்றார்.

(இ-ள்) மூடிவ காருயதற்கருமையான வேதபாத்திரத்தை அறுசுவைப் பிராமணர்கள் திருத்தி அறுத்தசந்தனமுடைய வாழையிலைகளைக்கொண்டுவந்து, செம்மையாக அறுத்த பக்கம் உண்போருக்கு வலதுபுறத்திலிருக்கும்படியாய்ப்போட்டுச் சேர்ந்தவர்களினுள் பலமுறை வெடுத்தெடுத்து நீர்தெளித்து, எ-று. (௰)

வேறு.

கனியுநெய்யுந்தயிருமுண்ணமு
மினியதேனுமினையவும்பாலுமே
நினைவிலன்னவர்யாதுநினைக்கினு
மனையதாய்ப்பரிமாறினர்யாவுமே.

(இ-ள்) முப்பழங்களும், பசுநெய்யும், பலவகைக்கறிகளும், தயிரும் தித்திப்புள்ள தேனும், இன்னும் உணவுக்குரிய மற்ற எல்லாப்பதார்த்தங்களும் அவ்வவர்கள் முதலானவர்கள் தங்கள் மனதில் எதைக்கருதினாலோ அதை அப்போதே பரிமாறினார்கள். எ-று. (௧௧)

கண்டவர்கண்களித்திடகாசியுங்
கொண்டவாசங்குலாவிடவின்சொலாற்
றுண்டமாதொகோவினுணர்வினால்
மண்மெய்யுமின்பாம்புலனைந்துமே.

(இ-ள்) விருந்தின் காட்சியைக்கண்ட கண்கள் மகிழ்ந்தன; மூக்கு நல்ல வாசனையைக்கிரகித்தது; காது இனிமையான உபசாரவார்த்தைகளைக்கேட்டது; நாக்கு அறுவகை ருசியை அறிந்தது; இரண்டு வகைகளும் பரிசஸுகத்தை யுற்றன. இவ்வாறு ஐந்துபுலன்களும் ஆனந்தத்தை அடைந்தன. எ-று. (க௦)

ஆசைதீரவருந்தியெழுந்தனர்
பூசினர்கைபுகழ்மணிமன்றலும்
நேசமாகவொடிதினிருந்தனர்
பேசினரிவ்விருந்தையப்பெற்றியே.

(இ-ள்) ஆசை தீரும்படி நன்றாகச்சாப்பிட்டு எழுந்து வந்து, அழகிய கைகளினால் புகழத்தக்க வாசனை வஸ்துக்களைப் பூசிக்கொண்டார்கள்; நட்பின் தன்மையாகவெகுநேரம் அவ்விடத்திலிருந்து இந்தஅற்புதவிருந்தைக்குறித்துச் சந்தோஷமாகப்பேசினார்கள். எ-று. (கக)

தேக்கெறிந்தவியர்ந்தனர்சந்தனம்
பூக்கள்சூடினர்பொன்னிறவெற்றிலைப்
பாக்கருந்திப்பகலின்வியனிதென்
றாக்கமாகவுவநினைத்தனரோ.

(இ-ள்) சந்தனத்தை மிகுதியாகவாரிப்பூசினார்கள்; குடுமிகளிலும், மார்புகளிலும் புஷ்பமாலைகளைத்தரித்தார்கள்; வெற்றிலைப்பாக்குப்போட்டுக்கொண்டார்கள்; நாங்கள்அடைந்திருக்கசுகங்களெல்லாம்காமதேனுவின்காரியமல்லவா? என்று சந்தோஷமாக மனதில் அரசன் சிந்தித்தான். அரோ, அசை எ-று. (கஉ)

அருந்தவன்பக்கலெய்தியரசனு
மருத்துபோதும்பகலினுமன்னர்பாற்
பொருந்திடத்தவனல்லதன்போலவே
யிருந்திடப்பயனென்னெனக்கேட்குவான்.

(இ-ள்) வசிஷ்டரிடஞ் சென்று அரசன் தேவாமிர்தத்தைப்போலப்பாலிய தம்முடைய இந்தப்பசு அரசர்களிடத்திலிருந்தால் பிரயோசனமாகுமல்லாமல்



முனிவர்களிடத்திலிருப்பதில் என்ன உபயோகம்? ஆகையால் அதை எனக்குக்கொடுத்துவிடுமென்று சொன்னான். எ-று. (கங)

கொடுக்கிற்கொள்வல்கொடாவிடினுங்கொள்வ
னெடுத்துநானமியைத்ததுசெப்பென
விடப்படாதகைசற்றுவினம்பநு
நடுக்கிடத்தன்வசிட்டனவிதுமன்.

(இ-ள்) கொடுத்தாலும் பெற்றுக்கொள்வேன்; கொடாவிட்டாலும்பிடுங்கிக்கொள்வேன்; தயை வைத்துப்பொருத்தமானது எது? சொல்லுமென்று தன்னாற்கூடாத ஆசைகொண்டு கேட்கவும், தருமநெறி தவறாத வசிஷ்ட மகா முனிவர் மறுமொழி சொல்லத்தொடங்கினார். எ-று. (க௪)

வேறு.

விண்டுலவுமதியுரிஞ்சுகுடுமிகொண்டவெற்பினிருந்திறைசிக்குவிசவேந்தன்
சண்ணிருமேலவுழுமறைசெய்துதிருக்கடலினிடையேபிறந்தகாமதேனு [வின்று
மண்ணுலகமன்னவர்பால்வருவதன்றுமாநகர்க்கோவன்னவழுக்கொடுப்பி
னென்னமுனைதெய்வமன்னமல்வன்னஞ்செய்வவன்னதுமேயிநிலைர்க்கெழுந்த
[துபோனான்.

(இ-ள்) ஆகாயத்தையளாவும் சந்திரன் தவழும் சிகரத்தையுடைய மலைகளின் சிறகுகளை நாசஞ்செய்த வச்சிராயுதத்தையுடைய தேவேந்திரன் கற்பக டையினால் கட்டப்பட்டுநின்ற டைமையைச்செய்து வருவதும் திருப்பாற்கடலில் அவதரித்ததுமான காமதேனுவானது இப்பூமண்டலத்திலுள்ள இராஜாக்களிடத்திற்கு வரமாட்டாது. அதனால் அதனை அவ்வாறு அரசரிடம்போயிருமென்று ஒருவர் சொல்லுவது நியாயமல்ல. ஆகையால் உன் மனதிற் கேற்றபடி உன்னைம்போல் செய்யலாமென்று சொல்லவும், கௌசிக ராஜன் கோபங்கொண்டு தீவிரமாக எழுந்து போனான். எ-று. (க௫)

[வேந்
கோலிலுருபகமைவியன்றுடைநோக்கிக்கோத்தவிதுங்கன்னிறுத்தொண்டபுல்
கிடகுறவேவனைத்திடையுக்பாசுயேர்க்கிமெய்க்கேயிவர்வளித்தனையோவென்றுபேட்
டைத்தளிலுண்மெய்ணிரில்வயிக்குதன்வயிமிற்பிடிக்கின்றனனுடை [சுத்
வுடன்மவிணாசகிலித்திடனும்பப்பார்சேனைகரசொட்டியுகுமாருகொடிய
[வித்தெதிர்த்தார்.

(இ-ள்) காமதேனுவைப்பிடித்துக்கொண்டு வாருங்கள் என்று கௌசிக ராஜன் சொல்லவும், அநேகம்பேர் கோலும், கயிறும், வலையும் எடுத்துக்கொண்டு

வந்து அது தப்பி நிலைநிற்கிடமில்லாதபடி அதனைச்சூழ்ந்து வளைத்துக்கொண்டபோது, அது வசிட்டமுனிவனைப்பார்த்து, தாங்கள் என்னை இந்த அரசனுக்குக்கொடுத்து விட்டீர்களோ வென்று கேட்க, அதற்கு அம்முனிவர் "நான் அப்படிச்சொன்னதில்லை. தன்னுடைய சாமர்த்தியத்தைக்காட்டும்படி அரசன் பிடிக்கச்செய்கின்றான்," என்று மறுமொழி சொல்ல அதைக்கேட்ட அத்தெய்வப்பசு தன் சரீரத்தின் உரோமங்களைச்சிலிர்க்கிட அதனால் பப்பரர் என்றும், சோனகர் என்றும், ஒட்டியர்கள் என்றும் சொல்லும்படியான பலகோடி வீரர்கள் தோன்றி அவ்வரசன் சேனையோடு சண்டை செய்தார்கள். எ-று. (௧௬)

வேறு.

வேலாயுதம்வாளாயுதம்வில்லாயுதம்விடவே
போலாயுதமொருகோடிகள்விட்டேபொருதனரால்
காலாயினவுடலாயினதலைபாணிகள்கண்ட
நாலாயினவலகைதிரண்டாடசமயமே.

(இ - ள்) காமதேனுவின் சேனைவீரர்கள் வேலாயுதங்களையும், வாளாயுதங்களையும், வில்லாயுதங்களையும் விட்டார்கள். அவர்களைப்போலவே இராஜனுடைய போர்வீரர்களும் கணக்கில்லாத ஆயுதங்களைப்பிரயோகஞ்செய்து அந்த யுத்தகளத்தில் சண்டை செய்து கால்களும், உடல்களும், தலைகளும், கைகளும் நான்கு துண்டங்களாய்க்கிடந்தன. அந்த யுத்தகளத்திலே பிசாசின் கூட்டங்கள் கூத்தாடின. ஆல், அசை. எ-று. (௧௭)

மிகுகோசிகனருள்பாலகர்விழியாலதுகண்டார்
தகுமாதவமுனிவந்தனைதானேயிதுவென்றே
யுகவேயவர்முனிதன்னையொறுப்போமெனவேகிப்
புகுதீயுறுபுழுவாமெனமாய்ந்தேயுயிர்போனார்.

(இ - ள்) வல்லமை மிகுந்த கௌசிக ராஜனுடைய குமாரர்கள் தங்கள் கண்களினால் சண்டை முடிவைக்கண்டு வசிட்ட முனிவருடைய மோசம் என்று எண்ணி அவருடைய வஞ்சனை யறியும்படி அவரைத்தண்டிப்போமென்று போய் மிக்கதீயில் விழுந்த புழுவைப்போல் மாண்டு மடிந்து போனார்கள். எ-று. (௧௮)

அப்போதுகண்டனரசன்கண்ணனலெழுக்க
மெய்ப்போதியகணையாயிரம்விட்டான்முனிமேலே
கைப்போதுறுதண்டொன்றெதிர்காட்டத்தனியதுவ
தப்பாதுகணையாவும்விழுங்கத்தனிகண்டான்.



(இ - ள்) அச்சமயத்தில் தனது குமாரர்களுக்கு நேரிட்ட ஆபத்தைக்கௌசிகராஜன் கண்டு தனது கண்களில் அக்கினி பொறி உண்டாகும்படி மிகுந்த கோபங்கொண்டு மந்திரம் உச்சரிக்கப்பெற்ற ஆயிரம்பாணங்களை வசிட்டமுனிவர் பேரில் செலுத்தினான். அவர் தமது தாமரை போன்ற கையில் வைத்திருந்த யோக தண்டத்தை எதிர் தோன்றும்படி காட்டிவைக்க, அரசன் தான் குறிதப்பாமல் விடுத்தபாணங்களனைத்தையும் அது தன்பால் அடக்கிக்கொண்டதைக்கண்டு ஆச்சரியப்பட்டான். எ-று. (௧௯)

இமையாசலமீதிற்றவமெய்திச்சிவசத்தி
யமைவாமெனவாங்கிக்கொடுசெய்துசினமாய்க்
கமையாதவன்மேலேவிடல்கண்டேயுறவிழுங்கச்
சமையாதுபுரண்டேபொறிபொங்கியதுகண்டே.

(இ - ள்) அவ்வரசன் இமயமாமலையின் மேல் வந்து தவஞ்செய்து சிவசத்தி பொருந்தியிருக்கிறதாகச்சொல்லப்பட்ட ஒரு தண்டாயுதத்தை வரத்தினாற்பெற்றுக்கொண்டு வந்து மிகுந்த கோபத்தோடு சாந்தசீலராகிய வசிட்ட முனிவர் பேரில் அவரை கன்றாய்ப்பார்த்துப்படும்படி பிரயோகிக்கவும், விழுங்கினால் ஜெயிக்கப்படாத அத்தண்டாயுதம் தொலைந்து தூளாயிற்று. எ-று.

கண்டானரசன்சிந்தைகலங்கித்தவமல்லா
துண்டோவலியென்றேயினுமுயர்மாதவமுயல
விண்டேமுனிசொல்வான்விருந்திட்டப்பகைதானே
கொண்டேனிதுகண்டுறவருந்தாதுகுதித்து.

(இ - ள்) கௌசிகவேந்தன் தான் தவத்தாற்பெற்றுக்கொண்டுவந்ததண்டு தொலைந்துபோனதைப்பார்த்து மனதில் திகில் அடைந்தவனாய் ஒருவனுக்குத் தபோபலமே பலமல்லாமல் வேறொன்றினால் பலமுண்டாகாதென்று அறிந்து பிரமரிஷியாகும்படி நினைத்து மேன்மையான தவஞ்செய்யும்படி புறப்பட்டுப்போனான். இது இந்த வசிட்ட முனிவர் அரசனுக்கு விருந்து செய்து அதினிமித்தமாகப்பகை வந்து பெருகியதே! இது நன்றாயிருக்கிறது! எ-று. (௨௧)

வேறு.

கற்பினவளர்க்குத்தாயாமருந்ததிகணவனுக்குப்
பற்பலமுனிவர்குழப்பாவநாசத்தலத்தி
னற்பரிவுடனேபஞ்சாக்கரநதிநீராடி
யற்புடனரனையருச்சித்துப்பூசைசெய்தான்.

(இ - ள்) பதிவிரதமென்னுந்தருமத்தை விருத்திசெய்யும் எமது தாயாராகிய அருந்ததியின் மணவாளனாகிய வசிட்டமுனிவர் தம்மை அனேகதவ முனிவர்கள் சூழ்ந்து வரும்படி புறப்பட்டுத்திருப்பாவநாசப்பதியை அடைந்து, நல்ல அன்போடு திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து ஆலகால விஷத்தையடக்கிய கண்டத்தையுடைய பரமசிவத்தின் திருவடிகளை யருச்சனை செய்து, பூசித்தார். எ-று. (உஉ)

பலபலபருவஞ்செல்லப்பலித்திடுந்தவத்தைநோக்கி
நிலவுலகத்துனெங்குமிகில்லையிவ்விடம்போற்
குலவுமிப்பதியிற்செய்தவொன்றொருகோடியாக
பலிதருஞானபூமியென்றுளமகிழ்ந்தான்மன்றோ.

(இ - ள்) இப்படி பலபருவகாலங்கள் செல்லத் தான்செய்துவந்த தவம் பலிதப்பட்டதைக்கண்டு, இப்பூதலத்தில் இத்தப்பதிக்கு ஒப்பான தலம் எங்குமில்லை; இந்த க்ஷேத்திரத்தில் செய்த ஒரு புண்ணியமானது கோடிபுண்ணியமாக வளரும் ஞானபூமி இதுவென்று வசிஷ்டமுனிவர் மனதிற் சந்தோஷம் அடைந்தார். மன்றோ, அசை. எ-று. (உங)

முன்மழையிற்பெய்யுமுன்விளைவித்தாடாக
நன்மைபேவளர்கவென்றுகல்லியவாத்தால்வாழ்த்தி
மின்னிடைமஞ்சக்கொங்கைவெற்பனைப்பிணைத்தேயோங்கும்
பொன்வல்லிபாகன்றனைப்பூசித்துப்போயினானால்.

(இ - ள்) மூதலிற்பெய்யுமழை இத்தத்தலத்தில் பெய்யக்கடவது என்றும், முதல்மாருல் இந்தத் தேசநிறைந்திடக்கடவது என்றும், தருமமே ஓங்கிடக்கடவது என்றும், ஆசீர் கொடுத்தவரத்தினால்வாழ்த்தினதுமிருந்த இடைபவளப் பம்பரங்களை மலையைப்போலடர்த்தோங்கப்பெற்ற ஸ்ரீசவர்ணம்பிகையை வலத்தமது இடதுபாகத்தில் வைத்தருளிய சோமசுந்தரக்கடவுளைப்போற்றிப் பூசைசெய்து விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார். எ-று. (உச)

வார்கலியிரெட்டாணமதிவெணமடிமையத்தாங்கி
யுளமதுகசிந்துநோக்கியுருகேயுவமையில்லாக்
களபமென்கொங்கைவல்லிபங்களைக்கருத்திருத்தி
உளவில்சீர்பாவநாசப்பதியினிலடைந்ததேனு.

(இ - ள்) வளர்கின்றசோடச (பதினாறு) கலைகளைப்பெற்றசந்திரனைப்போல் தாவள்யமான பால்மடியை யுடையதாகி மனமுருகிச் சிந்தித்து இளைப்பி



ல்லாத வாசனைச்சாந்து பூசப்பெற்ற தனத்தையுடைய செகநாம்பாளையிடதுபாகத்தில் வைத்தருளிய சிவபெருமானை மனதினால் தியானித்துக்காமதேனுவானது அளவில்லாத சீர்த்தியையுடைய திருப்பாவநாசத்தலம் வந்து சேர்ந்தது. எ-று.

பைப்பணியாரத்தர்க்கப்பன்னனைத்திருமுன்பேகி
மெய்ப்பரிவடனேநோக்கக்காலைஞ்செய்துவிமலன்பாற்போ
யப்பணிமுடியின்மீதேயபிடேகஞ்செய்யவெண்ணி
யொப்பிலாமுலைகளூன்றுமொழுகத்நிம்பாற்சுரந்தே.

(இ - ள்) விஷப்பையை யுடைய சர்ப்பாபரணந்தரித்த சிவபெருமான் சந்நிதியை யடைந்து, மெய்யன்போடு மூன்றுதரம் பிரதக்ஷணம் செய்து, நிர்மலசொரூபியாகிய சிவலிங்கப்பெருமானிடம் சென்று, கங்கையைத்தரித்த அவரது திருமுடியின்மேல் அபிஷேகஞ்செய்யநினைத்து, ஒப்பில்லாத தனது நான்குதனங்களினால் மதுரமான பால் சுரந்து சொரிவதுபோல் ஒழுக்கியது. எ-று. (உரு)

அன்பினிற்பெருக்கமேயோவருந்தினிநினைத்தமேயோ
வென்புகெக்குருகிப்பாலாயிறங்கியதித்தமேயோ
முன்பயனன்னமோதிந்தேடியுமுடிவுகாணு
நன்பெறுந்திருமுடிக்கேயபிடேகவழிபாடம்மா.

(இ - ள்) முற்காலத்தில் பிரமதேவன் அன்னப்பக்ஷிரூபமாகி ஆகாயத்தில் செடுந்தூரம் பறந்து தேடியும் காணக்கூடாத சிவபெருமானுடைய திருமுடிக்குக்காமதேனு அன்பினாற் செய்து அபிஷேகஞ் செய்ததினையானது அக்காமதேனு மனதினிடத்தில் வைத்த அன்பின் மிகுதியோ? அல்லது பாலின் பெருக்கமோ? அல்லது அன்பினால் என்புகளும் நெக்கு நெக்குருகிப்பாலாகப்பெருகி வந்ததென்னமோ? யாம் அறியோம். எ-று. (உசா)

புத்தியினினைந்திரங்கும்போற்றியெம்மனையருமபல்கா
லெத்தனையென்றருமுற்கவிலிங்கத்திலிறைவன்றோன்றி
முத்தவெவ்வினைகளீங்கமுடிவினின்முத்தியெய்தத்
தத்தனையுனக்கேயென்றுசாற்றியேமறைந்துபோனான்.

(இ - ள்) அத்தெய்வப்பசுவானது புத்தியினால் தனது வினைகளைச்சிந்தித்து உருகும்; எமது பெருமானைப்பலதரம் துதித்துநிற்கும்; தொழுது வணங்கும்; எனது தந்தையே! என்று பணிமொழி கூறும்; அச்சமயத்தில் சிவபெருமான் இலிங்க ரூபத்திலிருந்து காருண்யத்தால் வெளிப்பட்டு " நீ முன் செய்த

தீவினைகளெல்லாம் தீர்ந்தது; இந்தப்பிரார்த்த சரீர நீக்கத்தில் மோக்ஷ சுகத்தைக்கொடுக்கின்றோம்" என்று திருவாக்களித்து அந்தர்த்தானமாயினர். எ-று.

தேமலர்ச்சோலைசூழ்திருப்பாவநாசம்வாழ்த்திப்
பூமழைசொரிந்தார்தேவர்துந்துமிபொங்கவோசை
பாமகள்கமலைபோற்றும்பனிவரைவல்லிபாகச்
சோமசேகரன்பொற்பாதந்துதித்தனர்முனிவரெல்லாம்.

(இ-ள்) தேன் துளிக்கும் புஷ்பங்கள் நிறைந்த சோலைகள் சூழப்பெற்ற திருப்பாவநாசப்பதியைப்போற்றித்தேவர் யாவரும் துந்துமியோசை முழங்கப் பூமாரிபொழிந்தார்கள். சரஸ்வதியும் இலக்ஷ்மியும் துதிக்கின்ற பர்வத ராஜன் புத்திரியாகிய ஸ்ரீபார்வதியை இடதுபக்கத்தில் வைத்தருளிய சந்திரசேகரனாகிய சிவபிரானது பொன்போலும் அழகிய பாதங்களை ரிஷிகளெல்லோரும் போற்றி வணங்கினார்கள். எ-று. (௨௯)

ஆனியற்பூசையாற்பட்டீச்சுரநகர்க்குப்பேரோ
பானிலாமுடிவைத்தோனும்பட்டீசனென்னுநாமந்
தானருளாற்புனைந்தான்றருந்திரேதாயுகத்தின்
ஞானமாநந்திசொன்னானல்வரிலொருவன்கேட்க.

(இ-ள்) தகுதியான திரேதாயுகத்தில் பசுவினால் பூசை செய்யப்பட்டதனாலாகையால் இந்த நகரத்துக்குப்பட்டீச்சுரம் என்றொரு பெயரும் வழங்கும்; தாவள[illegible]மான சந்திரனைச்சடாமுடியிற்றரித்த இத்தலத்தில் எழுந்தருளிய பரமசிவம் பட்டீச்சுரனென்னும் [illegible]திருந்த திருப்பெயரை ஏற்றுக் கொண்டார்; என்று தக்ஷிணாமூர்த்தியின் கடாக்ஷவீக்ஷண்யம் பெற்ற நால்வரி லொருவராகிய சனற்குமார முனிவருக்கு நந்திதேவர் திருவாய் மலர்ந்தருளி னார். (௩௰)

தேனுச்சருக்கம் முற்றிற்று.

---

# அனந்தசருக்கம்.

இனையதாகியபதியிலுங்காதையொன்
றனையதுகேட்டிநீமாலையையம்புலன்
வினைகெடநோற்றிடும்விரதமாதவா
வெனவருணந்திதானிசைக்கலுற்றனன்.

(இ-ள்) மனமாயையும் அதனாலுண்டாய ஐம்புலச்சேட்டையும் கெடும்படி தவஞ்செய்யும் முனிவ! இப்படிப்பட்ட மேன்மை பொருந்திய இந்தத் தலத்தைப்பற்றிய மற்றொரு சரித்திரம் உளது; அதனைச்சொல்லக்கேள் என்று கருணை நிறைந்த திருநந்திதேவர் சொல்லத்தொடங்கினார் :—எ-று. (௧)

வேலைநீருடையெனமேவுமாநில
ஞாலமேமுறைதகெடப்பாவநன்னுறுங்
காலவேற்றுமையினாற்கருதரும்பொரு
ளேனுநால்வகைப்பமறைக்கிறந்ததே.

(இ-ள்) சமுத்திரசலமே ஆடையாகத்தரித்து விளங்கும் அஷ்டகுலபர்வதங்களால் சூழப்பட்ட இப்பூமண்டலத்தில் விதி விலக்கு கிரமங்கெட்டுப்பாவமே மேலிடும்படி கலிவித்தியாசத்தினால் எண்ணுதற்கு அருமையான அர்த்தங்கள் அமைந்த இருக்குமுதலான நான்கு வேதங்களும் மறைந்துபோயின. எ-று.

தருமநன்னெறியொழுகுவோர்வருடங்கள
விரிவொடுதீவினைகொழுந்துவிட்டன
கருமுகில்காலநீத்தவத்திற்கான்றன
விருநிலமகள்வளத்தியல்புபொய்த்தன.

(இ-ள்) நன்மையான தருமமார்க்கத்திற்குரிய சற்கருமங்கள் சோர்வடைந்து சுருக்கமாயின; துர்க்கருமங்களோ விரிவடைந்து பெருக்கமாயின; கருமையான மேகங்கள் பருவகாலம் நீங்கியபின் வீணாகப்பெய்தன; மேன்மையான பூமி தேவியின் செழிப்பின்றன்மை குலைந்தது. எ-று. (௨)

உலகெலாந்துயரிடையுழத்தல்கண்டுவின்
னிலகியமணிமுடியமரரியாவரு
மலர்நறும்பங்கயப்பொகுட்டுவாழ்தரு
கலைமகள்கொழுநனைக்கருதிநண்ணினார்.

(இ - ள்) உலக முழுவதும் துன்பத்தினுல் வருந்துவதைப்பார்த்துத்தேவ லோகத்தில் வசிக்கும் ஒளி பொருந்திய இரத்தினங்கள் பதித்த கிரீடங்களைத் தரித்த தேவர்கள் எல்லோரும் மலர்த்தலையுடைய வாசனை தங்கிய தாமரைப் புஷ்பத்தில் வாசஞ்செய்யும் சரஸ்வதி நாயகனுகிய பிரமதேவரிடத்தில் விண்ணப்பஞ்செய்யலாமென நினைத்து அவரிடம் சென்றார்கள். எ-று. (௪)

புவனகோடிகளெலாமளிக்கும்புங்கவ
வவனியிலிதருமரியநான்மறை
தவறினதீவினைதழைவுபெற்றன
கவலையுற்றுயிரெலாங்கலங்கிவாடின.

(இ - ள்) கணக்கில்லாத அண்டங்களைச்சிருஷ்டித்தருளும் நாயகனே! பூவுலகத்தாருக்குத்தேவரீர் கிருபைசெய்து தந்த அருமையான நான்கு வேதங்களும் மறைந்து போயின; அதனுல் பாவச்செயல்கள் மிகுதியாயின; ஆத்மகோடிகள் மனவருத்தப்பட்டுத் துயர்மேலிட்டு வாட்டம் அடைந்தன. எ-று. (௫)

சதுமறையுலகினிற்றருதியென்றலு
மெதிர்மொழிகடவுளர்க்கிரங்கிநான்மலர்
மதுவிரிகமலமாளிகையில்வைகிறேன்
கதிர்முடிச்சேடனைக்கருதினனரோ.

(இ - ள்) ஆகையால் மறைந்து போய்விட்ட நான்கு வேதங்களையும்பூவுலகத்தோர்பெறும்படி தந்தருளவேண்டுமென்றுதேவர்கள் விண்ணப்பஞ்செய்ய, அப்படியே தருகின்றேமென்று [illegible]மொழி சொல்லி, அன்று பூத்த தேன் துளிக்கும் தாமரைப்பூவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் பிரமதேவர் ஒளிவீசு[illegible]டையுடைய ஆதிசேஷனைத்திருவுளத்திற்சிந்தித்தார் எ-று (௬)

நினைத்திடும்பொழுதிலெநெடியவாளரா
வனைத்தலங்கெய்தலுமயனுநோக்கியே
மண்தலையுலகிடையிறந்தநான்மறை
யினைத்தலையுறத்தருகென்றுகூறினன்.

(இ - ள்) எண்ணத்தக்க ஆயிரந்தலைகளையுடைய நீண்ட ஒளி பொருந்திய அனந்தனென்னுஞ்சேடன் அவ்விடத்துக்குவரவும் பிரமதேவர் அவனைப்பார்த்து "மத்தியவுலகமாகிய பூமண்டலத்தில் மறைந்துபோன நான்கு வேதங்களும் மறுபடியும் உண்டாகச்செய்வாய்" என்று சொன்னார். எ-று. (௭)



நன்றெனப்பணிந்தவனும்புநாணிலத்
தொன்றியசெழும்புனனாட்டிலுற்றன
னின்றெனுநான்மறையுருவெடுத்தல்போன்
மின்றிகழோருருவெடுத்தன்மேவினன்.

(இ - ள்) நல்லதென்று பிரமதேவருடைய திருவடிகளை வணங்கிய அனந்தனென்னுஞ்சேடன் விருப்பத்தோடு பூலோகத்தில் விளங்குகின்ற நீர்வளப்பமுள்ள ஒரு நாட்டில் வந்து சேர்ந்தான். இல்லாமற் போய்விட்ட நான்கு வேதங்களும் ஒரு உருவத்தை யெடுத்துக்கொண்டு வந்தனபோல் சோதிரூபமான ஓர் வடிவெடுத்துக்கொண்டான். எ-று. (௮)

பன்னகத்தலைவர்கள்புகழும்பண்பினன்
முன்னுறுதீக்கியேமுதிர்ந்தயாக்கையாய்
மன்னியமானிடவடிவெடுத்தனன்
றன்னிகர்மறைக்குலத்தலைவனென்னவே.

(இ - ள்) நாகத்தலைவர்கள் கொண்டாடும் தன்மையுடைய ஆதிசேடன் தனது பழமையான வுருவத்தை மறைத்து விட்டு விருத்தாப்பிய சரீரத்தோடு தனக்குத்தானே ஒப்பான பிராமணகுல ஆசாரியனென்று சொல்லும்படி மனித வுருவெடுத்துக்கொண்டான். எ-று. (௯)

வேறு.

வலத்திற்கிடந்தமுந்நூலன்மணிப்பொற்குழையின்பாக்கதன்
செறுத்த[illegible]வியகரதண்டன்றேவாசிரியச்சிறப்பன்னோ
னலக்[illegible]யக்குழ[illegible]ளிர்ந்த[illegible]முடிச்சடையன்
சுந்தரத்திற்றிருத்தேர்வீதியிடைமாயோற்கொண்[illegible]ருதினனால்.

(இ - ள்) வலது தோளில் தங்கிய பூணூலையுடையவனும், இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற குண்டலமணிந்த நீண்ட காதுகளையுடையவனும், நடந்து போவதற்கேற்ற கைத்தடியையுடையவனும், தெய்வத்தன்மையுற்ற ஆசிரியனுக்கும் மேன்மையுடையவனும் அன்பர்களி[illegible]றும் முன்குடுமி [illegible] இருந்த அழகுடையவனும், சடை முடியுடையவனும், ஆகிய ஆதிசேடன் சுந்தரத்திருத்தேர் வீதியில் [illegible] வந்தான். எ-று. (௧௦)

கடையுட்டின்மைவிளங்குதகோற்றண்டோகுண்டலியப்பெய்த
வடையவிற்றிறம்பார்த்தொழுகுளத்தோர்பணிந்துபோசைனர்த்தி
யிடையிற்பொன்றுமறைதோன்றற்கேதுவியம்போவல்லைதிய
புடவிக்குரியதவப்பேறேவெய்தப்பெற்றேம்புகலீரே.

(இ - ள்) ஆசிரிய ரூபத்தோடு வந்த அந்தணனிடத்தில் தெய்வத்தன்மை விளங்குதலாலும், பார்த்தபோதெல்லாம் ஆச்சரியப்படத்தக்கதாயுமிருந்தபடியினால் தன்னெறிவிட்டகலாத பிராமணர்கள் அவரது திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்துப்பெருமைதங்கிய ஆசனமிட்டு, அதிலிருக்கச்செய்து, மத்திய காலத்தில் சிதைந்துபோன வேதங்கள் மறுபடியுமுண்டாவதற்கேதுவான தன்மையினலோ? அல்லது இப்பூவுலகம் செய்த தவப்பயனாலோ? தாங்கள் இவ்விடம் வரப்பெற்றோம்; இன்னதென்று சொல்லமுடியாது. எ-று. (௧௧)

என்னமுகமன்பலகூறியென்றடெவ்வூரெய்தியதென்
அன்னமானன்றனைகருமறிவோயறியவுறைதியெனப்
பொன்னம்பலத்திற்பதஞ்சலியாமெங்கள்குலமேபுகுந்திட்ட
பின்னம்பலராமுனிவரரிற்பெரியோராகிவிளங்கினரோ.

(இ - ள்) இவ்விதமாக உபசாரவார்த்தைகள் அநேகஞ்சொல்லி, தாங்கள் இருப்பது எந்த நாடு? இவ்விடத்திற்கு வந்த காரணம்யாது? அன்னவாகனத்தையுடைய பிரமதேவருக்கு ஒப்பான அறிவையுடையோரே! எங்களுக்குச்செம்மையாகச்சொல்லவேண்டுமென்று கேட்க, "பொற்சபையில் ஆனந்தத்தாண்டவமூர்த்தியின் நிர்த்தனத்தைச்சதாதரிசனஞ்செய்து கொண்டிருக்கும் பதஞ்சலி மாமுனிவர் எங்களுடைய நாகலோகத்தையடைந்த பிறகு தான் முனிவர்களுக்கெல்லாம் சிரேஷ்டமான முனிவராய்ப்பிரகாசித்தார். எ-று. (௧௨)

கங்கையோடுபெ[illegible]துபுகுநாடே
யெங்களுடைமின்னாட்டிலிருக்குங்குடிகள்போகிகளே
யுங்கணாட்டோர்போகத்தைவேண்டிவையத்துழல்வார்க
டங்குமணிமாணிக்கங்களுண்டாய்விளங்குந்தலைமுறையே.

(இ - ள்) கபிலரிஷியின் கோபாக்கினியினால் தகிக்கப்பட்டுச்சாம்பலாய்க்கிடந்த தனது முதாதைகளான சகரனுடைய மக்களை யெழுப்பிக்கொண்டு வரும்படி தவத்தினால்பெற்ற ஆகாயகங்கையுடன் பகீரதன்வந்து பிரவேசித்த நாடே எங்களுடைய நாடாகும்; அந்த நாட்டில் வசிக்கும் குடிகள் சுகானுபவிகளான சர்ப்பங்களே; உங்களுடைய நாட்டிலுள்ளவர்கள் சுகத்தைக்கருதி இந்த பூவுலகத்தில் அயராடைகின்றார்கள்; எங்கள் நாட்டிலுள்ளவர்கள் தொன்றுதொட்டு தங்கள் முடியில் அழகிய மாணிக்கங்களையுடைத்தாயிருக்கிறார்கள். எ-று. (௧௩)



இயன்மண்டலத்திற்சக்ரபுரமென்றேசொல்லவிருக்கைபெற்றேம்
பயில்சங்காழிதரித்தபிரான்பள்ளிகொண்டதானமது
வுயருநாகப்பட்டப்பேருள்ளேனென்னவோதுதலு
நயமாயந்தணர்களுமுபசாரங்களைவிற்றியே.

(இ - ள்) இப்படிப்பட்ட தன்மையுள்ள அந்த நாட்டில் சக்கிரபுரமென்கிற திருநகரத்தில் நாம் வாசஞ்செய்வது; விளங்குகின்ற சங்கு சக்கரம் தரித்தருளிய மகா விஷ்ணு ஆனந்த நித்திரை கொண்ட திருப்பாற்கடலின் எல்லையும் அதுதானே; சிறப்பு பொருந்திய நாகலோக ராஜன் என்னும் பட்டப்பெயரும் நமக்குண்டு." என்று அனந்தன் சொல்லவும், அவ்வூர் வேதியர்கள் அவருக்குப்பல உபசார வார்த்தைகளைச்சொல்லுனார்கள். எ-று. (௧௪)

இவ்வூரவரின்மறுதலையாயிசைப்பார்களுமுண்டவர்வார்த்தை
யொவ்வாவார்த்தையெனநீக்கிபோதவிக்கவேண்டுமென
வெவ்வாறென்னைவினவுசெவியிலேனினியாயிரமுகத்தா
னவ்வேதங்களோதுவிக்கவல்லேனென்னவறிவித்து.

(இ - ள்) இந்த ஊரில் உள்ளவர்களில் சிலர் வேறு விதமாய்ச்சொல்பவர்களும் உண்டு. அவர்களுடைய வார்த்தைகள் பொருத்தமில்லாதவைகள் என்று நீக்கி எங்களுக்குப்போதிக்கவேண்டுமென்று சொல்ல, "நீங்கள் இந்தப்பிரகாரம் என்னைக்கேட்டுக்கொள்ளுதலால் "செவிப்புலன் தனியே இல்லாமல் கண்ணே காதாக யுடைய நான் எனது பல[illegible]னோடு அந்த நான்கு வேதங்களையும் ஓதுவிக்கும் திறமுடையேன் என்று தெரிவித்து, எ-று. (௧௫)

சிறந்தவாதிவருணத்திற்செப்பற்கரியமறைநான்கு
மிறந்ததெவ்வனீகற்றுவென்னவேண்டாமிப்புவிமேற்
பிறந்தாரெவருந்தாம்பெற்றபிள்ளைக்கரிதாமறைப்பொருளின்
றிறம்போதித்தலல்லாதுசெப்பார்பிறிதுமேதிலர்க்கே.

(இ - ள்) மேலான வேதியரால் சொல்லுதற்கு அருமையான நான்கு வேதங்களும் மறைந்து போயினவே; அப்படியிருக்க நீர் அதை எப்படி கற்றுக்கொண்டீர் என்று கேட்கவேண்டாம்; இந்தப்பூலோகத்திலுள்ளவர்கள் எவரும் தங்கள் தங்கள் புத்திரர்களுக்கு அருமையான வேதார்த்தங்களைப்போதிப்பார்களே அல்லாமல் அந்நியர்களுக்குக்கொஞ்சமும் சொல்லமாட்டார்கள். எ-று. (௧௬)

யானென்னுவதமிவ்வாறேயிசைந்தவறிவாமென்றனக்கோர்
தானவுலகக்கதிசெல்லத்தருகாலிலேலென்றனர்வடைந்தேன்
ஞானமறைகளிவ்வுடலோடிறக்குமென்னவுளராகு
மானவறிவீர்கற்போர்கட்கோதவிப்பவந்தேனால்.

(இ-ள்) என்னுடைய கருத்தும் இதுவேயாகும் ஆனால்; வேதார்த்தங் களைக்கற்றுணர்ந்த எனக்கு சுவர்க்கலோகப்பதவியைத் தரத்தக்க புத்திரனில் லாத குறையினால் நான் மனதில் சஞ்சலப்பட்டேன்; அறிவை விளக்கும் வே தார்த்தங்கள் என்னுடைய சரீரத்தோடு போய்விடுமே என்று எண்ணி யிருந்த நல்லறிவுடையோர்களே! கற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்களுக்குப்போதிக் கலாமென்று இவ்விடத்துக்கு வந்தேன்." எ-று. (௧௮)

என்றகூறுமறைவல்லோனிருதாள்வணங்கியினையிலருட்
குன்றேனானக்கொழுஞ்சடரேவுதிப்பொன்றில்லேங்குறைதீர்
வின்றுமறைநீவெடுத்தியம்பிற்கற்குந்தகையோரிங்காட்டி
னன்றுஞ்சிறுவர்பலருள்ளாரொன்றுமயக்காருளமென்றனரால்.

(இ-ள்) இவ்வாறு சொன்ன வேதவிபுனனாகிய அனந்தனுடைய உபய சரணாரவிந்தங்களைப்பணிந்து, ஒப்பில்லாத கருணை மலையே! ஞானமணி விளக் கே! ஒன்றுந்தெரியாத எங்களுடைய குறை நீங்கும்படி மறைந்து போன வே தங்களைத்தேவரீர் எடுத்துப்போதித்தால் அதனைக்கற்றுத் தெரிந்துகொள்ளுந் தன்மையுள்ளவர்கள் இவ்வூரில் நன்மையான பாக்யமுமுள்ள சிறுவர்கள் அநேகர்கள் இருக்கிறார்கள் என்று சந்தோஷத்தோடு சொன்னார்கள். எ-று.

ஒதற்கினைந்தபலசிறுவருற்றுரங்காணுவமையில்லா
ஞாதியர்களபலோர்க்குச்செப்பேமென்னுமத்திறத்தான்
மேதைமறைகள்கற்போர்க்குமுகம்பார்த்தியாமும்விளம்பொண்ணு
கோதிலெழினிறப்படாமொன்றுக்கோய்நிற்கவேண்டுமென்றான்.

(இ-ள்) வேதம்படிக்க விரும்பிச்சம்மதித்த அநேக சிறுவர்கள் அவ்வி டத்துக்கு வந்தார்கள். தனக்கு நிகரில்லாத அந்த வேதபண்டிதன் முதலிலே யே அந்நியர்களுக்குச் சொல்லிக்கொடுக்கமாட்டோமென்று கூறிய காரணத் தால் அறிவை வளர்க்கும் வேதத்தைக் கற்றுக்கொள்வோர்களுடைய முகத் தைப்பார்த்துச்சொல்வது முறைமையல்ல; ஆதலின் குற்றமற்ற அழகான திர ரைச்சீலை ஒன்று மத்தியில் போடவேண்டுமென்று உரைத்தான். எ-று. (௧௯)



அன்னவாறுபடம்வளைத்தாரதனுட்டனதுபடம்விரித்து
முன்னருருவந்தானுகிமெய்யிற்றான்மறைகண்மறைவுற்றே
துன்னுதிரையினயலிருந்துசிறார்கடோன்றுமிளமதிபோ
லன்னரறிவுவளர்வுதராட்குநாளுமறைகற்றார்.

(இ-ள்) அந்தப்பிரகாரமே திரையொன்று அவர்களுக்கு மத்தியில்தொங் கவிட்டுக்கட்டினார்கள். அதற்குட்புறத்தில் அவ்வேதியன் தனது பழையவுருவ மாகியபடம் விரித்துக்கொண்டு மறைவாக இருந்து வேதம் சொல்லினன். அந் தத்திரைக்கு வெளிப்புறத்திலிருந்துகொண்டு மாணாக்கர்கள் பிறைச்சந்திரன் நாளுக்கு நாள் வளர்வதுபோல் தங்கள் அறிவு விருத்தியாகும்படி வேதங்களைக் கற்றுக்கொண்டு வந்தார்கள். எ-று. (௨௦)

இவ்வாறொழுங்கிற்செலப்பன்னாளிறுதியோர்நாளோதுகையின்
மெய்வாழ்திரைடையிலோரவனன்றிரையுள்வியப்பையறிதுமெனாத்
தைவாறொழினிக்கிடனுஞ்சடுதியெதிராய்க்கண்ணுற்றுப்
பைவாயரவின்விடத்தீயான்முடிந்தார்திரைடையிற்பல்லோரும்.

(இ-ள்) இவ்விதமாய்க்கிரமமாகப்பல நாள்கழிந்துக்கடைசியில் ஒருநாள் வேதஞ்சொல்லுகையில் உண்மை யோங்கும் வேதப்பள்ளியில் துன்மார்க்கனா கிய ஒரு மாணாக்கன் திரைக்குள் இருக்கும் அதிசயத்தைப்பார்த்தறியவேண்டு மென்று தைத்த நீண்டதிரைச்சீலையை நீக்கினவுடன் அக்கணமே நேரில்கண்டு கொண்டிருக்கிற மாணாக்கர் பலரும் படம் பொருந்திய வாயையுடைய சர்ப் பத்தின் விஷாக்கினியால் இறந்து போனார்கள். எ-று. (௨௧)

எழுதாமறைகள்பயிற்றுவித்தற்கெய்தியென்னேகொடும்பாவப்
பழியாங்கொண்டேமென்செய்கேமென்னநினைந்துவையுனெய்திக்
கெழுமாமணிகளுடிருக்குங்கிரணப்பஃறிமுடித்தலையோன்
வழுவாயுறையுந்தனதிலிற்சென்றான்மற்றோர்செயலின்றி.

(இ-ள்) எழுதியுண்டாகாத வேதங்களைக் கற்றுக்கொடுக்கும்படி வந்து ஐயோ! கொடுமையாகிய கொலைப்பாதகமான பெரும்பழிக்கு ஆளானோமே. இதற்கு நாம் செய்யத்தக்கது யாது? என்று சிந்தித்து வியாகுலமடைந்து உயர்ந் த மாணிக்கங்களுக்கிடையில் சொலிக்கும் பிரகாசரேகை வரிசை விளங்கும் முடியையுடைய ஆதிசேடன் மற்றொரு செயலுமில்லாமல் தனதுலகமாகிய நாகலோகத்திற்குப்போய் விட்டான். எ-று. (௨௨)

கொலையால்வந்தபெரும்பாவங்கூடியலகைத்திரளாகி
மலையாமறைகடெரிந்தமனத்தச்சுமேன்மேற்றேற்றியவ
ணிலையாமுன்னர்த்தோன்றிடலுங்கண்டானடுங்கிநெட்டுயிர்ப்பாய்
மலையாய்வளருங்கொடும்பாவமாய்க்குமாறுஞ்சிந்தித்தான்.

(இ - ள்) கொலையினால் நேர்ந்த மிகுந்த பாவங்களெல்லாம் சேர்ந்து பேய்களின் கூட்டமாகி நிலையான வேதங்களைக்கற்றுணர்ந்த அனந்தனுடைய மனத்தில்மேலும் மேலும்பயமுறுத்தி, அவனுக்கு எதிரில்நிலையாகத்தோன்றவதினால் அவைகளைப்பார்த்துத்திகிலடைந்து பெருமூச்செறிந்து வருந்தினான்; இவ்விதம் மலைமேல் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் கொடுமையான பாவத்தை நாசஞ்செய்யும் விதத்தைக்குறித்தும் ஆலோசித்தான். எ-று. (உங)

## வேறு.

பாய்மணியுரகர்தம்பதிக்குநீணெறி
யாயவோர்பிலத்தின்வாயணைந்துபுற்றிடை
மேயவெம்மானருள்விரும்பித்தாடொழச்
சேயொளிமணிமுடியனந்தன்சிந்தியா.

(இ - ள்) வீசுகின்ற கிரணத்தையுடைய மாணிக்கத்தைத்தரித்த நாகருடைய உலகத்துக்கு மிகுந்த தூரத்திலிருக்கிற கீழறை வழியாய் இத்தத்திருப்பாவநாசப்பதிக்கு வந்து புற்றிடங்கொண்ட சுயம்பு மூர்த்தியாகிய ஸ்ரீபாவநாசேஸ்வரரது திருவருளையுடைய ஆசைகொண்டு, அவரது பாதாரவிந்தங்களைப்பணிந்து போற்றச்சிவந்த பிரகாசத்தையுடைய இரத்தினம் விளங்கும் முடிவாய்ந்த அனந்தன் மனதில் எண்ணங்கொண்டு, எ-று. (உச)

பிலவழிபுகுதான்வந்துபேசரு
மலகில்சீரெம்பிரானுலயத்திளுட்
கலைமதிமுடித்தவன்பூசைசெய்தலே
வலிதாவகழ்ந்தனன்வாவியொன்றரோ.

(இ - ள்) கீழறை மார்க்கமாய் வந்து பேசுதற்கருமையான அளவில்லாத கீர்த்தியுடைய எமது பெருமானாகிய பட்டீச்சுரரது திருக்கோவிலுள் பிறைவெ சித்துச்சோடச கலை வாய்ந்த சந்திரனைச்சடாமகுடத்தில் தரித்த சிவபெருமானுக்குப்பூசை செய்யவேண்டுமென்னும் அன்புமிகுந்தவனா அதனால் அவ்விடத்தில் ஒரு திருக்குளத்தை வெட்டுவித்தான். எ-று. அரோ, அசை. (உரு)



கொன்றையம்முடியனைக்கோதின்மஞ்சனம்
நன்றுறவாவிநீராடிநாடொறு
மொன்றியதிருவருளோங்கவைம்புலன்
வென்றவனருச்சனைவிளங்கச்செய்துபின்.

(இ - ள்) அழகியகொன்றைமலர்சூடிச்சடைமுடியுடையசிவபெருமானுக்குக்குற்றமற்ற திருமஞ்சனம் செய்து, சிவானுக்கிரகம் வளர்ந்தோங்க ஐம்புலன்களடக்கிச்சிவபூசை விளக்கஞ்செய்து பின்பு, எ-று. (உசு)

ஆயிரமுடிகளிலணிகொண்மாமணி
பாயொளிவிளக்கமேதாங்கிப்பாடுற
மேயவன்புருகுநீர்வெளிப்பட்டாலெனத்
தூயகண்களினிடைச்சொரியுநீத்தமே.

(இ - ள்) தனது ஆயிரஞ் சிரசுகளிலும் விளங்கா நின்ற அழகிய இரத்தினங்களுடைய பரந்த பிரகாச தீபச்சுடரையேந்திப்பாடுவன்; அன்பு பொருந்திய மனம் நெகிழ்ச்சலமாய் வெளி வந்ததுபோல் பரிசுத்தமான நேத்திரங்களிலிருந்து ஆனந்த பாஷ்பவெள்ளம் பெருக்குவான். எ-று. (உஎ)

கொன்றையம்வார்சடைக்குழகன்றாட்டுறி
யொன்றியவுயிர்ப்பசுவொருக்கிச்சேர்த்தியே
நின்றவுட்கரணநான்றுலைக்கனீடியக
வன்பெறும்பாவினையருதிறைக்கியே.

(இ - ள்) அழகிய கொன்றைமாலை தரித்த நீண்ட சடாமகுடத்தையுடைய சோமசுந்தரக்கடவுளது திருவடி யென்னுங்கட்டுத்தறியில் யாவென்னுஞ் சிவப்பசுவைச்சேர்த்துக்கட்டி மனம்-புத்தி-சித்தம்-அகங்காரமென்னும் அந்தக்கரணங்களாகிய நான்கு தனங்களிலிருந்து பெருகும் சிவநேசமென்னுந்திவ்விய அமுதைப்பொழிந்து, எ-று. (உஅ)

பல்பகலுளவினையொழித்துப்பாவனை
வல்வினைத்துவக்கறமனத்தைவாட்டியே
சொல்லரும்பூசனைதொடங்கினின்றனன்
செல்லருவருடமுந்நூற்றாயிரம்.

(இ - ள்) அநேக நாள் ஆகாரமின்றி வன்னத்தால் உண்டாகும் கொடுமையான வினைத்துயர் நீங்கும்படி. மனோ நிக்கிரகஞ்செய்து, விசால, ற்குரு

மையான சிவபூசை செய்து வந்தனன். இவ்விதமாக செல்லுதற்கரிய ஆயிர வருஷங்கள் கழிந்தன. எ-று. (௬௯)

பூசனைதிருவுளம்புரிந்துநோக்குறு
வாசவனயன்றிருமாலுங்காண்கிலாத்
தேசுறுதிருவுருதிகழச்செஞ்சடை
யீசனூர்தோன்றினரிலிங்கமாப்படுனை.

(இ - ள்) அனந்தன் விடாது செய்த பூசையைக்கண்டு திருவுளமிரங்கித் தேவேந்திரனும் பிரமதேவனும் மகா விஷ்ணுவும் காணாத ஞான சூரியனென்னுஞ் சிவபெருமான் பிரகாசம் பொருந்திய திவ்விய மங்களவடிவம் விளங்கும்படி இலிங்கத்தின் மத்தியில் தோன்றியருளினார். எ-று. (௭௦)

கற்றையஞ்சடிலமுங்காளகண்டமு
முற்றவெண்டலையணியொழுகுமுக்கணும்
வெற்றிசேர்கணிச்சியுமானுமேவுறச்
சுற்றினதோலினதுடையுந்தொங்கலும்.

(இ - ள்) தொகுதியாகிய அழகுவாய்ந்த சடை முடியையும் கறுத்த கண்டத்தையும் வெண்டலைமாலையையும் அழகு திகழுந்திரிநேத்திரங்களையும் ஜெயம் பொருந்திய மழுவாயுதத்தையும் மானையும் திருமேனியிற்பொருந்தப்போர்த்துக் கொண்டிருக்கும் யானைத்தோலுடையையும் கொன்றைப் பூமாலையையும், எ-று. (௭௧)

வெண்பொடிவிளக்குமுற்றெளிருமேனியுங்
கண்களீராயிரங்களிப்பக்கண்ணுறீஇத்
தண்புனறதும்பிமெய்ப்புறத்திற்சார்ந்தெனும்
பண்புறுபரவையிற்படிந்துபோற்றுவான்.

(இ - ள்) நீறு பூத்தநெருப்புப்போல் விளங்கும் திருமேனியையும் தன் இரண்டாயிரங் கண்களும் களிக்கும்படி தரிசனஞ்செய்து கண்ணீர் ததும்பிச் சரீரத்தின் வெளியிற் புறப்பட்டாற் போலும் குணமிருந்த ஆனந்தக்கடலில் குளித்துத்துதி செய்யலானான். எ-று. (௭௨)

திருவருட்குன்றமேஞானதீபமே
யுருவினின்மூவராமொருவபல்லுயிர்ப்
பெருவினைத்துவக்கறப்பிறப்பிறப்பினைத்
தருவருளருமருந்தன்னசம்புவே.



(இ - ள்) அழகிய அருண்மலையே! மெய்ஞ்ஞானவிளக்கே! பிரமன்விஷ்ணு உருத்திரன் என்னும் மூவருமாய் விளங்கும் ஒப்பற்ற பொருளே! சிவகோடிகளுடைய பெரும்பாவப்பிணைகருகள் நீங்கலையும்படி ஜெனனமரணங்களைக்கொடுத்து முடிவில் மோக்ஷ வீடு தந்தருளும் ஞானமிர்தமென்னத்தக்க சம்புவே! எ-று. (௭௩)

மண்ணுநீபுனலுநீவன்னிகாலுநீ
விண்ணுநீயுயிருநீமேவுமெய்யுநீ
கண்ணுநீமனமுநீகருதுமொன்றுநீ
பெண்ணுநீயாணுநீபேசுஞ்சொல்லுநீ.

(இ - ள்) மலை முதலிய பிருதிவியும் நீ, கடல் முதலிய அப்பும் நீ, சந்திர சூரியர் முதலிய அக்கினியும் நீ, பிராணவாயு முதலிய காற்றும் நீ, ஆகாயமும் நீ, சீவனும் நீ, மேவுகின்ற சிந்தானபரமும் நீ, கண் முதலிய புறக்கரணமும் நீ, மனம் முதலிய அகக்கரணமும் நீ, இச்சிக்கும் பொருளும் நீ, பெண்ணும் நீ, ஆணும் நீ, வசனிக்கும் வார்த்தையும் நீ. எ-று. (௭௪)

காலமுமுலகமுங்காட்டுதத்துவச்
சீலமுஞ்சித்தசித்தென்னச்செப்பலு
மேலுமிங்குனையலால்யாதுவேறுதான்
மூலமுமுடிவுமாய்நின்றமுக்கணா.

(இ - ள்) திரிகாலமும் பதினாலுலகமும் காட்டுகின்ற சகல தத்துவநெறிகளும சித்து சடம் என்று சொல்லவைவும் மற்றெல்லாப்பொருளும் உன்னையல்லாமல் வேறுமுள்ளனவோ? இல்லை ஆதலின் அனைத்திற்கும் முதலாயும் அந்தமாயும் விளங்காநின்ற சோமசூரியாக்கினி யென்னும் மூன்று கண்களையுடைய முதற்கடவுளே! எ-று. (௭௫)

என்னவன்பினிற்பலதுதிசெய்தியாவரும்
முன்னுறுவடிவினைத்தொழுதமொய்மணிப்
பன்னகத்தலைவனைநோக்கிப்பண்ணவன்
மன்னியவாய்மலர்மலர்ந்துசொல்லுவான்.

(இ - ள்) இம்மாதிரியாக மெய்யன்போடு பலதோத்திரம் செய்துயாவரும் தியானிக்கும்படியான திவ்விய மங்கள சொரூபத்தைவணங்கிய ரத்தினத்தரித்த சர்ப்பலோகத்தவர்களுக்குத்தலைவனாகிய அனந்தன் மீது கிருபாநோக்கம் வைத்து மகா தேவன் நிலைபெற்ற திருவாய் என்னுந்தாமரை மலர்விகசிதமாய் மொழிந்தருளினார். எ-று. (௭௬)

செய்தமுற்கொலைவினைதீர்ந்ததின்றுனக்
கெய்தியபேறுமற்றியார்பெற்றார்களே
மெய்திகழணியெனமேவுகென்றுதன்
கையினலணிந்தருட்கருதிப்பின்னரும்.

(இ - ள்) நீ முன்செய்தகொலைப்பாதகம் இன்றோடு நீங்கியது; உனக்குண்டான லாபம் வேறு யார் அடைந்தார்கள்? நமது வடிவத்தில் ஆபரணமாய் விளங்குகின்ற சர்ப்பங்களைப்போல் சுகமாய் வாழக்கடவாயென்று தமது திருக்கரத்தினல் விபூதிசாத்திப்பின்னுங்கருணை கூர்ந்து, எ-று.

இத்தலத்தெம்மைநீயருச்சித்தேத்திய
பத்தியின்பெருமையாற்பணிகள்வேய்ந்தென
வெத்திசையும்புகழ்தங்கவெய்தியே
முத்தியும்பெறுதிநீமுடிவிலென்றனன்.

(இ - ள்) இந்த க்ஷேத்திரத்தில் எம்மை நீ பூஜித்து வணங்கிய பத்தியின் மேன்மைத்திறத்தால் யாம் தரித்திருக்கும் சர்ப்பங்களைப்போல் எத்திசையிலும் கீர்த்தி விளங்கும்படி வாழ்ந்து முடிவில் மோக்ஷ சுகத்தையும் அடைவாயென்று வரமளித்தார். எ-று. (௩௮)

அப்பநீயித்தலத்தென்னையாண்டதற்
கொப்புறமற்புதமுதவவாயெனச்
செப்புமம்மடியவர்சிந்தைபோற்றுசீ
ரப்புனல்வாவியிற்றவளையெய்தரு.

(இ - ள்) என் அப்பனே! தேவரீர் இந்தத்தலத்தில் அடியேனை யாட்கொண்டதற்குப்பொருத்தமாகும் அதிசயம் விளங்க அருள்வாயென்று பிரார்த்தித்ததனல் சொல்லாநின்ற நமதன்பர்களை மனதிற்பூஜிக்கும் நீ வெட்டுவித்த இத்திருக்குளத்தில் தவளைகள் உண்டாகமாட்டா. (குறிப்பு), இத்திருக்குளத்துக்குதான் அமண்டூகதீர்த்த மெனப்பெயர் வழங்குகிறது. எ-று. (௩௯)

குட்டமேமுதலியநோய்கள்கொண்டவ
ருட்கொளினிங்கிமேதனிலோர்துளி
கட்டளையூழ்வினைக்குன்மகாசநோய்
விட்டிடுமெய்ப்புனற்றிவலைமேற்படில்.



(இ - ள்) குட்ட முதலான வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்கள் இந்தத் திருக்குளத்தின் ஒரு துளி சலம் ஆசமனம் செய்தால் அந்த ரோகங்கள் நீங்கப் பெறுவார்கள். இதில் ஒரு சிறு துளிசலம் சரீரத்தின் மேற்பட்டால் பிராரத்த கருமத்தின் வலிமையால் உண்டாகும் குன்மம்-க்ஷயம் என்னும் பிணிகளும் ஒழிந்துபோம். எ-று. (௪0)

என்றுபேரருள்புரிந்தினிநிலாமதி
கொன்றையுமயங்குசடைமுடி கோலக்கண்ணுதல்
நன்றிருவருளுருத்தான்மறைந்தனன்
மின்றிகழ்கயிலையின்மேவினனரோ.

(இ - ள்) என்று மிகுந்த கருணை கூர்ந்து பிறைச்சந்திரனையும் கொன்றை மாலையையும் தரித்த திருச்சடைமுடியும் உடைய சுந்தரமான நெற்றிக்கண்ணை உடைய சிவபெருமான் தமதருளினற்றோன்றிய திருவுருவை மறைத்து மிகவும் பிரகாசம் பொருந்திய ஸ்ரீகைலாசத்துக்கெழுந்தருளினர். எ-று. அரோ, அசை. (௪க)

தேனலர்கற்பகச்செய்யதாண்மலர்
வானவர்சொரிந்தனர்சோனைமாரிபோற்
கோனெடுங்கடலெலாமுடைந்தகொள்கைபோல்
வானதுந்துபிமுழக்கமெண்டிசாந்திரம்.

(இ - ள்) தேன் துளிக்கும் கற்பகவிருக்ஷத்தின் சிவந்த புதிய புஷ்பங்களைச்சோனைகால மழைபோல் தேவர்கள் [illegible] நீண்ட சமுத்திரங்களெல்லாம் உடைந்த தன்மையைப்போல் வான துந்துபியின் பேரொலியானது எட்டுத்திக்கையும் சூழ்ந்துகொண்டது. எ-று. (௪௨)

செங்கதிரொளிகெடநகைக்குஞ்செம்மணி
தங்கியபஃறலைச்சர்ப்பநாயக
னங்கணருளினலகிடாடொழப்
பொங்குபாதலத்தரசாகிப்போயினன்.

(இ - ள்) சிவந்த சூரிய பிரகாசமும் மழுங்கும்படி ஒளி வீசும் மாணிக்கம் தங்கிய அனேக சிரசுகளையுடைய சர்ப்பங்களுக்கு நாயகனாகிய ஆதி சேஷன் பரமசிவத்தின் திருவருளினல் பாம்புகளெல்லாம் தனது பாதத்தை வணங்கும்படி நாகலோகத்தரசனாகி அவ்விடத்திற்குச்சென்றான். எ-று. (௪௩)

மாமணிநாகன்செய்பூசைவண்மையான்
நாமநாகேச்சுரநகர்க்குக்கூறுவார்
தாமவார்குழலியோர்பாகர்தம்பெயர்
தோமிறுகேச்சுரர்துவாபரத்திலே.

(இ-ள்) பெருமை பொருந்திய மாணிக்கத்தையுடைய நாகராஜன் பூசை செய்த வளமையால் இந்நகரத்திற்கு நாகேச்சுரமென்றும் மலர்மாலை சூடிய நீண்ட கூந்தலையுடைய பார்வதிபாகனாகிய சிவபெருமானுக்குக் குற்றமற்ற நாகேச்சுரர் என்றும் பெயர் சொல்லுவார்கள்; மேலும் துவாபரயுகத்திலே எ-று. (௪௪)

நண்ணியிந்நகர்வயினான்குவேதமு
மெண்ணியோர்கலத்தினிறந்திடாவகை
பண்ணியபூசையிற்பணிந்தாலவன்
மண்ணினோர்பெயர்சதுர்வேதமங்கலம்.

(இ-ள்) இந்த நகரத்தில் வந்து நான்கு வேதங்களும் ஓர்காலத்தும் இறந்திடாவண்ணம் அந்த அனந்தன் வணங்கிச்செய்த சிவபூசையால் அத்திருப்பதிக்குச் சதுர்வேதமங்கலமென்றும் ஒரு சிறப்புப்பெயர் வழங்கும். எ-று. ஆல் அசை. (௪௫)

ஆதலால்நோய்களிலல்லலுற்றவர்
பேதறுபாவமுந்தீர்க்கும்பெற்றியான்
மாதலமிதுவெனவழங்குமிப்புனற்
காதையொன்றுந்துகலைக்கந்திருக்குமே.

(இ-ள்) ஆசையால் வியாதிகளினால் வருந்துவோர்கள் மதிமயக்கத்தால் தேடிய பாவத்தைத் தீர்க்கும் திறத்தினால் மகாக்ஷேத்திரம் இதுவேயென்று வழங்கிவரும். இது நிற்க இந்தத்திருக்குளத்தின் தீர்த்த விசேடத்தைக்குறித்து ஒரு சரித்திரம் இருக்கிறது; அதுசகலதுன்பத்தையும் போக்கும். எ-று. (௪௬)

அனந்த சருக்கம் முற்றிற்று.

---

# மனுசரணச் சருக்கம்.

மேவொருமனுகுலவேந்தன்செய்கதை
யாவதிமுனிவரனருளப்பெற்றிடும்
நாவலர்கொருவருகந்தவத்திறன்
சாற்புநலினைவேதவிசாரதாவாள்.

(இ-ள்) கல்லாலநிழலில் எழுந்தருளிய தட்சிணாமூர்த்தியின் திருவருளைப்பெற்றிருக்கும் நால்வருள் ஒருவராகிய சனற்குமார முனிவர் பூர்வம் மனுகுலத்தில் பிறந்த அரசனாகிய ஒரு மனு சரணமடைந்த சரித்திரத்தைச்சொல்லவேண்டுமென்று வணக்கத்தோடு கேட்டதால் எமது திருநந்தி தேவர் சொல்லத்தொடங்கினார். எ-று. (௧)

பலவுறுசெருவிடைவந்தபேரணிப்
பகைபடந்தனையெலாநீக்கிப்பற்றலர்
தலைதனைத்திரைவொளச்சென்றுநாக்குறு
நிலைமுகவெய்துடைத்திலகுவேலினன்.

(இ-ள்) யுத்தம் செய்யும் போர்க்களத்தில் பெரிய படைவகுப்புகளையுடைய அனேக சேனைக்கடற்கூட்டங்களையெல்லாம் நீக்கிப்பகைவர்களுடைய சிரங்கள் தன் உணவென்று ஓடிப்போய்த்தாக்கும் நிலைமுகத்தில் உன்னதை செய்யால் துடைக்கப்பெற்றுப்பிரகாசிக்கும் வேலாயுதத்தையுடையவன். எ-று.

நீதியினந்தனைவிசனாதவன
குதொருக்குநிரைத்தனையுஞ்சிந்தியான்
போதியல்கொன்றையானடிபைப்போற்றுபு
மாதவம்புரிந்தியமனக்களிப்பினன்.

(இ-ள்) இராஜநீதியில் பிறர் தனக்கொப்பில்லாத தன்மையைப்பெற்றவன்; மிகவுஞ் சிறியவனாயிலும் வஞ்சகம் நினையாதவன்; கொன்றைமாலைசூடிய சிவபிரான் திருவடிகளைத்துதிசெய்யும் பெருமை பொருந்திய தவத்தினால் பெருக்கும் மனமகிழ்ச்சியையுடையவன். எ-று. (௨)

அறிவுறுவிழாவிரணிலவுநெற்றியான்
போற்றரனடியவர்க்கன்புபூண்டவன்
மாற்றருநல்வியின்வரம்புகண்டவன்
சாற்றிருயிர்க்கெலாம்பெற்றதாயனான்.

(இ-ள்) மூன்று வரிகளோடு விதிப்படி பூசிய திருவெண்ணீற்றின் சோதி விளங்கும் நெற்றியுடையவன்; யாவரும் துதிசெய்யும்படியான சிவனடியார்களிடத்தில் மாறாத அன்பு பூண்டவன்; பெருமையைக்கொடுக்கும் கல்விக்கடலின் எல்லையைக்கண்டவன்; தான் காக்கும் குடிகளெல்லாரிடத்திலும் பெற்ற தாய் போன்ற கருணையுடையவன். எ-று. (௫)

கனவினுந்தீவினைகருதற்கஞ்சுவோ
னனியறம்வேலியாய்க்காவன்மைகுவோ
னினைம்பிறனுறுமிகைகவன்றியோன்
மனுவெனுங்கொற்றவன்மகதநாட்டுளான்.

(இ-ள்) சொப்பனத்திலும் தீயகருமங்களைச் சிந்திப்பதற்கும் பயப்படுவான்; மிகுந்த தருமமே வேலியாக அதில் நடு நிலைமையோடு வாழுஞ்சீலன்; கூட்டமாகிய மேகங்கள் நாணத்தக்க கொடையாளன்; மகதநாட்டிற்கதிபதியாகிய மனுவென்னும் நாமத்தையுடைய வேந்தன். எ-று. (௬)

## வேறு.

பொதுவறப்புரக்குநாட்டிற்புன்மைநீத்தந்தணாளர்
விதிமுறைக்குலத்தில்வந்தாளிமேதகுசெவ்விவாய்ந்த
மதிநுதல்விளமான்கேதுமதியெனுநாமங்கொண்டா
ளிதமுறப்பெற்றோருள்ளமின்புறவளர்கின்றாளால்.

(இ-ள்) மிக்க நீதியாய் அரசாட்சிசெய்யும் அந்நாட்டில் மேன்மை பொருந்திய பிராமணர்களுடைய நியமமான குலத்திற் பிறந்த அழகு வாய்ந்த சந்திரன் போன்ற முகத்தையுடைய பெண்பிள்ளை பிறந்தாள். அவள் கேதுமதி என்னும் பெயரைத்தரித்தவள்; பெற்ற தாய் தந்தையர் மனமகிழும்படி சந்தோஷமுடைய வளர்ந்து வந்தாள். எ-று. (௭)

நிலைதருபிராயமேழாய்நிகழ்ந்திடப்பெற்றோர்தங்கள்
குலநெறிகுறிகுணங்களொத்திடக்குலமறிஞரே
லலனைசேரியார்க்குநான்மறையொருவனுக்குக்
கலைநெறிகடந்தோனன்றோர்க்குதத்திடவிசைவந்தார்.

(இ-ள்) நிலைமையான ஏழாவது வயதையடைந்திட அப்பெண்ணைப் பெற்றவர்கள் தங்கள் குலத்துக்கேற்ற ஜாதியையும் குணத்தையும் உடைய



வரன் கிடைக்காத குறையால் அக்கன்னிகையை யாருக்கும் விவாகஞ்செய்து கொடுத்தார் இல்லை. அப்படியிருக்கும்போது பண்டிதனான ஒரு பிராமணன் அவர்களுடைய மனதுக்கேற்றபடி அவ்விடத்துக்கு வந்தான். எ-று. (௮)

மணவினைத்திறத்தான்கற்றோன்மறைநெறியொழுகுஞ்சீலன்
குணநெறிகுலங்கள்மற்றுமியைந்திடுமென்றுகூற
வனைதருமொழிகள்கேளாவன்புகொண்டுதற்குநேர்ந்து
அனையவனிவட்காமென்றுமணவினைதொழில்முடித்தார்.

(இ-ள்) கல்யாண காரியத்தைக்கருதி வந்தேன். எனக்கு வேறுபந்துக்களில்லை. எனது குணம், குலம், முதலானவைகள் பொருத்தமாக இருக்குமென்று அப்பிராமணன் சொல்ல, அப்படி மொழிந்தவார்த்தைகளைக்கேட்டுப் பெற்றோர்கள் அவன் மேல் அன்புவைத்து தங்களுடைய பெண்ணைக் கொடுக்க இவன் இவளுக்கேற்ற வரனென்று நினைத்துக்கல்யாண காரியத்தைச் செய்து முடித்தார்கள். எ-று. (௯)

மங்கையும்பருவமுற்றுமாதுமின்றுணர்கள்செல்வத்
தங்கள்வல்வினையாற்றன்னைத்தாயடைந்தார்கள்வானத்
திங்கள்போன்முகத்தாள்புதிதாகதகிடையாளன்பும்
பொங்குமில்வாழ்க்கையுண்டுப்புரிந்திடுகுமகவையீன்றாள்.

(இ-ள்) அந்த மணப்பெண்ணும் யௌவனத்தையடைந்தாள். சிலநாள் சென்ற பின்பு அப்பெண்ணைப்பெற்றோர்கள் தங்கள் கருமவினைப்படி தேகவியோகமானார்கள். ஆகாயத்தில் விளங்கும் சந்திரனைப்போன்ற பிரகாசம் பொருந்திய முகத்தையுடைய கேதுமதி யென்பவள் தன்னிடத்தில் அன்பு மிகுந்த தன் கணவனோடு ஒற்றுமையாக விளங்கும் இல்லற வாழ்க்கையை நடத்தி வந்து ஒரு குழந்தையைப் பெற்றாள். எ-று. (௰)

பெற்றமைந்தனுக்குமூன்றாம்பருவமுஞ்செல்லப்பெற்றே
னுற்றதீவினையுப்பற்றலுற்றமாங்காத்தினிடையே
புற்றெழுந்துடைந்துபொல்லாப்புழுக்கணத்துடையச்செவ்வீர்
மூற்றுவெம்மனைவிப்பீசவகட்டினவன்மையக்கனூர்ச்சை.

(இ-ள்) பெற்ற பிள்ளைக்கு மூன்று வயது பூர்த்தியானபோது அவளைப் பெற்ற தாயின் கொடிய ஊழ்வினை வசத்தால் தன் வலிய கையிலே பெரிய ஒரு சிலந்தி எழுந்து உடைந்து பொல்லாத புழுக்கூட்டம் வெளியப்பெருகும்

உதிரத்தால் தேகமெங்கும் தூர்ந்தும் வீச மயங்கி மூர்ச்சையடைந்தான். எ-று. (௧௦)

சிறுபொழுதகன்றபின்றார் மூர்ச்சையுந்தெளியவந்தோ
ரறிவுகொண்மனத்தனாகியாயிழைக்குரைக்கலுற்றான்
மறுவறுகுணத்தாயின்னவன்றுயர்க்காவிநில்லா
துறுமவானறிகவிங்கோருண்மைநானுரைக்கக்கேளாய்.

(இ-ள்) சற்று நேரம் சென்ற பின்பு மூர்ச்சைதெளிந்ததனால் சிறிது அறிவுதங்கிய மனம் உடையவனாகித் தன் மனைவிக்குச் சொல்லத்தொடங்கினான்:— நற்குண நற்செய்கைகளையுடையாளே! இந்தக்கொடிய துன்பத்தால் என் உயிர் என் உடலில் நில்லாமல் அவ்வானுலகத்தை அடையும் நீ அறியக்கடவாய். ஆதலால் இப்போது நான் ஒரு உண்மை சொல்ல நீ கேட்பாயாக எ-று. (௧௧)

இற்றதெம்மரபுமுன்னம்யார்செய்தீவினையோகாணேன்
சொற்றிறம்பாதகற்புத்தோகைநீயுடன்வந்தாயே
லற்றிடுமரபுநீயிவ்வருமகவொன்றாலாக்கை
நிற்றியென்றுரைத்தேயாவிநீத்தனனெறிநூல்வல்லான்.

(இ-ள் இப்படி நேரிட்ட தன்மை முற்காலத்தில் எனது வமிசத்தில் யார் செய்த தீயகருமவினையோ? யானறியேன். என் வார்த்தைக்கு விரோதமாய் நடவாதகற்புடையமாதே! நீயுடன்கட்டையேறுவாயானால் வமிசம்நாசமாய் விடும்; ஆதலால் இந்த அருமையான மைந்தனால் சந்ததிவிருத்தி செய்விக்க நீ உயிரோடு இருக்கக்கடவாய் என்றுசொல்லி நெடிய சாஸ்திரங்களின் வல்லவனான அந்தப்பிராமணன் இறந்து போனான். எ-று. (௧௨)

வினைதருகணவனின்சொலிக்கருதிலைமைபூண்டு
மனைவியுஞ்செய்த்தக்ககடன்களைவழாமலாற்றி
நனைமலர்மயிர்குறைந்தாள்நன்கலன்றுறந்தாளாவி
துணியவேதவையாகியுறைந்தனளோன்றற்காக.

(இ-ள்) பண்ணத்தக்க நாயகனுடைய வார்த்தையைத் தள்ளக்கூடாதென்னும் உறுதியைப்பற்றி நாயகியாகிய சேமதியும் கணவனுக்குச்செய்ய வேண்டிய உத்தரகிரியைகளையெல்லாம் தவறுமற் செய்து அவன் இறந்து போன காரணத்தால் குளிர்ச்சியான புஷ்பங்களைச்சூடத்தக்க கூந்தலைக்குலாசாரப்படி போக்கிவிட்டு நல்ல ஆபரணங்களை அகற்றி உடல் வருந்தத்தக்க விதவையாகித் தன் குமாரனைப்பற்றித்தன் உயிரைத் தாங்கிக் கொண்டிருந்தாள். எ-று. (௧௩)



மூலமாமரபெலாமுன்முறைகொனெமிற்கனின்றிப்
பாலனாலாக்கவென்னும்பதிவிருத்தமைநோய்க்குக்
கூலியாந்தொழில்கள்செய்துகொடுவரும்பொருளினாலே
வாலிதினுணவளித்துமகவினைவளர்ப்பதானாள்.

(இ-ள்) ஆதியாகும் வமிசமெல்லாம் சந்ததியில்லாமல் முன்னமே ஒழிந்துபோயின. இந்தக்குமாரனால் கோத்திர விருத்தியாக்கவேண்டுமென்னுமெண்ணத்தினால் தரித்திரமாகிய நோய் தீரும் பொருட்டுக்கூலிக்கு வேலை செய்து அதனால் நாள் சம்பாதிக்கும் பணத்தைக்கொண்டு நல்ல ஆகாரம் கொடுத்துத் தன் மகனை வளர்த்து வந்தாள். எ-று (௧௪)

வெயில்விரிபகற்போதெல்லாம்பணிவிடைமேவிநின்று
பயில்இருட்கங்குற்காலமில்லத்திற்படர்ந்துபாகஞ்
செயவினுலட்டவன்னஞ்செல்வனுந்தானுந்துய்த்துத்
துயில்செய்துகழிக்குநாளினூழ்வினைத்தொடராலோர்நாள்.

(இ-ள்) சூரியப்பிரகாசமான பகற்கால முழுதும் கூலிவேலை செய்து, இருள் சூழும் இராத்திரி காலத்தில் வீட்டிலிருந்து தான் சமையல் செய்த சாதத்தை மகனுந்தானும் புசித்துச்சயனித்து, இப்படிக்காலங்கழித்துவருகையில் ஊழ்வினை சம்பந்தத்தால் ஒரு நாள், எ-று. (௧௫)

மைந்தனுந்தானுமுண்டு துயில்வளர்கின்றகாலை
வெந்திறலரசன்கோயிற்புனைகலனிருக்கைமேவிச்
சுந்தரமணிப்பெய்பெட்டியெடுத்தொருசோரனேக
முந்துறக்காவலாளர்கண்டனர்முடுக்கினாரால்.

(இ-ள்) குமாரனும் தானும் போசனம் செய்து தூங்கிக்கொண்டிருக்கிற வேளையில் மிகுந்த பராக்கிரமத்தையுடைய அரசனது அரண்மனையில் அவன் தரித்துக்கொள்ளும் ஆபரணமுள்ள பொக்கிஷ அறைக்குள் பிரவேசித்து அதிலுள்ள ரத்தினாபரணங்கள் வைக்கப்பட்ட பெட்டியையெடுத்துக்கொண்டு ஒரு திருடன் செல்வதை வாயில்காப்பவர்கள் கண்டுபின் தொடர்ந்தார்கள். எ-று.

வெருவுதலோடுமனக்கேதமிடமொழுமுன்றிவிட்டு
நெஞ்சிறும்விரைந்துசென்றுநீங்கினெறிவிகாக்கக்
கஞ்சமென்பதத்தாளற்றைறக்கங்குலிற்சத்தங்கேளா
வஞ்சியேவிழித்துநீங்கிக்கதவினையடைந்தாள்முற்ற

(இ - ள்) திருடன் அந்தப் பெட்டியைக் கேதுமதியின் வெளிவாசலில் போட்டு விட்டுத்தன் னுயிரைக்காத்துக் கொண்டபடி மனோ வேகத்தைப்பார்க்கிலும் மிகுந்த வேகமாய் ஓடினான். தாமரை மலர் போன்ற மெல்லியபாதத்தையுடைய கேதுமதி அன்று இராத்திரி அந்தச்சத்தத்தைக்கேட்டுத் திடுக்கிட்டெழுந்து தலைவத்திருந்து வெளிவாசலண்டை வந்தான். எ - று. (௧௭)

சுடர்மணிபெய்தபெட்டிகண்டனளெடுத்தற் கூறி
யிடைப்படிமிருளிலீதுகாரணமியாதோவென்று
நடுக்கமுற்றெண்ணுகின்றவேலையினகர்காப்பாள
ரடுத்துறவந்தார்பெட்டியருகினிலவளைக்கண்டார்.

(இ - ள்) பிரகாசிக்கின்ற ஆபரணங்கள் வைக்கப்பட்ட பெட்டியைக்கேதுமதி பார்த்து அதைத்தீண்டுதற்குப்பயந்து இது இராத்திரியில் இவ்விடத்திலிருக்கிற காரணம் என்னவென்று சிந்தித்துக்கொண்டிருக்கிற சமயத்தில் நகர் காவற்காரர்கள் கூட்டமாக வந்து அந்தப்பெட்டியின் சமீபத்தில் கேதுமதி நிற்பதைப்பார்த்தார்கள். எ - று. (௧௮)

மெல்லியளிருதோளார்த்துவெந்துயர்விளைத்துமுன்ன
மெல்லியற்களவுகொண்டதெத்தனைசொல்லாயென்ன
வில்லையென்றனையுண்மற்றிங்குண்டெனவிசையாளிது
தொல்லைவல்வினையால்வந்தவிளைவெனவொன்றேசொல்வாள்.

(இ - ள்) கேதுமதியின் கைகளைக்கட்டிக்கொடிய துன்பத்தையுண்டாக்கி இராத்திரி காலத்தில் திருடினவைகள் எவ்வளவென்று கேட்கக்களவு செய்ததில்லை யென்று சொல்லாமலும் செய்ததுண்டு என்று சொல்லாமலும் முற்பிறப்பில் செய்த தீயகருமத்தால் உண்டானபிரயோசனம் என்று ஒருவார்த்தையே சொல்லுவாள் ஆனாள். எ - று. (௧௯)

ஆக்கதுநிகழுமெல்லையாழியொன்றுடையதோன்
முக்கருத்துயரங்கொண்டதையவடனக்குப்பொல்லாத்
தீங்குறச்செய்யுமிருளினைச்சிதைப்பனென்று
வோக்கியசுதிர்வாள்வீசியுதித்தனனுதயவெற்பில்.

(இ - ள்) அப்படி நடந்து கொண்டிருக்கிற சமயத்தில் ஒரே சக்கரத்தையுடைய தேரிற்செல்லுஞ் சூரியன் சகிக்க முடியாத வியாகுலமடைந்த கேதுமதிக்குத்தீமை செய்ய நினைத்த இந்த இருளாகிய பாதகனை நான் அழிப்பேனென்று ஒளியுள்ள கிரணமாகிய வாளை வீசிக்கொண்டு உதயகிரியிலே உதயமானான். எ - று. (௨0)



ஒருருட்பரியேழ்மாவின்றோர்க்கடவுளங்குதித்ததோற்றம்
வார்கட்டெய்யதாகமாகிலகீசனியாகச்
சீர்புனையண்டமென்னுஞ்சித்திரமணிமாடத்தி
லேர்புனைபகன்மாதிட்டசுடரெனவிருந்ததன்றே.

(இ - ள்) ஒரு சக்கரத்தையும், பூட்டப்பட்ட ஏழு குதிரைகளையுமுடைய தேர்க்கடவுளாகிய சூரியன் அவ்வுதயகிரியிலே உதயமான காட்சியானது நெடியடைல் நெய்யாகவும் பெரிய பூமி அகலாகவும் கொண்டு அழகுபொருந்திய அண்டம் என்னப்பட்ட விசித்திரமணி மண்டபத்திலே பேரழகு வாய்ந்த பகற்பொழுது என்னும் பெண் ஆனவள் ஏற்றி வைத்த திருவிளக்குப்போல் இருந்தது. எ - று. (௨௧)

உங்குலச்செல்வகாட்டி லுற்றதாதிக்கையென்ன
வந்துமனிதர்களாய்விட்டரற்றி டக்கண்ணீர்மல்கித்
தங்கநெகிழ்ந்துதோன்றுந்தலைவற்குச்சாற்றல்போலப்
பங்கயமலர்களியாவுமலர்ந்தனபரிமளிக்கும்.

(இ - ள்) வனமான காட்டிலே உமது குலத்திற்கு ஒரு பழி நேரிட்டது என்று அங்கே மனிதர் உன்னவரும் வந்தென் வாய் விட்டுப்புலம்பக்கண்ணீர் ததும்பி அன்பு தங்கிய மனம் நெகிழ்ந்து எதிர்ப்பட்ட தங்கள் கணவனாகிய சூரிய பகவானுக்குத்தெரிவிப்பதுபோல் தாமரை மலர்கள் எல்லாம் மலர்ந்து பரிமளம் வீசும். எ - று. (௨௨)

பொங்குசெங்கரங்கடிக்குப்பொருப்பின்மேற்படர்ந்ததோற்றம்
வெங்கதிர்த்தலைவற்கு [illegible] ணும்விளைபிறல்வி [illegible] பிறேங்கித்
துங்கமாதிரமின்னார்கள்சூழிருட்பொதிந்துச்
செங்கைமேற்பூசுகின்றகுங்குமச்சுண்ணம்போலும்.

(இ - ள்) மிகுதியான சிவந்த கிரணங்கள் திக்குகளிலுமுள்ள மலைகளின் மேற் பரவிய காட்சியானது வெம்மையுள்ள கிரணங்களையுடைய சூரியனைக்கண்ட சேயலாற் ஆசை மிகுந்து பரிசுத்தமான திக்குகள் என்னும் மாதர்கள் அன்று இராத்திரி சூழ்ந்திருந்த இருளால் உண்டான துயரத்தை நீக்கித்தங்கள் தனங்களின் மேல் பூசிக்கொண்ட குங்குமப்பொடியை ஒத்திருந்தது. எ - று. (௨௩)

திசையிருணூறித்தெய்வச்செங்கதிர்க்கடவுள்செல்ல
வசையறுநகர்காப்பாளர்மன்னவற்குரைத்துமென்று
நசைமணிப்பெட்டியேந்திநால்வரிலிருவர்சென்று
நசைவிலாவெற்றித்தோகைபயிலுங்கோயில்வாயில்.

(இ-ள்) எல்லாத்திசைகளிலும் நிறைந்த இருளை நாசஞ்செய்து தெய்வீகம் பொருந்திய சிவந்த கிரணங்களையுடைய சூரிய பகவான் சென்றுகொண்டிருக்கையில் குறைவற்ற நகர் காவலாளிகள் தாங்கள் கண்டு பிடித்த சங்கதியை அரசனுக்குத்தெரிவிப்போம் என்று இச்சிக்கத்தக்க திருவாபரணப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு நால்வரில் இரண்டு பேர் நிலைபெற்ற ஜெயலட்சுமி திருவிளையாடல் செய்யும் அழகிய அரண்மனைவாசலிற் போனார்கள். எ-று. (உ௪)

மணிக்கடைவாயிலாளர்க்கத்திறமுரைக்கவன்னோர்
துணுக்கெனவேகிமன்னனடியிணைதொழுதுபோற்றிப்
பணிச்சுடர்ப்பெட்டிகண்டதென்னலுங்கொணர்கவென்னக்
கணிப்பலர்விடுக்கவன்னோர்சென்றிறைகழன்மேல்வீழ்ந்தார்.

(இ-ள்) அழகிய கடைவாசற் காவற்காரர்களுக்கு அந்தச்சங்கதியைச் சொல்ல அவர்கள் சீக்கிரஞ் சென்று தங்கள் அரசனுடைய திருவடிகளைத் தொழுது துதிசெய்து ஒளி வீசும் திருவாபரணப்பெட்டி அகப்பட்டதென்று விண்ணப்பஞ்செய்யவும் அதைக்கொண்டு வரக்கடவீர் என்று கட்டளையிட காவலாளர்களை உள்ளேவிட அவர்கள் போய் அரசன் பாதங்களில் விழுந்து பணிந்தார்கள். எ-று. (உ௫)

அரசர்களரசர்போற்றுமையனின்கோயிற்சேரித்
திருமணிப்பெட்டிகேதுமதியெனுந்திருட்டுநீலி
புரியதன்மனைமுன்வைத்துநோக்கியேயுவகைபூத்து
வெருவறநிற்குங்காலையாங்களும்விரைந்துசென்றேம்.

(இ-ள்) அரசர்களுக்குஞ்சிரேஷ்டரானவர்களும் துதிக்கத்தக்க மகாராஜாவே! தேவரீர் அரண்மனைக்கு ஸமீபத்தில் நாங்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத்திருவாபரணப்பெட்டியைக் கேதுமதி யென்னும் திருடியானவள் தன்னுடைய சொந்தமான வீட்டின் வாசலில் வைத்துப்பார்த்து மகிழ்ந்து சற்றும் அச்சமில்லாமல் நின்றுகொண்டிருந்த சமயத்தில் நாங்களும் சீக்கிரமாக ஓடி அவ்விடத்துக்குப் போனோம். (உ௬)



கண்டனந்தண்டஞ்செய்துமுன்னர்களவிற்கொண்ட
துண்டெனினுமையாவென்னில்விதியெனவொன்றேசொல்வாள்
விண்டொருமாற்றமேனும்விளம்பிலள்வேறிப்பாற்
றொண்டரேஞ்செய்யுமாறுதிருவுளஞ்சொற்றல்வேண்டும்.

(இ-ள்) பெட்டியருகில் நின்றுகொண்டிருந்த கேதுமதியைப்பார்த்துத் தெண்டித்து, நீ திருடிக்கொண்டுவந்தவைகள் இன்னமிருந்தால் சொல்லுவென்று கேட்டால், இது விதி என்கிற ஒருவசனத்தைச் சொல்லுகின்றாள்; வேறொரு வார்த்தையும் சொல்லுகின்றிலள்; இப்படியிருப்பதால் அடியேங்கள் செய்யும் விதம் இதுவென்றுதிருவாய் மலர்ந்தருளவேண்டும். எ-று. (உ௭)

என்றவவ்வுரைகள்கேட்டவிறைமணிப்பெட்டிமீண்ட
தொன்றுமெய்யதனாற்றுன்பமுற்றிடாதிவளையின்னே
வென்றிசேர்கரம்பீர்விடுத்திடும்வனத்திலென்னா
நன்றெனவணங்கிப்போற்றிநடந்தனர்காவற்காப்போர்.

(இ-ள்) என்று சொன்ன வார்த்தைகளைக்கேட்ட அரசன் "இந்த ஆபரணப்பெட்டி திரும்பக்கிடைத்தது உண்மை; அதனால் யாதொரு துன்பமும் செய்யாமல் இவளை இப்பொழுதே இந்தச்ஜெயம் பொருந்திய கைகளின் வல்லமையால் கொண்டுபோய் ஒரு காட்டில் விட்டுவிடுங்கள்" என்று கட்டளையிட நகர் காவற்காரர்கள் நல்லது என்று விண்ணப்பஞ்செய்து நமஸ்காரம் பண்ணித் துதித்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுப்போனார்கள். எ-று. (உ௮)

வந்தவன்மனையினண்ணிவளர்சிறுமுனைநோக்கி
யிந்நகரொழித்துக்கானில்விடுக்குதுமேகவென்ன
மைந்தனைமுன்னடத்திமனத்திடைத்துயர்பாயில்லா
சிந்தையாம்பாரந்தாங்கிநடந்தனள்கைவணித்தாள்.

(இ-ள்) அவளுடைய வீட்டுக்குப்போய் மிகுந்த கோபத்தோடு பார்த்து அரசனுக்கிணையாய் உன்னை இந்த ஊரைவிட்டு நீக்கிக்காட்டில் விடப்போகிறோம்; புறப்படு: என்று அக்காவலாளர்கள் கேதுமதிக்குச்சொல்ல, அந்தக் நாரிப்பெண் தனது மகனை முன்னால் நடத்தி மனதில் மிகுந்த வருத்தத்தோடு கூடினவளாய் அபாண்டமானபழியாகிய சுமையைச் சுமந்துகொண்டு தொடர்ந்து சென்றாள். எ-று. (உ௯)

வீதியுநகருநீங்கிவிடுத்தகன் றூர்கள்கானில்
மாதுயர்கண்ணீராருய்மடிந்தனைநெருங்கப்புல்லிப்
பாதகவினைகள்கோடிபயிற்றியபுலைச்சியென்றன்
றீதுறுவயிற்றிலென்கொல்செனித்தனைமகனேயென்று.

(இ - ள்) வீதியையும் நகரத்தையும் விட்டு நீங்கிக்காட்டிற்கொண்டுபோய் விட்டு விட்டார்கள். அதனால் கேதமதியானவள் மிகுந்த வியாகுலத்தோடு அழுதகண்ணீர் ஆறுகப்பெருகும்படி தன் குமாரனை மார்போடு பொருந்தத் தழுவி, மகனே! எண்ணிறந்த பாவச்செயல்களைச்செய்த பாதகியாகிய எனது தீமை மிகுந்த வயிற்றில் நீயேன் பிறந்தாய்? என்று சொல்லி, எ-று. (௫0)

பருவரலெய்தித்தேறிப்பலன்கள்காய்கந்தமாதி
கருதருமைந்தற்கீந்துகடும்பசிக்கருந்திதானுந்
தெரிதருவழிகாணளாயுறைந்தனள்செறிந்தகானிற்
புரிதருமீதாயிற்கவிறைநிலைபுகலுவாமால்.

(இ - ள்) சஞ்சலப்பட்டு மனந்தெளிவடைந்து பழங்கள்-காய்கள் முதலிய கந்த மூலவர்க்கங்களைத்தனது என்னுதற்கருமையான புத்திரனுக்குக்கொடுத்துத்தானும் மிகுந்த பசியைத்தணிக்கும்படி சாப்பிட்டுத்தெரியத்தக்கவழியைக் கண்டு பிடிக்கக்கூடாதவளாய் அடர்ந்த காட்டில் காலத்தைக்கழித்துக்கொண்டிருந்தாள். இது இப்படியிருக்க இப்பால் அரசனுடைய செயல்களைப்பற்றிச் சொல்லுவோம். எ-று. (௫௧)

## வேறு.

குருதிகொப்பளித்துமிழ்குடுமிவேலினன்
புரியுநாடுறைகுநர்புன்கண்டீர்தர
வரில்படுகானிடையசலச்சாரல்கண்
டெரிதரவேநினன்வேட்டைசிந்தையாய்.

(இ - ள்) சத்துருக்களுடைய சரீரத்திற்புகுந்து இரத்தத்தைக்கக்கும் கூர்மையான வேலாயுதத்தையுடைய அரசன் தான் ஆண்டுவரும் நாட்டில் வசிப்பவர்களுடைய வருத்தம் நீங்கும்படி புதர் நிறைந்த காட்டில் மலைச்சாரல்களை நோக்கி வேட்டையாடவேண்டுமென்கிற எண்ணத்தோடு போனான். எ-று. (௫௨)

பச்சிமதிசையினைநோக்கிப்பாய்பரி
யுச்சிமால்வரைமிசையுவரிசூழ்ந்தெனக்
கைச்சிலைமறவர்கள்சினங்கண்முன்செல
வச்சவாட்டினனசல்வேலினன்.



(இ - ள்) சிகரங்களையுடைய பெரிய மலைகளின் மேல் கடல் சூழ்ந்துகொண்டாற்போல் கையில்வில்லை யேந்திய வேடர் கூட்டங்கள் முன்னே செல்ல, அச்சவுதேசமுடையவனும், தளர்ச்சியில்லாத வேலாயுதமுடைய வனுமாகிய அரசன் விரைந்தோடும் குதிரைமேல் ஏறி மேற்குத்திசையை நோக்கிப்போனான். (௫௩)

அவ்வழிக்கொடுமுடியகலச்சாரல்கள்
கவ்வைநீருவிகள்கறங்கவானிலைத்
தைவருமுடிவரைதாங்கித்தோன்றுறுந்
தெய்வமால்வரையடிசென்றுசேர்ந்தனன்.

(இ - ள்) அந்த வழியில் கொடுமுடிகளையுடைய விசாலமான மலைப்பக்கங்களில் ஒலிக்கின்ற சிற்றாறுகள் சலசலவென்று ஓட, ஆகாயமுகட்டைத்தடவும் மூங்கில்களைத்தன் முடிமேல் தாங்கிக்கொண்டு விளங்கும் தெய்வத்தன்மை பொருந்திய இமயமலையின் அடிப்பாரத்திற் போய்ச்சேர்ந்தான். எ-று. (௫௪)

சந்தனமணிந்தெண்தரித்துமுத்தமுஞ்
செந்தழன்மணிகளும்புனைந்துசீதநீர்
முந்துறுமேகவண்படத்தின்மூடிய
விந்தமாநிலமகள்கொங்கையேய்க்குமால்.

(இ - ள்) சந்தன முதலிய வாசனை திரவியங்களை அணிந்து முத்துகளாலும் செந்தழல் போலும் மாணிக்கங்களாலும் அலங்கரிக்கப்பட்டுப்பனி நீர் மிகுந்த வளமான மேகமாகிய உத்தரியத்தினால் மறைக்கப்பட்டிருக்கும் இந்தப் பூமி தேவியின் தனங்களை ஒத்திருக்கும் அந்தமலைகள். எ-று. (௫௫)

வரைவளர்மடங்கலுமதங்கொள்ளானையும்
விரவுநண்புடன்விளையாடிச்சென்றிடும்
திரிதருகுன்றவர்மாதர்தேன்கொடுத்
தரமடவார்தருமமிர்தங்கொள்வரால்.

(இ - ள்) அந்த மலையில் வாசம் செய்யும் சிங்கங்களும் மதயானைகளும் சிநேகமாய்க்கூடி விளையாடித்திரியும்; அங்கே சஞ்சரிக்கின்ற வேடர்களின் பெண்கள் தேனைக்கொடுத்து அதற்குப்பதிலாக அரம்பா ஸ்திரீகள் தரும் தேவாமிர்தத்தைப்பெறுவார்கள். எ-று. (௫௬)

எடுத்தகோலிறந்தனவிலக்கந்தாமரை
படைப்படாதிறந்தனவிலக்கந்தாமரை
யடற்பகையஞ்சினமுன்னம்பன்றியே
படப்பதற்கஞ்சினமுள்ளம்பன்றியே.

(இ - ள்) அவ்வரசன் கையில் எடுத்த அம்புகளுக்கு இலக்காகித்தாவியோடும் மரை என்னும் மிருகங்கள் இறந்து ஒழிந்தன. இலட்சம் தாமரை மலர்கள் (மடுவில் இருத்தலால்) அழியாது பிழைத்தன. கொல்வதற்கு மிகக்கோபமுங் கொள்ளும் முன்போல கூர்மையான அம்புகளால் பகைக்கப்பட்டு முள்ளம் பன்றிகள் எல்லாம் தங்கள் வலிய சத்துருவான அந்த அரசனுக்குப்பயந் விட்டன. எ-று. (௬௪)

கொற்றவெங்கணையினாற்கோட்டுத்தும்பிகள்
சுற்றுறுமெண்குகடுணிகளாயின
சுற்றைறவெங்கதிர்க்குலமைந்தற்காண்டலா
லிற்றனபோன்றதவ்விருளின்குப்பையே.

(இ - ள்) ஜெயம்பொருந்திய கொடிய அம்புகளினால் தந்தங்களையுடைய யானைகளும் அடர்ந்திருக்கும் கரடிகளும் துண்டுபட்டழிந்தன. அது தொகுதியாகிய கிரணங்களையுடைய சூரியவமிசத்தில் தோன்றிய அந்த அரசனைக்கண்டதினால் மிகுந்த இருள் கழிந்ததுபோல் இருந்தது. எ-று. (௬௫)

அவ்வரைப்பரப்பெலாம்வேட்டையாடியே
வெவ்வியவிலங்குகள்பலவும்வீட்டினன்
மைவளர்தருபல்வரையைநீங்கிமேற்
செவ்வியகானிடைத்திரியும்வேலையில்.

(இ - ள்) அந்தமலைச்சாரலில் வேட்டையாடி அனேகம் கொடிய மிருகங்களைக்கொன்றான். பின்பு மேகங்கள் வாழும் பல குன்றுகளை விட்டு நீங்கிச்சிங் காரவனத்தில் திரியும்போது, எ-று. (௬௬)

வேழவெங்கானிடைவேட்டத்திச்சையா
லூழ்திறல்வீரர்கட்சேமையகன்றுறும்
ஊழ்வினையின்றிரோலோர்கிலாதொளிர்
பாழியந்தோளினின்பாரவில்லுடன்.

(இ - ள்) யானைகள் வாழுங்கொடியகாட்டில்வேட்டையாடவேண்டுமென்னும் விருப்பத்தினால் மிகுந்த சாமர்த்தியமுள்ள படைவீரர்களைவிட்டு நீங்கித் தனக்கு வரும் ஊழ்வினைப்பயனை அறியாமல் வலிமை பொருந்திய தோள்களையுடைய அவ்வரசன் பெரிய வில்லுடன், எ-று. (௬௭)



பற்பலவிலங்குகடேடிப்பையப்பைய
முற்றுமுட்புதல்களும்முழையின்குழுவாந்
சுற்றினன்மங்கலமிழந்தகோகைமுன்
னுற்றவவ்விடத்திலோர்மறைவிலுற்றனன்.

(இ - ள்) பலவிதமான மிருகங்களைத்தேடிப்போய் நீண்ட முட்கள் நிறைந்த புதர்களிலும் கற்குகைகளிலும் மெள்ள மெள்ளத்திரிந்து, பின்பு மங்கலநாண் இழந்த மயில் போலும் சாயலையுடைய கேதுமதி என்பவள் முன்னே வந்திருந்த அந்த இடத்திலே ஒரு மறைவிடத்தில் தங்கி, எ-று. (௬௮)

சன்றதாயுடன்மகவிருத்தல்கண்டிலான்
றோன்றியவளையிருள்விலங்கின்றேற்றமென்
றான்றுறக்கிலீமுகமொன்றைவீட்டன
னொன்றுதோர்மதலைமார்பகத்திற்றைத்ததே.

(இ - ள்) பெற்றதாயோடுமகனும் அவ்விடத்திலிருப்பதைப்பார்க்காதவனுக்குத்தனக்குக்காணப்பட்ட தன்மையில் ஏதோமிருக மிருக்கிறதென்று நினைத்து நேயாக ஓர் அம்பு தொடுத்து எய்தான். அந்த அம்பு வில்லின் நாணை விட்டுச் சென்று போய் ஒப்பற்ற பிள்ளையின் மார்பில் தைத்தது. எ-று. (௬௯)

எழுந்ததுகுருதிசேருயிருமின்றெனக்
கழிந்ததுபெற்றதாய்கண்டுபிள்ளைமேல்
விழுந்தனள்புரண்டனள்விம்மிவிம்மியே
யழுந்துயர்ரவிளம்பலுறையற்பாலதோ.

(இ - ள்) அம்பு தாக்கிய மாத்திரத்தில் இரத்தம் பெருகி அவனது உயிரும் இல்லையென்னும்படி நீங்கியதை அவனைப்பெற்ற தாய் பார்த்து, தனது பிள்ளை மேல் விழுந்து புரண்டு அழுது, அடைந்த துக்கத்தை வாயினால் சொல்வது அரிதாகும். எ-று. (௭௰)

கோவெனப்புடைத்தனள்கொங்கைகொம்மைமே
வாவெனவாய்திறந்தாற்றினள்முழுவ
பாவியென்வயிற்றினில்வந்தபாலகா
வோவிளநனையிழந்துய்வனோவென.

(இ-ள்) கொடிய பிரமஹத்தியாகிய என் வயிற்றில் தோன்றிய மகனே! நானும் ஒழிந்து போகாமல் உன்னை இழந்து விட்டு உயிரோடிருப்பேனோ? என்னுடைய சொல்விக்கோ என்று கூவி, தன் மார்பில் அடித்துக்கொண்டாள்; ஆ என்று வாய் திறந்து, அலறி அழுதாள். எ-று. (ருச)

தீயிடைவெதும்பியசெம்பினாகிக
ளேயவவ்வுடன்முழுதேற்றிறெனை
நோயுறநெஞ்சினன்முகத்தைநோக்கியே
காயெரிவேலினன்கலங்கிக்கூறுவான்.

(இ-ள்) நெருப்பிற் காய்ச்சிய செம்பூசிகளை நெருக்கமாகச்சரீர முழுவதும் ஏற்றினாற்போல் துன்பமடைந்த அந்தப்பெண்ணின் முகத்தைப்பார்த்துச் சுடுகின்ற அக்கினி போலும் சிவந்த வேலையுடைய அரசன் சஞ்சலத்தோடு சொல்லத்தொடங்கினான். எ-று. (ருடு)

செப்பருந்துயர்ப்படுமொருசிந்தையாற்
றப்புறவினைத்திலேன்விலங்கின்றோற்றமென்
றிப்பெருங்கொலைவினைசெய்தேனினி
தப்பிலாதூழ்வினைமுடித்ததன்மையே.

(இ-ள்) சொல்வதற்கரிய துன்பமடைகின்ற மாதே! மனதினால்தெரிந்து செய்யவில்லை; ஏதோ ஒரு மிருகமென்று கருதி இந்தப்பெரிய கொலைபாதகத்துக்கு உள்ளானேன்; இப்படி நேரிட்டது நிஜமாக ஊழ்வினையால் உண்டான பயனேயாம். எ-று. (ருசு)

முன்செய்வல்வினைபினாகின்மூழ்கிட்
வன்செயல்வினைவதாய்வந்தூண்டத்
தென்செய்கேனென்செய்கேன்குலமிறந்திடப்
புன்செயற்றுன்றுறப்பொடிபடுத்துமே.

(இ-ள்) முன் ஜென்மத்தில் செய்த கொடியவினையின் திறத்தால் நரகத்தையடையும்படி கொலை பாதகம் சம்பவித்து விட்டதே; இதற்கு என்ன செய்வேன்? என்ன செய்வேன்? இப்பாதகம் வியாகுலத்தையடையும்படி குலநாசஞ்செய்யுமே. எ-று. (ருஎ)



நினைப்பினுந்துயர்தருந்[illegible]
தனைச்செய்தேனாமிடைந்[illegible]
ளைக்கொடுத்தானவர்தண்டஞ்செய்திடு
வினைக்கினியென்செய்கேனெனவிளம்பினான்.

(இ-ள்) நினைத்தாலும் துன்பந்தருகின்ற [illegible] ஆகிய இப்பெரும் பாதகத்தைச்செய்தவனானேன். [illegible] நரகத்தில் [illegible] தண்டனை செய்வதற்கு [illegible] என்ன செய்வேன்? என்ன செய்வேன்? என்று சொல்லினான். எ-று.

கொண்டவெவ்வினையினாற்[illegible]
கண்ணனீர்சொரிந்திடக்[illegible]
தன்கலைதிருமகோரமித்[illegible]
புன்சொலும்வெஞ்சினம்புரிந்[illegible]

(இ-ள்) நேரிட்ட இந்தப்பெரும் பாதகத்தினால் மனவருத்தப்பட்டு கண்ணீர் விட்டுத்துக்கித்தவனும், [illegible] ஆகிய அவ்வரசனுடைய [illegible] போன்ற முகத்தைப் பார்த்து, அந்தப்பெண் வருந்துகின்ற கொடியசொற்சொல்லிச் சொல்லுவாள். எ-று. (ருகூ)

பாதகவினைபுரிகள்ளப்பாவியே
நீதுணையாருயிர்நீத்திட்டாய்
பேதையேற்கருமருந்தாயபிள்ளையை
வேதனைசெய்ததெங்ஙனம்[illegible]

(இ-ள்) பாவத்தொழிலைச் செய்யும் வஞ்சனையுள்ள பாதகியாகிய எனது குற்றமிருந்த உயிரைப்போக்கி விடாமல் என்று அருமந்தமைந்தனை [illegible] எப்படி தொலைத்து விட்டாய். எ-று. (சுo)

மைந்தனைடமருவுவையெனமாட்டொரு
சிந்தையுண்டாக்கியே[illegible]
லாந்தவாறென்னையறிதவிக்கியே
மைந்தனுயிரினைவருத்தற்செய்தனை.

(இ-ள்) மஹாசாரணசக்கரவர்த்தி [illegible] பண்டு குற்றத்தைக்காமத்தி [illegible] விட்டு [illegible] தெரியாமல் என் பிள்ளையை மாய்த்து விட்டாய். எ-று. (சுக)

மரித்திலேன்கணவனுர்மாய்ந்தபோதினும்
பொருப்புறழ்நின்னையேசுமந்தபோதினும்
பரித்திடுமைந்தனேபனைநத்தல்கண்டுமிங்
கிருப்பனோபெண்பிறப்பெவர்களேனுமே.

(இ - ள்) எனது நாயகன் இறந்து போன காலத்திலாவது, மலைக்கு ஒப்பான அபாண்டம் நேரிட்ட காலத்திலாவது, உயிரை மாய்த்துக்கொள்ளவில்லை. பத்து மாதம் சுமந்து பெற்ற மகன் இறந்து விட்டதை நேரில் பார்த்தும் இவ்வுலகத்தில் எப்படிப்பட்ட பெண்ணும் உயிரை வைத்துக்கொண்டிருப்பாளோ? இருக்கமாட்டாளே! எ-று. (௫௯)

பஞ்சிடைப்பற்றுதீபடருமாறுபோ
னெஞ்சிடைக்கொடுந்துயர்நிரம்பிநின்றதே
வஞ்சகமென்றவள்மயங்கிவீழ்ந்தன
டஞ்சமிலிறைவனுந்தளர்ந்துநின்றனன்.

(இ - ள்) பஞ்சில் பிடித்த தீ சடுதியிற்படர்வது போல் மனதில் கொடிய விசனம் மிகுந்துவிட்டது; இது வஞ்சனையாயிருக்கிறது என்றுசொல்லி, அவள் மூர்ச்சையாய் விழுந்து விட்டாள். தனிமையுமான அரசனும் சோர்ந்து நின்றான். எ-று. (௬௰)

## வேறு.

வெருவவாய்திறந்தரற்றுகுரல்செவியிடைவீழ
வருகெனுத்தலையியல்படவங்ஙனஞ்செல்லுங்
குரவனுஞ்சிவசருமமாமுனியுளங்குறித்தே
யரில்படுவ்வனத்தியாவரோபெண்குரலழுதான்.

(இ - ள்) யாவரும் அஞ்சும்படிவாய் திறந்து அலறுதலானது தமது திருச்செவியில் பொருந்தும்படி அவ்வளவு சமீபமாய் அவ்வனத்திற் போய்க்கொண்டிருந்த தேசிகரான சிவசருமமாமுனிவர் திருவுள்ளத்தில் சிந்தித்துக்கருமணம் மிகுந்த அந்த வனத்தில் யாரோ ஒரு பெண் உரக்க அழுகின்றாள். எ-று. (௬௧)

யாதுகாரணமென்றருள்சுரந்தவணணுக
மாதுகண்ணீர்கழுவுறமலரடிவீழ்ந்தா
ளீதுவல்வினையாற்றலைவிளைத்ததாகனேற்றும்
பாதகத்தனுவென்னவேவேந்தனும்பணிந்தான்.



(இ - ள்) இதன் காரணத்தை நேரில் அறியவேண்டுமென்று திருவுளம் பற்றி அம்முனிவர் அவ்விடத்திற்குப்போகவே, கேதுமதி என்னும் பெண் தனது கண்களினின்று பெருகுகின்ற நீரினால் விளங்கும்படி அவரது தாமரை மலர் போன்ற பாதங்களில் விழுந்து பணிந்தாள். இத்துன்பம் கொடுமையாகிய வினையினால் நுனிவிளைந்தது நான் ஏற்றும் குரூரமான பாவத்தின் செயலென்று சொல்லி அரசனும் வணங்கினான். எ-று. (௬௨)

செல்வனைக்கொடுங்கானிலேவளர்த்தியதெரிவை
யல்லலுற்றவண்மதிமுகநோடியேயையன்
சொல்லலுற்றனன்வாய்திறந்தரற்றியேசோரக்
கொல்லலுற்றதென்னறிவுறக்கூறுதிகொடியே.

(இ - ள்) குமாரனைக்கொடியகாட்டிலே வளர்த்திய பெண்ணும் துன்பம் அடைந்த வளுமாகிய கேதுமதியின் சந்திரனுக்கொப்பான முகத்தைப்பார்த்து அம்முனிவர் அவளுக்குத்தமது திருவாய் மலர்ந்து தேறுதல் சொல்லி, பெண்ணே! நீ வாய் விட்டுப்புலம்பிச்சோர்வடைய உன் மகன் கொலையுண்ட காரணம் யாது? நாம் அறியச்சொல்வாய். எ-று. (௬௩)

அஞ்சலஞ்சலென்சொல்லெனவாருயிர்பதைப்பாள்
வஞ்சகக்கொடுமன்னனுனிங்கைதானவரவுஞ்
செஞ்சிலைக்கணையிவன்றனதுயிர்ச்சிதைவும்
விஞ்சவந்தனவென்றெலாம்விரிவுறவுரைத்தாள்.

(இ - ள்) பயப்படாதே! பயப்படாதே! சொல் என்று கேட்கவும், ஆவி பதைத்தலையுடைய கேதுமதி வஞ்சனையும் கொடுமையும் பொருந்திய அரசனால் களவு என்னும் பொய்க்குற்றஞ் சாட்டப்பட்டதும், இவ்வரசனுடைய சிவந்த அம்பினால் தனதருமைமகன் இறந்ததும் ஆகிய இவைகள் நேரிட்டனவென்று விவரமாகச்சொன்னாள். எ-று. (௬௪)

மன்னவன்றனதுரையையும்வழக்குறக்கேட்டே
னன்னவளிதையுமறிந்திலையதுவலாலிங்ங
னின்னபாவமுமறிந்திலையென்செய்வாய்நீயு
முன்னர்வல்வினைவிளைத்திடுற்றப்புமோமுறைமை.

(இ - ள்) அரசனுடைய வார்த்தைகளையும் வழக்கில்லாதபடி கேட்டேன். அவனால் உனக்கு நேரிட்ட அபாண்டத்தையும் நீ தெரிந்து கொள்ளவில்லை.

அதுவுமல்லாமல் இப்போது சேர்ந்த இந்தப்பாதகத்தையும் அறிந்து கொள்ளவில்லை. நீ செய்யத்தக்கதென்ன? முன் ஜென்மத்தில் தியவினை செய்திருந்தால் அது முறையாக இப்போது இயபலனைக்கொடாதொழியுமோ? ஒழியாது. எ-று.

என்னவின்னனகூறுமாதெழின்முகநோக்கி
அன்னவன்கொலைசிந்தையென்றனையம்தனங்கே
முன்னைஞானமதறிந்திலைமாயையின்முறையால்
உன்னும்வெந்துயரிவ்வண்ணமாகவந்ததுநல்கேள்.

(இ - ள்) என்று இது போன்ற சங்கதிகளைச்சொல்லிக்கேதுமதியின் அழகிய முகத்தைப்பார்த்து அந்தக்கொடிய கொலை-அப்பாவம்-என்று சொல்லிய பெண்ணே! பூர்வஞானமென்பதை யறிந்தாயில்லை! மாயையின் இயற்கையினால் நினைக்கப்பட்ட இக்கொடுந்துயரமானது இவ்விதமாக வந்து சம்பவித்தது. அதை நீ கேட்பாயாக. எ-று. (௬௬)

இறந்தமுன்பிறப்பினிற்றழுவின்கணவன்
மஞ்சிகன்பெயர்மறைநெறிக்கற்றுமிடமா
யெஞ்சலில்பொருளெய்திமடமங்கையர்பலருட்
கொஞ்சுபைங்கிளியின்னிடைமோகமேகொண்டான்.

(இ - ள்) இப்போது இறந்துபோன முந்திய பிறப்பில் உன்னைத்தழுவிய மஞ்சிகனென்னும் பெயரையுடைய உனது கணவன் வேதமார்க்கத்தைக்கற்ற தியோமறையாய்க் குறைவில்லாத திரவியத்தைச் சம்பாதித்து, அழகுள்ள பல பெண்களுக்குள் கொஞ்சுகின்ற பசுங்கிளிபோன்ற உன்னிடத்தில் ஆசைவைத்தான். எ-று. (௬௭)

மோகமிக்குநின்னினலம்பருகிமுயன்றுநாட்
பாகமெல்லியலெம்பிரான்கேயொருபத்தன்
சோகமில்லருச்சனைசெயுமலர்களைத்தோட்டத்
தேகமஞ்சிகனெடுத்தனனவனெடுப்பதன்முன்.

(இ - ள்) காம மிகுந்து உனது இளம்பருவ அழகையனுபவித்து வரும் நாளில், பார்வதியைத் தமதிடப்பாகத்திலுடைய சிவபெருமானுக்கே அன்பராகிய ஒருவர் குற்றமில்லாத அருச்சனைசெய்வதற்காகும் புஷ்பங்களையுடைய நந்தவனத்துக்கு மஞ்சிகனென்பவன் சென்று, அவ்வன்பன் எடுப்பதற்குமுன்பாகவே அங்குள்ள புஷ்பங்களை யெடுத்துக்கொண்டு போய்விடுவான். எ-று. (௬௮)



எடுத்ததென்றுனிமதுரசமலரிமையத்
தொடுத்தமாலையளின்னெடுங்கருங்குழற்குட்டி
விடுத்தபாதியைத்தன்முடிக்கிசைவினிற்பிலைத்தாங்
கடுத்தவேட்கையிலழுந்தியேகிடந்தனனவன்.

(இ - ள்) தான் எடுத்ததும் பிறன் பறிக்கின்றதும் வண்டுகள் மொய்ப்பதும் வாசனை பொருந்தியதுமான மலர்களைப்பொருத்தமாகத் தொடுத்த பூமாலையை உனது நீண்ட கருமையான கூந்தலில் சூட்டிவிட்டு மிகுந்த பாதியைத் தனது குடுமியில் தரித்துக்கொண்டு அதற்குத்தக்கபடியான மோகஇச்சையில் அந்தச்சிவமில்லாதவன் விழுந்து கிடந்தான். எ-று. (௬௯)

முருகுநாறியசெய்யமலர்கொய்திடத்தோட்டத்
தருகுவந்தனன்பத்தனங்கணிமலர்காணு
துருகுசாலயிற்கண்டோர்குறைப்படானின்னின்
மருவுமிந்தையாமயல்சொலிக்கணவனைமறைத்தாய்.

(இ - ள்) வாசனை வீசும் நெருங்கிய புஷ்பங்களைப்பறிக்கும்படி அந்த அன்பன் நந்தவனத்துக்கு வந்து அழகிய பூக்களைக்காணாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கையில் பார்த்தவர்கள் சங்கதியைச்சொல்லியபடியால் (தேடிவந்து கேட்டபோது) உன்னைத்தழுவும் பொருட்டுக்கணவனை வைத்துக்கொண்டே மெய்யாய் இல்லையென்று சொல்லி மறைத்து விட்டாய். எ-று. (௭௦)

அரசனுக்கிதுவுரைத்துமென்றவனறிவித்துங்
குரிசில்கேட்டிலன்கேட்டிலாக்குரிசிலாமிவனே
யுரியவெம்பிரானருச்சனைக்கூறுவந்ததனு
லரியவாவிகொண்டிரேனெனவுடலொழித்தனன்முன்.

(இ - ள்) அந்த அன்பன் இந்தச்சங்கதியை அரசனுக்குத்தெரிவிப்போம் என்று தெரிவித்தும், அந்த அரசன் அதை விசாரிக்கவில்லை; அப்படி விசாரிக்காமல் விட்ட அரசன் இவன்தான். ஆனது பெருமானாகிய சிவபிரானுக்குச் செய்யும் அருச்சனைக்கு இடையூறு நேரிட்டபடியால் இனி நான் இந்த வுயிரை வைத்துக்கொண்டிருக்கமாட்டேனென்று தன் பிராணனை மாய்த்துக்கொண்டான். எ-று. (௭௧)

சத்தியாகனூர்பூசையிற்றவறுவந்தெய்தி
லுத்தமக்குணமுதன்மையேயிறப்பர்தம்முடலை
மத்திமர்க்குறில்லழார்பரிவாரமாய்வழிபி
வித்திறத்தினிலெண்ணுமுறைநிருவரிழிந்தோர்.

(இ - ள்) பார்வதி பாகனாகிய சிவபெருமான் பூசைக்கு இடையூறு வந்து நேரிடுமானால் உத்தமக்குணமுடைய பக்த சீலர்கள் தமதுடலை யொழித்துக் கொள்வார்கள்; மத்திமகுணமுடை யோருக்கு நேரிட்டால் பிராயச்சித்தம் செய்கின்ற வழியில் சிறிதும் பிசகமாட்டார்கள்: அதமகுணமுள்ள கீழ் மக்களோ இம்மார்க்கங்களைச்சற்றுங்கவனியாமல், உடலையே பாதுகாப்பார்கள். எ-று.

ஆதலாற்பொதுநடம்புரிநாதனிழலடைந்தான்
கோதமுக்குறுசீக்கொடுகிருமியின்குழுவுந்
தாதுமூளையுஞ்சோரியுநாறுபுன்றலையி
லாதிநாயகற்காயபூவணிந்திடுமெதனால்.

(இ - ள்) ஆகையால் அந்த அன்பன் அம்பலவாணன் திருவடி நிழலையடைந்தான். குற்ற மிகுந்த அழுக்கான சீக்கொண்டு கிருமிக்குழுவுந்தோன்றித் தாதும் மூளையும் இரத்தமும் துர்நாற்றம் வீசும் இழிந்த தலையில், முதற் பொருளாகிய சிவபெருமானுக்காகும் பூக்களைத் தரித்துக்கொண்டபடியால், எ-று.

தந்தவிக்கொடும்பிறப்பினில்விளைந்ததுதவறாய்
முந்துநின்பதிதலையிடைப்புற்றெனமுளைத்துச்
சிந்துசோரியுங்கிருமியுநாற்றமுஞ்செறிந்த
திந்தவூழினாலுலர்ந்திடாதழுநாளிறந்தான்.

(இ - ள்) வந்த இந்தக்கொடுமையாகிய பிறப்பில் அம்சாகமாய் விளைந்தது உன் கணவனுடைய தலையில் புற்றென்னும் புண்ணுண்டாய்ச்சிந்துகின்ற இரத்தமும் கிருமியும் துர்நாற்றமும் பொருந்தி ஆறிடாதாமல் வருந்தும் நாளில் இந்த ஊழ்வினையால் இறந்து போனான். எ-று. (௭௪)

நங்கைநின்பொருட்டேயிதுநடந்ததைவத்தான்
மங்கலக்குணமிழந்தனைமயிரதுறைந்தா
யங்கயற்சொலுநின்றிங்கனுபவித்தனைநீ
பொங்குமீதுநின்கிளையெலாஞ்சுட்டலாற்போகா.

(இ - ள்) பெண்ணே! உன்னாலேயே இதுநேரிட்டது; ஆகையால் நீ அமங்கலைமாமங்கையாய்த் தலைமயிரிழந்தாய்; முந்திய சென்மத்தில் பொய் சொன்னதினால் இந்தச்சென்மத்தில் நீ அபாண்டத்துக்கு ஆளானாய். இப்பெரும் பாதகம் உனது சுற்றத்தாரையெல்லாம் சுட்டெரிக்காமல் போகமாட்டாது. எ-று.



ஆயதன்மையையுற்றுநீயுணர்ந்திடவறிவா
யேயவிந்தநைகாட்டுதுமென்றருள்பெருகித்
தூயகுண்டிகைநீரினையோதியேதூற்ற
மாயமாந்துயில்வந்ததுவிண்டதுமடமே.

(இ - ள்) இவ்விதமாய்க்காரணகாரியத்தை முழுதும் நீயே தெரிந்துகொள்வாய், பொருத்தமான வித்தை யொன்று காட்டுகிறேன் என்று அருள் சுரந்து பரிசுத்தமான குண்டிகையிலுள்ள நீரை மந்திரஞ்சொல்லித்தெளிக்க மாயமாக நித்திரை வந்தது; பூர்வ அஞ்ஞானம் நீங்கியது. எ-று. (௭௬)

அப்பவத்தினினிகழ்ந்தனவாதியோடந்தந்
தப்புறுவகைதெரிந்தனளுணர்ந்தனடாங்கிச்
செப்பிணைந்தபொன்முலையினளருட்சிவசருமா
வொப்பின்மாமுனிசரணில்வீழ்ந்திரங்கியேயுரைப்பாள்.

(இ - ள்) அந்தப்பிறப்பிலே உண்டான சங்கதிகளெல்லாம் ஆதியோடந்தமாகத் தப்பில்லாமல் தெரிந்து கொண்டு செம்பொற்கலசத்திற்கு நிகரான தனத்தையுடைய கேதுமதி கிருபை மிகுந்த ஒப்பு இல்லாத சிவசருமமாமுனியின் திருத்தாள்களைப்பணிந்து பரிவுடன் சொல்லத்தொடங்கினாள். எ-று. (௭௭)

அப்பநின்னடிப்போதினுக்கடைக்கலம்புகுந்தேன்
வெய்யபாவமாம்விடத்தினைத்தீர்த்திடவேண்டுஞ்
செய்யுமாறொன்றுகாண்கிலேன்றிருவுளமறியேன்
மையலுற்றனன்பாவியேனாவியேயென்றாள்.

(இ - ள்) சுவாமி! தேவரீர் பாதாரவிந்தங்களையே அடைக்கலமாக அடைந்தேன்; கொடுமையாகிய பாவமென்னும் விடத்தைப்போக்கும்படி திருவுளம் பற்றவேண்டும்; செய்யும் கைம்மாறு வேறொன்றுங் கண்டிலேன்; தேவரீர் திருவுள்ளத்தை யறிந்திலேன்; மிகவும் வருந்துகின்றேன்; மிகுந்த பாவியாகிய அடியேன் என்று சொல்லினாள். எ-று. (௭௮)

## வேறு.

இன்னல்கூர்மடந்தைதிருமுகநோக்கிமுனிவானின்னனவிசைப்பான்
முன்னரும்பவமிதெனிதனைநீக்குமுறைதருந்தலமுளததுகேள்
சென்னெனன்முத்தத்தான்கட்டுணமாதர்க்கணொளிதிருடியதென்றுக்
கன்னலின்முத்தநகுவனபோன்றுநதிர்விடுங்கடவுண்மாநகரும்.

(இ - ள்) மணமருத்தப்படுகின்ற மங்கையின் அழகிய முகத்தைப்பிரிந்து அம்முனிவர் சொல்லத்தொடங்கினார்:—நினைப்பதற்கரிய பெரிய இப்பாவம் எளிதல்ல; அதை நீக்கிக்கொள்ளும் மார்க்கத்தைச்செய்வதற்குத்தகுந்த தலமொன்றிருக்கின்றது சொல்லக்கேள். செந்நெல்லில் உண்டான முத்துகள் தாளில் கட்டப்பட்டிருப்பதனால் மங்கையருடைய பல் ஒளியைத்திருடியது என்று கரும்பில் உண்டாகும் முத்துகள் சிரிப்பனபோல் ஒளி வீசும் தெய்வத் தன்மையுள்ள பெரிய பட்டணமும். எ-று. (எக)

தாதவிழ்சோலைமலர்மதுநுற்றதனைமயிற்காரெனவகவு
மூதெயிற்பாவநாசமடையின்முற்றுறுமிம்மைபகளினக்கே
யாதலான்மதலையிறக்குமுன்னெடுத்தேயவன்றிருக்கோயினிறணியிற்
போதுறுசடையனருளினுற்பாவம்பொடிபடுமெனவருள்புரிந்தான்.

(இ - ள்) சோலையில் மகரந்தத்தைச்சொரிகின்ற புஷ்பங்கள் தேனைப்பொழிவதால் சந்தோஷிக்கும் மயில்கள் மேகமென்று கருதி ஆடுகின்ற பெரியமதில்களையுடையதுமான திருப்பாவநாசப்பதியை நீயடைந்தால் உனது துன்பங்களெல்லாம் ஒழிந்து போகும். ஆகையால் இறப்பதற்குமுன் அவனைத்தூக்கிக்கொண்டுசிவபெருமானது திவ்விய ஆலயத்துக்கு எடுத்துக்கொண்டுபோய்த் திருவெண்ணீறு அணிவித்தால் கொன்றைமாலை தரித்த சிவபெருமான் திருவருளினால் பாவம் பஸ்பமாகுமென்று திருவாய் மலர்ந்தருளினார். எ-று. (அ0)

மனுகுலமரபின்வள்ளலைநோக்கிவாய்மலர்ந்தரசர்களரசு
நினைவருமகவைவருத்தினையிம்மைந்தனிறக்குமுனீவிரைந்தேகித்
துனிதருநிக்கைப்பாவமும்பொல்லாத்தோடமுந்தீர்வுறநாகம்
புனிதநீர்வாவியாடுகென்றுரைத்துப்போயினன்புண்ணியமனையான்.

(இ - ள்) மனுவம்சத்திற்றோன்றிய வேந்தனைப்பார்த்து அரசர்களுக்கு அரசனே! நினைப்பதற்கரிய பிள்ளையைக்கொன்றாய். இம்மகன் இறப்பதற்குமுன் நீ சீக்கிரஞ்சென்று துன்பத்தைத்தரும் அப்பிராமணனால் வந்த பாவமும் இந்தக்கொலை பாதகமும் நீங்கும்படி அனந்தனுவென்னும் அமண்டுகேதியென்னும் திருக்குளத்தில் ஸ்நானம் செய்-என்று திருவாய் மலர்ந்து புண்ணியமே ஓர் வடிவமாக வந்த அம்முனிவர் சென்றருளினார். எ-று. (அக)

அத்திறத்தரசனானடிநிந்தித்தன்புகொண்டேகுமுகாலை
மொய்த்துறுமமைச்சர்தங்களைநோக்கிமுறைமுறைவருகவென்றழைத்துச்
சித்திரபானுவெனுமகவாகசெயல்புரிந்திடவரியணைமேல்
வைத்திடர்தவமெபுரிந்திடவெனதுமனத்திடைதுணிந்தனனென்றே.



(இ - ள்) அத்தன்மையினால் அவ்வரசன் சிவபெருமானுடைய சேவடிகளை நினைந்து அன்புகொண்டுசெல்லும்போது, தன்னைச்சூழ்ந்துள்ள மந்திரிமார்களைப் பார்த்து வரிசைக்கிரமமாக அழைத்து, சித்திரபானு என்னும் தன்மகனை இராஜ்யகாரியங்களைப்பார்த்து வரும்படி சிம்மாசனத்தில் இருக்கச்செய்து முடி சூட்டுங்கள்; யான் தவஞ்செய்யும்படி எனது மனதில் நிச்சயிக்கலாயினேன் என்று சொல்லி, எ-று. (அஉ)

ஆங்கவர்தமைவிட்டிடுமிளைநறுமடைத்தலைடர்சினைபழுத்த
மாங்கனிதேன்பாய்வயலிடைமேதிமருப்பினாலடித்திடுகரும்பின்
தேங்குகண்டோறுஞ்சொரிந்தவெண்முத்தஞ்சினையெனக்குருகடையிடக்கு
மோங்குபல்வளஞ்சூழ்பாவநாசப்பெயரியதாய்விளங்கியநகரே.

(இ - ள்) அம்மந்திரிமார்களை விட்டுவிட்டு அவ்வரசன் கிளைகளில் பழுத்த மாம் பழங்களின் தேன் பாயும் வயலில் எருமைகள் கொம்பினாலடிக்கும் கரும்புகளின் பருத்த கணுக்களிலிருந்து உதிர்ந்த வெண்மையான முத்துகளைப் பார்த்து நாரைகள் தமது முட்டைகளென்று அடைகாத்துக்கொண்டிருக்கும் மேன்மையான பலவளம் நிறைந்த பாவநாசமென்னும் உரிமைப்பெயரையுடைய நகரம் வந்து சேர்ந்தான். எ-று. (அங)

அன்னமுன்னறியாவெண்பிறைக்கொழுந்தோடரும்பியசெஞ்சடைக்கடவுள்
மன்னவீற்றிருக்குமாலயம்புகுந்துமனுவிறைசரணென்றுரைத்த
பன்னகவாவித்தண்புனலாடிப்பணிந்தரன்றன்கழல்வழுத்த
முன்னரன்செய்தமக்கொலையேமுதலவல்வினையிறந்ததுவே.

(இ - ள்) அன்னப்பட்சியும் அறியாத வெண்மையான இளஞ்சந்திரனுடன் தோன்றும் சடாமகுடத்தையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளியிருக்கும் திருக்கோயிலுட் புகுந்து, மனுசரண சக்கிரவர்த்தி முனிவரால் சொல்லப்பட்ட அனந்த திருக்குளத்தின் குளிர்ச்சியான தீர்த்தத்தில் முழுகிச் சிவபெருமானது திருவடிகளை வணங்கித்தோத்திரஞ் செய்ய, முன்னே தேடிக்கொண்ட கொலைபாதகத்தோடு பூர்வவினைகளும் நீங்கின. எ-று. (அச)

மதிநுதற்கேதமதிமகவெடுத்தவன்பெருநகர்வயினடைந்து
சதுமறைமொழிக்குமங்கைதகோயிலுட்சார்ந்தனன்சைவநாயகர்தம்
பதமலர்பணிந்துதனையனைக்கிடத்திப்பகர்ந்திடச்சைவநாயகரு
மிதமுறக்கையினீறுபூத்திட்டெடுத்தனர்தாமரைக்கையில்.

(இ - ள்) சந்திரன் போன்ற நெற்றியையுடைய கேதுமதியானவள் தன் இறந்த குமாரனை யெடுத்துக்கொண்டு பலவளங்கள் நிறைந்த பாவநாசப்

பதி வந்து அடைந்து, எல்லு வேதங்களும் முழங்குகின்ற எமது பெருமானு டைய ஆலயத்தைச்சார்ந்து, அங்குள்ள சைவநாயகராகியகுருக்களுடைய திரு வடிகளைப்பணிந்து, தனதுமகனைப்பூமியின்மேல் கிடத்திச்சங்கதிகளைச்சொல்ல, அவர் இனிமையாகத்திருக்கோயிலுள் இருந்த விபூதியுள்ள அழகிய தட்டத் தைத்தமது தாமரைபோன்ற திருக்கரத்திலெடுத்துக்கொண்டு வந்தார். எ-று.

புரிகொணூன்மார்பில்விளங்கிடநுதலிற்பொடி திரிபுண்டரம்விளங்கப்
பரனெனவக்குமணிவடந்தயங்கப்பவளவாய்திறக்கதிருவைப்பார்
கருதிடேல்வேறென்றிப்பதியிற்றகாங்கமிவ்விலிங்கமேயிந்து
வருணதுகிரணம்வாவிநீரதுவுமச்சிலையக்குனிர்போலும்.

(இ-ள்) தமது மார்பில் முப்புரிநூல்புரளவும் நெற்றியில் விபூதி திரிபுண் டரமாக விளங்கவும் சிவபெருமான் போல ருத்திராக்கமணிவடம் பொலியவும் பவளம்போலும் சிவந்த திருவாய் மலர்ந்து, இத்தத்தலம் சந்திரகாந்தம் போலா கும்; இந்தச்சிவலிங்கமே சந்திரன் போலாகும்; அவரது திருவருளே கிரணம் போலாகும்; மேன்மையாகிய இத்திருக்குளத்தின் தீர்த்தமே அந்தக்காந்தத் திலுண்டாகும் நீர் போலாகும். எ-று. (௬)

செல்வமுண்டாக்குஞ்ஞானமுண்டாக்குஞ்செப்பருந்தெளிவையுண்டாக்கும்
கல்வியுண்டாக்கும்வலியையுண்டாக்குங்காதலாஞ்சுற்றமுண்டாக்குஞ்
சொல்லையுண்டாக்குமைந்தருண்டாக்குந்தொலைவிலாவாயுளுண்டாக்கும்
பல்பலவின்பப்பலிப்பையுண்டாக்கும்பாவநாசத்தர்வெண்ணீறு.

(இ-ள்) செல்வம், ஞானம், மெஞ்ஞானபோதம், கல்வி, வல்லமை, அன்புள்ள சுற்றம், சொல்வாக்கு, சந்ததி, நீண்ட ஆயுள், இன்னும் பற்பல சுகங்கள் ஆகிய இவற்றை இப்பாவநாசத்தலத்தின் திருவெண்ணீறு கொடுக்கும். எ-று. (௭)

எனவிருவிரலினீற்றினைப்பிடித்தேயிசனைந்தெழுத்தெண்ணித்
தனையன்மேற்போட்டுத்தாமரைக்கையாற்றடவலுந்துயிலுணர்ந்தவன்போ
னினைவுறவெழலுமீன்றதாய்களித்தாணீணிலத்தோரதிசயித்தார்
பனிமலர்க்கொன்றைப்பரமனையருளைப்பழிச்சியேவணங்கினர்பலகால்.

(இ-ள்) என்று சொல்லித்தமது இரண்டு விரல்களினால் திருவெண்ணீற் றையெடுத்துச்சிவபெருமானது திருப்பஞ்சாக்கரத்தைத்தியானித்து அம்மைந் தன்பேரில் போட்டுத்தம்முடைய தாமரை மலர் போன்ற திருக்கரத்தினால் தடவலும், நித்திரை தெளிந்து எழுந்தவன் போல் எழுந்திருத்தலும், அவனைப் பெற்ற தாய் மனமகிழ்ந்தாள், பூலோகத்தார்கள் ஆச்சரியப்பட்டார்கள். குளிர்ந் த கொன்றைப்பூமாலை தரித்த சிவபெருமான் திருவருளை பலதரமும் வாழ்த்தி வணங்கினார்கள். எ-று. (௮)



மாலயன்போற்றுமங்கரனடைந்துவழுத்துவோர்வந்தநீவினையின்
மூலமேகளைந்துநெறிமுறைறவாசம்புரிதலான்முன்னமேநரகிற்
சாலவேதுன்புற்றினைத்துயர்ந்திருக்குந்தமர்களைச்சிவபுரஞ்சேர்த்துக்
கோலநன்முத்தியெய்துவதாமுமுடிவிலாத்தலம்புவிவிளங்க.

(இ-ள்) பிரம விஷ்ணுக்கள் துதிசெய்யும் அந்தப்பாவநாசத்தைச்சேர்ந் து துதிசெய்கிறவர்கள் ஜனனங்கள் தோறும் விடாமல்தொடர்ந்து வந்த பாவத் திற்கு மூலமாகிய ஆணவமலத்தை வேரறக்களைந்து நன்னெறி முறையால் அங்கே வாசம் செய்வதனால் முன்னமே நரகில் துன்பம் அடைந்து இளைத்து வாட்டமுற்றிருக்கின்ற பிதிர்க்களைச்சிவலோகத்திற் சேர்த்து, தங்கள் வமிசம் பூமியில் விளங்கத்தாமும் முடிவில் அழகிய முத்தி இன்பம் அடைவார்கள். எ-று. (௯)

மாமனுசரணமென்றுவந்தடையவல்வினைகெடுத்தருடலா
லாமமாயதற்குத்திசம்மனுசரணைதீர்த்தமென்றுவகினிலவின்றார்
தோமறுபன்றுட்டவத்புரிந்தரசன்றொல்லையின்மூன்றையுமெரித்த
சோமசேகரன்பொற்றுணிமலரடைந்தான்றவக்குறைவிறவியோருத்து.

(இ-ள்) மகாமனுசரணமென்று வந்த முழுதக்கொடிய வினைகளை நாசஞ் செய்துகோரியவரத்தைத்தருதலால் அந்தத்திருக்குளத்திற்கு மனுசரணதீர்த்த மென்று ஒரு நாமஞ்சூட்டினான். பலநாள் குற்றமற்ற தவஞ்செய்து அவ் வரசன் ஆதி காலத்தில் திரிபுரத்தை யெரித்த சிவபெருமானது அழகிய திருத் தாள் நிழலையடைந்தான். எ-று. (௧௦)

அம்மனுசரணவாவியின்பெருமையளவிடத்தெளிதகொலந்நீர்
மெய்ம்மையோர்திவலையொருவன்மேற்படில்வெவ்வினையெனும்விறகிறுக்கழலாம்
மைம்மலிகண்டன்றிருவருண்மலர்ந்தமருவுவண்டானமிதென்ன
வெம்மையாளந்திசனற்குமாரற்கேயிசைத்தனனென்பவமறவே.

(இ-ள்) அந்த மனுசரண தீர்த்தத்தின் சிறப்பை அளவிட்டுச்சொல்ல முடியாது. அந்தத்தீர்த்தத்தின் ஒரு சிறுதுளி யாதாமொருவன் சரீரத்திற் பட் டால் அது அவனது பூர்வவினை யென்னும் விறகை நாசஞ்செய்யும் அக்கினியா கும்; கரியகண்டத்தையுடைய சிவபெருமான் திருவருள் கூர்ந்து எழுந்தருளி யிருக்கும் திவ்வியதலம் இதுவென்று எம்மை ஆளாகவுடைய நந்திதேவர் எமது பாவம் நாசமாகும்படி சனற்குமாரருக்குத்திருவாய் மலர்ந்தருளினார். எ-று. (௧௧)

மனுசரணசருக்கம் முற்றும்.

# கிளிச்சருக்கம்.

இருவினைத்தொடராற்றின்பமுத்தியைக்
காதலசெல்விபோற்கண்டமாதவச்
சாதமொருக்கொளுஞ்சனற்குமாரற்குத்
தெரிவுறக்கிளிக்கதைநந்திசெப்புவான்.

(இ-ள்) புண்ணிய பாவமென்னுந்தளையை வேரொடு களைந்து சிவானந்தப்பேற்றை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அபரோக்ஷமாயடைந்த சிறந்த மெய்த்தவமே ஒப்பற்ற வடிவங்கொண்ட சனற்குமார முனிவருக்குக்கிளிக்கதையைத்தெளிவாகத்திருநந்தி தேவர் சொல்லத்தொடங்கினர். எ-று. (௧)

முன்னுறநாட்கமழ்முருகின்மூண்டகக்
கள்ளவிழ்தோட்டிதழ்கதவநாண்மலர்
வள்ளுன்மறைநூலும்வழங்குதிவாயினு
ளுள்ளுறுதன்னுலகத்திலோர்பகல்.

(இ-ள்) மூட்கள் செறிந்த தண்டுகள் வாய்ந்த வாசனை மிகுந்த தேன் சொரிய விரிந்தஇதழ்கள் பொருந்திய அன்றலர்ந்ததாமரைப்பூவில் வாழ்பவனும், நான்கு வேதங்களையும் விளங்கச்சொல்லும் திருவாயையுடைய வனுமாகிய பிரமதேவன் வாசஞ்செய்கின்ற தன் உலகத்தில் ஒரு நாள், எ-று. (௨)

இருக்குமுன்னுமறைநயீரண்டெடுத்
விரித்தபல்வகைப்படுமெழுத்துமெய்பெறச்
செருக்குறுகலைகளுந்தெய்வதல்லெழி
லுருக்கொடுபொங்கரினிராசனுற்றிட.

(இ-ள்) இருக்கு முதலான நான்கு வேதங்களுடன் சொல்லப்பட்ட பலவகையான மந்திரங்களும், மெய்மையாகச்செருக்குற்று விளங்கும் ஆறு சாஸ்திர ஞானங்களும், தெய்வத்தன்மையும். அழகும் பொருந்திய வடிவமெடுத்துக்கொண்டு, சமீபத்தில் பசுக்களாய் விளங்கவே, எ-று. (௩)

இருட்குநள்பிரிதரவிமைக்கும்பன்மணி
யுருக்கிளர்பொன்முடியும்பர்தாடொழ
திருத்தருநிழற்செம்மன்முன்னுறு
தருக்கியதிசையுறுதலைவராகினேர்.

(இ-ள்) அற்பமான இருள் ஒழியும்படி ஒளிவீசும் பலவிதமான பருத்த இரத்தினங்கள் விளங்குகின்ற அழகான கிரீடந்தரித்த தேவர்கள் யாவரும் தனது பாதங்களை வணங்கும்படி கற்பக நிழலில் வாழும் தேவேந்திரனும், விசாலமான ஈசான முதலான எட்டுத்திசைகளில் வசிக்கும் குபேரன் முதலான திக்குப்பாலர்களும். எ-று. (௪)

நாற்றிசையிடத்தொருநன்னுறுவார்க்கெதி
ராற்றுவாய்நான்முகமமைந்தவாற்றினற்
போற்றுவார்போற்றிடமலர்ந்தபுண்ணிய
மேற்றிகழுருக்கொடுவிளங்கிற்றென்பவே.

(இ-ன்) நான்கு திசைகளிலுமிருந்து வருகின்றவர்களுக்குப் பிரத்தியட்சமாய் ஆறுதல் சொல்லும் திருவாய்களையுடைய நான்கு திருமுகத்துடன் பொருந்தியிருக்கும் தன்மையால் ஐம்புலன்களை அகமுகமாய்க்காக்கவல்ல பெரியோர்கள் புகழவிரிந்த புண்ணியமானது மேலாக விளங்கும் ஒரு வடிவங்கொண்டு இருந்தது என்று சொல்லுவார் பெரியோர். எ-று. (௫)

கல்வியின்பரப்பெலாங்கண்டநெஞ்சுடைப்
பல்பெருந்தவத்தினற்பரமமாதவர்
நல்லிசைத்தெய்வயாழ்நாதர்வித்தையர்
இவ்வியத்தேருடைப்பருதிச்செல்வர்கள்.

(இ-ன்) கல்வியின் விசாலத்தை முழுதுங் கண்டறிந்த தெளிந்த மனதுடைய பற்பல சிறந்த தவத்தினால் மேன்மையுள்ள மகா தவசிகளும், இனிய இசையில் வல்லவரான தெய்வத்தன்மையுள்ள மகரயாழையுடைய நாரதரும், வித்தையர்களும், ஒற்றைச்சக்கரத்தினால் ஓங்கும் சிறப்புள்ள தேருடைய பாலசூரியர்களும், எ-று. (௬)

தெய்வமாமணியொளிச்சிகைச்சென்னியோர்
மைவரபலவுறழசுரர்மற்றுளோ
ரவ்வண்ணிறைதலால்யார்க்குமவ்வுல
கெவ்வுலகோவெனவையமெய்துற.

(இ-ள்) சிறப்பு-பருமை-அழகு-காந்தி-இவற்றையுடைய மாணிக்கத்தைமுடியில் தரித்த நாகலோகத்தவர்களும், மேகம படிந்த மலைக்கு நிகரான புயங்களையுடைய அசுரர்களும், இன்னும் மற்றவர்களும், அந்த இடத்திற்குத்திரண்டு

வத்தபடியால் எவர்களுக்கும் அந்தப்பிரமலோகம் வேறு எந்த லோகமோ என்று சந்தேகங்கொள்ளும்படி, எ-று. (எ)

விண்ணிறையுநீக்கணத்திடையுண்மேவிய
வண்ணல்வாண்மதியெனவளவில்பல்லுல
கெண்ணறுபற்பலரிறைஞ்சிடவெய்திட
வண்ணவான்பேரவைநாப்பண்வைகினான்.

(இ - ள்) ஆகாயத்தில் நிறைந்துள்ள நட்சத்திரக்கூட்டங்களுக்கு மத்தியில் விளங்கா நின்ற ஒளி பொருந்திய சந்திரனொன்று சொல்லும் கணக்கில்லாத பல அண்டங்களிலுள்ள எண்ணிறந்த பேர்கள் வணங்கும்படி வர, அதனால் அழகு மிகுந்த சிறந்த பெருஞ் சபையின் நடுவில் தங்கியிருந்தார். எ-று. (அ)

இத்தகைப்பற்பலகுழாமிறைஞ்சியே
மொய்த்திடகாளிதழ்முண்டகாசனத்
தத்தமனிருக்குறதிருப்பவெவ்விலா
முத்திமாதவரொருமொழிவிளம்பினார்.

(இ - ள்) இவ்விதமான பற்பல கணங்கள் வணங்கிச்சூழ்ந்திட வாசனை தங்கிய இதழ்கள் வாய்ந்த கமலாசனத்தில் பிரமதேவர் மகிழ்ச்சியோடு எழுந்தருளியிருக்கையில் ஒப்பில்லாத ஜீவன் முத்தரான மகா தவசிகள் இந்த வசனத்தைச்சொன்னார்கள் :— எ-று. (௯)

மெய்யினெவ்வுலகருமேயினாரிவ
ணெய்துமோருலகுபோலிசைந்ததில்லையா
லையவெவ்வேறுலகுருவமாக்குநின்
செய்திறம்யாவரோதெரிக்கவல்லவர்.

(இ - ள்) ஐயனே! உண்மையாகச்சகல லோகத்தாரும் இங்கே வந்து சேர்ந்தார்கள். அதனால் இந்த நாள் இந்த உலகம் சகலாத்மாக்களும் முடிவில் வந்து சேரும் முத்தியுலகே ஆயிற்று. பலவேறு உலகங்களைப் படைக்க வல்ல உமது வல்லமையைச்சொல்லவல்லவர் யாவர்? ஒருவருமில்லை. எ-று.

என்றுபற்பலதுதியெடுத்தியம்பலு
மன்றலந்தாமரைவள்ளறேக்குறு
வன்றிஃதற்புதமறையக்கேண்மினீ
ரொன்றுபோலொன்றிலாவுலகமன்றியும்.



(இ - ள்) இவ்வாறு பற்பல தோத்திரங்களை யெடுத்துச்சொல்லவும் வாசனை தங்கிய அழகிய கமல நாயகர் அவர்களைப்பார்த்து "இது ஆச்சரியமானதல்ல ; யான் சொல்லுவதைக்கேளுங்கள். உலகங்களில் ஒன்றைப்போல் மற்றொன்று விளங்கவில்லை ; அதுவுமல்லாமல், எ-று. (கக)

ஒருலகத்திலுளொருவர்தம்முருப்
போலுமற்றொருவருக்கில்லையாதலா
லூர்வனபறப்பனவெரழியமற்றுடல்
சார்வனவல்லவாஞ்சகங்கடோறுமே.

(இ - ள்) ஒருலகத்தில் ஒருவருடைய வடிவத்தைப்போல் மற்றொருவருக்கு வடிவம் இல்லை. ஊர்வன பறப்பன இவைகள் நீங்கலாக மற்றவைகளில் ஒவ்வொரு உலகத்திலும் ஒன்றைப்போல் மற்றொன்றுக்குச்சரீரம் பொருந்த மாட்டாது. எ-று. (கஉ)

இன்னதென்சிருட்டியின்றிறமெனுவயன்
சொன்னதுமகிழ்ந்தனர்சுருதிமாதவ
ரன்னதுசெவிப்படவனகமாதவ
மன்னியசனகனெனுநாமமாமுனி.

(இ - ள்) யான் செய்யும் சிருட்டியின் வல்லபம் இப்படிப்பட்ட தன்மையையுடையது என்று பிரமதேவர் சொன்ன சங்கதியினால் வேதமுணர்ந்த மகா தவசிகள் சந்தோஷமடைந்தார்கள். அந்த விவரத்தை கேட்டவுடன் பரிசுத்தமான மகா தவத்தையுடைய சனகனென்னும் பெயர் பூண்ட மாமுனிவர், எ-று.

தேற்றமாயெழுந்தனன்விரைவிற்சென்றன
னாற்றிருக்கொழுகுதேனுறுவெண்டாமரை
மேற்றிகழ்வசிஷ்டிசென்றுமெல்லடி
போற்றினனிகழ்ந்ததுபுகலலுற்றனன்.

(இ - ள்) ஊக்கத்தோடெழுந்து, சீக்கிரஞ் சென்று, வாசனை நிறைந்து பெருகுவது போல் சொரியுந்தேனுள்ள வெண்மையான தாமரை மலரில் வீற்றிருக்கும் சரஸ்வதியிடம் போய், சீர்பாதங்களை வணங்கி, நடந்த சங்கதியைச்சொல்லத் தொடங்கினார். எ-று. (கஎ)

அன்னைநீகேட்டியோர்மாற்றமம்புய
னுன்னருமவையிடையுலகுயிர்க்கெலாம்
பன்னியவுடலுருப்பலவிதங்களாய்
மன்னியதென்றெழில்வளமதென்றனன்.

(இ - ள்) எனது தாயே! யான் சொல்லும் ஒரு சங்கதியைக்கேட்டருள்க, "உலகத்திலுள்ள உயிர்களுக்கெல்லாம் சொல்லும் சரீரத்தின் வடிவம் பலவேறு தன்மையாயிருத்தலே எனது சிருட்டியின் வல்லபம்" என்று நினைப்பதற்கருமையான பெருஞ்சபையில் பிரமதேவர் சொன்னார். எ-று. (கரு)

அருந்தவர்முனிவரரமரர்யாவரு
மிருந்தபேரவையிடைநிகழ்ந்ததீதென
முருந்துறழ்வெண்ணகைமுறுவல்பூத்தவெண்
டிருந்திழையுத்தரஞ்செப்பன்மேயினள்.

(இ - ள்) அரியதவசிகளும், முனிவர்களும், தேவர்யாவரும், இருந்த பெரியசபையில் நடந்த சங்கதியிதுவென்று சொல்லவும், வெண்மையானகுருத்துக்கு நிகரான வெண்ணிறத்தந்தங்களினால் புன்சிரிப்பு கொண்டு முத்துமாலை பூணும் சரச்சுவதி விடைசொல்லத்தொடங்கினள். எ-று. (கசு)

ஒருவர்தம்முறுப்பெனவொருவர்க்கில்லது
மரியதோவவரவரறியச்சொல்லியான்
றெரிவுறப்பலபல்விதஞ்சன்செய்ததே
பெரியவற்புதமெனவாணிபேசினள்.

(இ - ள்) ஒருவருடைய அவயவங்களைப்போல் மற்றொருவருக்கு இல்லாமலிருப்பது ஆச்சரியமானதல்ல; அவரவர்கள் மனதில் நினைத்ததைத் தெரிந்துகொள்ளும்படி வார்த்தைகளை பற்பல விதமாகச்செய்ததே மிகுந்த அச்சரியமானதென்று சரச்சுவதி சொன்னள். எ-று. (கஎ)

மெல்லிடன்மொழியினைக்கேட்டமீண்டவை
யொல்லையினெய்துமவனைநோக்குறு
வெல்லியன்மாதவவெங்ஙனேகினை
சொல்லுதியெனச்சொனன்சுருதிசொன்னவன்.

(இ - ன்) சரச்சுவதியின் வார்த்தைகளைக்கேட்டுச் சுகர் திரும்பிச்சபைக்குச் சீக்கிரம் வந்து சேர்ந்தவுடன், அவரைப்பார்த்து அளவில்லாத தவத்தையுடைய



வர் முனிவரே எவ்விடம்போயினீர்? சொல்லுமென்று கேட்க, வேதத்தைத்திருவாய்மலர்ந்தருளிய சுகர் சொல்லத்தொடங்கினார்:—எ-று. (கஅ)

வேறு.

நறவூற்றெடுக்கும்வெண்டோட்டினைப்பொகுட்டிடையிருக்கு
மறிவோருருவாமென்னன்னைபக்கலடைக்தேனனைத்துயிர்க்குஞ்
செறியுமுருவம்பலவேறுசெய்தேனென்றுசெப்பியதே
நிறையவிருந்தபேரவையினிகழ்ந்ததென்றுமொழிந்தனன்யான்.

(இ - ள்) தேன் மிகுந்து பெருகும் வெண்மையான இதழ்களையுடைய தாமரை மலரில் அரசிருந்தருளும் அறிவே ஒப்பற்ற வடிவமாகப்பெற்ற எனது தாயாகிய சரச்சுவதிசமுகஞ்சேர்ந்தேன்; சகலவுயிர்களுக்கும் பொருந்துஞ்சரீரம் பற்பல வேறாயிருக்கும்படி சிருட்டித்தேன் என்று பிரமதேவர் சொன்னதே நிறைந்திருந்த பெருஞ் சபையில் நடந்த சங்கதியென்று யான் அறிக்கையிட்டேன். எ-று. (கக)

கமலக்கோயில்வாழ்மங்கையிர்வாய்திறந்துபல்லுயிர்க்கு
மமையப்பலவேறுருச்செய்ததரிதோசொற்களவரவர்க்குத்
தமர்க்கடல்சூழ்புவியின்றதலைவலன்றுதான்செய்யும்
விமலத்தொழிலேயரிதென்றனென்னவுணாப்பான்வேதாவும்.

(இ - ள்) ஒலித்தலையுடைய கடல் சூழ்ந்த உலகத்தைப்படைத்த தலைவனே! தாமரைப்பூவாகிய ஆலயத்தில் வீற்றிருக்குஞ் சரச்சுவதிதேவியார் முருக்கம் பூப்போலும் செவ்வாய் திறந்து எல்லாவுயிர்களுக்கும் பல வேறு விதமான சரீரங்களைச்சிருட்டித்தது அருமையான காரியமல்ல; அவர் அவர்களுக்குப்பாஷைகளை வெவ்வேறமைத்திய எனது பரிசுத்தமான தொழிலே அருமையுடையதென்று சொன்னள்; எனப்பிரமதேவரும் சொல்லுவார். எ-று.

பன்னுங்கிளியாய்த்திரிதனைமதான்வியாதர்ப்பக்கம்பறந்திட்டே
யுன்னையீன்றுன்சுகனெனப்பேருற்றாய்பிறவிவாதியாற்
சொன்னசொல்லைச்சொல்லுகின்றசபாவம்பெற்றுனைக்குறி
யின்னேகிளியாமெனச்சாபமிட்டானயர்ப்தமுனிவேந்தன்

(இ - ள்) பேசுங்கிளியுருவாய்த்திரிதந்தமையென்பவன் வியாசரிடத்துக்குப்பறந்து சென்று உன்னைப்பெற்றான், அதனால் உனக்கு சுகனென்னும் பெய

ருண்டாயிற்று ; ஒருவர் சொன்ன வார்த்தைதனைச் சொல்லுங்கிளியின் தன்மை உனக்கு நீங்கவில்லை. இப்போதே நீ கிளியாகக்கடவதென்று நான்முகக்கட வுள் சாபமிட்டார். சுகமுனிவர் மனம்வருந்தி, எ-று. (௨௧)

மலர்த்தாள்வணங்கியருண்ஞானவாழ்வேயிந்தவல்வினையேற்
கலக்குற்றவிச்சாபந்தீர்வதென்றோவருளென்னப்
பலித்தநெஞ்சின்முனிவாவிப்பாவநாசமெனுந்தெய்வத்
தலத்திற்றானேதோன்றிலிங்கப்பூசைசெயிற்போஞ்சாபமென்றான்.

(இ-ள்) அவரது திருவடிகளைப்பணிந்து அருளாகிய ஞான வாழ்வையு டைய அரசே! இத்தீவினையேற்குத் துன்பத்தைக்கொடுக்கும் இந்தச்சாபம் எப் போது விமோசனமாகுமது? கிருபைசெய்வாய் என்று கேட்க, ஓ முனிவ னே! பரிசுத்தமான மனதோனே இந்தப்பாவநாசமென்னும் திவ்விய தலத் தில் சுயம்பு மூர்த்தியாகிய சிவபெருமானைப்பூசித்தால் சாபம் தீரும் என்று சொன்னார். எ-று. (௨௨)

எந்தாய்வன்னியுருக்கொள்கிளியெங்கொல்பூசைசெயுமாறு
முந்தமறிவின்றேயென்னமுளரிப்பொகுட்டோனவனும்
தந்தேமறிவுநின்றலைதக்கபூசையியற்றுதி
மைந்தாசெறிவெனமொழிந்தான்மலர்த்தாள்பணிந்துமுனிவோனும்.

(இ-ள்) எனது பிதாவே! கிளியுருவைப்பெற்றால் எப்படி சிவபூசை செய்வேன்? முதன்மையான அறிவு இல்லையே! என்று விண்ணப்பஞ்செய் யக் கமலாசனத்தேவர் உனக்கு அறிவைக்கொடுத்தோம்; உன்னாலியன்ற பூசை செய் போ என்று சொல்லுதலும், அந்தச்சுகமுனிவர் அவரது பாதாரவிந்தங் களைப்பணிந்து, எ-று. (௨௩)

அருநான்மறையின்றுறைவிரிக்குமந்தஞானிசாபத்தாற்
பருவக்கொண்மூப்படிமதில்சூழ்பாவநாசநகர்க்காவில்
உரியவடிவப்பைங்கிளியுருவத்தரசாயுற்பவித்தான்
வருநாள்பலவுங்கழிந்தேகவளருமதியேபோன்மதிவளர.

(இ-ள்) பெருமையான நான்குவேதங்களின் வழிகளை விவரித்துச் சொல்லும் சுகமுனிவர் தமக்குநேரிட்ட சாபத்தினால் கார்மேகம் தவழப்பெற்ற மதில்கள் சூழ்ந்த திருப்பாவநாச நகரின் பூங்காவனத்தில் உரிய வடிவமான பச்சைக்கிளியின் உருவத்தைப்பெற்றுக்கிளிகளுக்கு அரசாய்த் தோன்றினார்.



இப்படி பல நாள் கழிந்து போகச்சுக்கில பக்ஷத்துச்சந்திரன் போல் அறிவு வளர்ந்து வரவும், எ-று. (௨௪)

செக்கரைக்குப்பியசிறைத்தக்கிளியின்றிரள்கள்புடைசூழப்
பொங்குதடைந்துகனிகோதிப்புதுத்தேனளிகள்விருந்தயராக்
கொங்குமலருந்துணர்க்கொன்றைக்குழகனுறையுமிடத்தன்பாற்
றங்குபாரவருக்கைநெடுந்தருவினத்தோடணைந்திடுமால்.

(இ-ள்) சிவந்த கூர்மையான மூக்கையும் பச்சைச்சிறகுகளையும் உடைய கிளிக்கூட்டங்கள் சூழ்ந்து வாச்சோலைக்கு வந்து கனிகளைத்தின்று புதியதேனை வண்டுகள் சேர்ந்துண்ணும்படி வாசனை வீசும் கொத்தாகிய கொன்றைப்பூவைச் சூடிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்தில் இருந்த பருத்த அடியை யுடைய நீண்ட பலாமரத்தில் இனத்தோடு கூடவந்துசேரும். எ-று.

சிறுகாற்பவளக்கூர்மூக்குச்சிறைப்பசுங்கிள்ளையினங்கட்குப்
பெறுதற்கரியசிவஞானப்பேறும்பஞ்சாக்கரவிதியு
மறிவுதருநீற்றின்சிறப்புமரன்சீர்த்தியுமவனடியார்
குறைவில்கதையுமுளமுருகிக்கண்ணீராறாக்கூறிடுமால்.

(இ-ள்) சிறிய கால்களும் பவளம் போற்சிவந்த மூக்கும் சிறகும் உடைய பச்சைக்கிளிக்கூட்டங்களுக்கு அடைதற்கரியசிவஞானசெல்வத்தையும், திருப் பஞ்சாக்கர மகிமையையும், ஞானத்தைக்கொடுக்கும் திருநீற்றின்பெருமையை யும், சிவபெருமான் கீர்த்தி விசேடத்தையும், சிவனடியார்களுடைய பெருமை யிருந்த சரித்திரத்தையும், மனங்கரைந்து கண்ணீர் ஆறாகப்பெருக, அன்போடு விவரமாகச்சொல்லும். எ-று. (௨௬)

புளகமரும்பமெய்விதிர்ப்பப்பொருவிலகங்கரைந்துருக
அளவிலாசைமீதூறவரகராவென்றறையுமொழி
யுளநெக்குருகியடியார்கதைபலகாலோதவெனக்கேட்டுக்
கிளியின்குழாங்கண்மகிழ்பூப்பக்கிளத்தாரிற்குந்தவக்கிள்ளை.

(இ-ள்) உடம்புவேர்த்து நடுக்கமுற, ஒப்பில்லாத மனமுதலிய உட்கர ணங்கள் கரைந்துருக, அளவில்லாத அன்பு பெருக அரகரா! என்னுமொழியு மாக மனம் நெகிழ்ந்து அடியார் சரித்திரத்தைத்திரும்பவும் பலதரம் சொல் லுக! என்று சொல்லக்கேட்டுக்கிளிக்கூட்டங்கள் மகிழ்ச்சியடையத்தவத்திற் சிறந்த இராசக்கிளி சொல்லும்:—எ-று. (௨௭)

அடைந்தோர்பிறவிப்பெரும்பிணிக்கோர்மருந்தாயாழிதந்த
விடந்தாழ்கண்டன்வீற்றிருக்கும்பாவநாசவியனகரின்
மடந்தாழ்புன்னுமெய்ஞ்ஞானமருவுமிந்தக்களருப்
படிந்தோரறிவின்சிறப்பெவரோபகரவல்லார்பாரிடத்தே.

(இ - ள்) அடையப்பெற்றவர்களுடைய பிறப்பு என்னும் பெரிய வியாதிக்குச்சிறந்த ஔஷதமாகத்திருப்பாற் கடலிலுண்டான ஆலகாலவிடத்தைத்தரித்த கண்டத்தையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பாவநாசமென்னும் விசாலமான நகரத்தில் அறியாமை பொருந்திய படுக்களும் சிவஞானத்தையடையும் என்றால் மானிடவடிவம் பெற்றவர்களுடைய அறிவின்சிறப்பை இந்தப்பூலோகத்தில் சொல்ல வல்லவர் யார்? ஒருவருமில்லை. எ-று. (உஅ)

இன்னதாயபேரறிவிசைசவர்க்கிளிகட்கிறைதின்னை
பன்னுமிறைவன்றிருப்பூசைசமுயலுமென்னப்பார்த்திடலு
மன்னவாறேசெய்துமெனவினைக்களொழுங்காவன்றுமுத
னன்னர்நெஞ்சத்தன்புவெள்ளநாட்குநாண்மிக்கூற்றெழப்ப.

(இ - ள்) இப்படிப்பட்ட மிகுந்த அறிவுபொருந்தியதால் கிளிகளுக்கு அரசான கிளி வேதங்கள் துதிக்கும் சிவபெருமானைப்பூசித்தல் செய்ய முயலுங்களென்று சொல்லவும், அப்படியே செய்கிறோமென்று கிளிகள் அன்று முதல் கிரமமாக நல்ல மனதில் அன்பின் பெருக்கம் நாளுக்கு நாள் மிகுந்து சுரக்க, எ-று. (உகூ)

புலரிக்காலைநீர்தோய்ந்துபோயெத்திசைகடொறுஞ்சுற்றிப்
பலனக்காய்செவ்வினைகள்பலவுங்கொணர்ந்துபாவனையா
லலைப்பரிவிற்கொணர்ந்தவைகொண்டேயாவுநிறைவாக்கி
விளைப்புனந்தருதைந்தாளொழிபாடிவ்வாறியற்றினவே.

(இ - ள்) விடியற்காலையில் சலத்திற் படிந்து எழுந்து பல திக்குகளிலும் பறந்து சென்று, பலவகைக்காய்களையும் சிவந்த கனிகளையும் நினைக்கதிர்களையும் அனேகமாகக்கொண்டு வந்து, மனதினுற் சிந்தித்து அன்பினுற் கொண்டு வந்தவைகளைக்கொண்டு யாவற்றையும் நிறைவாகச்செய்து, பிரகாசிக்கின்ற அந்தச்சகாரணியத்தில் வசிக்கும் சிவபெருமானுக்கு இந்த வண்ணம் பூசை புரிந்தன. எ-று. (கூ0)



வேறு.

அரிசனிலொழுக்காய்வருநாளிடை
வரையடிக்கண்வனத்தோர்வனசரன்
திருவெஞ்சிலைச்செஞ்சிலைக்கையினன்
கருதுநாமமும்வச்சிரகாதனே.

(இ - ள்) கிளிகள் இந்த நல்லொழுக்கத்தில் பயின்று வருநாளில் மலையடிவாரத்திலுள்ள வனத்தில் சஞ்சரிப்பவனும், மாறுபடும் கொடிய கோபத்தையுடைய சிவந்த வில்லைக்கையில் தரித்தவனும், வச்சிரகாதனென்னும் பெயரையுடையவனுமாகிய ஒரு வேடன், எ-று. (கூக)

பாந்தழிப்புனத்துக்குடியபோதா
யினைக்குமாங்கொன்றன் வேடமுத்தியபாடித்தபின்
விளைந்தசெந்தினைவித்தவிதிவுறப்
பொருந்துகாவல்புரிந்தங்குறைந்தனன்.

(இ - ள்) மிகுந்த முயற்சியால் வயல்களைச்சுட்டு மேகமானது சப்தித்துக்கொண்டு எழுந்து மழை பெய்தபின் சீக்கிரமாக நல்ல தினைவிதைகளை விதைத்து அப்பயிராகும்படி காவல் செய்து வந்து அவ்விடத்திலேயே வசித்தான். எ-று.

குலினைக்கதிர்தோன்றிமுதிர்வுற
வேலும்வலியபமெங்கும்விளைந்தன
மேயவிக்கதிர்மேயிலைபற்றிறைக்
கோலவன்னிக்குழாங்கள்கடியவே.

(இ - ள்) தினைப்பயிர்கள் குலைகட்டுக்கதிர்களைக்காட்டி முதிர்ச்சியடையவனுடைய வயல்கள் எல்லாம் விளைந்திருந்தன; பச்சைச்சிறகுகளையுடைய அழகிய கிளிக்கூட்டங்கள் சீக்கிரமாக அவ்வயல்களுக்குப்போயின. எ-று. (கூஉ)

இன்னவாறுபாரணிவிருப்புறிப்
பன்னகாபரணித்தருள்பன்னவன்
றன்னைமூன்றுபூசைதந்தருந்திறு
லன்னையங்கிளியாவுமெழுந்தவே.

(இ - ள்) இந்த மாதிரியாய்ப்பாரணிக்க வச்சிரகாதன் இருக்கும் போது சர்ப்பாபரணத்தரித்தருளுஞ் சிவபெருமானைச்சிந்தித்துப்பூசை செய்வதற்காக அந்தப்பசுங்கிளிகள் எல்லாம் புறப்பட்டன. எ-று. (கூ௩)

தன்குரல்கூடக்கியதத்தைதின்
செங்குரல்கடிருடியெழுந்திடப்
பொங்குவன்மைப்புனத்திற்பாணுறை
கங்குலாகிறத்தோன்விழிகண்டனன்.

(இ - ள்) தன்னுடைய சப்தத்தைத்தடக்கியகிளிகள் செம்மையானதினைக் கதிர்களைத்திருடிக்கொண்டு பறப்பனத வளமிகுந்த தினைப்புனத்தில் பரணிலிருந்த இருட்டைக்கொப்பான நிறத்தையுடைய வச்சிரகாதன் நேரில் பார்த்தான். எ-று. (௫௭)

ஈசனாரடியார்க்கியல்பூசனை
நேசமாகவினைந்தபுனத்தினிற்
கூசுதாகதிர்கொட்டுகனசிறை
வீசியிங்கசகென்றுவிளம்பினான்.

(இ - ள்) சிவபெருமான் திருவடிகளுக்குச்செய்யும் பூசைக்காக விளைந்த வாசிச்சிறகுகளை வீசும் கிளிகள் தினைப்புனத்தில் பயப்படாமல் கதிர்களை அறுத்தன என்று சொன்னான். எ-று. (௫௮)

கண்டுநெஞ்சங்கனன்றுபுழுங்கவே
கொண்டதைக்கவண்வீசிப்பின்றுவியே
மண்டுகைவலையாலிவ்வனைத்தையு
முண்டல்செய்வனெனநிலமுமறனன்.

(இ - ள்) தினைக்கதிர்களைக்கொண்டு போவதைப்பார்த்து, மனதில் மிகுந்த கோபங்கொண்டு, தான் வைத்துக்கொண்டிருந்த கைக்கவண் கல்லை விட்டெறிந்து, பின்பு கூச்சலிட்டுக்கைவலையினால் இவைகள் எல்லாவற்றினுடைய உயிரை உண்ணுவேனென்று நிலத்தில் குதித்தான். எ-று. (௫௯)

பறந்துசெல்லப்புட்கிளியாவுமே
மறைந்துமூன்றுதினம்வழிகண்டனை
னறிந்தவாறெனப்பின்வரவக்கிளி
சிறந்தபுற்றகஞ்சென்றுபுகுந்தவே.

(இ - ள்) கிளிக்கூட்டங்கள் எல்லாம் பறந்து கண்ணுக்குத்தெரியாமல் ஓடிப்போகவே, மூன்று தினம் தேடிப்பார்த்தபின் வழியைக்கண்டுகொண்டு அறிந்த பாதையைப்போல் தொடர்ந்து வர, அவைகள் சேர்த்தியான ஒரு புற்றுக்குள் புகுந்து கொண்டன. எ-று. (௬௦)



நடந்துவச்சிரகாதனுமன்னிற
விடம்சிப்புற்றுளுமறைந்தனவாதலா
லிடங்கொள்புற்றைறச்சிதைத்துளிடமெலாந்
தொடர்ந்துகாண்குவனென்னத்துணிந்தனன்.

(இ - ள்) வச்சிரகாதனும் அவ்விடத்துக்கு நடந்து வந்தான். கிளிகள் சத்தமில்லாமல் புற்றுக்குள் பதுங்கிக்கொண்டபடியால் விசாலமான இப்புற்றை வெட்டி உள்ளிருக்கும் வழிகளை யெல்லாம் சோதித்துப்பார்ப்பேன் என்று நிச்சயித்தான். எ-று. (௬௧)

வக்கயிற்றிற்செறிகன்வலையிறு
மரியபுற்றினையுள்ளுறக்கட்டிறு
வரியபுட்களெழுந்தவுரவன்கக்
கருதிச்செய்துமண்கொட்டினைக்கொண்டனன்.

(இ - ள்) அருங்கிளிகள் ஓடிப்போகா வண்ணம் செய்ய நினைத்து திரித்த கயிற்றினால் நெருக்கமான கண்களையுடைய வலையினால் அந்தப்புற்றை உள்ளில் பொருந்தும்படிக்கட்டிமண்வெட்டியையும் கையில் எடுத்தான்.

மெய்வருந்திவிழிநீர்த்தபுனத்திடைச்
செய்பவேளாண்டிலெபதுமன்றியே
கொய்துநாடோறுமிவ்வணத்கொண்டிறில்
வையுபுற்றில்வளம்பெரிதாமென.

(இ - ள்) தேகம் வருத்திப்பயிர் செய்த வயலில் விளைந்த தினையைத்தின்னுவதல்லாமல் கதிர்களை அறுத்து இவ்விதமாகத்தினந்தோறும் கொண்டுபோகும் இவைகள் இருக்கும் புற்றின் வளப்பம் மிகுதியாமென்று, எ-று. (௬௨)

பொலிந்தபல்புழைப்புற்றுச்சிதைத்தது
மிலங்குசையஞ்சிறைக்கிள்ளைகள்யாவையு
மலர்ந்தகொன்றைவரதனடியினிற்
கலங்கவின்றிக்கருத்தையிருத்தின.

(இ - ள்) விளங்கிய பல வளைகளையுடைய புற்றை வெட்டுதலும் அதிலிருந்த பசிய சிறகுகளுள்ள கிளிகளெல்லாம் சற்றும் பயப்படாமல் மலர்ந்த கொன்றை மாலையைத்தரித்த சிவபெருமான் திருவடிகளை யோசித்திருந்தன. எ-று.

அகன்றமண்கொட்டுவாய்படவாருயிர்
புகன்றகிள்ளைகளொத்தனபுன்மைதீர்
மிகுந்தமெய்த்தவக்கிள்ளைதூய்யாரணம்
பகர்ந்தவன்றிருச்சென்னிபடுமெனு.

(இ-ள்) அகலமான மண்வெட்டாயுதத்தின் நுனிபட்டு அதனால் ஈனமான மரணமென்னுந்துயரொழிய அந்தக்கிளிகளெல்லாம் உயிரை விட்டு ஒழிந்தன. உண்மைத்தவத்திற் சிறந்த இராச கிளி சத்திய வேதத்தைத்திருவாய் மலர்ந்தருளிய சிவபெருமான் திருமுடியிற் படுமென்று, எ-று. (சுடு)

பொங்குமன்புபெருகியபுந்தியாற்
றிங்கள்சூடிதிருமுடிகண்ணியே
தங்குதூவிவிரித்ததுசார்ந்ததால்
எங்ஙனேகொலருள்பெற்றவரெசெய்வார்.

(இ-ள்) பூரணமான அன்பு பெருகிய மனதுடன் இளஞ்சந்திரனைச்சூடின திருமுடியை அடைந்து தன்னிடத்தில் தங்கிய சிறைகளை விரித்துக்காத்துக்கொண்டிருந்தது; எம்பெருமான் திருவருளை நாடியவர்கள் இதையல்லாமல் வேறு என்ன செய்வார்கள்? எ-று. (சுசு)

பத்திபூண்டபரமனடியவர்
சித்தம்யாதுந்தெரியவரியதே
மொய்த்தகட்சிமைமூடலினுறிடை
யெத்திறத்துமியன்றனசெய்குவார்.

(இ-ள்) சிவபத்தி பூண்டொழுகுஞ் சிவனடியார்களுடைய சித்தத்தின் தன்மையைச்சிறிதும் அறிவது அரிதாகும்; நெருங்கிய கண்ணிமை இமையினொன்று மூடுவதற்குள் அத்யத்தை எவ்விதத்திலாயினும் கூடுமான அளவு செய்திடுவார்கள். எ-று. (சுஎ)

தம்முடற்பொருளாகவுந்தாமெணா
ரிம்மையிற்சுகமென்பதுமுன்னிடார
மெய்ம்மைசத்துமிளங்கிவோரவ
ரெம்மையாளுமடிகளென்றெண்ணுவார்.

(இ-ள்) தம்முடைய சரீரத்தையொருபொருளாகவும் நினையார்; இவ்வுலகத்திற் சுகம் என்பதையும் எண்ணமாட்டார்; மெய்ஞ்ஞான போதமே சத்தேனும் விளங்க நித்தம் ஆராய்வார்; அவர்களே எம்மை அடிமையாகக்கொண்ட சிவபெருமான் என்று எண்ணுவார்கள். எ-று. (சுஅ)



மிளிர்மைக்குஞ்சிறைவிரித்தங்கிருத்தலும்
புளினனோக்கிப்புலைபடவெட்டினன்
கிளியிறந்ததுதிங்கண்மதிநிலா
வொளிகொள்சென்னியினுற்றங்குறைந்ததே.

(இ-ள்) கிளி தங்கிய பசிய சிறகைவிரித்து அவ்விடத்திலிருக்கவும், அப்புறவையைப்பார்த்துத்தான்பறுமண்டாகும்படி வெட்டினான்; அதனால் அந்தக் கிளி இறந்து விட்டது. அன்றியும் பிறைச்சந்திரன் சந்திரிகையைப்பரப்பும் திருமுடியில் பட்டது. எ-று. (சஎ)

உன்னநான்முகனாதியுணர்கிலாத்
தென்னுகங்கைத்திருமுடிமீதினிற்
றுன்னிபாயச்சொரியுங்குருதி
வெள்ளமிப்பரத்துவிரிந்தத.

(இ-ள்) நினைக்காத பிரமதேவர் முதலானவர்களால் அறிய முடியாத பரிசுத்த கங்கை சூடிய சடாமகுடத்தில் கிளி உடம்பெருகிய உதிரமானது வெள்ளமாய்ப்பரந்து எங்கும் பரவியது, எ-று. (சஅ)

செய்யவேணியொளிருந்திறத்தினன்
மெய்ச்சொன்னகங்கைவிலகிக்கவிழ்ந்ததோ
ஐயசேர்வனசநிறையுந்தாமுடி
யையன்சூடினனோவெனவாயதே.

(இ-ள்) சிவந்த சடையில் விளங்கும் தன்மையால் அந்தச்சிவப்பு நிறங்கொண்ட கங்கையானது அவ்விடம் விட்டுப்பூமியில் புரண்டதோ? அல்லது சமது ஐயனாகிய சிவபெருமான் பரிசுத்தமான சோணநதியையும் நிர்மலமான சடைமுடியிற் றரித்திருந்தாரோ? என்று சொல்லலாயிற்று. எ-று. (சக)

மின்பயின்றமுடியின்மேன்கிளி
யன்புவெள்ளம்விறலடந்தவனோ
யின்பவாரியெழுந்ததுசொல்லென
நின்றசொல்லுமிரம்பயுற்றதே.

(இ-ள்) கிளிதங்கிய திருமுடியில் மேவியிருந்த மெல்லிய கிளியினது அன்பின் பெருக்கம் வீரமடைந்து அப்படியே ஆனந்தமுடையாய்த்தோன்றியதோ? என்று சொல்ல நின்ற சொல் அளவையுங்கடந்து பெருகியது அவ்வுதிரவெள்ளம். எ-று. (ரு௦)

கண்டெஞ்சங்கலங்கியேயின்னுங்
கொண்டகொட்டையெறிந்துழைந்தனங்
தொண்டனேன்செயும்பாவத்தொழிலிஃ
தண்டநாயகயாதென்றறிந்திலேன்.

(இ - ள்) வேடனும் அதைக்கண்டு மனம் கலங்கிக் கையிற் பிடித்தமண் வெட்டியை வீசி எறிந்து மனம் குழைந்து லோகநாயகா! அடிமை செய்த பாவகிர்த்தியமாகிய இதுயாது என்று அறியேன். எ-று. (௫௧)

இந்தருகேதிருமுடிக்கென்கொட்டால்
வந்தபுண்ணில்வழியக்குருதிநீர்
நொந்தேதவெவ்நழுதனனொந்தனம்
வெந்தழிந்திலன்வேறென்றுசெய்யவே.

(இ - ள்) சந்திரனைத்தரித்த திருமுடிக்கு அடியேனுடைய மண்வெட்டுங் கருவியால் நேரிட்ட காயத்திலிருந்து உதிரம் பெருகுவதினால் இன்னது செய்வதென்று அறியாதவனுய்ப்பெருமானுக்கு நோவுண்டாயிற்றே? என்று மனம் வருத்தமுற்று அழுதான். எ-று. (௫௨)

சிந்தையாயயன்றேடியறிகிலா
வெந்தையார்முடிக்கித்துயர்செய்தயா
னுய்ந்திரோவிவ்வுடல்விடுவேனெனப்
புந்தியாயுடைவாளுருவபோக்கினன்.

(இ - ள்) ஊக்கத்தோடு பிரமதேவன் தேடிப்பார்த்தும் கண்டறியாத எனது பெருமானுடைய திருமுடிக்கு இப்படிப்பட்ட துன்பம் செய்த அடியேன் இனி உயிரோடிருக்க மாட்டேன்; இந்தசரீரத்தை மாய்த்துக்கொள் வேனென்று மனந்துணிந்து உடைவாளை உறை நீக்கி எடுத்தான். எ-று. (௫௩)

கைக்கருவிக்கழுத்தினுருவிட
மிக்கதன்னுடல்விட்டுவிமானமேன்
மைக்கணார்சிவலோகமடந்தையர்
தொக்குநின்றுபசாரத்தொழிற்செய.

(இ - ள்) உடைவாளினால் கழுத்தையறுத்துக்கொள்ள, அதனால் தனது உடலை யொழித்துச்சிவகிருபையால் வந்த திவ்விய விமானத்திலேறிக்கொண்டு நீலகண்டன் எழுந்தருளியிருக்கும் சிவலோகத்தில் தேவகன்னிமார்கள் சேர்ந்து நின்றுபணிவிடை செய்ய, எ-று. (௫௪)



நாதனாடிநிழற்சென்றெய்தினன்
பேதமின்னாமவின்கூட்டம்பெறற்கருந்
தேசவிழுகயிலையிற்சேர்ந்தன
வாசவன்முதலோர்கள்வழுத்தவே.

(இ - ள்) சிவபெருமான் திருவடி நிழலைச்சேர்ந்தான்; சிவநாமத்தையே சொல்லும் இனிக்கூட்டங்கள் எல்லாம் பிரமன் முதலானவர்கள் துதிக்கும்படி ஒளியுருவான திருக்கயிலாயத்தை அடைந்தன. எ-று. (௫௫)

கூறுமிற்சிறுகாற்பசுங்கோக்கிளி
வாரிசன்றருசாபமுமாறியே
சீரியன்றதிருவுடல்பெற்றவ
ணேரிலானைநிரம்பத்துதித்ததே.

(இ - ள்) கூர்மையான நகங்களும் சிறிய பாதங்களும் உடைய இராசக் கிளி பிரமதேவனால் நேரிட்ட சாபம் நீங்கிச்சிறப்பு பொருந்திய திவ்விய சரீரம் பெற்று, அவ்விடத்தில் தனக்குத்தானே ஒப்பான சிவபெருமானை துதியாகப் போற்றியது. எ-று. (௫௬)

115800

நன்றுசெய்யினுநன்றலசெய்யினு
மென்றுமின்னடிநேனைத்திறைஞ்சினு
மொன்றுமென்செயலின்றியேயுன்செயல்
பொன்றயங்குசடைமுடிப்புண்ணியா.

(இ - ள்) பொன்போலப்பிரகாசமுள்ள சடாமகுடத்தையுடைய புண்ணிய மூர்த்தியே! நன்மையைச்செய்தாலும் தீமையைச்செய்தாலும் எப்போதும் உனது திருவடிக் கமலங்களை வணங்கினாலும் வணங்காவிட்டாலும் எதுவும் எனது செய்கையாகாமல் எல்லாம் உன் செயலே ஆகும். எ-று. (௫௭)

அரியதாகியறிவுருவாகிமே
லொருவனுகியுறதொழின்மூவராய்ப்
பெருகுமண்டப்பரப்புறுபெற்றியாய்க்
கருணையங்கடலாகியகாரணா.

(இ - ள்) அரும் பொருளாகி, அறிவே வடிவமாகித்தனித்த வஸ்துவாகிப் படைத்தல்-காத்தல்-துடைத்தல் ஆகிய முத்தொழில் கர்த்தாவாகிப்பெரிதான உலகத்தின் தன்மையாய், (அதாவது சராசரமாகி) கருணைக்கடலாகிய காரணப்பொருளே! எ-று. (௫௮)

நிருவிகாரநிருமலநிற்குண
வொருநிரஞ்சனமாகியவத்து
பரவுபாலினெய்போற்பல்லுயிர்க்குமே
மருவிநின்றுமறைந்துறைவள்ளலே.

(இ-ள்) விகாரமில்லாததாயும், மலமில்லாததாயும், குணமில்லாததாயும், நிரஞ்சனமாயும், விளங்குகின்ற வத்துவப்பொருளே! பாலில் நெய் பொருந்தியிருப்பதுபோல் எல்லா உயிர்களுக்குள்ளும் பொருந்தி மறைந்துபொலியும்வள்ளலே! எ-று. (௫௯)

அருட்டிறத்தைத்துதித்தகலாதுநின்
றிருட்குறும்பைச்சிதைத்தங்கிணைமலர்
விரைப்பதத்தினினன்புமென்மேலுறத்
திருக்கண்வைத்தெளிவந்ததென்செப்புகேன்.

(இ-ள்) திருவருளின் தன்மையைப்போற்றி நீங்காமல் நின்றுகொண்டே னது அஞ்ஞானமாகிய பொல்லாங்கைக்கெடுத்து வாசனை மிகுந்த தாமரைமலர்போன்ற இரண்டு பாதங்களுக்கு மேலும் மேலும் அன்பு செய்யும்படி கிருபாநோக்கம் எளிதில் வைத்தக்காத்ததை என்னென்று சொல்லுவேன்! எ-று. (௬௦)

என்றுபற்பலவாழ்த்தெடுத்தேத்தலுங்
கொன்றைவார்சடையம்பலக்கூத்தனு
நின்றுநோக்கிநின்பூசைமகிழ்ந்தன
மொன்றுநல்வரங்கேட்டியென்றோதினான்.

(இ-ள்) இவ்வாறுகப்பலவிதமாய்த்தோத்திரம் பண்ணியபோது, கொன்றைமாலை தரித்த நீண்ட சடாமகுடத்தையுடைய சிவபெருமான் கிருபாநோக்கம் புரிந்து, "நீ செய்த பூசையினால் சந்தோஷமாயினோம்; நன்மையான ஒரு வரத்தைக்கேள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். எ-று. (௬௧)

சிறுமையாயினுஞ்செல்வங்களாயினு
மறுமையிம்மைகளாயினுமற்றினி
யுறுதிநின்றனையன்றொழியாதுறப்
பிறையணிந்தாயருள்செய்யும்பெற்றியே.

(இ-ள்) பிறைசூடிய பெருமானே! அடியேனுக்கு அநுக்கிரகஞ்செய்யும் தன்மையானது வறுமைவரினும், செல்வம்வரினும், இகபரசுகம் வரினும், இனிமேலும் உன்பாதமேதி என்று, தவிராது அடைவதேயாம். எ-று. (௬௨)



மாலயன்மகவான்பெறுவாழ்வுகள்
சாலவெய்திநுந்தன்னியிகழ்ந்திடக்
கோலுநீங்கரகிற்குடியாயினு
நீலகண்டநிற்காட்செயவேண்டுமால்.

(இ-ள்) பிரமனும், மகா விஷ்ணுவும், தேவேந்திரனும் ஆகிய இவர்கள் அடையும் வாழ்வுகள்வலியக்கிடைத்தாலும், அவைகளை இழிவெனத்தள்ளிக்கொடுமையான நரகத்திலிருக்கும்படி நேர்ந்தாலும், கறுத்தகண்டத்தையுடைய கடவுளே! உனக்கு அடிமைத்திறம் செய்யவேண்டும். எ-று. ஆல்-அசை. (௬௩)

என்னநெஞ்சங்குழைந்தங்கிருகரஞ்
சென்னிமேற்குவித்தன்பினிற்செப்பலு
மன்னவாறுநிற்காகவென்றண்ணலு
மின்னுவெண்கயிலைக்கிரிமேவினான்.

(இ-ள்) என்று மனமுருகி இரண்டு கைகளையும் சிரசிற்குவித்து அன்போடு பிரார்த்து கேட்கவும், அப்படியே யுனக்குக்கிடைக்குமென்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளி, ஒளிதங்கியவெண்மையான கைலையங்கிரிக்கு எழுந்தருளினார். எ-று. (௬௪)

பூவின்மாரிபொழிந்தனர்விண்ணுளோர்
தேவதேவன்றிருவருள்போற்றினார்
பாவைபாகனடியைப்பணிகுநர்
யாவரேனுமடிகளென்றேத்துவாம்.

(இ-ள்) தேவர்கள் பூமாரி பொழிந்து சிவபெருமானுடைய திருவருளை வாழ்த்தினார்கள். பார்வதி பங்கன் திருவடிகளைப்பணியப்பட்டவர்கள் எப்படிப்பட்டவர்களாயினும் எம்மைஆளாகக்கொண்டருளும்சுவாமிகளென்றே போற்றுவோம் யாம். எ-று. (௬௫)

கிளித்தலத்திற்கிளிவனமாயதுந்
தளிக்கொளீசர்கிளிவனநாயகர்
களிக்குமித்தக்கலியுகமாமென்
றொளிக்கொணர்த்திருமுனிவற்குரைத்தனன்.

(இ-ள்) பாவநாசப்பதி, கிளிபூசித்தபடியால் கிளிவனமாகவும், இருமையையுடைய ஈசர், கிளிவன நாதராகவும், சந்தோஷிக்கத்தக்க இந்தக்கலியுகத்தில் வழங்கும் பெயர்கள் ஆமென்றுபுகழ்பெற்ற நந்திதேவர் சனற்குமார முனிவருக்குச்சொன்னார். எ-று. (௬௬)

கிளிச்சருக்கம் முற்றிற்று.

# குட்டந்தீர்த்தசருக்கம்.

ஆரணிகங்கைவேணியங்கையிற்பிறைமான்வைத்த
சீரணிநந்திதேவன்சனற்குமாரற்குச்செப்பும்
வாரணிகொங்கைபாகன்மகிழ்பாவகாசத்தன்னிற்
றீர்விலாக்குட்டந்தீர்த்தசெய்தியுங்கூறலுற்றான்.

(இ-ள்) யாவரும் புகழ்ந்து பேசும் பார்வதி பங்கனாகிய சிவபெருமான் எழுந்தருளிருக்கும் பாவகாசமென்னுந்தலத்தில் நீங்குதற்கரிய குட்டம் நீங்கிய சரித்திரத்தை அழகியகங்கையைத்திருமுடியில் தரித்துத்திருக்கரங்களில் மழுவையும் மானையும் வைத்தருளிய பெருமைபொருந்திய நந்திதேவர்சனற்குமார முனிவருக்குச்சொல்லத்தொடங்கினர். எ-று.

வயல்விளிம்புடுத்தசோலைமாங்கனியுடைந்ததீந்தே
னயல்வளர்கழைக்குத்தேங்கியாவிந்தவோடைமேவுங்
கயலுகள்மருதவேலிகழிந்திடுகானஞ்சூழ்முல்லை
செயலொளிர்முத்தமல்குதென்கடற்பாண்டிநாடு.

(இ-ள்) பிரகாசிக்கின்ற முத்துகள் நிறைந்த தென் கடலால் சூழப்பட்ட பாண்டி நாடானது கழனிகளின் கரை சேர்ந்த சோலையிலுள்ள மாங்கனிகள் விழுந்து உடைந்து பெருக்கிய மதுரத்தேன் பக்கத்தில் வளரும் கரும்பின்மேற் பாய்ந்து தாமரை ஓடையில் தங்கும் மீன்கள் குதிக்கத்தக்க மருத நிலமும் வேலியில்லாத காடுகள் நெருங்கிய முல்லை நிலமும் உடையன. எ-று. (௨)

வாளைகடாவும்பச்சைமணிநிறந்தழைத்த
பாளையங்கமுகிலேறிப்பவளங்கள்படருநாடு
வேளையுமிகழ்ந்ததெய்வமேனியினழகுவாய்ந்த
காளையர்பதினாறாண்டின்மகப்பெறுங்கன்னிநாடு.

(இ-ள்) மன்மதனையுங்குறைவாகச்செய்யும் திவ்வியசரீரத்தின் அழகுள்ள வாலிபர்கள் பதினாறுவயதில் புத்திரரைப்பெற்று வாழும்பாண்டிநாடு வாளைமீன்கள் பாயும் பச்சை இரத்தினத்தின் நிறந்தங்கிய பாளையையுடைய அழகிய பாக்குமரங்களில் இளங்கொடிகள் ஏறிப்படரும் நாடாகும். எ-று. (௩)



தண்கதிர்வாளிருளேகசத்திருண்மாய்க்குந்தெய்வ
வொண்கலாநிதிக்குலத்திலுற்பவித்தெழுந்தகொங்கை
கண்கவர்வனப்புவாய்ந்தகயற்கணாட்பெறுந்தவத்தோன்
பண்மிகுதமிழ்வளர்க்கும்பாண்டிநாடாளுங்கோமான்.

(இ-ள்) குளிர்ச்சி பொருந்திய கிரணங்களாகிய வாளாயுதத்தால் [illegible]ரகத்தினிருளைப்போக்கும் தெய்வத்தன்மையுள்ள சந்திரகுலத்திலுதித்துப்பருத்த தனங்களையுடைய கண்களைக்கவரத்தக்க அழகு நிறைந்தமீனாட்சிதேவியைப் பெண்ணாகப்பெற்ற தவத்தோன் இசை மிகுந்த தமிழை விருத்தி செய்யும் திருப்பாண்டி நாட்டையாளும் அரசன். எ-று. (௪)

குறைகெடக்கலினப்பாய்மாக்குஞ்சரமணியின்குப்பைத்
திறைதந்துகொடுகைமேலாற்றெவ்வர்களுணங்குமுன்றி
னிறைவுறுவெற்றித்தோகைநின்றசைந்தாடுமெயிற்றுச்
சிறைதருகுடிகளாக்குறுநிலத்திறைவருண்டால்.

(இ-ள்) பகையரசர்கள் தங்கள் குறை நீங்கும்படி கடிவாளம் பூண்டு பாய்ந்து செல்லும் குதிரைகளையும் யானைகளையும் இரத்தினக்குவியல்களையும் கப்பமாகக்கொண்டு கையாகிய அணைமேல் தலை சாய்ந்து வாட்டமுற்றிருக்கும் முற்றத்தையும், வானத்தில் நிறைந்திருக்கும் ஜெயக்கொடிகள் நிலையாக இருந்து ஆடுகின்ற மதிலையுமுடைய அரசனாற் காக்கப்படுங்குடிகள் போல் கீழ்ப்பட்டு நடக்கும் சிற்றரசர்கள் இருந்தார்கள். எ-று. (௫)

அக்குறுநிலமன்னர்க்குளறப்பெருங்கான்சூழ்முல்லைத்
திக்குறுதென்கடற்பாற்றிறலுறுமறக்குலத்துண்
மிக்குறுமுதன்மைபூண்டுவிளங்கிடுஞ்சழக்கனென்போன்
செக்குறுகலையைப்போலச்சுழன்றுளேதிரிந்தநெஞ்சன்.

(இ-ள்) அந்தக்குறுநிலமன்னர்களுக்குள் மிகவும் பெரிய காடு சூழ்ந்த முல்லை அடுத்த திக்கில் தென் திசைக்கடற்கரையில் திறமையைக்காட்டும் மறவர் குலத்தில் மிகவும் முதன்மை பூண்டு விளங்குஞ் சழக்கனென்னும் பெயரையுடையோன் செக்கிற் பொருந்திய சுற்றுமரத்தைப்போலத்திருகுந்தசித்த முள்ளவன். எ-று. (௬)

ஆறலைத்துண்போர்கூட்டத்தருள்புரிந்தரசுசெய்வோன்
வேறொருநிலத்திற்சென்றுவினைபொருள்கவர்ந்திடுவான்
மாறுடைவஞ்சகன்றன்னல்வழிவருவோரைக்கொன்று
ஆறுணாத்தவர்பாலுள்ளபொருளெலாஞ்சூறைகொள்வோன்.

(இ - ள்) வழி பறித்தன்னுங்கூட்டத்தார்களுக்குத்தயவு செய்து தலைமை நடாத்துவோன்; அன்னியருடைய பயிர் நிலத்திற்குப்போய் அதில் விளைந்திருக்கும் தானியங்களைக்களவு செய்யுங் கொடியோன்; விரோதத்தைத்தரும் வஞ்சனையினால் வழியில் வருபவர்களைக்கொன்று பழிச்சொல் உரைத்து அவர் இடத்துள்ள பொருள்களையெல்லாம் கொள்ளை கொள்வோன்; எ-று. (௭)

கூக்குரல்கேட்டுநெஞ்சங்குலவியவுவகைபூப்பான்
வாய்க்கவேபுள்விலங்குமயானமாம்வயிறுகொண்டோ
னேக்குறுமயல்மின்னாரைநோக்கியேயாசையின்பக்
றேக்கவேகளவின்வவ்விவலிஇனிற்சேருங்கையன்.

(இ - ள்) கோ என்று அழும் ஓசையைக்கேட்டு மனதில் மிகுந்த சந்தோஷங்கொள்வோன்; பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் மயானம் என்னுங்கூடியான வயிறுபடைத்தன்; அழகுள்ள அன்னிய மாதர்களைப்பார்த்துச் சிற்றின்ப விச்சை மிகுந்து கள்ளத்தனமாய்ப்பற்றி அவர்களோடு பலவந்தமாய்ப்புணரும் இழோன்; எ-று. (௮)

பாவமேதிரண்டுதோன்றும்படிவத்தோனிடும்பைகொண்டு
காவதோருதவிசெய்யக்கனவிலுமறிந்திலாதா
னாவில்வன்சொல்லேயுள்ளானவிற்றிடானினிச்சொல்லேதான்
முவியேமதுவருந்துந்தறுகண்ணனிரக்கமில்லோன்.

(இ - ள்) பாவங்கள் எல்லாஞ்சேர்ந்துதோன்றியவுருவத்தையுடையோன்; தரித்திரர்களுக்குத்தன்னால் கூடிய வுதவியைச்செய்யச்சொற்பனத்திலும் நினையாதோன்; நாவில் கொடுஞ்சொல்லேயுள்ளோன்; இனியசொல் ஒருபோதும் சொல்லாதோன்; ஆசையோடு கள் குடிக்கும்கொடியோன்; கருணையில்லாதோன்; எ-று. (௯)

முடிவிலாவெய்யசெய்கைமூர்க்கரின்மிக்கமூர்க்கன்
படிறுகள்வினையும்வாய்யன்பாவிதன்பேர்சொன்னோருங்
கொடியதாகாகிச்சேர்வர்கொன்றையார்சடிலக்கூத்த
னடியவர்தம்பாற்செய்தநளவில்பாதகங்களாமால்.

(இ - ள்) முடிவில்லாத கொடுஞ்செய்கையே செய்யும் கொடியர்களில் மிகுந்த கொடியோன்; பொய்யும் கள்ளும் உண்டாகும் வாயோன். இப்பாதகன் பெயரைச் சொன்னவர்களும் கொடுமையான நரகத்தையடைவார்கள். கொன்றைப்பூமாலை யணிந்த நீண்ட சடைமுடிகொண்ட சிவபெருமானுடைய தொண்டர்களுக்குச்செய்த பாதகங்கள் எண்ணிறந்தனவாம். எ-று. (௰)



இப்பிறப்பினிற்செய்பாவமிக்குறிலிம்மைக்கண்ணே
தப்பிலாதவைதாமுன்சத்தியநீதியாமால்
மெய்ப்படுபெருநோய்கொண்டுவிளங்குகால்கைகுறைந்து
செப்புறுதிருமிதோல்நந்திமிருடலெங்குமானன்.

(இ - ள்) இந்தப்பிறப்பில் ஒருவன் செய்த பாவம் மிகுந்திருந்தால் இந்தப் பிறப்பிலேயே அதன் பயன் தப்பாமல் அவனையடையும் என்னும் நீதி சத்தியமே; ஆகையால் சரீரத்தில் பெருவியாதி தோன்றி, விளங்கும் கால்களும் கைகளும் குறைந்துவிழுந்து, சொல்லும் புழுக்கள் காண, முழுதும் திமிர் உடலானன். எ-று. (௧௧)

இரங்கியேமுன்செய்பாவமெண்ணியேயிளைத்துநைந்து
கரங்களைநோக்கித்தேயுங்கால்களைநோக்கியாற்றி
யுறங்கொளுநல்லோர்பக்கலிலிருந்துயரம்போக்க
மரங்கள்போலுடல்கொண்டோர்க்குமருந்துண்டோசொல்லுமென்றான்.

(இ - ள்) அழுகிய கைகளைப்பார்த்தும் குறையும் கால்களைப்பார்த்தும் மனம்வருந்தி முன் செய்த பாவத்தையெண்ணித்துயரடைந்து, கடல்போலும் ஞானமுடைய பெரியோரிடத்தில் தெரிவித்து, இந்தத்துன்பத்தை நீக்கக்கருதி, மரங்கள் போல் திமிருடல் கொண்டவர்களுக்கும் மருந்து உண்டோ? சொல்லுங்கள், என்று கேட்டான். எ-று. (௧௨)

இவ்வண்ணங்கூறக்கேட்டவியல்வண்ணங்கற்றுணர்ந்தோர்
செய்வண்ணமில்லாய்நீக்குந்திருமருந்தொன்றுகேளாய்
மைவண்ணநெல்லிபோலக்காண்குவைகரிக்கோடு
மெய்வண்ணமாறிநல்லமேனியாங்கைகைபாடல்.

(இ - ள்) இவ்விதம் சொல்லக்கேட்டவுடனே அமான வழியில் சாஸ்திரங்கள் கற்றுத்தேர்ந்த பெரியோர் "செய்யுங்காரியம் இல்லாதவனே! உனது வியாதியைப்போக்கும் நல்ல மருந்து ஒன்று சொல்லுகிறேன். அதன் பயனை உள்ளங்கை நெல்லிக்கனிபோலக்காண்பாய். கரிகிரிக்குப்போய்த்திருக்குளத்தில் ஸ்நானஞ்செய்தால் உன் சரீரம் திமிர் நீங்கப்பெற்றுத்திவ்விய தேகமாகும். எ-று. (௧௩)

ஈதலால்மருந்துவேறிங்கில்லையென்றுரைத்தபோதும்
பேதுறுநெஞ்சன்பெற்றபிள்ளையைவிளித்து
பாதகவினைகடப்பாவியென்காவிட்டுப்
போதுவனென்றேவிட்டுப்புறப்பட்டான்போருள்ளைக்கொண்டு.

(இ - ள்) இது அல்லாமல் வேறேமருந்து இவ்வுலகிலில்லை," என்று பெரியோர் சொல்லவும், வருத்தம் மனதுடையோனாகி தான்பெற்ற மகனை வீட்டிலிருக்கச்செய்து "பாவியாகிய யான் எனது பாதக வினைகள் நீங்கும்படி திருக்காசிக்குப்போவேன்" என்று போதுமான திரவியம் எடுத்துக்கொண்டுதனது ஊரை விட்டுப்புறப்பட்டான். எ-று. (கச)

நால்வர்கடுணைவராகநாடியேமெல்லமெல்லக்
கால்களினடந்துசென்றுகமழ்நறுந்தீர்த்தமாடி
மேலுறுதலங்கடோறுமேவியவாறிறைஞ்சிச்
சேலமாநகரில்வந்தான்சிவனருட்டுறையென்றோர்ந்து,

(இ - ள்) நால்வர்களே நல்ல துணைவர்களென்று கருதி, மெல்ல மெல்லக் கால்களால் நடந்து போய், வாசனை மிகுந்த பல தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, மேன்மை மிக்க ஒவ்வொரு தலத்திலும் தக்கபடி வணங்கிச் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடமென்று அறிந்து, சேலமா நகருக்கு வந்தான். எ-று.

வந்தவன்பரமன்கோயில்வாயலினயலினோர்பா
ணெந்திடுகால்கள்முன்னினதிகமாய்நோவுண்டாகச்
சிந்தையிலரந்தையுளக்கங்குலேதீருமட்டு
மந்திவண்ணவன்றஞ்சமென்றமர்ந்திருந்தானங்கண்.

(இ - ள்) அப்படி வந்தவனுக்குச்சிவபெருமான் திருக்கோயிலின் கோபுர வாயிலுக்கருகில் ஓரிடத்தில் நோவுங் கால்கள் முன்னிலும் அதிகமாய் நொந்ததினால் மிகவும் மனம் வருந்தி, இராப்பொழுது கழியும் வரையில் "சிவபிரானே! அடைக்கலம்" என்று அவ்விடத்தில் தங்கியிருந்தான். எ-று. (கசு)

வாவியினூறுகின்றமனுசரணத்தண்ணீரா
யாவியேகுளிரத்தாபமகன்றிடவருந்தினானற்
பாவவெவ்வினைகள்யாவும்பதைத்துமெய்குலைகுலைந்து
போவதுதுணிந்ததன்னைப்பொருந்தினபற்றுவிட்டே.

(இ - ள்) மூவகைத்தாபங்களும் நீங்கி ஆத்துமா சிதளானந்தமடைய மனுசரணத்திருக்குளத்தில் ஊறுகின்ற தீர்த்தத்தை உட்கொண்ட தினால் அவனது கொடிய பாவவினைகளெல்லாம் பயந்து, சரீர நடுக்கமுற்று, அவனைப்பற்றிய இச்சையை விட்டு ஓடிப்போகத்தீர்மானித்தன. எ-று. (கஎ)



மண்ணிடைவேர்கள்கீழ்ப்படர்ந்துமேல்வானினேங்குந்
தண்ணறுங்கொடியுவேரின்மூளறுந்தன்மையேபோல்
உண்ணிறைபாவமென்னும்வேர்கெடவுடலமெங்கும்
புண்ணுறுவேர்படர்ந்தநோவுமேபொலிவழிந்த.

(இ - ள்) பூமியில்வேர் ஊன்றிப்படர்ந்துஉயர்ந்த ஆகாயத்தை அளாவிய குளிர்ச்சி மிக்க கொடிகளினுடையவேரின் அடி அறுந்தன்மைபோல், உள்ளத்தில் நிறைந்த பாவம் என்னுப்பட்ட வேர் அற்றுப்போனதினால் உடம்பெங்கும் உள்ள புண்ணில் மிக்க உதிரம் படர்ந்த வியாதியும் வாட்டமுற்றது. எ-று.

புண்ணிடையொழுகுநீரும்புலர்ந்ததுமுகமுங்வாட
உண்ணிறைகவலைத்துன்பமொருவழித்தனத்தவுற்ற
கண்ணுறுமுடலம்வெந்துகருகுறக்கதுவாநின்ற
வெண்ணுறுதீயுமாய்வுற்றிடர்தருதிமிருமாய்ந்த.

(இ - ள்) புண்ணில் வடியும் இரத்தமும் வாடியது. முகமும் வாட்டமடைய உள்ளத்தில் நிறைந்த சஞ்சலங்கள் ஒருபக்கம் ஒழிந்துபோயின. மதிக்கும் படியான சரீரம் வெந்து கருகிப்போகும்படி பற்றிய பெருந்தீயும் மாண்டு இடர் செய்யும் திமிர்வாதமும் ஒழிந்து போயிற்று. (கஅ)

பொங்கியவிருள்புலர்ந்துவிடியலும்போதலுன்று
னங்கது கண்டுநெஞ்சத்ததிசயமிகவேயெய்திக்
கங்கையென்பதுமிந்நீரோகாசியென்பதுமிவ்வூரோ
வெங்குளவிதனைப்போலுந்தலமெனவியம்பிப்பின்னும்.

(இ - ள்) மிகுந்த இருள் நீங்கிப்பொழுது விடிந்தவுடன் புறப்பட்டுப்போகத்தொலையாதவனாகித்தன்சவுக்கியத்தைப்பார்த்து மனதில் அதிக ஆச்சரியமடைந்து, கங்கையென்று சொல்வது இந்தத்தீர்த்தமோ? காசியென்று கூறுவது இந்தப்பதியோ? இதைப்போலும் தலம் இவ்வுலகில் எங்கிருக்கிறது? என்று சொல்லிப்பின்னும், எ-று. (ககூ)

மைப்படுகண்டர்கோயில்வலஞ்செய்துதெண்டனிட்[illegible]
யெப்படிவருமோவின்றுமெய்ப்படி[illegible]
செப்புதற்கரிதாமென்றுதிருக்கு[illegible]
கைப்படுநெல்லிபோலக்கண்டனன்றலைத்திவ்விறு.

(இ - ள்) நீலகண்டராகுஞ் சிவபெருமானது திருக்கோயிலைச்சுற்றி வந்து தெண்டனிட்டு எவ்வாறு வருமோ? இன்னும் எப்படியாகுமோ? அது சொல்லு தற்கரிதானதென்று திருவருளைத் துதித்து, இத்தலத்தின் பெருமையை உள்ளங் கை நெல்லிக்கனிபோலக்கண்டான். எ-று. (௨௧)

மண்டலவாசஞ்செய்தோர்மண்டலங்கொள்வேனிந்தீ
ரெண்டிசையிடத்துமோரூர்க்கேகிடேனிவ்வூர்நீங்கில்
தெண்டிரைமணிமுத்தாற்றின்மூழ்கியேசிவனுமிங்கே
யுண்டெனவிடியற்பானுவுதயத்தேயுழக்குண்பேனீர்.

(இ - ள்) இத்தலத்தில் ஒரு மண்டலம் வாசஞ்செய்து இத்தீர்த்தத்தை ஒரு மண்டலம் உட்கொள்வேன்; இப்பதியைவிட்டு எட்டுத்திசையிலுள்ள வேறு எத்தலத்துக்கும் போகேன்; இவ்வூர் நீக்க மற்றுத் தெண்ணீரையுடைய மணிமுத் தாற்றின்கண் மூழ்கிச்சிவபெருமான் இங்குண்டென்று நிச்சயித்துச் சூரியவுதய காலத்தில் அத்தீர்த்தம் உழக்கு அளவுண்பேன். எ-று. (௨௨)

வந்திடுதினங்கள்செல்லமனுசரணத்தண்ணீரைச்
சிந்தையின்மகிழ்ச்சிகூர்ந்துகொள்ளத்தெள்ளமுதமாகி
மூத்துறுநோயுநீங்கிமுன்னையவடிவந்தாங்கிப்
புத்தியாய்ப்புடங்கள்வைத்தேயெடுத்திடும்பசும்பொன்போன்றான்.

(இ - ள்) இவ்விதமாக நாள்கள் செல்ல மனுசரணத்தீர்த்தத்தை மனதில் சந்தோஷம் மிகுந்து உட்கொண்டுவர, அது சிறந்த அமுதமாகி, அதனால்முட்ட வியாதி தீர்ந்து, பழைய வடிவம் அடைந்து புத்தியாய்ப்பலபுடங்கள் வைத்து எடுத்த பசும்பொன்னுக்கு ஒப்பானான். எ-று. (௨௩)

வணங்குவன்றுதிப்பன்பல்காலமேற்றிழந்துரைப்பன்முன்னைக்
குணங்களைப்பாவநாசமென்னவேகூறுநாம
மிணங்குமித்தலத்துக்கென்பனென்னைப்போற்றலைபுழுத்த
கணங்களுய்த்திரிந்தபாவந்தொலைத்தவருண்டோவென்பான்.

(இ - ள்) பலதரம் பணிவான்; போற்றுவான்; தன் பழைய குணங்களை இகழ்ந்து பேசுவான்; பாவநாசமென்று சொல்லும் பெயர் இத்தத்தலத்துக்குப் பொருந்துமென்று சொல்லுவான்; "புழுத்தலையையுடையனாயெனை அலைந்த பாவத்தை என்னைப்போல் நீத்துக்கொண்டவருண்டோ?" என்று சொல் வான். எ-று. (௨௪)



இன்னனகூறியீசன்றிருவருளெண்ணிப்போற்றிப்
பொன்னருசிகரக்கோயின்மண்டபம்புதுமையாகத்
தன்னுறுதொழிலிவிட்டும்பொருளெலாந்தருவித்தன்பான்
மன்னியபரமனுக்குத்திருப்பணிமதிலுஞ்செய்தான்.

(இ - ள்) இவ்வாறு சொல்லிப்பரமசிவத்தின் திருவருளை நினைத்துத்துதித் துப்பொன்போல் விளங்கும் சிகரத்தையுடைய ஆலயத்துக்குப்புதிதாக முன் மண்டபம்-மதில் ஆகிய திருப்பணிகள் முன்பு கொலைத்தொழிலால் சம்பாதித்த திரவிய முழுவதும் வரவழைத்து அன்போடு பொருந்திய சிவபெருமானிடத்தில் வைத்திருக்கும் அன்பினால் செய்து முடித்தான். எ-று. (௨௫)

தினந்தொறுந்தனதுபூசைசெய்திடவேண்டுமென்ன
நினைந்தனனரன்கோயிற்குவடபுறம்கொடியபூமி
யனைத்தனையகழ்ந்தகனவிலையெனத்தானேகொண்டு
கனந்தருகல்லுங்கட்டுடைத்திறன்கறைக்கண்டற்கே.

(இ - ள்) நாள்தோறும் தன் பெயரால் பூசை நடத்தவேண்டுமென்று எண்ணிக்கொண்டு சிவாலயத்துக்கு வடபுறத்தில் இருந்த திரவியத்தைக்கொ டுத்து விலைக்கு வாங்கித்திடமான கல்வெட்டுநாட்டிச்சிவபெருமான் பூசைக்கு ஏற்பாடு செய்தான். எ-று. (௨௬)

பருவமோர்பத்திருந்தபரமனுக்காடல்பாடல்
விரிவுறச்செய்துபின்னர்விதிமுறையரசுசெய்து
புரிகுவன்றருமமென்னப்பேரியின்றன்னகர்க்குத்
திருவளர்பாவநாசந்தீர்த்தான்சிந்தைசெய்தே.

(இ - ள்) பத்து வருடகாலம் அவ்விடத்திருந்து சிவபெருமானுக்கு ஆடல் பாடல் சிறப்பாக நடத்திப் பின்பு நீதியின்படி அரசாட்சி செய்துதருமஞ்செய் வேனென்று செல்வம் ஒங்கும்சென்புரத்தில் விளங்கு சிவபெருமான் திருவடி களைத்தியானித்துத்தனது நகரத்துக்குப் போயினான். எ-று. (௨௭)

வெங்கொலைகளவுதீமைவினைதவிர்மைக்கண்ணோ
யங்கவனாட்டினுள்ளோர்செய்கொள்ளோராவில்லார்கள்
பொங்குமுற்றுகையிவிட்டுப்புடத்தினிருந்திக்கண்ட
தங்கமேபோலமின்னுஞ்சமுக்கன்றன்னுடலைக்கண்டார்.

(இ-ள்) களவும்-வெவ்விய கொலையும் இப்பிறப்பிலேயே துன்பத்தைத் தருதலினால் அனந்த தேசத்திலுள்ளவர்களில் நோயாளிகளுக்குக்கணக்கில்லை; புடம் வைத்துக்குகையில்விட்டு உருக்கிய தங்கத்தைப்போல் விளங்கும் சமுக்கனுடைய சரீரத்தை அவர்கள் பார்த்தார்கள். எ-று. (உஅ)

எத்தவஞ்செய்தானென்பாரீசனார்வரமோவென்பர்
சித்தர்மூலிகையளித்தசித்தனுமிவனோவென்பர்
கைத்தலக்கழைவில்வேள்போற்கட்டழகுடையனானன்
வைத்தகைக்கானகங்கள்வளர்ந்ததெவ்வாறோவென்பார்.

(இ-ள்) இவன் என்ன தவம் செய்தான்? என்று சிலர் சொல்வார்கள்; சிவபெருமான் அருளிய வரமோ? என்று சிலர் சொல்வார்கள்; சித்தருடைய மூலிகையைப்பெற்ற சித்தன் இவனோ? என்று சிலர் சொல்வார்கள்; கரும்பு வில்லைக்கையில் தரிக்கும் மன்மதனைப்போல் சிறந்த அழகுடையவனானான்; கைகளும், கால்களும், நகங்களும் வளர்ந்த காரணம் யாது? என்று சிலர் சொல்வார்கள். எ-று. (உகூ)

சமுக்கனுஞ்சொல்லக்கேட்டதொன்றினூற்றவிராகோயா
விழுக்குறுமேனிகொண்டாரியாவரும்விரைந்துவந்தே
வழக்குறுபாவநாசவாசத்தான்மணிமுத்தாற்றின்
முழுக்கினால்வாவிநீரால்மூவகையாநோய்தீர்த்தார்.

(இ-ள்) எவ்விதத்தினாலும் தீராத வியாதியினால் வருந்தும் சரீரமுடையோர் எல்லாரும் சமுக்கன் சொன்னவைகளைக்கேட்டுத்துரிதமாகப்புறப்பட்டு வந்து பாவநாசமென்னும் தலத்தில்வாசஞ்செய்ததினாலும், திருமணிமுத்தாநதியில் ஸ்நானம் செய்ததினாலும், மற்றுசாண [illegible] கொண்டதினாலும், மூன்று வகையான பிணியினின்று நீங்கினார்கள். எ-று. (ங0)

குட்டந்தீர்த்த சருக்கம் முற்றிற்று.

# பரிச்சித்துச்சருக்கம்.

பண்டையிற்காதையொன்றுபகர்க்கொலைபாவந்தீர்த்த
துண்டொருபாவநாசத்தலஞ்செய்தியுண்மையென்னக்
கண்டிகைநிரைக்குடிக்கைப்பிரம்பெனக்குநந்தி
கொண்டமாதவச்சனற்குமாரற்குக்கூறலுற்றான்.

(இ-ள்) பாவநாசமென்னும் தலவிசேடத்தால் பூர்வகாலத்தில் பகைவரைவதைத்த பாவம்நீங்கியசரித்திரம் ஒன்றுண்டு-என்பது உண்மையே-என்று ருத்திராக்ஷமாலையும், சந்திரனையும் தரித்துக்கையில் பிரம்பையேந்தும் நந்திதேவர் மகா தவத்தையுடைய சனற்குமாரமுனிவருக்குச்சொன்னார். எ-று. (க)

ஒப்பொருபவரில்லையென்றுபுகன்றெழுபதாகையாட
வஞ்சியனைபந்துப்பாவைகைக்கொண்டுமருங்குதாங்கத்
திருவிளையாடலிஞ்சிச்சினகரமாடவீதி
குருமணிவெயிலெறிக்குங்கோகன்னமென்னுமூதூர்.

(இ-ள்) தன்னையொப்பவர் இல்லையென்று சொல்லி எழுகின்ற கொடியாடவும், பாவைபோன்ற பெண்கள்வரிந்து கட்டியபந்துகளைக் கையிற்கொண்டு எவ்விடத்தும் விளையாடவும், இலட்சுமிவிளையாடும்படியான மதிலால் சூழப்பட்ட கோவில்களிலும், மாடவீதிகளிலும், சிறந்த இரத்தினங்கள் சூரிய காந்தி வீசும்படியான கோகர்ணமென்னும் பழமையான நகரத்தில், எ-று. (உ)

ஓரிடத்தடங்கன்றேராமமுதிற்றொலியினாலும்
நீடியலோலையொப்பாயிரப்பினால்வருவோர்தம்மை
யாடியுங்கொடிகளென்னுங்கைகளாலழைத்தல்போலும்
மாடமாளிகைகளும்மூதூர்வளங்கெழுவணிகர்வீதி.

(இ-ள்) மாடமாளிகைகளால் சூழப்பட்ட கோகர்ண நகரத்தில் செல்வம் மிக்க வைசிய வீதிகள் எண்ணத்தக்க விசாலமான கண்களையுடைய மாதர் என்னும் அமுதத்தினாலும் முழக்கத்தினாலும் பெரிய கடலுக்கு ஒப்பாகி, வறுமையால் வருந்தி வருகின்றவர்களைக்காற்றினால் அசையா நின்ற அழகிய கொடிச்சீலைகள் என்னும் கைகளால் வாருங்கள்! வாருங்கள்! என்று அழைப்பதை ஒக்கும். எ-று. (ங)

மலையிட்டமுலைபடைத்தார்வடியிட்டதேனின்சொல்லார்
சிலையிட்டநுதலார்தேய்ந்தசிற்றிடைக்குவமைகாணார்
நிலையிட்டகற்பினுலேநெடுந்திருநிக்காதன்பால்
விலையிட்டமணிகள்மாறுமங்காடிவீதியாமால்.

(இ-ள்) மலைக்கு ஒப்பான தனமுடையவரும், வடித்த தேன் போலும் இனிய சொல்லுடையவரும், வில்லுக்கு ஒப்பான புருவமுடையவரும், மெலிந்த சிறிய இடைக்கு ஒப்பில்லாதவருமாகிய அந்நகரத்து மாதர்கள் நிலைபெற்ற கற்புடன் மிக்க செல்வம் படைத்த ஆடவருடன் விலைபேசிப் பண்டமாற்றாக மாணிக்கங்களை மாறும் கடைத்தெருக்கள் உள்ளனவாம். (௪)

அக்குடிக்கெல்லாஞ்சார்பாமருமணிநூல்வல்லோன்
கைக்கொடுநிறுத்துரைத்துக்காணிபூதியமாய்க்கொள்வோன்
பொய்க்குணமின்றிநல்லோர்சங்கமேபுரிந்தொழுக்க
மெய்க்குணவியற்கையாளன்விளங்குபேர்பரிச்சித்தென்பான்.

(இ-ள்) அந்த வணிகர்குலத்திற்கெல்லாம் துணையாய் அருமையான இரத்தின சோதனை நூலில் தேர்ந்தவனும், கையினால் சரிசெய்து நிறுத்து உரைகல்லில் உரைத்துக் காணி அளவாக லாபம் சம்பாதிப்போனும், பொய்க்குணமில்லாதவனுகிப் பெரியோரோடு சேர்க்கை செய்யும் தன்மையுள்ள மெய்க்குணத்தை இயற்கையாய் உடையோனும், ஆகிய பரிச்சித்து என்னும் சிறந்த பெயருள்ளவன், எ-று. (௫)

வணிகரிற்றலைமைபூண்டமேதினிக்கிழவனென்னத்
தணிவறமணியும்பொன்னுந்தாளாண்மையாலேயீட்டி
யிணைகொளுந்தோழனென்போன்களத்திரியெனும்பேரா
னணைதருசிறப்புக்கல்விகுலஞ்செல்வமொவ்வினான்.

(இ-ள்) வணிகருக்குள் தலைவனுகிக் குபேரனைப்போல் குறைவில்லாத இரத்தினங்களையும்-பொன்னையும்-தன்முயற்சியால் சம்பாதித்தான்; அவனுக்கு நிகராக மதிக்கப்படும் சிநேகிதனென்பவன் களத்திரி என்னும் பெயரையுடையவன்; இவன் அடையத்தக்க சிறப்பு-கல்வி-குலம்-செல்வங்களில் அவனுக்குச் சமானமானவன். எ-று. (௬)

சரகங்கள்கூட்டிவைத்ததண்கமழ்தேனிருலை
யொருவன்வந்தடலோன்கொள்ளிகொண்டுகெட்டோட்டிக்கொள்வன்
றரைமிசைவிளைப்பார்தேடுந்தனங்களாற்றுனிலவார்க்கே
காவலர்கொடுங்கோன்மன்னராதியர்கருதிக்கொள்வர்.



(இ-ள்) தேனீக்கள் சேர்த்துவைத்த குளிர்ச்சியான வாசனையுள்ள தேன் கூட்டை அடலோனுகிய ஒருவன் கொள்ளிக்கட்டையைக்கொண்டு சுட்டு ஈக்களையோட்டி அதைக் கைக்கொள்வான்; அதுபோல, லோபிகள்தேடும் திரவியத்தைக் கள்ளர்கள்-கொடுங்கோல் அரசர்கள் முதலானவர்கள் துன்பத்தைத் தொடுத்துப் பறித்துக்கொள்வார்கள். எ-று. (௭)

இரவுற்றுவந்தோர்க்கண்கைவிரித்திலையிலையென்ப
ரொருகுத்துக்காயிரம்பொன்றுதவுவாரலப்புக்காற்றூர்
குருவுக்குந்தாய்தந்தைக்குங்கொடுத்திடார்கிளையும்பேணூர்
திருவுந்துவிணையுமாய்ந்தசெப்பினன்கண்ணிற்கண்டோர்.

(இ-ள்) தம்மிடம் யாசித்துப் பிச்சை வேண்டி வந்த ஏழைகளுக்குக் கையை அசைத்து இப்போது இல்லை இல்லை என்பவர்களும், கள்ளர்களைக் குத்து ஒன்றுக்கு வருத்தம் பொறாமல் குப்பிட்டு ஆயிரம் பொன் கொடுப்பவர்களும், குருவுக்கும்-தாய் தந்தையர்க்கும் கொடாதவர்களும், சுற்றத்தாரையும் பாதுகாவாதவர்களும், செல்வம் படைத்த விருப்பமற்றுப் போனசங்கதிகளை அவ்விருவரும் பிரத்தியட்சமாய்ப் பார்த்தார்கள். எ-று. (௮)

இருமையாமைகண்டாரறிவினுற்றெளிந்தேயாக்கை
யுருதியாமையுமுன்னெண்ணித்துன்னாடித்
தருமியானவனுமொன்றுசமையச்செய்தா
திருமம்புகழ்க்காவற்பெரும்விரோர்க்கைகக்கசெய்வோன்.

(இ-ள்) செல்வம் நிலையாமையைக்கண்டு ஆராய்ந்து, தங்கள் அறிவினால் தெளிந்து, சரீரம் நிலையாயிராது; மேலும் பிறந்தநாளுடையது; என்று ஆழமாக ஆராய்ந்து, பெரியபூமியில் உள்ளவர்கள் புகழ்ந்து பேசக்கூடியதான ஒரு தர்மத்தைச் செய்ய பொன் கொடுத்து, மக்களுக்கு இஷ்டமான நந்தனவனமொன்று ஏற்படுத்தி வைத்தார்கள். எ-று. (௯)

முல்லைபைந்தினைவாள்கொந்தளமுகுடக்கவிழ்ந்தரணீர
மல்லிகைநிறுமிழ்த்தம்புன்னைகளுக்கொழுந்துடனருவெலி
யல்லியந்தோட்டவைம்புரிகொன்றையாதிப்புதலும்நுண்பகங்கள்
பல்வகைமலர்கந்தனந்திலைவேள்படைக்கொட்டிகைமயேபோலும்.

(இ-ள்) முல்லையும், பசுமையான தினையும், மல்லிகை வர்க்கமாம் செய்வந்தினால் முகமலரும் அலரியும், காஞ்சிக்கிளையையும், வாசனையுள்ள மகிழும், புன்னையும், மருக்கொழுந்தும், வெட்டிவேரும், அழகுள்ள அசோகிறுகளையுடைய கர்ணிகாரவிருட்சமும், கொன்றையும், மண்டி மொய்க்கின்ற சண்பகமும், இவ்வண்ணம் பலவகை மலர்களும் நிறைந்த அந்த நந்தனவனம் கரும்பு வில்லையுடைய மன்மதனுடைய ஆயுத சாலையைப்போலிருந்தது. எ-று. (௰)

காலையின்மாலைப்பொழுதினிலிருகாற்கூமழுநந்தாவனத்தெய்தி
வேலைகள்செய்வாரவரவர்க்கேற்றபணிகளைவிவரமாயுரைப்ப
ராலமேயுண்டாற்கருச்சனைசெய்யவணிமலர்நிறைவதுகண்டார்
சீலமாயிவ்வாறொழுகுநாளிலோர்பகற்செய்திறமுரைப்பாம்.

(இ - ள்) காலைமாலையாகிய இரண்டு வேளைகளிலும் வாசனை வீசுகின்ற நந்தனவனத்துக்கு வந்து வேலை செய்யும்படியான ஆட்களுக்குத்தகுந்த செய்தொழிலை விவரமாய் எடுத்துச்சொல்வார்கள்; ஆலகால விஷத்தையுண்டருளிய சிவபெருமானுக்கு அருச்சனை செய்ய அழகிய புஷ்பங்கள் பூரணமாயிருப்பதைப்பார்த்தார்கள். பத்தியாய் இவ்விதம் நடத்தி வந்த நாட்களில் ஒரு நாள் செய்த காரியத்தைச்சொல்வோம். எ-று. (கக)

இருவருமந்திப்பொழுதினிலேற்றவிறைத்துநந்தாவனமொரீஇ
விரைவினிற்சென்றார்காவலரின்றிமேய்ந்தவோர்பசுவினைக்கண்டார்
கருதியேயோதுக்கிமுடுக்கவுமோடிவிற்கரந்துறைவரிப்புலிபற்ற
வெருவியேகதறிக்கன்றினைநினைந்துவீய்ந்ததங்கிருவர்மேற்பழியாய்.

(இ - ள்) இரண்டு பேர்களும் சாயுங்காலப்பொழுதில் தண்ணீர் மிகுதியாய் இறைக்கப்பட்டுள்ள நந்தனவனத்திற்கு ஒருமித்துச்சென்றுபோனார்கள்; காவலாளர்கள் இல்லாதபோது அதில் வந்து மேய்ந்த ஒரு பசுவைப்பார்த்தார்கள்; அதை ஓட்டும்படி நினைத்துப்புறம்பிற்செல்லத்துரத்தவும், குகையில் பதுங்கியிருந்த வரிகளையுடைய புலியானது அதைப்பிடித்துக்கொண்டதனால் பயந்து, தனது கன்றைக்கருதி அலறி அவ்விருவர் மேற் பழி சுமரும்படி விழுந்திறந்தது. எ-று. (கஉ)

கண்டனர்கண்ணிற்கலங்கினர்மிகவுங்கருத்தழிந்திங்குநம்மாவி
அடுந்தவேணப்பசுவைச்செகுத்திடாதொழியினுறுபழிவந்திடாதென்று
விண்டனரிரங்கியுருகினர்பதைத்தனவிம்மினர்கூற்றன்வந்தாவி [றூர்
கொண்டுபோயெரிவாய்நரகிடைவதைக்குங்கொடுந்துயர்க்கென்செய்வோமென்

(இ - ள்) அதைக்கண்ணினாற்கண்டு கலங்கி, மனவருத்தமடைந்து, இந்தப்புலியானது நம்முடைய உயிரைப்போக்கி இப்பசுவின் உயிரை நீக்காமல் விடுமோகில், நம்மேற்பெரும்பழி வந்து பொருந்தாது என்று சொன்னார்கள்; மனந்தளர்ந்து வருந்திப் பதைபதைத்துத்துக்கித்தார்கள்: இனி இயமன் வந்து நமது உயிரைப்பிடித்துப்போய் எரியும்படியான நரகத்தில் விட்டுத்தொந்தரவு செய்யும் கொடிய துன்பத்துக்கு என்னசெய்வோம்? என்று வியாகுலப்பட்டார்கள். எ-று. (கங)



பாதகத்தொடர்ச்சிதகர்த்துமந்தப்பழவினையால்வருகொலையின்
றோடமேநீக்கநெஞ்சனென்றிரங்கிச்சுற்றியெண்டிசைச்சிவதலங்க
ளூடிநல்லோரைவினவலுநல்லோர்நாரிசேய்பசுப்பிரிகொன்றோ
ராடெரிதழலினுயிரொடுமுழ்கிவெந்திடினல்லதுநீங்கார்.

(இ - ள்) பாவத்தொடர்ச்சியால் பந்திக்கத்தக்க அந்தப்பூர்வகர்மத்தினால் சேர்ந்த இந்தக்கொலையினால் வந்த்தோஷம் நீங்குவது எவ்விதம்? என்று மனம்நொந்து பலவிடங்களிலும் சென்று, எட்டுத்திக்குகளிலுமுள்ள சிவஸ்தலங்களுக்கு விருப்பத்தோடு போய் அங்குள்ள பெரியோரைக்கேட்கவும், அவர்கள் ஸ்திரீ-சிசு-பசு-ருஷிகளை ஆகிய இப்பிராணிகளைக்கொன்றவர்கள் கொழுந்துவிட்டு எரியும் அக்கினியில் உயிரோடு விழுந்து சாம்பலாய்ப்போனால் அல்லாமல் பாவம் நீங்கப்பெறமாட்டார்கள். எ-று. (கச)

மறைபடாகரத்தர் நினைக்கஞ்சியெரியிடுங்குழியிடைப்புகுந்து
வீழதினைவதுக்கினிதுநன்முழ்கிக்கூடற்சாம்பலாய்ப்போகிற்
பெறுமகற்றிராப்பழிகுலைக்கொல்பெரியபாவங்கள்போமென்று
மறைமொழிந்தகல்வியின்கரம்பெற்மாதவருரைதலைக்கொண்டார்.

(இ - ள்) ஒழியாத நரகவேதனைக்குப்பயந்து மனம் வருந்தினால் அக்குழியில் பிரவேசித்து விறகுகளை அடுக்கி எரிகின்ற அக்கினியில் விழுந்து சரீரம் வெந்து சாம்பலாய் விடுவீரேல் பெற்ற குழந்தையையும், குதிரையையும், பசுவையும், ஸ்திரீகளையும் கொன்ற மகாதோஷங்களெல்லாம் போய்விடும் என்று சொல்லும் வேதமார்க்கத்தையுணர்ந்த கல்வியின் எல்லையைக் கண்டவராகிய தவசிரேஷ்டர்களுடைய வசனத்தை மேற்கொண்டார்கள். எ-று. (கரு)

முலைத்தடத்சுமந்துகொடிச்சியர்நுசுப்புமுரிந்திறுமிதுவெனவிரங்கி
யலத்தகச்செஞ்சிறடியிலைச்சிலம்புபுலம்பல்கேட்டமூவனபோன்று
மலைத்தலையருவியிழுமெனவிழிந்துவருபுனற்கோகனவரைப்பில்
நிலைத்துநன்னெறிக்காளத்தியெம்பகனுநிற்பிஞ்ஞைதயேநோக்கி.

(இ - ள்) குறப்பெண்களுடைய சிறிய இடைகள் பெரிய தனபாரஞ்சுமந்தலால் முரிந்து ஒடியும்-ஒடியும் என்று தளர்ந்த செம்பஞ்சுகுட்டிய சிவப்பான சிறிய அடிகளின்மேல் அணியப்பட்டிருக்கும் சிலம்புகளின் புலம்புவது போன்று மலைமேல் உள்ள அருவிகள் இழும் என்னும் ஓசையுடன் இழிந்துவரும் நீர்வளம் பொருந்திய திருக்கோகரணத்தில் நல்லொழுக்க வழியில் நிலைத்துள்ள காளத்தியென்பவனும் தனக்குச்சமானமான பரிசித்து என்பவனைப்பார்த்து, எ-று. (கசு)

ஆழ்பெருங்குழிகளோரிரண்டாக்கியடுக்கியே மூடவிந்தனங்க
ளாழ்வறக்கொணர்ந்தேயிக்குழியதனுட்சாவன்யானீதழன்மூட்டென்
றூழ்வினைக்கொலைநீக்கிடக்குழிபுக்குறைதலுமொருபரிச்சித்துக்
காழ்விறகடுக்கியெரிந்திடக்காலக்கடுந்தழல்கொணர்ந்துமூட்டினனால்.

(இ - ள்) ஆழமான பெரிய குழிகள் இரண்டு உண்டாக்கி, அடுக்கி மூடுவதற்கு விறகுகளைக்குறைவில்லாமல் கொண்டு வந்து இந்தக்குழியில் நான் இறந்து விடுவேன், நீ நெருப்பு மூட்டுவாய்; என்று ஊழ்வினையால் நேரிட்டகொலைப் பாதகத்தை நீக்கும்படி குழியில் புகுந்திடவும், ஒப்பற்ற பரிச்சித்து வயிரமுள்ள விறகுகளைக்கொண்டு வந்து அடுக்கி ஊழிக்காலத்து நெருப்புப் போல் பற்றி எரிய மூட்டினன். எ-று. (௧௭)

அணைந்திடுபெருவடவைபோலனலயனை தழனைதில்காளந்தி
நிணந்தழலுருக்கவுருகியேயொழுகுநெய்யின்மேன்மேற்கொழுந்தெழுந்து
முணர்ந்தபோதிவாற்கண்ணினீர்பாரவுணையாகவென்னுரைத்துக்
கணந்தரியேன்யானினியுடன்வருவேன்காளந்தியென்றுரைத்தான்.

(இ - ள்) குற்றமில்லாத காளந்தி என்பவன் பருவமுள்ள பெண்ணை ஆலிங்கனம் செய்வது போல் மகிழ்ந்து அந்த அக்கினியை ஆலிங்கனஞ்செய்தான்; அக்கினியானது கொழுப்பை உருக்க உருகிப்பெருகும் நெய்யிலிருந்து மேன் மேலும் கொழுந்து விட்டெழுந்தவுடன்பரிச்சித்து என்பவன் கண்ணீர் பெருகப் பல நாளினும் [illegible] மொழியினால் ஹா! ஹா! என்று மொழிந்து இனி ஒரு கணமேனும் தரிக்கமாட்டேன், உடனே நானும் வருவேன்; காளந்தி! நீயறிவாய்; என்று சொன்னான். எ-று. (௧௮)

அன்பினாற்கண்ணீரருவியேசோரவாவியேசோர்ந்துளமயர்வான்
முன்புநான்வேவுமுறைதவிர்த்தேனுன்மொழியினைக்கடக்கமாட்டேனாற்
பின்புநானிருந்ததிக்கினைநோக்கிப்பெருந்துயரனுபவித்திடவோ
வென்பெருந்துயரந்தீர்ப்பவரெவரென்றேங்கியேகதறினின்றழுதான்.

(இ - ள்) அன்பினால் தனது கண்களிலிருந்து நீர் அருவிபோல் பெருகி உயிர் சோர்வு அடைந்து, மனம் வருந்தி, உன் சொல்லைக்கடக்கக்கூடாதவனாய் முதலில் நான் அக்கினி பிரவேசமாகும் ஒழுங்கினை நீக்கினேன். உனக்குப் பின் நீ இருந்த திசையைப்பார்த்துப்பெருந்துயரமடையவோ? மிகுதியான என் துயரத்தைத்தீர்ப்பவர் யார்? என்று ஏக்கமுற்றுப் புலம்பி அழுதான். எ-று. (௧௯)



சிகையுமுந்நூலுந்நுதலிடைத்திரிபுண்டரத்திருநீற்றினலொளியும்
தருமெனக்கைவிற்றிகழ்செபவடமுத்தண்டொடுகுடையுமேகொண்டு
பகைசினமயக்கங்காமமேயறுத்தபடிமையசம்பிங்கலமுனிவ
னகனெடுங்கானினயல்வழிச்செல்வோனழுகுரல்கேட்டுநின்றிரங்க.

(இ - ள்) சிகை முடியும் முந்நூலும் நெற்றியில் திரிபுண்டரமாகத் தோன்றும் திருவெண்ணீற்றுப்பிரகாசமும் தரும் என்று யாவரும் சொல்லும் கரங்களில் விளங்கும் செபவடமும் முத்தண்டமும்-குடையும் கொண்டு, பகை-கோபம்-மயக்கம்-காமம் ஆகிய குற்றங்களை நீக்கிய தவவொழுக்கமுடைய பிங்கலமாமுனிவர் விசாலமான நீண்ட காடுகளின் பக்க வழியில் நடந்து அழுகுரலோசையைக்கேட்டு நின்று இரக்கப்படுகையில், எ-று. (௨௦)

கண்டனன்விழிநீர்த்தகயிலையைவிட்டெய்துங்கண்ணுதற்பரமனோவருளே
கொண்டிடவெனியதுஞ்சிவகணத்தலைமையாங்கணநாதனோவறிகிலேன்
பண்டையோரியற்றுந்தவம்கொலிப்படிவம்பசுக்கொலைதீர்க்குமென்றெண்ணி
யண்டியேதான்சேவடிமீதுதைவேழுமழுமஞ்சலையென்றுகையமர்த்தி.

(இ - ள்) பரிச்சித்து தன் கண்களால் அவரைப்பார்த்து திருக்கைலாயத்தை விட்டு எழுந்தருளிய கண்ணுதற்கடவுளோ? திருவருளால் இவ்விடத்திற்கு வந்த சிவகணங்களுக்குத்தலைமையான கணநாதனோ? யோகீசுவரிடத்தில் முன்னோர்கள் செய்த தவமோ? இவ்வடிவம் பசுவைக்கொன்ற பாவத்தைத் தீர்க்கும் என்று கருதி, அருகில்வந்து அவரது திருவடிகள்மேல் விழுந்து அழுதலும் "பயப்படாதே" என்று திருக்கரத்தால் ஆறுதல் செய்து, எ-று (௨௧)

அவ்வழியனலிக்குழியுமக்குழியிலங்குரும்வெந்தவெண்ணீறுஞ்
செவ்விதிறேக்கியிங்கினிவென்சொல்செப்பிடவெனமனந்தேர்ட்ட
மவ்வியமின்றிச்செய்ததுங்கொலையுமக்கொலையகற்றிடுமொரு
வெவ்வியவழலிற்புகுந்ததுந்தழன்மேல்வெந்ததுஞ்சொலுமுனங்கேட்டு.

(இ - ள்) அவ்விடத்தில் நெருங்கிக்குழியையும்-அதிலிருந்த எலும்புகளோடும்-வெந்த சாம்பலையும்-செம்மையாகக்கண்டு, இனி என்ன? சொல்லென்றுகேட்க, நல்லமனதுடன் நந்தனவனம்வைத்ததும், குற்றமின்றிப்பசுவைத்துறத்தியதும், அது கொலையுண்டதும், பசுக்கொலை தீர்வதற்கு அதை நீக்கும் பொருட்டுக்கொடிய தழலில் பிரவேசித்ததும், அதில் வெந்ததும் ஆகிய சங்கதிகளைச் சொல்வதற்குமுன் கேட்டுத்தெரிந்து, எ-று. (௨௨)

பாவவல்வினையாம்பசுக்கொலைதீரப்படவெரிபுகுந்தனனிவனீ
வேவமேலெண்ணியிருந்தனையோசொல்விவரமாய்க்கேட்டியென்றுரைப்பான்
யாவரோவெனினுமறிந்துநீங்கியற்றிலதற்கிலேயேபரிகார
மேவவேதன்னெஞ்சறிந்திடாதுற்றவெவ்வினைக்கேபரிகாரம்.

(இ - ள்) கொடிய செய்கையாகிய பசுக்கொலைப்பாதகம் நீங்கும்படி யடர்ந்த தீயில் இவன் பிரவேசித்தான்; நீ பிறகு நெருப்பில் விழுந்தவேதனையை இருந்தாயோ? யாம் விவரமாகச்சொல்லக்கேள் என்று சொல்லத்தொடங்கி — எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் பரதாரத்தீங்கு செய்தால் அதை நீக்குதற்குப்பரிகாரமில்லை; ஆனால் மனமறியாமற்செய்தகொடியபாவச்செயலைப் போக்குவதற்குப்பரிகாரமுண்டு. எ-று. (உ[illegible])

## வேறு.

இந்தவாறுபரிகாரஞ்செய்தாலிதுமாத்திரமகலு
முந்தபிறவிபலகோடிமுயன்றபாவமளவிலையாம்
நிந்தைகொலைகள்பொய்காமநிறையமுட்டவுயிரறிவு
வந்தேழ்பிறவிக்கடலாழ்ந்துமறுகுற்றெழுந்துபிறந்துழலும்.

(இ - ள்) இம்முறைமையாகப்பரிகாரம் செய்தால் இந்தப்பாவமாத்திரம் தீரும்; முந்திய அநேக பிறப்புகளில் செய்த பாவங்களுக்கு கணக்கு இல்லை; குரு துரோகம்-கொலை-பொய்-காமம்-ஆகிய பாவங்கள் நிறைவதனால், மடபுத்தியுள்ள ஆத்மாக்கள் எழுவகைப்பிறவிக்கடலில் தோன்றி நரகத்தில் விழுந்து வருந்தி மீண்டும்பிறந்து அலையும். எ-று. (உ[illegible])

எல்லாவினைக்கும்பரிகாரமியற்றுமாறுமுண்டதுதான்
சொல்வேன்கேட்டுநெஞ்சினிடைச்சரதமென்றேதுணிவுகொள்வா
யல்லுடேற்றும்விளக்கெனவேமயக்கமெல்லாமகற்றுவிக்குங்
கல்லாலடியிற்சோதியுருக்காணும்வீடுங்கரநெல்லி.

(இ - ள்) பாவங்கள் எல்லாவற்றிற்கும் பரிகாரம் செய்து கொள்ளு மார்க்கமும் உளது; அந்தமார்க்கம் சொல்லுகிறேன்; அதைக்கேட்டுச்சத்தியம் என்று மனதில் நிச்சயித்துக்கொள்வாய்; இருட்டில் ஏற்றிய விளக்குப்போல், எல்லா மயக்கங்களையும் நீக்கும் கல்லால விருட்சத்தின் அடியில் குருமூர்த்தமாகவெழுந்தருளிய சோதி உருவம் தோன்றும்; மோட்சமும் உள்ளங்கை நெல்லிக்கனி போலாகும். எ-று. (உ[illegible])

என்னஞானிபிங்கலமாமுனிசொல்வானிவ்வங்கமெல்லா
முன்னியெடுத்தோர்குடத்திலிட்டுமூலைத்தாவியெட்டுமூச்சிக்
கன்னலுடைந்தநீர்சாறுமுழனிரம்பக்கமலக்காட்
டன்னமடையார்கடமாமெனுங்கார்சேலம்வரக்கடவாய்.

(இ - ள்) என்று ஞானியாகிய பிங்கலமுனிவர் பின்னும் சொல்வார்: இந்த அங்கமுழுவதும் தெரிந்தெடுத்து ஒரு குடத்தில் வைத்து மேகங்களைத்தாவி எட்டுகின்ற சோலையுடைய கரும்புகள் முறிந்து அதனால் உண்டான தித்திப்



புள்ள சாறு வயல்களில் நிறையவும் தாமரைக்காட்டில் வசிக்கும் அன்னப்பட்சிகளைப்போன்ற மாதர்கள் கடனமாடுஞ் சாலைகள் நிறைந்திருக்கின்ற சேலத்திற்கு வரக்கடவாய். எ-று. (உ[illegible])

அங்குநாமுமுடன்வருதும்வேதமுமறையிட்டலறியின்னும்
பொங்குமுருவமறிவரியபுரிதன்கோயிலுட்புகுந்து
சங்குகுல்கொண்டுமுத்துவயல்சூழ்சேலத்தலமகிமை
யெங்குமறியவிளங்குவிப்பாமென்னவந்தாரிருவோரும்.

(இ - ள்) அவ்விடத்திற்கு நாமும் வருகிறோம்; நான்கு வேதங்களும் முறையிட்டு அலறியும் இன்னமும் திருவுருவத்தை அறிவதற்கு அரிதான வேடுவகுமாரன் வீற்றிருக்கும் திருவாலயத்திற் பிரவேசித்துத்தொழுது, சங்குகள் ஈனுகின்ற முத்துக்களைப்பெறும் வயல் சூழும் சேலமென்னும் தலத்தின் மகிமையை எவ்விடத்திலும் எல்லோரும் அறிய விளங்கும்படி செய்வோம் என்றுசொல்லி இருவரும்வந்தார்கள். எ-று (உ[illegible])

கனைகொண்டிரைத்துவரும்பஞ்சாக்கரநதியினிடைமூழ்கி
யரகராவென்றுமாத்தணிவுற்றகத்தினன்புகசிந்து
கருணையுருவம்பட்டீசர்தாளைக்கருதிக்கோயிலெய்தி
யிருவல்வினையின்றுகைக்குதற்குமுனிபிங்கலனுமிசைக்கின்.

(இ - ள்) கனையை அடைந்து ஆரவாரித்துவரும் நீண்ட திருப்பஞ்சாக்கர நதியில் ஸ்நானஞ்செய்து ஹரா! ஹரா! என்றுசொல்லித்திருநீறணிந்து அன்புடைய பெருமிக்காருண்யமே திருவுருவமாகக்கொண்ட சுகவனேசர் திருவடிகளைச் சிந்தித்துத்திருக்கோயிலுள் புகுந்துபாவபுண்ணியமென்னும் இருவினையின் குற்றம் நீக்கிய பிங்கலமாமுனிவர் சொல்லத்தொடங்கினார் :—எ-று. (உ[illegible])

கனைக்குங்கவாய்ப்பனைமருப்புக்கடாவையுகைக்குங்கூற்றஞ்சச்
சினத்தினுதைத்தசிவனுஞ்சேலத்திறக்கின்முத்தியுண்டு
நினைத்துவகைசெய்திற்பாவந்தீருமிவைகண்மூன்றுமுண்மை
யெனுத்தமர்க்குப்பெண்டிரைநாயகனேயமெரிக்கலவ்வகை [illegible]

(இ - ள்) ஆரவாரிக்கும் பெருவாயும்-பனைபோன்ற கொம்புகளையும் உடைய எருமைக்கடாவின்மேல் ஆரோகணிக்கும் யமன் பயப்படும்படி கோபித்து உதைத்த சிவன் உண்டு; சேலத்தில் இறந்தால் முத்தியுண்டு; தவத்துடன் வாசம் செய்தால் பாவம்தீரும்; இந்த மூன்று சங்கதிகளும் உண்மையாகும் காலம்சென்ற காலத்தில் என்பவனே! சொல்லிய மூன்றும் சத்தியம் என்று மனக்கு எதிரே வரக்கடவாய் என்றுசொன்னார். எ-று. (உ[illegible])

குடமுடைந்தவெந்தவென்புகூடியொன்றாயுருக்கொண்டு
வடிவாய்ச்சிவனுண்டிறந்தின்முத்திவாசம்வினைநீங்கு
முடிவுமூன்றுஞ்சத்தியஞ்சத்தியஞ்சத்தியமாமூக்காலும்
படிபுளோர்களறிகவெனப்பகர்ந்தானின்றுகாளத்தி.

(இ-ள்) குடம் உடைந்து வெந்த எலும்புகள் ஒன்றாய்ச்சேர்ந்து உருவமாகிப்பழையவடிவத்தோடெழுந்து "சிவனுண்டு" "சேஷத்திலிறந்தால்முத்தி" "தலவாசம் செய்தால் இருவினைகள் நீங்கும்" இவை மூன்றும்மூக்காலும், சத்தியம்! சத்தியம்! சத்தியம்! பூலோகத்திலுள்ளவர்கள் அறியக்கடவர் என்று காளத்தி எழுந்து நின்று சொன்னான். எ-று. (௧0)

வேதமுடிவுதன்னுண்மைவிளங்கக்கண்டமுனிபரமர்
பாதமலரைத்துதித்திறைஞ்சிப்பன்னாள்வாசஞ்செய்தின்று
ஞதாருளாற்பரிச்சித்துநற்காளத்தியென்பவரு
மாதவங்கண்முயன்றுமுத்தியடைந்தாருலகுவாழ்ந்திடவே.

(இ-ள்) வேதமுடிவை யுணர்ந்து உண்மைப்பொருள் விளங்க உணர்ந்த பிங்கலமுனிவர் சிவபெருமான் திருவடிகளைப் போற்றி வணங்கிப் பலநாள் தலவாசம்செய்து நிற்கின்றனர். பரமசிவத்தின் திருவருளால் பரிச்சித்தும் நல்ல காளத்தியென்பவனும் மகாதவங்களைப்புரிந்து இவ்வுலகம்வாழும்படி முத்தி அடைந்தார்கள் எ-று. (௧௧)

## வேறு.

சங்கரன்புகழேவாழிசதுர்மறையினிதுவாழி
மங்கையர்கற்புவாழிமன்னவன்செங்கோல்வாழி
திங்கண்மும்மாரிபெய்யச்சேலமாநகரம்வாழி
சங்கரனடியார்வாழியித்தலபுராணம்வாழி.

(இ-ள்) சிவபெருமான் திருப்புகழே வாழ்க! நான்கு வேதங்களும் நன்மையாய் வாழ்க! மாதர்களுடைய பதிவிரதா தருமம் வாழ்க! இராஜ நீதி வாழ்க! மாதம் மும்மாரி பொழிந்து சேலமா நகரம் வாழ்க! இவ்வுலகத்தின் சிவனடியார்கள் வாழ்க! இந்தத்தலபுராணம் வாழ்க! எ-று. (௧௨)

பரிச்சித்துச்சருக்கம் முற்றிற்று.

ஆக-பாயிரம் உள்படச்சருக்கம் ௧உ-க்குத்திருவிருத்தம் ௯௭௦.

++++++++++++++++++++++
பாவநாசத்தலபுராணம் சம்பூரணம்.
++++++++++++++++++++++



# புராணசாரப் போற்றித்திருவகவல்.

சிகரமாமதிலுஞ் - சிகரமாடமும்
மகரமீனுலாவும் - மணிமுத்தாநதியும்
திகழ்பல்வளங்களாற் - சிறந்திடுஞ்சேல
நகரினுமரும் - நானோடிரண்டாய்
விளங்கவைத்த - வித்தகபோற்றி
வளங்கமிலடியார் - கனவிலுமறவாக்
கனியேபோற்றி - கதியேபோற்றி
தனியேபோற்றி - தயாபரபோற்றி
நித்தநிரஞ்சன - நிராமயபோற்றி
சத்தியஞானத் - தற்பரபோற்றி
வேதப்பயனும் - விசித்திரபோற்றி
நாதமுங்கடந்த - நாயகபோற்றி
உச்சிதவெளியி - லொளியேபோற்றி
சச்சிதானந்த - சதாசிவபோற்றி
முப்புரமெரித்த - முக்கணபோற்றி
செப்பருஞ்சினமயச் - சிவமேபோற்றி
திங்களங்கண்ணிச் - செஞ்சடைபோற்றி
மங்கையோர்பங்குடை - மணாளபோற்றி
தக்கன்மகத்தாற் - சார்ந்திடப்பெற்ற
துக்கமனைத்துந் - தொலைந்திடவேண்டியக்
கதியிடைமூழ்குபு - கலமறப்பன்னாள்
விதிமுறைதலத்தில் - மேவியேயமரர்
ஆவலாய்ப்பூசை - யாற்றிடவன்னோர்
பாவநாசஞ்செய் - பரஞ்சுடர்போற்றி
மாதவவசிட்டன் - வனத்திடைவந்த
மேதகுகௌசிக - வேந்தன்றனக்கும்
வீரர்களுக்கும் - விருந்துகடிதிற்
சீதாய்ப்புரியெனச் - செப்பியவண்ணம்
அரியவின்னுருவும் - ஆற்றியதிறத்தாற்
பெரியதோருவகை - பெற்றவுதி

அருந்தவனேயிவ் - வாவினையெனக்குத்
தருகெனவேண்டியுந் - தானிருந்தனனல்
வலிந்துபிடித்த - வகையாலக்கணம்
பொலிந்துவிளைந்த - போர்நடையாவின்
மலத்தாலரசன் - பரிசனரனைகர்
நிலத்துயிர்நீங்க - நேர்ந்தபாவமும்
நிரவேகாம - தேனுவும்பூசை
நேர்தாய்ச்செய்த - நெறியினுன்மகிழ்ந்து
பலவரமளித்த - பட்டீசபோற்றி
மலவிருளகற்றும் - மகத்துவமுடைய
மறைகளோர்நான்கும் - மூன்றிடகாகர்க்
கிறையெனுமனந்த - னிரக்கமுற்றந்தன
வடிவந்தாங்கி - வளர்பாவநாசக்
கடிநகர்ச்சிறுக்கு - க்கற்பித்திடுவேன்
என்றுதிரண்ட - வினைஞருக்குமறை
துன்றுநிரைக்குட் - டொல்லைமேனியனாய்
இருந்துமொழிந்ததை - யெட்டிப்பார்த்த
திருந்தறிவில்லாச் - சிட்டர்கள்யாரும்
வெந்துமரித்த - விதத்தாற்பாவும்
வந்ததையொழிக்க - வளர்பாவநாச
ஆலயமதனுள் - அகழ்ந்தொருகேணி
சாலப்புரியுந் - தவத்தினைநோக்கிக்
கங்கணவராப்போற் - கனமுறுவாழ்வுந்
தங்கநல்முத்திச் - சுகமுமருளி
வாவியிற்றவளை - வதிவுறுமென்றும்
வாவியிற்றிவலை - வாய்மடுப்பதினும்
குட்டப்பெருநோய் - விட்டிடுமென்றுங்
காசக்கடும்பிணி - நாசமாமென்றும்
பாசத்தலையறு - பட்டிடுமென்றும்
நல்வரமளித்த - காசிசபோற்றி
அல்லுறுகண்டத் - தரனேபோற்றி
மணிமுடியனந்தன் - மறைந்தமாமறைகள்
திணிபெறவிளங்கச் - செய்தலினுற்சதுர்
வேதமாமங்கல - மேதகுநாமமும்
ஓதவேயருளிய - வுத்தமபோற்றி



நாசக்கோயிலின் - மன்னியகடவுள்
தனதருந்திறலைத் - தந்தியவுலகிற்
சார்ந்திடுஞ்சபைக்குஞ் - சாற்றினனோர்பகல்
ஓர்ந்தசுகமுனி - யுமாத்துவாணிக்குப்
பன்னியவண்ணம் - பகருங்குணமுடை
வன்னியின்றன்மை - மாறுமுறையால்
தந்தையுருக்கொள் - சாபமடைந்து
மெத்தவனங்கே - விளங்குமறிவொடு
திகழும்வான்மையுஞ் - சேர்ந்திடப்பெற்று
மகமுயல்சேல - வளநகர்க்காவிற்
கினிகளுக்கரசாய்க் - கிளர்புனத்திருந்து
களிப்புடனினாது - கனமுறுமாடலைத்
திருந்தினத்திற்குச் - செப்பித்தினைக்கதிர்
வருந்திக்கொணர்ந்தன் - மலரடிப்பூசை
புரிந்துவருநாட் - புனத்துறுகுரல்களை
அரிகளிவ்வண்ண - மழித்தலைநோக்கி
வனசரனாகிய - வச்சிரகாதன்
சினமதுகொண்டித் - திருட்டினைக்காண்பான்
பரணிலிருந்து - பாதுகாக்கையில்
விரவியகிளிகள் - மேதகுபூசனை
செய்யவேதினைந்து - நிரமாய்க்குரல்களைக்
கொய்திடக்கைக்கவண் - கொண்டெறிந்தவற்றைப்
பின்னுந்தொடர்ந்தனன் - பெட்புறமேவித்
துன்னுமோர்புற்றிடைத் - தோன்றுபான்முன்
அடைந்தவிருக்க - வாயுதமெடுத்தே
யுடைத்துப்புடைத்த - வுறுதொழிலதனுற்
கிள்ளைகளெல்லாங் - கிளருமின்பதங்கள்
உள்ளியதன்மையா - லுயர்சுகமுறவும்
அன்னவடிவா - யயனறியாவின்
பொன்முடிக்கூறு - பொருந்திடாவண்ணம்
பரியசிறகினைப் - பரிவுடன்விரித்துக்
கவிந்திடுமன்பாற் - காத்தலைக்கருதி
யிருந்தசுகக்கிளி - யினையிலாவருளாற்
றிருந்தியபண்டைத் - திருவுருப்பெற்றுத்
திகழுஞ்சுகமுனி - செய்தவமதற்கு

அசமதிழ்ந்தென்று - மழிவிலின்புதவிச்
சுகவனமேவிய - சுடரோபோற்றி
சகமெலாமுய்யவோ - தண்ணளிவிளங்கவோ
மின்னேர்வளமுடை - மெய்முடிசொரிந்த
செந்நீர்ப்பெருக்காற் - றிகைத்துத்தெளிந்து
வன்மையைப்புரிந்தபின் - வாழ்வது கூடா
தென்னவேகருதி - யிறக்கத்துணிந்த
வனசரற்கின்ப - வாழ்வினையளித்த
பனகாபரணப் - பரனேபோற்றி
பிறப்பிறப்பென்னும் - பெருங்கடனீந்தச்
சிறப்புறுபுணையாஞ் - செம்மையைத்தெழுத்தை
யாவரோயாயினும் - வழித்தலத்ரசம்
மேவிடிலவர்கள் - மேலைநாட்செய்த
பாவங்களெல்லாம் - பாற்றிநேர்ந்தய
பாவகாசமாம் - பதியிடைதியாய்த்
திகழ்வுறப்புரிந்து - திருப்பஞ்சாக்கரப்
புகழ்பெறுநாமமும் - பொலிந்திடச்சூட்டிய
போதவாகந்தப் - பொருளேபோற்றி
வேதவிதிப்படி - விரும்புசங்கற்பம்
ஓதியேயாயினு - மோதாதாயினுஞ்
சிதனப்புனலிற் - றிளைப்பார்வினையெலாம்
நீங்கிடவருளிய - நீதனேபோற்றி
பாங்காமமரர் - பரிந்ததிலமூழ்கக்
கொடியபாவமும் - கீழ்வுங்காக்கையின்
வடிவுகொண்டேனே - மரித்திடப்புரிந்த
ஈசனேபோற்றி - வங்கைதயேபோற்றி
மாசொன்றில்லா - மணியேபோற்றி
தமகுணவஞ்சகச் - சாவதிபவத்தால்
யமபுரத்தொருசா - ரெரிவாய்நரகில்
வருந்தும்பொழுது - வலியவேருமலி
பொருந்தியவெயிற்றுற் - புவிதனிலிறந்த
மற்றவருடம்பில் - வெற்றெநும்பொன்மைறப்
பற்றிப்பலமணி - யுற்றிநெதியில்
விட்டவக்கணமே - விமானமிழிந்து
கிட்டவதிவேறிக் - கிளர்சிவலோக



மெய்திடவருளிய - விறைவேபோற்றி
அவனியின்மாந்தருஞ் - கன்னியேபோலுந்
தவத்துயரவ்வை - நானவதரித்தவிப்
பதியின்வீறும் - நதியின்சீரும்
மதிதனிலுணர்ந்து - கதிதருவாசகஞ்
செய்திடவெழுத்த - திருமுகப்படியே
யுய்திறமோர்ந்த - வுத்தமச்சோழனுஞ்
சிலம்பொலிசேட்கத் - தினம்பூசித்த
கலந்திகழ்சேரர் - நாயகக்கோனும்
வீரபாண்டிப்பேர் - வேந்தனுமாகிய
திரமூவரசருஞ் - சேர்ந்தவண்மும்முடித்
தலைவாசலென்னுஞ் - சாற்றுமோர்நகருங்
கலைமதிதவழுங் - கவினுறுகோத்
[illegible]ங்கமைத்த - தருமமன்னவரைக்
களிப்பாமெதிர்கொளக் - காதலித்தடைந்த
அவ்வைசொல்படலா - லறுத்தமுத்தண்டமுஞ்
செவ்வியபனையாய்த் - திரண்டெழுந்ததனுற்
பதியொருநீதியுற - கதிபாலிக்கும்
இதிற்சமூசமூமே - வில்லையென்றுணர்ந்து
கதோரடென்றுப் - கண்ணுமிலிங்கம்
பாலதாய்விளங்கும் - பஞ்சாக்கரத்தின்
பொற்பார்புனைவும் - பொருந்திப்பன்னுன்
அற்புதாபோற்றி - யமிர்தேபோற்றி
என்றுதொழுதா - விண்ணோடன்வாழ்ந்து
மன்னரிருவோர் - மாண்புறுசிவகதி
யெய்தினர்சேரர்க் - கிறையெனப்படுவோன்
சைவமெய்ச்சமயத் - தரணியில்விளங்கவும்
வேதியப்பிள்ளைய - வெங்கராவுமிழவும்
ஓதியநாயோ - ஐயர்வன்றொண்டன்
தனதருந்தோழனுஞ் - சார்பினைமருவி
மனத்திலுவிளாவுடை - வானபரியூர்ந்து
திருக்கயிலாயமே - சேர்ந்திடவருளிய
மருக்கினர்கொன்றை - மதிதவழ்வேணிப்
பிரானேபோற்றி - பிஞ்ஞகபோற்றி
சராசரம்யாவுஞ் - சத்தாஞ்சிவமிய

விளக்குங்காட்சியை - விமலவாரூரற்
குளமகிழ்ந்தருளிய - வொருவாபோற்றி
ஆத்திருடிமுத - லளவிலாத்தி
சாத்திரமியற்றிய - தண்குணவல்லவை
அரியதோர்பதவி - யடை[illegible]யருளிய
கரிபரிபேய[illegible] - கடவுளேபோற்றி
மனுகுலவேந்தன் - மகதநாடுடையோர்
தனுசிறல்மாய்ந்த - தனையனைக்கேத
மதியெனப்படுவோன் - வளர்பாவநாசப்
பதியிடைக்கொணர்ந்து - பற்பவெண்ணீற்றை
ஆலயகுருக்களா - லாக்கையிற்றடவலும்
பாலன்றுயிணீத்த - பரிசெனவெழுந்திட
வரந்தருமுக்கண் - மணியேபோற்றி
காக்கைதனைச்சுடேல் - கண்ணுதல்போற்றி
நிதகலனந்தன் - றிருப்புன்றேய்ந்து
பாதகமிரியவப் - பார்த்திபற்கருளிய
சிற்றம்பலத்திற் - றிகழொளிவிளக்கே
பெற்றமூர்ந்தருள் - பிரானேபோற்றி
இப்பிறப்பொருவ - னிளிதலாவினைகள்
ஒப்புறப்புரியி[illegible] - பயனொல்லெனத்
தப்பிலாதடைவது - சரதமேயாகலின்
வெப்புறுசிந்தையான் - விசயமேயில்லான்
அறத்தினைக்கனவினு - மாற்றிடாக்கொடிய
மறக்குலத்தலைமை - பதித்தசழக்கன்
அடியர்பாலியற்றிய - வநீதியதனாற்
கொடியதாங்குட்டம் - கொண்டுடல்வருந்தி
செறிபிணிதீர்க்குஞ் - செவ்வியமருந்தினை
அறிஞர்மொழிதர - வாதரவாய்ப்பல
பதிகளிற்படர்ந்து - பரவிவருநாள்
விதிமாலிறைஞ்சும் - விமலனதுனைத்தொழு
திருப்பாவநாசத் - திருநகரடைந்து
கருத்தனேயமடியனைக் - காத்தருளென்னுஞ்
சிந்தையோடிருக்கத் - தீர்த்தவந்நோய்
தந்திடுவருத்தந் - தணிவுறக்கண்டு
அந்திவண்ண[illegible] - னடியிணைப்பணிந்து



வெங்கோயகற்றும் - வித்தகவாவியின்
தண்ணீர்படிந்து - வலிபிணிதவிர்ந்து
பொன்போல்மேனி - பொலிவுறமகிழ்ந்து
மூன்னெழில்மண்டப - முதற்பலபணிகள்
தன்னுறுபொருளாற் - றகவாயமைத்திடச்
செய்சகவனுத்த[illegible] - செல்வாபோற்றி
யுய்வகையீயேற் - குவந்தருள்போற்றி
மனத்துணராத - வனப்பாவைமலர்
வனத்திடைவரிப்புலி - வதைத்திடப்புரிந்த
திவினைதீர்வுறச் - செந்நிகாப்பன்
மேவியேவெந்திடு - வியன்காளத்தியின்
அங்கந்தனைக்கொணர்ந் - தரும்பரிசித்து
துங்கமிகுசேலத் - தொல்பதியிலுய்க்கச்
சேவ[illegible]தனிற் - சிறமுண்டென்பதஞ்
சேலத்திறந்திடிற் - சிவபதமுறுவதஞ்
சேலத்திருத்தல - வாசஞ்செய்திடிற்
சாலச்சுகமெனற் - சத்தியமாமெனில்
என்புகன்வடிவா - யெழுந்திடுமென்று
ந[illegible]மூலப்பிறங்கல - ஞானிகளிறலும்
விண்ணுலகத்தோரும் - மேதினிமாந்தரும்
கண்டதிசயிக்க - காளத்தியுயிர்த்தெழத்
திருவருள்புரிந்தமா - தேவாபோற்றி
கருணையங்கடலெழு - கலைமதிபோற்றி
அன்பரகவிரு - ளகற்றவொளிருஞ்
சின்மயக்கிரணத் - தினகரபோற்றி
சீராசரமெவைக்குந் - தலைவாபோற்றி
புராணகாரணப் - பொருளேபோற்றி
இத்தலபுராணம் - யாவருமுணர்ந்து
பத்திமைபுரிந்து - பலகலைத்தாய்த்துச்
சித்தியுமுத்தியுஞ் - சேர்ந்திடவருணாற்
சுத்தன[illegible]ளுஞ் - செ[illegible]க்கவிஞ்சப்பேர்
வித்துவான்முன்றவ - வேடம்புனைந்த
செப்பெலப்பணித்த - சிவயோகிபோற்றி
சொப்பிரகாசச் - சுடரேபோற்றி
சுவணமென்னத் - துதிசெய்வோர்க்குச்

## போற்றித்திருவகவல்.

சுகவனமளிக்குந் - தாயனேபோற்றி
அடியார்குழுவெனு - மணிசனைப்போக்
கடியார்கமலக் - கவினேபோற்றி
கூற்றினைச்செற்ற - குழகாபோற்றி
காற்றாய்விண்ணாய்க் - கலந்தாய்போற்றி
பொன்னம்பலக்கப் - புதனேனியாய்போற்றி
ஒருவிலேமைபாக - சுகவனேசபோற்றி
அத்தாபோற்றி - அமலாபோற்றி
மூத்தாபோற்றி - முதல்வாபோற்றி
அங்கணாபோற்றி - அரசேபோற்றி
சங்கராபோற்றி - சம்புவேபோற்றி
போற்றிபோற்றி - புனிதாபோற்றி
போற்றிபோற்றி - சிவசிவபோற்றி.

முற்றிற்று.

—✣—



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 ... | 16, 23 ... | கட்டுதறி ... | கட்டுத்தறி. |
| 2 ... | 12 ... | பாவநாசப்புரத்திற் ... | பாவநாசபுரத்தின். |
| 4 ... | 20 ... | வருத்திறுனா ... | வருத்திருனா. |
| 5 ... | 23, 34 ... | தகைதனுமூர்த்தி ... | தகசிறுமூர்த்தி. |
| 7 ... | 23 ... | நதித்தலைற்றலே ... | நதிந்தானுற்றலே. |
| 9 ... | 26 ... | பிதப்புட் ... | பிறப்புட். |
| 9 ... | 32 ... | யருள் ... | அருள். |
| 12 ... | 4 ... | நாசிச்சுமாய் ... | நாசிச்சுரமாய். |
| 13 ... | 23 ... | வெண்டுசினிலடபொதிவர் | வெண்டுசினிடைப்பொதிவர் |
| 13 ... | 29 ... | காகத்திடைபெய்வர் ... | காத்திடைப்பெய்வர். |
| 15 ... | 13 ... | காறை ... | காதை. |
| 19 ... | 7 ... | சைடமுடி ... | சடைமுடி. |
| 76 ... | 32 ... | வஸ்திரத்திறன் ... | வஸ்திரத்திறுல். |
| 99 ... | 6 ... | அலைவிடமுண்டோர் ... | அலைவிடமுண்டோர். |
| 99 ... | 7 ... | யுக்குவார் ... | யுர்குவார். |
| 101 ... | 25 ... | வாரித்திருவாய் ... | வாரிதிருவாய். |
| 101 ... | 26 ... | விசக்கை ... | விசாகை. |
| 106 ... | 5 ... | வைத்தான் ... | வைத்தான். |
| 156 ... | 6 ... | குறிஞ்சி ... | குறிஞ்சி. |
| 170 ... | 33 ... | திருவருளாபவ ... | திருவருளாப்பவ. |
| 171 ... | 7 ... | பாவத்திற்கு ... | பாவதிற்கு. |
| 176 ... | 17 ... | உவ ... | கவ. |
| 191 ... | 6 ... | வாளாயுதத்தைதிறுற் ... | வாளாயுதத்திறுற். |
| 192 ... | 13 ... | படைத்தன் ... | படைத்தவன். |

சிவமயம்.

# கையொப்பக்காரர்களின் பெயர்கள்.

| | | | ரூ. |
|---|---|---|---|
| சேலம் ... | ம-ள-ள-ஸ்ரீ | [illegible] ... | க |
| | ,, | கோ. இராமசாமி ஆசாரியார். | க |
| | ,, | சி. முத்தய்யஞ்செட்டியார் ... | க |
| | ,, | குப்புசாமி செட்டியார் ... | க |
| | ,, | க. சுப்பராய செட்டியார் ... | க |
| | ,, | அர்த்தநாரி செட்டியார் ... | க |
| | ,, | சி. கந்தப்பமுதலியார் ... | க |
| | ,, | கு. முத்துசாமி அய்யர் ... | க |
| | ,, | வா. ஆதிமூல முதலியார் ... | க |
| | ,, | பா. அங்கமுத்துமுதலியார்... | க |
| | ,, | சி. வைத்திலிங்க முதலியார் ... | க |
| | ,, | ரா. கணபதி முதலியார் ... | க |
| | ,, | சுப்பராய பிள்ளை ... | க |
| | ,, | அ. குழந்தை செட்டியார் ... | க |
| | ,, | ம. தாண்டவராய செட்டியார் | க |
| | ,, | எ.ப. மாரிமுத்து செட்டியார். | க |
| | ,, | பா. காமாக்ஷி அம்மாள் | க |
| | ,, | தி. சுந்தரராஜ செட்டியார் ... | க |
| | ,, | தி. கந்தசாமி செட்டியார் ... | க |
| | ,, | சிதாராம செட்டியார் ... | க |
| | ,, | அ. பா. சுப்ரமண்யசெட்டியார் | க |
| | ,, | அ. பானுசாமி செட்டியார் ... | க |
| | ,, | சி. சுப்பராயபிள்ளை ... | க |
| செவ்வாய்ப்பேட்டை... | ம-ள-ள-ஸ்ரீ | வை. சுந்தரஞ் செட்டியார் ... | உ |
| | ,, | சி. முத்துகாத்த செட்டியார்... | உ |
| | ,, | சு. சாமி செட்டியார் ... | உ |
| | ,, | மு. பொன்னப்பசெட்டியார்... | உ |
| | ,, | வை. அழகப்ப செட்டியார்... | க |
| | ,, | ப.கு. குப்பண்ண செட்டியார் | க |
| | ,, | வ ரா. சொக்கலிங்கஉடையார் | க |
| | ,, | ரா. வைத்திலிங்க ஆசாரி ... | க |
| | ,, | க மு. குருசாமி ஆசாரி ... | க |
| | ,, | கா. வெங்கிடாசல செட்டியார் | க |
| | ,, | பெ. ஜெகநாத முதலியார் ... | க |
| | ,, | செ. மு. கோவிந்தசாமி செட்டியார் | க |
| | ,, | கொ. குப்புசாமி செட்டியார் . | க |

| | | ரூ. |
|---|---|---|
| செவ்வாய்ப்பேட்டை... | ம-ா-ா-ஸ்ரீ கா. இரகுநாதசிங்கவர்கள் ... | க |
| | ,, மா. சண்முகஞ் செட்டியார்... | உ |
| | ,, கிருஷ்ணசுவாமி நாய்க்கர் ... | க |
| | ,, வை சு குப்பண்ணமுதலியார் | க |
| | ,, நாராயணசாமி நாய்க்கர் ... | க |
| | ,, மே.இ சுப்பராய செட்டியார் | க |
| | ,, சி. இரத்தினஞ் செட்டியார்... | க |
| | ,, கோ.தா. அரியட்டகிரசெட்டியார். | க |
| | ,, மா. குமரவேல் செட்டியார்... | க |
| | ,, வெ. வெங்கட்டராமசெட்டியார். | க |
| | ,, பொ. குருசப்ப செட்டியார் ... | க |
| | ,, சீதாராம நாய்க்கர் ... | க |
| | ,, மு. வைத்திலிங்க பண்டாரம் . | க |
| | ,, அ. குட்டி செட்டியார் ... | க |
| | ,, வை ஆறுமுகஞ் செட்டியார் . | க |
| | ,, அ. முத்துசாமி செட்டியார்... | க |
| | ,, கெ. அ. வையாபுரிசெட்டியார். | க |
| | ,, மு ஏகாம்பர செட்டியார் ... | [illegible] |
| | ,, மு. குப்புசாமி செட்டியார் ... | க |
| | ,, ம வை. வேலுசாமி செட்டியார். | க |
| | ,, உச்சப்ப செட்டியார் ... | க |
| | ,, கெ. முத்துசாமி ஆசாரி . | க |
| | ,, அ கோவிந்த முதலியார் ... | க |
| | ,, வி. பழனியாண்டி ஆசாரி ... | க |
| | ,, மு. பெரியதம்பி உடையார் ... | க |
| | ,, ம.சொ. முத்துசாமி பிள்ளை ... | க |
| | ,, ம சொ. முத்தழகு பிள்ளை ... | க |
| | ,, கா. இராமசாமி செட்டியார்... | க |
| | ,, அ சொ. சுப்பராவு செட்டியார். | க |
| | ,, வா ப. அங்கப்ப செட்டியார்... | க |
| | ,, அ. வேணுகோபாலசெட்டியார் | க |
| | ,, வே. இராமசாமி முதலியார் ... | க |
| | ,, ச கு சுப்பராய செட்டியார் ... | க |
| | ,, பொ. இராமலிங்க செட்டியார் | க |
| | ,, தா சஞ்சப்ப செட்டியார் ... | க |
| | ,, வீ. முத்துசாமி முதலியார் ... | க |
| | ,, ந சுப்ரமண்ய ஆசாரி ... | க |
| | ,, நாச பத்தர் ... | க |
| | ,, குமாரவேல் செட்டியார் ... | க |
| | ,, இ. வெங்கடாசல செட்டியார். | க |
| | ,, இ. குப்புசாமி செட்டியார் ... | க |
| | ,, தொ சுப்ரமண்யசெட்டியார்... | க |
| | ,, அ வெங்கடா[illegible] செட்டியார் ... | க |



| | | ரூ. | அ |
|---|---|---|---|
| செவ்வாய்ப்பேட்டை... | ம-ா-ா-ஸ்ரீ வை. கதிரி செட்டியார் ... | க | |
| | ,, சி. குப்பண்ண ஆசாரி ... | க | |
| | ,, கோ ப. அருணாசலசெட்டியார் | க | |
| | ,, வெ கு.மு. குருநாதசெட்டியார். | க | |
| | ,, க. முத்துசாமி செட்டியார் ... | க | |
| | ,, வெ. சித்தன் செட்டியார் ... | க | |
| | ,, மு. மாதவராய செட்டியார் ... | க | |
| | ,, மெ.அ. சுப்பராயவாசாரி ... | க | |
| | ,, சீ. குருசப்பசெட்டியார் ... | க | |
| | ,, க. மாரய்ய ஆசாரி ... | க | |
| | ,, அ. சுந்தரம்பிள்ளை ... | க | |
| | ,, பா. பாலசுப்ரமண்ய நாய்க்கர்... | க | |
| | ,, அ. வெங்கடாசல செட்டியார் | க | |
| | ,, வீ. ஜம்நாதாஸ் சேட்டவர்கள். | க | |
| | ,, கு.செ. திருமலை செட்டியார். | க | |
| | ,, பி சு. பரமசாமி அய்யர் ... | க | |
| | ,, பெ. குப்பண்ண ஆசாரி ... | க | |
| [illegible]ாலை ... | ம ா-ா ஸ்ரீ சி. நாராயண நாய்க்கர் ... | க | |
| | ,, பி. நாகப்பசெட்டியார் ... | க | |
| | ,, உ. ஆறுமுகஞ் செட்டியார் ... | க | |
| | ,, கொ. மாரிசெட்டியார் ... | உ | |
| | ,, பு வெங்கட்டராம செட்டியார் | க | |
| | ,, கொ. தம்மண்ணசெட்டியார்... | க | |
| | ,, ச மாரி செட்டியார் ... | க | |
| | ,, கொ.கா. வெங்கட்டப்பசெட்டியார். | க | |
| | ,, ஓ மு. மாரிசெட்டியார் ... | க | |
| | ,, ஓ வெ. பெருமாள்செட்டியார். | க | |
| | ,, கொ.வெ. கிருஷ்ணசெட்டியார் | க | |
| | ,, சே. வீரண்ணசெட்டியார் ... | க | |
| | ,, ச. ராமலிங்கசெட்டியார் ... | க | |
| | ,, ந கொ. வெங்கட்டராமசெட்டியார். | க | |
| | ,, இ.ரா. வெங்கடாசல நாய்க்கர். | க | |
| | ,, கொ.ப. சித்தாசெட்டியார் ... | க | |
| | ,, தே காளிதாஸ செட்டியார் ... | க | |
| | ,, பா. தாதப்பர் நாய்க்கர் ... | க | |
| | ,, மல்லி. ஆண்டிசெட்டியார் ... | க | |
| | ,, மே ரங்கிசெட்டியார் ... | க | |
| | ,, கா. பழனி செட்டியார் ... | க | |
| | ,, வை. செங்கய்ய பண்டாரம் ... | க | |
| | ,, ந. சுப்பபண்டாரம் ... | க | |
| | ,, ட தாண்டவராய செட்டியார். | க | |
| மேட்டுத்தெரு ... | ம ா-ா ஸ்ரீ வை. மாரியப்பசெட்டியார் ... | க | |
| | வெ. கந்தப்பமுதலியார் ... | க | |

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| கிச்சிப்பாளையம் ... | ம-ா-ா-ஸ்ரீ | கல்லிசாமி பிள்ளை ... | க | |
| | ,, | சுப்புசாமி பிள்ளை ... | க | |
| | ,, | பெருமாள் பிள்ளை ... | க | |
| | ,, | ஆ. வையாபுரி செட்டியார் ... | க | |
| | ,, | அருச்சுன செட்டியார் ... | க | |
| | ,, | செ. கு பச்சையப்ப ஆசாரி... | க | |
| | ,, | ஸ். குப்புசாமி பிள்ளை ... | க | |
| | ,, | இரங்கநாதபிள்ளை ... | க | |
| அம்மாப்பேட்டை ... | ம-ா-ா-ஸ்ரீ | செ. பக்த முதலியார் ... | உ | |
| | ,, | சி. வையாபுரி முதலியார் ... | க | |
| | ,, | ப. சிதம்பரமுதலியார் ... | க | |
| | ,, | வீ. கந்தசாமி முதலியார் ... | க | |
| | ,, | பொய்யகரன் முதலியார் ... | க | |
| | ,, | ஆர்த்தநாரி முதலியார் ... | க | |
| | ,, | கு. எல்லப்ப முதலியார் ... | க | |
| | ,, | ப. முருகேச முதலியார் ... | க | |
| | ,, | அ. செல்லமுத்து முதலியார் . | க | |
| | ,, | செ. ஆதி உடையார் ... | க | |
| | ,, | செ. பழனி முதலியார் ... | க | |
| | ,, | ஏ பழனி செட்டியார் ... | க | |
| | ,, | ரா. எல்லப்ப முதலியார் ... | க | |
| | ,, | கு. சுப்பராய ஆசாரி ... | க | |
| | ,, | கு. எல்லப்ப ஆசாரி ... | க | |
| | ,, | அ. பெரியதம்பி உடையார் ... | க | |
| | ,, | முத்தய்ய முதலியார் ... | க | |
| கள்ளக்குறிச்சி ... | ம-ா-ா-ஸ்ரீ | அங்கப்ப ஆசாரி ... | க | |
| கொண்டலாம்பட்டி ... | ம-ா-ா-ஸ்ரீ | க. கிருஷ்ண செட்டியார் ... | க | |
| தருமபுரி ... | ம-ா-ா-ஸ்ரீ | கொ. ச. காளியப்பசெட்டியார் | க | |
| பொன்னேரிகாலட்டியாம் | ம-ா-ா-ஸ்ரீ | சம்பங்கி செட்டியார் ... | க | |
| பேட்டை ... | ,, | சுப்பராய உடையார் ... | க | |
| அரிசிபாளையம் ... | ம-ா-ா-ஸ்ரீ | கொ. ச. இராமசாமிசெட்டியார் | க | |
| | ,, | சாரங்க செட்டியார் ... | க | |
| | ,, | கொ. ச. இராமசாமிசெட்டியார் | க | |
| | ,, | கொ. ச. மல்லிசெட்டியார் ... | க | |
| | ,, | வ. ர. சு நாராயண செட்டியார். | க | |
| | ,, | வி. சு. சந்திரசேகர செட்டியார் | க | |
| | ,, | ந. ம. சென்றாய செட்டியார்... | க | |
| | ,, | மூ. கு. ஜம்புலிங்க செட்டியார். | க | |
| | ,, | கா. கு. இரங்கசாமிசெட்டியார் | க | |
| | ,, | கொ. ச. குமாரசாமிசெட்டியார் | க | |
| | ,, | ஆ. அ. மாரப்பசெட்டியார் ... | க | |